தப்பிப் பிழைத்தவர்

அலெக்ஸாண்டர் பார்மென்

மொழிபெயர்த்தவர்:
ரா. அ. பத்மநாபன்

 ஆசிரியரது மூல நூலிலிருந்து அவரது சொற்களைக்கொண்டே சுருக்கப்பெற்றது.

ஆசிரியர், பிரசுரகர்த்தர் இருவரது அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

C-1

Published by S. Narayanan and Printed by A. Sendall at
The Associated Printers (Madras) Ltd., Madras.

முகவுரை

ரஷ்யாவில் நடைபெறும் சோஷலிஸ சோதனை பற்றி, என் அபிப்பிராயத்தில், இந்த நூலே மிக முக்கியமான நூலாகும். இதைவிட முக்கியமானதாக வேறொரு நூல் எழுதுவது சாத்தியமல்ல. ரஷ்யப் புரட்சியின் ஆரம்ப நாட்கள் முதல், பிறகு ஏற்பட்ட ஆள் களையெடுப்புவரை நேரில் அனுபவம் பெற்று, உண்மையை எடுத்துரைக்கக் கூடியவர் பார்மைன் ஒருவர்தான் மிஞ்சி இருக்கிறார். ரஷ்ய சோதனையின் பலா பலன்களைப்பற்றி வெளி உலகுக்குக் கிடைக்கும் தகவல் களை தமது சொந்த அனுபவத்திலிருந்தும் ரஷ்யாவில் அனுசரிக்கப்படும் முறைகளைப் பற்றிய ஞானத்திலிருந்தும் சீர் தூக்கிப் பார்த்து அபிப்பிராயம் சொல்லக் கூடியவரும் அவர் ஒருவரே.

ரஷ்யப் புரட்சியின் முக்கியஸ்தர்களை ஸ்டாலின் எவ்வளவு தூரம் ஒழித்துக் கட்டியிருக்கிறார் என்பதை அறியாதவர் களுக்குத்தான் பார்மைனைப்பற்றி நான் கூறுவது மிகைபடக் கூறுவதாகத் தோன்றும். இப்போதுகூட ரஷ்யாவில் ஏதா வது ஒரு அந்தரங்கக் காரியதரிசியோ சுருக்கெழுத்தாளரோ முன் யோசனையுடன் மௌனமாக எல்லாவற்றையும் கவனித் துக் குறிப்பெடுத்துக்கொண்டிருந்துவிட்டு, பிறகு எப்போதோ ஒரு சமயம் ரஷ்ய சர்வாதிகாரம் ஒழிந்தபின் ஒரு நூல் வெளியிடக்கூடும். அப்படி ஒரு நூல் வெளிவருமானால் அது விசேஷமானதாகவும் உண்மை நிறைந்ததாகவும் இருக்கும். இப்படி நடக்கலாமென்பது எதிர்பார்க்கக் கூடாத விஷயமல்ல. ஆனால் தேர்ந்த ஞானமும் உள் அனுபவமும் உள்ள சகலரை யும் ஸோவியத் ரஷ்யாவில் ஒழித்துக்கட்டி பல வருஷங்கள் ஆகி விட்டன. ரகசிய போலீஸ் மூலமாகவும் விசேஷ நிபுணர் களாலும் இக்காரியத்தைக் கூடுமானவரை பரிபூர்ணமாகச் செய்து முடித்துவிட்டார்கள். ரஷ்யாவைச் சேர்ந்த தூதர்

காரியாலயங்களிலும் ஸ்தாபனகாரியாலயங்களிலுங்கூட இந்தக் காரியம் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

பார்மைனுடைய சுயசரிதை பாரிஸ் நகரில் வெளியான சமயம் விக்டர் ஸெர்ஜ் கூறினார் :

"'இது உண்மை அல்ல !' என்று இதைப் பற்றி சொல்லக் கூடிய நபர் உலகிலேயே யாருமில்லை."

அதுமட்டுமல்ல. பார்மைன் விடுத்த சவாலுக்கு ஸ்டாலின் கோஷ்டியார் இதுவரை வாயைத் திறந்து பதில்கூட அளிக்கத் துணியவில்லை. இது ஆச்சரியமானதுதான். ஸ்டாலின் கொள்கை பிடிக்காமல் கட்சியிலிருந்து வெளியேறி மாஸ்கோவில் மரண தண்டனை விதிக்கப்பட்டபோது **ஒரு ஸோவியத் ராஜதந்திரியின் சுயசரிதை** என்ற இந்த நூலை அலெக்ஸாண்டர் பார்மைன் எழுதினார். ரஷ்யப் புரட்சிக்கு விரோதமாக ஸ்டாலின் கோஷ்டி நடத்திய எதிர்ப் புரட்சியின் கொடூரமான தன்மையை இந்த நூல் தெளிவாக அம்பலப்படுத்திவிட்டது. இது இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் வெளியாயிற்று என்றாலும், பல பேர்களால் வெகுவாய்ப் புகழப்பட்டது என்றாலும் கம்யூனிஸ்ட் பத்திரிகைகள் இதைப் பற்றி வாயைத் திறக்கவேயில்லை.

ஸ்டாலினுடைய ரஷ்யாவைப் பற்றி சகிக்கவொண்ணாத பல உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கும் வால்டர் க்ரிவிட்ஸ்கி, ஜான் வால்ட்டின் முதலிய பலரைக் குறித்து கம்யூனிஸ்ட் கட்சியும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களும் இல்லாததும் பொல்லாததும் சொல்லி வந்திருக்கிறார்கள். அதே சமயம், இது மாதிரி ஆட்களே இல்லை என்றும், அவர்கள் கூறுவதாகச் சொல்வதெல்லாம் பொய் என்றும் வாதித்திருக்கிறார்கள் ! ஆனால் அலெக்ஸாண்டர் பார்மைனைப்பற்றி கம்யூனிஸ்ட் பத்திரிகைகளோ கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களோ எழு வருஷ காலமாய் ஒரு வார்த்தை கூட மறுப்பு வெளியிடவில்லை. இதிலிருந்து, பொய்யும் புளுகும் சொல்வதே தொழிலான இந்தக் கயவர்கள் அலெக்ஸாண்டர் பார்மைனுடைய கண்ணியத்தைக்

கண்டும் அவருடைய பகிரங்கமான உலகறிந்த தேச சேவையைக் கண்டும் வாயடைத்துப் போய்விட்டார்கள் என்று நாம் கருத லாம். உண்மை என்னவென்றால் பார்மைனுக்கு பதில் சொல்ல கம்யூனிஸ்ட்களிடம் எவ்வித வாதமும் இடையாது. சமயம் நேர்ந்தபோது அவர்கள் பிறரை எப்படித் தூற்று கிறார்களோ, அதே போல இந்த சமயம் மௌனம் சாதிப்பதே சௌகரியமானது என்று அவர்கள் தீர்மானித்திருக்கவேண்டும். எப்படி இருந்தாலும் அவர்களுடைய மௌனம் அலெக்ஸாண் டர் பார்மைனுடைய அந்தஸ்துக்கும் மரியாதைக்கும் மிகச் சிறந்த அத்தாட்சியாகும்.

முக்கியமாக, அவர் கூறுவதை நாம் முற்றும் நம்பலாம் என்பதற்கும் இது தகுந்த அத்தாட்சியாகிறது.

இந்த நூலில் பார்மைன் வெளியிட்டுள்ள ஒவ்வொரு அபிப்பிராயத்தையும் நானும் ஆமோதிப்பதாகச் சொல்லிவிட லாம். எங்கள் இருவருடைய நட்பு நாள்தோறும் முதிர முதிர, நாங்கள் இருவரும் வெவ்வேறு அனுபவப் பாதைகள் மூலம் ஒரே முடிவுக்கு வந்திருக்கிறோம் என்பது மேன்மேலும் தெளிவாகிறது.

மார்ச், 1945. மாக்ஸ் ஈஸ்ட்மன்.

தப்பிப் பிழைத்தவர்

இளவேனிற் காலத்தில் கிரீஸ் தேசம் பொன்னிறமும் நீல வர்ணமும் கலந்த தேவலோகமாய் இருக்கும். 1937-ம் வருஷம் ஜூன் மாதம் ஒரு நாள். காலை இளவெயிலில் கிரீஸின் மேகமற்ற வானம் அழகு மயமாய் இருந்தது. காலமாக்கி என்ற இடத்தில், என்னுடைய சிறு வீட்டின் முன்வாயிலிலிருந்து வெளியே நோக்கிக்கொண்டிருந்தேன். எதிரே மலைச் சரிவில் குடியானவர்களின் சிறு வெண்ணிறக் குடிசைகளும் பசுமையான திராட்சைக் கொடிகளும் காட்சி அளித்தன. அதற்குக் கீழே பணக்காரர்களின் மாளிகைகள் கடலோரத்தில் தென்பட்டன. நீல நிறக் கடலில் சில வெண்ணிறப் படகுகள் இங்குமங்கும் அசைந்து கொண் டிருந்தன. என் வீட்டிற்குப் பின்புறமும் கரடுமுரடான மலை இருந்தது. தொலைவில் பத்து மைல் தூரத்துக்கப்பால் கிரேக்கத் தலைநகரம் ஏதன்ஸ் மங்கலாகக் காட்சியளித்தது. உலகிலேயே துக்கமும் துயரமும், கொலையும் நாசமும் பாழ் படுத்தாமல் விட்டுவிட்ட ஒரே இடம் போல விளங்கியது அந்த ஸ்தலம். அங்கே இருப்போருக்கு உலகில் அந்த நாசகார சக்திகள் இன்னும் இருக்கின்றனவா என்றுகூடத் தோன்றும் படி இருந்தது இயற்கை அழகு.

ரஷ்ய தூதர் காரியாலயத்தில் எல்லாம் வழக்கம் போல் நடந்து கொண்டிருந்தன. ரஷ்யாவோ, கிரீஸோ ஒன்றைக் கண்டு மற்றொன்று பயப்படவேண்டிய அவசியம் இருக்கவில்லை. அந்தக் காலத்தில் கிரீஸைப் பற்றி மாஸ்கோவுக்கு சிரத்தையும் கிடையாது.

ஏதன்ஸில் ரஷ்ய தூதராலயம் ஒரு அமைதியான, தூங்கு மூஞ்சி ஸ்தலமாகக் கூட இருந்தது எனலாம். ஏதன்ஸில்

எனக்கு மேலதிகாரியும் ரஷ்ய தூதருமான கோபட்ஸ்கி நீண்ட காலமாய் ரஷ்யாவில் இருந்ததால் நான் அவரது ஸ்தானத்தில் வேலை பார்த்து வந்தேன். வேலை மிகக் குறைவு. கிரேக்கப் பத்திரிகைகள், இதர வெளி நாட்டுப் பத்திரிகைகள், சோவியத் பத்திரிகைகள் முதலியவற்றைக் கண்ணோட்டமாய்ப் பார்ப்பது, ஒரு சில கடிதங்கள் எழுதுவது, கிரேக்க வெளிநாட்டு இலாகாவிலிருந்து அபூர்வமாய் வரும் ஏதாவது ஒரு கடிதத்திற்கு பதிலளிப்பது, பொதுவாக இதர தேச தூதர்களுடன் தொடர்பு கொண்டிருப்பது—இவ்வளவுதான் வேலை. இத்தகையதோர் ஸ்தானத்தில் வேலை பார்க்கும் எந்த ராஜ தந்திரியும் இந்த சுகவாழ்வினால் களிப்படைவார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் எனக்கென்னவோ மனம் நிம்மதியாக இல்லை; ஏனென்றால் என்னுடைய சொந்த தேசத்தில் ரகசியமாய் உள்ளூர ஏதோ புகைச்சல் இருப்பதாக எனக்குத் தெரிந்தது. ரஷ்ய வெளிநாட்டு இலாகா அதிசயமாய்த் தூங்கிக் கொண்டிருப்பது போல் தென்பட்டது. பல மாத காலமாய் இலாகா மேலதிகாரிகளிடமிருந்து எனக்கு எவ்வித உத்தரவுகளோ தகவலோ வரவில்லை. ரஷ்யாவில் வெளிநாட்டிலாகா மந்திரி லிட்வினோவுக்கு உதவியாளராக இருந்த க்ரெஸ்டின்ஸ்கியை வேலையை விட்டு நீக்கிவிட்டதாய்ப் பத்திரிகைகள் மூலம் தெரிந்தது. வெளிநாட்டிலாகாவில் ஜெர்மனி, பால்கன் பிரதேசம் ஆகிய பிரிவுகளின் டைரக்டரான ஸ்டெர்ன் என்பவருடைய கையெழுத்து அதிகார பூர்வமான தஸ்தவேஜுகளில் இப்போது காணப்படுவதில்லை. இலாகாவுக்கு நான் அனுப்பிய கடிதங்களுக்கோ பதில் வருவதில்லை. எனது தாயகத்தில் ஏதோ தகராறு என்று தோன்றிற்று.

ஒருநாள் என் காரியாலய ஊழியர் ஒருவர் கையில் ஒரு பத்திரிகையுடன் என் அறைக்குள் படபடப்பாக நுழைந்தார். அவர் முகம் வெளிறியிருந்தது.

"கமார்னிக் தற்கொலை செய்துகொண்டுவிட்டார்". என்றார் அவர்.

அவரும் சரி நாலும் சரி எங்கள் மனதில் இருந்த உணர்ச்சிகளை அப்படியே வெளியிட்டுவிடவில்லை. என்ன நேர்ந்தாலும் தங்கள் மனதில் உள்ளதை உள்ளபடி. வெளியிட்டு விடுவது உசிதம் அல்ல என்பதை சில காலமாகவே ரஷ்யர்கள் அனுபவத்தில் அறிந்து கொண்டிருந்தார்கள். இன்னும் கொஞ்சகாலத்தில் இதைவிட மோசமான செய்திகளும் மாஸ்கோவிலிருந்து வந்தன. மார்ஷல் டுகாசேவ்ஸ்கியும் செஞ்சேனையைச் சேர்ந்த மற்றும் ஏழு புகழ்பெற்ற தளபதிகளும் திடீரெனக் கைது செய்யப்பட்டிருந்தார்கள். இதைப்பற்றிய சர்க்கார் அறிக்கை அவர்கள் ரகசியமாய் விசாரிக்கப்பட்டு தேசத் துரோகத்திற்கான தண்டனை பெற்று சுட்டுக் கொல்லப்பட்டதாய்த் தெரிவித்தது. இந்தத் தளபதிகளுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை ஆமோதித்துப் புகழ்வதாக எண்ணற்ற கூட்டங்களில் தொழிலாளர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், மாணவர்கள் முதலானோர் நிறைவேற்றிய தீர்மானங்களை மாஸ்கோ ரேடியோ அறிவித்தது. அந்தத் தீர்மானங்களின் வாசகங்கள் வழக்கமான முறையில் இருந்தன. கொல்லப்பட்ட செஞ்சேனைத் தலைவர்கள் எல்லோரும் "பாஸிஸ்ட் துரோகிகள்", "வெறி நாய்கள்", "மகாமட்டமான பேர்வழிகள்", "நாற்றமெடுக்கும் பிணங்கள்" என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டிருந்தார்கள்.

நான் இதை முற்றும் நம்பிவிடவில்லை. சுட்டுக் கொல்லப்பட்ட பிரமுகர்களில் பெரும்பாலோர் எனக்கு நேரில் பழக்கமானவர்கள். அட்மிரல் கோல்சாக்கை முறியடித்தவரும் போலந்து யுத்தத்தில் புகழ்பெற்ற தளபதியாக விளங்கியவருமான டுகாசேவ்ஸ்கியை எனக்கு சென்ற சில வருஷங்களாய் நன்றாகத் தெரியும். மாஸ்கோவில் நானும் அவரும் நெருங்கி உழைத்திருக்கிறோம். கொல்லப்பட்ட மற்றொருவரான ஊபார்விச், ரஷ்யப் புரட்சியின் திறன்மிக்க ராணுவத் தலைவர்களில் மிகச் சிறந்தவர் எனலாம். அவரிடம் எனக்கு விசேஷமான மரியாதையும் அன்பும் உண்டு. 1920-ல் ஒடெஸ் நகரில்

ஜெனரல் டெனிகின் தலைமையில் இருந்த எதிரி படைகளையும், 1922-ல் அநிகிழக்கில் இருந்த கடைசி வெள்ளை ரஷ்யப் படைகளையும் முறியடித்துப் புகழ்பெற்றவர் ஊபார்விச்: செஞ்சேனையை யந்திரமயமாக்க வேண்டும் என்று முதன்முதலில் வற்புறுத்தியவர் அவரே.

கொல்லப்பட்டவர்களில் மற்றொருவரான யாக்கிர் என்பவரும் ரஷ்யப் புரட்சிக்கு முற்பட்ட காலம் முதலாகவே போல்ஷவிக் கட்சியில் சேர்ந்து உழைத்தவர். 1919-ல், இளம் வயதில் ஒடெஸ்ஸா நகரில் இருந்த எதிரிகளை முறியடித்தார் அவர். இதன் பின்னர் எங்கள் நாட்டின் மிகச் சிறந்த ராணுவத் தலைவர்களில் ஒருவராக அவர் புகழெய்தினார். கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்கள் தவிர, ப்ரைமாகாவ், ஐடிமன், கார்க், பெல்டுமன் போன்ற மற்றவர்களும் கொல்லப்பட்டிருந்தார்கள். இவர்கள் அனைவரும் 1917-வது வருஷத்திய புரட்சியிலும் அதன் பிறகு நடந்த உள்நாட்டுப் போரிலும் பின்னர் போலந்துடன் நடைபெற்ற யுத்தத்திலும் கீர்த்தி பெற்றவர்கள். சண்டை ஓய்ந்ததும் இவர்கள் எல்லோரும், கட்சியின் உள் பேதா பேதங்களில் அகப்பட்டுக்கொள்ளாமல், செஞ்சேனையை வலுவாக்குவதில் மனப்பூர்வமாய் உழைத்தார்கள். செஞ்சேனையின் ஸ்தாபகரும் தங்களுடைய முதல் பிரதம சேனாதிபதியுமான ட்ராட்ஸ்கி 1928-ல் நாடு கடத்தப்பட்டபோது, இவர்கள், தேச ஐக்கியமே பெரிது என்று எண்ணி வாளாவிருந்தனர். தேச ஒற்றுமைக்காக ஸ்டாலினுடைய போக்குக்கு உட்பட்ட அதே பிரமுகர்களை இப்பொழுது தேசத் துரோகிகள் என்றும் நாட்ஸி ஜெர்மனியுடன் ரகசியமாய் சதி செய்தவர்கள் என்றும் குற்றம் சாட்டினார்கள்! அவர்களுடைய தேச பக்தியைப்பற்றியும் போர் வீரர் மனப்பான்மையைப் பற்றியும் எனக்கு நன்கு தெரியுமாதலால் இந்த விசித்திரமான குற்றச் சாட்டுகளை நான் நம்பவில்லை. இக் குற்றச்சாட்டுகள் கொரேமானவை, அர்த்தமற்றவை. மேலும், நாட்ஸிகளுடன் ஒத்துழைப்பதாகக் குற்

றம் சாட்டப்பட்ட எட்டு தளபதிகளில் இருவர்—யாக்கிர், பெல்டு மன் இருவரும்—யூதர்கள்.

எங்களுக்குத் தெரிந்தவரை காரணம் இதுவாய்த்தான் இருக்குமென்று தோன்றிற்று. நாட்டை உண்மையில் திறம் பட நடத்தக்கூடிய தொழில் நிபுணர்களையும் வர்த்தகர்களையும் ஒரேயடியாக ஸ்டாலின் ஒழித்துக் கட்டுவதை அவர்கள் ஆட் சேபித்ததே முக்கிய காரணமாக இருந்திருக்க வேண்டும். தொழில் நிபுணர்களும் வர்த்தக நிபுணர்களும் இல்லையென் ருல் ராணுவ பலம் பாதிக்கப்படும் என்று அவர்கள் நம்பினுர் கள். இந்த தளபதிகள் செஞ்சேனையை யந்திரமயமாக்கி வளர்த்ததெல்லாம் நாட்ஸி ஜெர்மனியுடன் போர் செய்வதற் காகத்தான். இருந்தபோதிலும் கட்சியின் மத்யக் கமிட்டிக்கு அவர்கள் ஒரு கண்டனம் அனுப்பினுர்கள் என்ற ஒரே விஷயம் அவர்களை ஆபத்தான பேர்வழிகள் என்று ஸ்டாலின் கருதும் படி செய்து, அவர்களுக்கு மரண தண்டனையையும் வாங்கிக் கொடுத்துவிட்டது!

இன்னும் உயிருடன் இருந்த புகழ்பெற்ற தளபதிகள் வெகு சிலரே. தரைப்படையில் மார்ஷல் எகராவ், மார்ஷல் ப்ளுகர், கடல்படையில் அட்மிரல் ஆர்லாவ், மாஜி-அட்மிரல் மூக்லேவிச், விமானப்படையின் தலைவர் ஜெனரல் ஆல்க்ஸ்னிஸ் ஆகியோர்தான் மீதம் இருந்தனர்.*

முதலில் நடந்த சதி வழக்கு விசாரணைகளெல்லாம் கொடு மையின் ஆரம்பம்தான் என்பது பின்னர் தெரிந்தது. புரட்சி யில் எவ்வித விசேஷமான பங்கும் கொண்டிராத ஸ்டாலின் புரட்சியில் - புகழ்பெற்ற அனைவரையும் ஒழித்துக்கட்டத் தீர் மானித்துவிட்டார். இதற்கு ஒரே வழிதான் இருந்தது. அதாவது புரட்சியில் சம்பந்தப்பட்ட பழைய போல்ஷவிக் தலை வர்கள் ஒவ்வொருவரையும் கொன்றுவிடுவதுதான். இவர்

*இவர்கள் அனைவரும் கூட அடுத்த ஒரு வருஷத்துக்குள் கட்டுக் கொல்லப்பட்டு விட்டார்கள்; அல்லது இருந்த இடம் தெரியாமல் போய்விட்டார்கள்.

களை ஒவ்வொருவராய் ஒழித்து விடுவதன்மூலம் தன்னுடைய சர்வாதிகாரத்தை எதிர்ப்பின்றி நிலை நாட்டிக்கொள்வதே ஸ்டாலினுடைய நோக்கம்.

வெளிநாட்டிலாகாவில் இருந்த என்னுடைய நண்பர்கள் எனக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டார்கள். ஏதன்ஸில் ருஷ்ய தூதரான கோபெட்ஸ்கி (இவர் ஸ்தானத்தில்தான் நான் இருந்து வந்தேன்) மாஸ்கோவில் ஒரு ஆஸ்பத்திரியில் மாண்டதாகத் தெரிந்தது. உடனே நான் காரியாலயத்தில் அவருடைய மேஜையை மூடி ஸீல் வைத்துவிட்டு, அதிலிருந்த தஸ்தவேஜுகளை என்ன செய்வது என்று வெளி நாட்டிலாகாவுக்கு எழுதிக் கேட்டேன். ஆனால் மந்திரி லிட்வினாவிடமிருந்து பதிலே இல்லை. இதன்பின் ஒரு நாள் என்னுடைய ரகசிய பரிபாஷைக் காரியதரிசியான ஜாகியானவ் கையில் ஒரு தந்தியுடன் என் அறைக்குள் நுழைந்தார். அவர் ஏதோ தர்மசங்கடத்தில் இருப்பதாகத் தோன்றியது.

“ போட்டெம்கினிடமிருந்து எனக்கு நேரிடையாக ஓர் உத்தரவு வந்திருக்கிறது. கோபெட்ஸ்கியின் மேஜையிலுள்ள காகிதங்களை ஸீல் வைத்து மாஸ்கோவுக்கு அனுப்பும்படி என்னை உத்தரவிட்டிருக்கிறார்கள். நான் என்ன செய்யட்டும் ? ” என்றார்.

போட்டெம்கின் வெளிநாட்டிலாகாவில் மந்திரி லிட்வினாவுக்கு உதவியாளர். அவர் அனுப்பியுள்ள இந்த உத்தரவு நியாயமாக ஏதன்ஸிலுள்ள தூதர் காரியாலயத்தின் தலைவனான எனக்கு அனுப்பப்பட்டிருக்கவேண்டும். இதுபோல ஒழுங்கு பிசகான நடவடிக்கை இதற்கு முன் நிகழ்ந்ததில்லை. இது வேண்டுமென்றே செய்யப்பட்ட காரியமாகவே தோன்றிற்று.

என் பரிபாஷைக் காரியதரிசியைப் பார்த்து, “ வெளி நாட்டிலாகாவின் உத்தரவு அப்படியானால் அதை நிறைவேற்றுவதுதான் உன் கடமை ” என்று சொன்னேன்.

என் நிலைமை எப்படி இருந்தாலும் அதற்குத் துணிந்திருக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன். மால்கோவின் கணக்குப்படி கூட என்மீது எவ்விதக் குற்றச்சாட்டு கருக்கும் முகாந்தரம் இல்லை. இருந்தாலும் நிலைமை விரும்பத்தகாத விதமாய்ப் போகக்கூடும். சிறையில் தள்ளுவார்களோ? அல்லது ரஷ்யாவில் ஏதாவது ஒரு கண்காணா இடத்துக்கு வெளியேற்றிவிடுவார்களோ?

இவ்வித எண்ணங்களால் என் மனநிலை குழப்பமடைந்து சகிக்க முடியாததாயிற்று. இதை மறப்பதற்காக ஜூலை 16-ந் தேதி வெள்ளிக்கிழமையன்று நான் உல்லாசமாக மீன் பிடிக்கப்போவதென்று தீர்மானித்தேன்.

நான் போவதாக இருந்த அதே தினம் பிற்பகல் என் காரியாலயத்தின் வர்த்தக அதிகாரி என்னை டெலிபோனில் கூப்பிட்டார். இருவரும் சிறிது நேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்த பிறகு அவர் பேச்சுவாக்கில், " என்ன அலெக்ஸாண்டர் கிரிகோரிவிச், நீங்கள் ஒப்புக்கொண்டபடி இன்று மாலை நாம் இருவரும் கப்பலில் சந்திக்கிறோமல்லவா? நான் உங்களை அழைத்துச் செல்ல ஏழு மணிக்கு வரட்டுமா? " என்றார்.

" கப்பலா? எந்த கப்பல்? " என்று நான் ஆச்சரியத்துடன் கேட்டேன். அப்போதுதான் " ருட்ஸூடாக் " என்ற ஸோவியத் கப்பல் பைரயஸ் துறைமுகத்தில் வந்து சேர்ந்திருப்பதாகவும், கப்பலின் காப்டனுடன் அன்றிரவு விருந்துண்ண நான் எனக்கே தெரியாமல் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அந்த மூன்றாவது நபர் மூலம் அறிந்தேன்! ராஜதந்திர முறைப்படி கப்பலின் காப்டன் முதல் காரியமாக என்னை வந்து பார்த்திருக்கவேண்டும். அதற்கு மாறாக கப்பல் வந்து சேர்ந்த விவரம்கூட எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. அது மட்டுமல்ல. நான் விருந்துண்ண வருவதாய் என் சார்பில் யாரோ ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்!

"கப்பலில் எல்லாம் ஏற்பாடாகிவிட்டதே! நீங்கள் வரு விர்கள் என்று எதிர் பார்க்கிறார்கள். நீங்கள்தான் வருவ தாய் ஒப்புக்கொண்டீர்களே!" என்றார் வர்த்தக அதிகாரி.

"நான் ஒன்றும் ஒப்புக்கொள்ளவில்லை" என்று கண்டிப் பாய்ச் சொல்லி பேச்சை முடித்துவிட்டேன்.

பத்து நிமிஷம் கழித்து "ருட்ஸ்டாக்" கப்பலின் காப்டன் என்னை டெலிபோனில் கூப்பிட்டார். தான் நேரில் வராததற்கு வருத்தம் தெரிவித்துக்கொண்டு, கப்பலில் சில அவசர மரா மத்து வேலைகளினால் வர முடியவில்லை என்று காரணம் சொன்னார். இரவு உணவு அருந்த கட்டாயம் வரவேண்டும் என்றார். கப்பலில் சில புதிய முகங்களை அறிமுகப்படுத்தி வைப்பேன், அவர்கள் மிகவும் விரும்பத்தக்கவர்கள் என்று வற்புறுத்தினார். இது தவிர சில முக்கியமான விஷயங்களை யும் என்னிடம் பேச வேண்டியிருக்கிறது என்றார். முடிவாக, தம் சமையற்காரனுடைய சமையலே தனி அழகு என்று ஆசை காட்டினார்.

நான் கண்டிப்புடனேயே, "மன்னிக்கவேண்டும். நான் ஷலாக்மெனி விரிகுடாவில் மீன் பிடிக்கப்போகிறேன். இஷ்ட மானால் நீங்கள் அங்கே வரலாம்" என்றேன்.

அன்றிரவு சுமார் எட்டுமணிக்கு நானும் எனது உறவினன் ஜார்ஜும் ஒரு படகில் விரிகுடாவில் சென்றுகொண்டிருந்தோம். கடல் மிகவும் அமைதியாக இருந்தது. அந்தி வானில் நக்ஷத்திரங்கள் பிரகாசமாய் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. ஆனால் காட்சியின் அழகை என்னால் அனுபவிக்கமுடியவில்லை. என் மனம் வேறெங்கோ இருந்தது. இந்த நபர்கள் எல்லா ரும் "ருட்ஸ்டாக்" கப்பலுக்கு நான் போகும்படி செய்வதற்கு இவ்வளவு தூரம் துடிப்பானேன் என்ற சிந்தனை என் மனதை விட்டு அகலவில்லை. ஒரே காரணம்தான் எனக்குப் புலப்பட்டது. அவர்கள் என்னை பலவந்தமாய் வெளியேற்றிச் செல்ல விரும்பு கிறார்கள்!

ஸிரிகுடாவின் கரையோரத்தில் இருந்த ஜன நடமாட்டமற்ற ரஸ்தாவில் ஒரு மோட்டார் வந்து நின்றது. மோட்டாரிலிருந்து பலர் இறங்கினார்கள். கடலில் எதையோ தேடுவது போல சுற்றுமுற்றும் பார்த்தார்கள்.

"நம்மைத்தான் தேடுகிறார்கள். நாம் கரைக்குத் திரும்பலாமா?" என்றேன்.

கரையில் கப்பலின் காப்டனும் கப்பலைச் சேர்ந்த இரு அதிகாரிகளும் என் காரியாலயத்தின் வர்த்தக அதிகாரியும் இன்னும் ஒன்றிரண்டு பேர்களும் இருந்தனர். ஒருவருக்கொருவர் அறிமுகமானதும் நான் அவர்களை ஒரு சிற்றுண்டிச் சாலைக்கு அழைத்துச் சென்றேன். வெளிப்படையாக சந்தோஷமாக இருந்தது போல் எல்லோரும் காட்டிக்கொண்டார்கள். உணவு முடிந்ததும், கப்பலின் காப்டன், விடாமல், எல்லோரும் கப்பலுக்குப் போய் அங்கே இரவைக் குதூகலமாய்க் கழிப்போம் என்றார். மறுபடியும் நான் போக மறுத்தேன். இந்த சூழ்ச்சியில் அவர்கள் எல்லோருக்குமே பங்கு உண்டா என்ன என்று சந்தேகம் தட்டியது.

அன்றிரவு எனக்குத் தூக்கமே இல்லை. முடிவில் என்ன செய்வதென்று தீர்மானித்துவிட்டேன். மறுநாள் என் ராஜீநாமா கடிதத்தை மாஸ்கோவுக்கு அனுப்பிவிட்டேன்.

அவர்கள் எதிர்பாராத விதமாய் நான் சுயமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு தூதராலயத்திலிருந்து வெளியேறி 'பாரிஸுக்குத் தப்பிப்போய்விட்டதைக் கண்டதும் ரஷ்ய ரகஸியப் போலீஸார் பிரமித்துப் போனார்கள். இருந்தாலும் அவர்கள் சீக்கிரமே வேறு நடவடிக்கை எடுக்கத் தொடங்கினார்கள்.

ஒரு நாள் மாலையில் நான் ஸெயிண்ட் க்ளவ்டு பார்க் பக்கமாய் உலாவச் சென்றேன். அப்போது, பார்வைக்கு ரஷ்யனைப் போலிருந்த ஒரு பெரிய ஆள் திடீரென என் பாதையின் குறுக்கே வழிமறித்துக்கொண்டு நிற்பதைக் கண்டேன். உடனே

திரும்பிச் செல்லலாம் என்று பின் பக்கம் பார்த்தேன். அங்கே, ஒல்லியான ஒரு சிறு பிரெஞ்சுக் காலாடி நின்று கொண்டிருந்தான். முன்னே அவன், பின்னே இவன் : இவர்கள், இருவரையும் தப்பி நான் செல்ல வேண்டுமென்றால் ஒரே வழி, காட்டுக்குள் நுழைவதுதான். காட்டுக்குள் நுழைய லாம் என்றுதான் முதலில் தோன்றிற்று. அப்படிச் செய் திருந்தால் நான் அவர்களிடம் காட்டுக்குள் தனியாக அகப் பட்டுக்கொண்டிருப்பேன் ; பார்க்கில் ஜனங்கள் பலபேர் இருப்ப தால் என்னை நெருங்க பயப்பட்ட அவ்விருவரும் காட்டில் என்ன செய்தாலும் கேள்வி இராது. ஆகவே, அது வேண்டாமெனத் தீர்மானித்து, துணிந்தடித்து வந்தவழியே திரும்பினேன். அந்த சிறிய பிரெஞ்சுக்காரன் மேல் இடித்துக்கொண்டே ஜன நடமாட்டம் அதிகமாக் உள்ள பக்கமாய்ப் போனேன். அந்த பிரெஞ்சுக்காரன் என்னை முறைத்துப் பார்த்தான். ஆனால் என் வழியை மறிக்கவில்லை.

என் தாயகத்திலிருந்து அக்காலத்தில் வந்துகொண்டிருந்த செய்திகளெல்லாம் ஒரே மாதிரியாக இருந்துவந்தன. குற்றச் சாட்டுகள், கைது செய்யப்படுதல், போன இடம் தெரியாமல் மறைந்துபோதல், மரணதண்டனை இவையே செய்திகள். நான் தாயகம் திரும்பியிருந்தால் எனக்கு என்ன நேர்ந்திருக்கும் என்பதைப்பற்றி எனக்கிருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் தீர்ந்துவிட்டது. ருஷ்யாவின் சகல ராஜதந்திரப் பிரதிநிதி களையும் ருஷ்ய ரகசியப் போலீஸார் எப்படி சல்லடை போட்டுச் சலித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற சமாசாரம் உலகறியத் தெரிந்தது. ஸ்பெயின் தலைநகரம் மாட்ரிடில் முன்னர் ஸ்தானிகராய் இருந்த மார்செல் ரோஸென்பர்க் கைது செய்யப் பட்டார் ; துருக்கியில் ஸ்தானிகரான லியான் கரகான் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் ; எஸ்டோனியாவில் ருஷ்ய தூதரான உஸ்ட்டினுவ் சந்தேகப்படத்தக்க விதமாய்க் காலமானார் ; பேர்லினில் ஸ்தானிகர் கான்ஸ்டான்டின் யூர னேவ், வார்ஸாவில் ஸ்தானிகர் டேவட்டியான், கௌனுவில்

தூதர் போரிஸ் போடாப்ஸ்கி, பின்லந்து தலைநகர் ஹெல்ஸிங்கியில் தூதர் எரிக் ஆஸ்டேல், புடாபெஸ்டில் தூதர் பெக்ஸியான், நார்வே தலைநகரம் ஒஸ்லோவில் தூதர் யாகூபோவிச்—இவர்கள் அனைவரும் தாயகத்துக்குத் திரும்ப அழைக்கப்பட்டனர். அதன் பின் அவர்களைப்பற்றித் தகவலே இல்லை.*

பாரிஸில் ஒரு வருஷம் கழிந்தது. ஸ்டாலினின் ஆட்களால் சதா சங்கடங்கள் இருந்ததென்றாலும், பொதுவாய் என் மனையாள் மேரியுடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன். அபாயத்திலிருந்து தப்பிவிட்டேன் எனலாம். ஒரு வேலையும் சம்பாதித்துக் கொண்டேன், நண்பர்களும் இருந்தார்கள். என் வாழ்க்கையையே புது விதமாய் மாற்றி அமைத்துக்கொள்ள ஆரம்பித்தேன்.

ஆனால் இது எனக்குப் பூரண திருப்தி அளிக்கவில்லை. லௌகிக சௌகர்யங்கள் இருந்தும், ஆத்மார்த்திகமாய் ஏதோ குறை இருந்துகொண்டிருந்தது. என் வாழ்க்கை முழுவதும் எந்த ஒரு ஆட்சிக்காக உழைத்து வந்தேனோ அதில் எனக்கு நம்பிக்கை போய்விட்டது. ஒரு புதிய சமூகத்தில் பொறுப்பும் அந்தஸ்தும் உள்ளதோர் வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற ஆவல் இருந்தது. தாயகம் என்று ஒன்று இல்லாமல் என் ஆயுளின் பாக்கி நாட்கள் முழுவதையும் மற்றொரு தேசத்தில் அந்நியன் என்ற வகையில் எப்படிக் கழிப்போம் என்ற எண்ணம் என் மனதை உறுத்தியது. பிரெஞ்சு மக்கள் என்னிடம் அன்பும் பரிவும் காட்டிய போதிலும் இந்த எண்ணம் அகலவில்லை. இதைப்பற்றி நினைக்க நினைக்க, அந்நியன் என்று கருதப்படாமல் நாட்டின் பிரஜை என்று பூரணமாய் அங்கீகரிக்கப்பட்டு சுயேச்சையுடன் புது வாழ்வு நடத்தக்கூடிய தேசம் அமெரிக்கா ஒன்றுதான் என்பது உறுதியாயிற்று.

---

* இவர்களில் பெரும்பாலோர் பின்னர் விசாரணையின்றியே சுட்டுக் கொல்லப்பட்டார்கள். கரகான், யுரனேவ், யாகூபோவிச் ஆகிய மூவர்மட்டுமே பொது விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டனர்.

" அந்நியர்கள் " " வெளி மனிதர்கள் " முதலியவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு ஐக்கிய தேசமாக உருவெடுத்துள்ளது யுனைட்டெட் ஸ்டேட்ஸ். அந்நாட்டைப்பற்றி என் மனைவியிடம் சொல்லி அவள் அபிப்பிராயம் கோரினேன். முடிவில் அமெரிக்கா சென்று புது வாழ்வு தொடங்குவது எனத் தீர் மானித்தோம்.

1939-ம் வருஷம் வஸந்த காலத்தில் பாரிஸில் உள்ள அமெரிக்க ஸ்தானிகாலயத்துக்கு நாங்கள் போனோம். அங் குள்ள அதிகாரிகள் நாங்கள் சொன்னதை யெல்லாம் கேட்டுக் கொண்டு, எங்களுக்கு உதவி செய்யத் தயாராய் இருப்பதாய்த் தெரிவித்தார்கள். இன்னும் சில மாதங்களில், யுனைட்டெட் ஸ்டேட்ஸில் நுழைவதற்கான அனுமதிப் பத்திரங்கள் வந்து சேர்ந்தன. புது உலகில் புது வாழ்வு தொடங்க எங்களுக்கு அவை உறுதுணையாயின. கப்பலில் பிரயாணம் செய்துகொண் டிருந்த நாங்கள் எங்களது புதிய தாயகம் ஆகப்போகும் தேசம் தென்படுகிறதா என்று தொடு வானத்தைக் கூர்ந்து கவனித்துவந்தோம். அமெரிக்கா வந்து சேரும் இன்னும் பலரைப்போல நாங்களும் அந்நாட்டின் கரை தெரிந்தவுடனே அளவற்ற குதூகலமடைந்தோம். அதுவரை எங்களுக்கு வெறும் சித்திரக் காட்சிபோல் விளங்கிய வானளாவும் கோபு ரங்கள் நிறைந்த நியூயார்க் நகரம் அப்பொழுது பிரத்யட்சமாய் கண்ணெதிரே தெரிந்தது. குளிர்காலத்தில் ஒரு நாள் நாங்கள் அந்நகரை அடைந்தோம்.

துறைமுகத்தில் குடியேற்ற இலாகா அதிகாரி ஒருவர் எங் கள் தஸ்தவேஜுகளையெல்லாம் பரிசீலனை செய்து முத்திரை யிட்டுக் கொடுத்தார். நாங்கள் அமெரிக்காவில் வசிக்க அனு மதி பெற்றோம்.

" மிக்க வந்தனம் " என்று அவரிடம் கூறினேன். என் மன தில் பொங்கிய உணர்ச்சியை என்னால் மறைக்க முடியவில்லை.

" அமெரிக்காவுக்கு நல்வரவு " என்றார் அவர்.

இது அவருக்கு மாமூலான பதில். ஆனால் எங்களுக்கோ அந்த இரு சொற்கள் எங்கள் புது வாழ்வுக்கே சுபசூசகமாய்த் தோன்றின. புதிய உலகில் நட்பும் நேசமும் அன்பும் பாசமும் இருக்கும் என்பதற்கு இவை அத்தாட்சியாய் விளங்கின.

* * * *

1917-ம் வருஷம். ரஷ்யத் தலைநகரிலிருந்து வழக்கமாக வரும் பத்திரிகைகள் அன்று வரவில்லை. செய்திகளுக்கு பதிலாக வதந்திகள் உலாவத் தொடங்கின. புரட்சி ஏற்பட்டு விட்டது என்று யாரோ சொன்னார்கள். தெருவில் போலீஸ் காரர்களைக் காணோம். அவர்கள் நடமாட்டமின்றி தத்தம் வீடுகளிலேயே இருந்தார்கள். வெளியே போக நேர்ந்தாலும் முன் யோசனையுடன் தங்கள் உடுப்புகளைக் கழட்டிவைத்து விட்டுப் பொது மக்கள்போல உடையணிந்து சென்றார்கள். இதர அரசாங்க இலாகாக்களின் வேலைகளும் நிதானமாகவே நடந்தன. ஊரில் அதிகாரிகளே இல்லைபோல் தோன்றிற்று. சில தினங்களில் பத்திரிகைகள் மறுபடி வரத் தொடங்கின. ஜார் சக்ரவர்த்தி முடி துறந்துவிட்டார் என்ற செய்தி பத்திரிகை வாயிலாகக் கிடைத்தது.

எங்கள் ஊரான கோமெல் காலத்துக்கு ஏற்றபடி முன் னேறிச் சென்றது. " மார்ஸெலே " புரட்சி கீதத்தைப் பொதுச் சதுக்கங்களில் பாடினார்கள் ; இளைஞர்கள் கையில் துப்பாக்கியுடன் ரோந்து சுற்றினார்கள். அவர்களது கையில் " வி.எம். "—தொண்டர் சேனை—என்பதற்கான சின்னம் இருந்தது.

நான் படித்துக் கொண்டிருந்த பள்ளிக்கூடத்தில் சில பையன்கள் கையில் சிவப்பு ரிப்பன்களை அணிந்துகொண்டு வந்தார்கள். பள்ளிக்கூடத்து பிரின்ஸிபால் சிவப்பு ரிப்பன் அணிவது பள்ளிக்கூட விதிகளுக்கு முரணானது என்று தடுத்துப் பார்த்தார். ஆனால் சீக்கிரம் அவர்கூட தமது போக்கை மாற்றிக்கொண்டார். எங்கள் உலகில் பெரிய பெரிய சம்ப

வங்கள் நடக்கின்றன என்பதை நிரூபிக்க எங்களுக்கு வேறு அத்தாட்சி வேண்டியிருக்கவில்லை.

நகரின் கோட்டையில் வாராந்திர அணிவகுப்பு வழக்கம் போல் நடந்தது. ஆனால் படையின் மேலதிகாரி தமது அங்கியில் ஒரு சிவப்பு மலர் அணிந்திருந்தார். "ஜார் வாழ்க" என்ற கீதத்துக்குப் பதிலாக "மார்ஸெயில்" புரட்சி கீதத்தை பாண்டு முழங்கியது. புதிய தாற்காலிக அரசாங்கத்திடம் விசுவாசம் தெரிவிப்பதாய்ப் படையினர் பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள். நாட்டின் சுதந்திரத்தைக் காக்க வேண்டுமென்றும், யுத்தத்தை இறுதி வெற்றிவரை நடத்திச் செல்ல வேண்டுமென்றும் ஒரு பிரமுகர் வீராவேசத்துடன் பேசினார்.

அடுத்த சில தினங்களில், நாட்டில் இன்னும் பலவிதமான அபிப்பிராயங்கள் இருப்பதை நாங்கள் உணர்ந்தோம். புதுப் புது பத்திரிகைகள் வரத் தலைப்பட்டன. நாங்கள் முன்பின் கேட்டிராத பல அரசியல் கட்சிகளின் பெயர்கள் அடிபடத் தொடங்கின. வடக்கேயிருந்து அலைவெள்ளம்போல் வந்து கொண்டிருந்த புதிய எண்ணங்களிடையே எங்கள் நகரம் தத்தளித்துக்கொண்டிருந்தது. நகரின் படைவீரர்களும் தொழிலாளர்களும் சேர்ந்து ஒரு சோவியத் (கமிட்டி) அமைத்தார்கள். அதில் பெரும்பாலோர் ஸோஷல் டெமொக்ராட் கட்சியினர். எங்கள் பள்ளிக்கூடத்திலுள்ள மேல் வகுப்பு மாணவர்கள் எங்கள் பள்ளிக்கூடத்திலும் ஒரு ஸோவியத் அமைக்க வேண்டுமென்றும், பள்ளிக்கூட விதிகளைத் தளர்த்த வேண்டும் என்றும் கூறினார்கள். இத்துடன் மாணவர் கழகம் ஒன்றும் ஆரம்பித்தனர். ஒரு புத்தகசாலை, வாசகசாலை இரண்டும் நடத்தினார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் நான் முதல் முதலாக ஒரு போல்ஷவிக்கை நேரில் சந்தித்தேன். அந்தக் காலத்தில் போல்ஷவிக் என்றால் ஒரு வசவாக இருந்தது. போல்ஷவிக்கு

கள் ஆபத்தான பேர்வழிகள் என்றும் தேசத் துரோகிகள் என்றும் கருதப்பட்டார்கள். ருஷ்யாவின் விரோதியான ஜெர்மன் சக்கரவர்த்தி கெய்ஸருடைய சம்மதத்துடன் போல்ஷுவிக்குகள் ஜெர்மனிவழியாக போய் வந்து கொண்டிருந்தார்கள். ஜெர்மனிக்கெதிரான யுத்தத்தை இறுதிவெற்றி வரை நடத்துவதை அவர்கள் எதிர்த்தார்கள். எங்கள் புத்தகசாலைக்கு நிதி திரட்டுவதுபற்றி விவாதம் நடந்துகொண்டிருந்தபோது, மோடல் என்ற ஒரு போல்ஷுவிக் மாணவன் பத்திரிகைகள் வாங்குவதில் மிகுந்த பட்சபாதம் காட்டப்படுவதாய் ஆட்சேபித்தான். போல்ஷுவிக் கட்சியின் பத்திரிகையான "ப்ராவ்டா"வை வாசக சாலைக்குத் தருவிக்கவில்லையே என்று எடுத்துக் காட்டினான்.

அவன் பேசத் தொடங்கியதுதான் தாமதம். அறையில் ஒரே இரைச்சல். "லெனின் கோஷ்டி ஆளான இவனை வெளியே அடித்து விரட்டுங்கள்!" என்று எல்லோரும் கூவினார்கள். ஆனால் பேர்வழி அசையவில்லை. விடாக் கண்டனாக, தான் சொன்னதையே வற்புறுத்தி, வோட்டு எடுக்கும்படி செய்து தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டான். எங்கள் வாசகசாலைக்கு "ப்ராவ்டா" வரத் தொடங்கியது. அந்த மாணவனுடைய துணிச்சல் என்னை வசீகரித்தது. லெனின் என்ற பெயரும் என் மனதில் பதிந்தது.

1918-ம் வருஷம் ஜூன் மாதம் என் படிப்பு முடிந்ததும் எனது நண்பன் விவைன் என்பவனுடன் வசித்து வந்தேன். சிந்தனையைக் கிளறிவிடும் துண்டுப் பிரசுரங்கள் அவனிடம் ஏராளமாய் இருந்தன. எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் அதைப்பற்றி ஒரு பிரசுரம் இருக்கும். நாங்கள் இருவரும் இரவெல்லாம் விவாதங்கள் நடத்துவோம். உலக மக்களை சரிசமமாகவும், உழைப்பாளிக்கும் மற்றவருக்கும் வித்தியாசமின்றியும் அடியோடு திருத்தி அமைப்பது என்பது அசாத்தியமான விஷயமல்ல என்று அவன் உறுதியாய் நம்பினான். அதற்கு கம்யூனிஸம் ஒன்றே வழி; பட்டினியால் வாடும்

நமது குடியானவர்களுக்கு கம்யூனிஸமே கதி என்பான். “பேச்சுக்காகச் சொல்லுகிறேன். மூன்று குடியானவர்கள் இருப்பதாய் வைத்துக்கொள்வோம். ஒருவனிடம் ஒரு குதிரையும் மற்றொருவனிடம் ஒரு கலப்பையும் மூன்றாமவனிடம் ஒரு மூட்டை விதை தானியமும் இருக்கிறது. இந்த மூன்று பேர்களுள் ஒற்றுமை இல்லை என்றால் அவர்கள் தங்களுடைய சொல்ப நிலங்களைக்கூட உழுது பயிரிடமுடியாது. அவர்கள் ஐக்கியப்பட்டாலோ மூவரும் சௌகர்யமாய் பயிர்த்தொழில் நடத்த முடியும் அல்லவா?” என்று கேட்பான்.

“வறுமை, அநீதி, யுத்தம் இவைகளை ஒழிக்கவேண்டுமென்றால் நாம் செய்யவேண்டியது ஒன்றுதான். தனிப்பட்டவர்களுக்கு சொத்துரிமை கூடாது என்று செய்துவிடவேண்டும்,” என்றான் லிவைன்.

“அப்படியானால் நான் போல்ஷவிக்குகளைத்தான் ஆதரிக்கப் போகிறேன்” என்று என் மனதுக்குள் சொல்லிக்கொண்டேன். அவனுடைய விவாதத்தை நன்றாகப் புரிந்துகொண்டதில் எனக்கு பரம திருப்தி. எல்லாம் வெகு சுலபமாய்த் தோன்றிற்று. தொழிலாளர்கள் உலகத்தைத் திருத்தி அமைப்பதற்கு இடைஞ்சலாக உள்ளவர்களை ஒழிக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி என்று தோன்றிற்று.

ஒரு நாள் லிவைன், “டினிப்பர் நதியின் இடது கரையில் ஒரு போல்ஷவிக் அரசாங்கத்தை பயாடகாவ்* ஸ்தாபித்திருக்கிறார். நடுவிலுள்ள எதிரி படைகளை எப்படியாவது தாண்டி நாம் அங்கே போய்ச் சேரவேண்டும். நீயும் வருகிறாயா?” என்று கேட்டான்.

“கட்டாயம் வருகிறேன்” என்றேன்.

---

*உக்ரைன் மாகாணத்தில் போல்ஷவிக் புரட்சித் தலைவர்களில் ஒருவர். சிறந்த ஞானி. மத்திய ஸோவியத் அரசாங்கத்தில் மிக்க செல்வாக்குள்ளவர். ஆனால் 1937-ல் மாஸ்கோவில் நடந்த இரண்டாவது விசாரணைத் தொடரில் “மக்களின் விரோதி” என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்.

நடுவில் இருந்த படை அணிகளைத் தாண்டிச் செல்வதற்கு ஏதாவது சாக்குப்போக்கு தேவையாக இருந்தது. நாங்களோ மாணவர்கள். ஆதலால், அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் போர் முன்னணிக்கு அப்பால் எங்கள் பெற்றோர்கள் இருப்ப தாகவும் அவர்களைப் பார்க்கப் போக வேண்டுமென்றும் சொன் ேனும். முன்னணியைக் கடந்து தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்த ஒரு வர்த்தக கோஷ்டியுடன் நாங்களும் கலந்துகொண்டோம். ஐந்து நாள் பிரயாணம் செய்தபின் ஜொர்னிகாவ் நகரைத் தாண்டி, போல்ஷவிக்குகள் கையிலிருந்த பிரதேசத்தை நெருங்கிக்கொண்டிருந்தோம். எங்களுக்கெல்லாம் உள்ளூர சற்று கவலைதான். நாங்கள் போய்க்கொண்டிருக்கையில் திடீரென ஒரு சிப்பாய்க் கூட்டம் வந்துசேர்ந்தது. அவர்கள் ராணுவ உடை அணிந்திருக்க வில்லை. ஆனால் துப்பாக்கிகள் வைத்திருந்தனர். இளம் குடியானவர்கள்; ஜேணம் இல்லாமலே லாகவமாய் குதிரை சவாரி செய்தார்கள்.

அவர்கள் தலைவன்போல் தோன்றிய ஒருவன், "உங்க ளிடம் உள்ள ஆயுதங்களையெல்லாம் கொடுத்துவிடுங்கள். ஆயு தங்களை ஒளித்து வைப்பவன் யாராயிருந்தாலும் சுட்டுக் கொல் லப்படுவான்" என்றான்.

எங்களிடம் எவ்வித ஆயுதமும் கிடையாது. அவர்கள் எங்கள் மூட்டை முடிச்சுகளைக் கண்ணோட்டமாய்ப் பார்த்தார்கள். எங்களில் யாரையும் சோதிக்கவில்லை.

"நீங்கள் யார்?" என்று கேட்டோம்.

"செஞ்சேனை கெரில்லாப் படைகள்," என்றனர்.

செஞ்சேனையின் மூலப்படை இன்னும் வெகு தூரத்தில் இருந்தது. நாங்கள் டிசம்பர் 31-ந் தேதியன்று அப்படையைப் பார்த்தோம், எனக்கு நன்கு பழக்கமான கோமெல் நகரில். ஒரு இளம் போர்வீரன், நகருக்கு வெளியே எங்களுடைய

மூட்டை முடிச்சுகளை சோதித்துப் பார்த்தான். எங்களிடம் நிரூபிகரமான அத்தாட்சி ஏதும் இல்லை. எங்கள் பள்ளிக் கூடத்தின் நற்சாட்சிப் பத்திரங்கள் மட்டும் இருந்தன. திடீரென அந்தப் போர்வீரன் என்னை உற்றுப்பார்த்தான். "அலெக்ஸாண்டர்!" என்று ஆச்சரியத்துடன் என் பெயரைச் சொன்னான்.

அவன் வேறுயாருமல்ல. மூன்றுநாலு வருஷத்துக்குமுன் எங்கள் பள்ளிக்கூடத்து வாசகசாலையில் "ப்ராவ்டா" பத்திரிகையைச் சேர்ப்பதற்காகத் துணிந்து வாதித்த பழைய நண்பன் மொடஸ்தான்.

இதே நண்பன் எதிர்காலத்தில் பெரிய போல்ஷவிக் தலைவனாக விளங்கினான். ஆனால் பதினைந்து வருஷம் கழித்து அவனை மாஸ்கோவில் ஒரு தெருவில் சந்தித்தேன். அவன் முகம் கவலை தோய்ந்திருந்தது. வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவனாகவும் எதையும் கண்டு பீதி அடைபவனாகவும் தோன்றினான்.

"மொடஸ், என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன்.

"ஏதோ காலம் போகிறது. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவன் என்று என்னைக் கட்சியைவிட்டு வெளியேற்றிவிட்டார்கள். என் வேலை போய்விட்டது. என்னை வந்து பார், விவரமாய் எல்லாம் சொல்லுகிறேன்."

அவன் விலாசத்தைப் பெற்றுக்கொண்டு சில தினங்களுக்குப் பின் அங்கே சென்று கதவைத் தட்டினேன். பயத்தால் நடுங்கிக்கொண்டே ஒரு கிழவி பதிலளித்தாள். அவர் இங்கே இல்லை. அவருக்கு என்ன ஆயிற்றோ தெரியாது. அவர் யாரோ அதுவும் தெரியாது என்றாள். நான் இதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை. ஏனென்றால் அது பிரசித்தமான 1935-ம் வருஷம்.

என் வாழ்வில் அடுத்த ஒரு வருஷமும் ஒரே பிரயாசை மயமாகவும் படபடப்பு அனுபவங்கள் நிறைந்ததாகவும் இருந்தது. விரோதி அணிகளைத் தாண்டி. கியவ் நகருக்கு ஒரு சமாசாரத்தை எடுத்துச் செல்லும்படி. ஸோவியத் ராணுவக் கமிட்டி எனக்கு உத்தரவு அளித்தது. கியவ் ஜில்லாவை எனக்கு நன்கு தெரியும், உக்ரைன் பாஷையும் சரளமாய்ப் பேசுவேன். ஆகையால் காரியத்தை முடித்துக்கொண்டு, போர்முனையிலிருந்து தாயகம் திரும்பிக்கொண்டிருந்த ஜெர்மன் சிப்பாய்கள் நிறைந்த ஒரு ரயிலில் ரகசியமாய் எதிரி அணிகளைத் தாண்டி. ஸோவியத் ராணுவக் கமிட்டி இருக்கும் இடத்திற்குத் திரும்பினேன்.

இந்தக் குழப்பமான காலத்தில் என் மனதில் ஒரே எண்ணம் தான் இருந்தது. ஸோவியத் கமிட்டிகளுக்கு அபாயமும் நாட்டுக்குப் பல்வேறு விரோதிகளால் ஆபத்தும் நேர்ந்திருக்கும் இந்த சமயத்தில் நாட்டைக் காப்பது என் கடமை எனக் கருதினேன். செஞ்சேனையில் சேருவதென்றும் தீர்மானித்தேன். கியவ் ஜில்லாவில் செஞ்சேனைத் தலைமை அதிகாரியிடம் ஒரு விண்ணப்பத்தையும் நீட்டினேன். அவர் நான் சொன்னவற்றை அனுதாபத்துடன் கேட்டுக்கொண்டு என்னைப் படையில் சேர்த்துக்கொள்ளுமாறு தமது காரியதரிசியிடம் சொன்னார்.

எல்லாம் முடிந்து நான் வெளியே போகும்போது அந்த ராணுவ அதிகாரி, "அது சரி, நீங்கள் கட்சியில் அங்கத்தினரா? இல்லையென்றால் இப்பொழுதாவது சேர வேண்டும். மனப்பூர்வமாய் நம்பிக்கை கொண்டவர்களே செஞ்சேனைக்குத் தேவை. கட்சி அங்கத்தினர் என்றால் நீங்கள் பன்மடங்கு உதவியாய் இருப்பீர்கள்" என்றார்.

அன்று மாலை என்னுடைய நண்பன் ஒருவனைச் சந்தித்த போது நான் சுயமாக செஞ்சேனையில் சேர்ந்துள்ளதுபற்றியும் அந்த அதிகாரி கூறியதுபற்றியும் சொன்னேன். என் நண்

பன் அதிகாரி சொன்னதை முற்றும் ஆமோதித்தான். " அவர் சொன்னது துளிக்கூட தப்பில்லை. நீ இப்பொழுதே போல்ஷவிக் லட்சியத்திற்காக சிரமப்பட்டு உழைக்கிறாய். அதற்காகப் போர் முனையில் உயிரைவிடவும் தயாராய் இருக்கிறாய். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அரை குறை சம்மதம் எதற்கு? நீ பூரணமாக எங்களுடன் சேர்ந்துவிடு. நான் உன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி வியப் கட்சிக் கமிட்டியிடம் சிபார்சு செய்கிறேன்" என்றான் நண்பன்.

அந்தக் காலத்தில் போல்ஷவிக் கட்சியில் சேருவதென்றால் சுலபமான காரியமல்ல. முதலாவதாக கட்சி அங்கத்தினர் இரண்டுபேர் சிபார்சு செய்யவேண்டும். பிறகு ஆறுமாத காலம் வீதம் " அநுதாபி ", " அபேட்சகன் " என்ற இரண்டு பூர்வாங்க நிலைகளைத் தாண்ட வேண்டும். இந்த இரண்டு நிலைகளையும் தாண்டிய பின்னர்தான் கட்சியில் பரிபூரண அங்கத்தினன் ஆக முடியும்.

நண்பன் லிவைன் என்னை வியப் ஜில்லாக் கட்சியின் காரியதரிசியான மைக்கேல் செர்னியிடம் அழைத்துச் சென்றான். சிகரெட் புகை மயமாய் இருந்த ஒரு அறையில் அவரைச் சந்தித்தோம். பேச்சில் நாசூக்கான மனிதர். முகத்தில் புன்னகை தவழ என்னைப் பார்த்துச் சொன்னார்: " ஸோவியத்துகளின் சார்பில் விரோதி அணிகளை நீங்கள் இரண்டு தடவை கடந்து சென்றிருப்பதால் வழக்கமான பூர்வாங்க நடவடிக்கைகள் இன்றியே கட்சியில் உங்களைச் சேர்த்துக்கொள்ளப்போகிறேன். இதை மட்டும் மறக்க வேண்டாம்—போல்ஷவிக் ஒருவன் எல்லாவற்றிற்கும் மேலாக போர் வீரனாகும்; அடுத்தபடி, அவன் கிளர்ச்சித் தலைவன்; மூன்றாவதாக, பிறருக்கு அவன் ஒரு லட்சிய புருஷனாக விளங்க வேண்டும்".

இவ்வாறு நான் ஒரு போல்ஷவிக் ஆனேன். . அவர்கள் என்னை நம்பி கட்சியில் நேரடியாக சேர்த்துக்கொண்டதுபற்றி

மிகவும் பெருமை கொண்டேன். புரட்சியினால் புது யுகம் எழுகிறது என்ற நம்பிக்கையும் ஸ்திரமாயிற்று.

செஞ்சேனையில் சேர்ந்த என்னை ஒரு விசேஷப் பயிற்சிப் படைக்கு அனுப்பினார்கள். நாட்டுப்புறங்களில் குடியானவர் களின் கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்காக அனுப்பப்படும் புதுப் படைகளுடன் நாங்களும் செல்வோம் என்று தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் எனக்கு ஒருமாதிரி இருந்தது. "குடியானவர்களுக்கு அமைதி, அரண்மனைகளுக்கு அழிவு" என்று தெரிவிக்கும் ஒரு விளம்பரத்தை யுத்த காரியாலயத்தில் பார்த்திருந்தேன். எங்களுக்கு இடப்பட்டிருந்த உத்தரவோ இதற்கு நேர் முரணாக இருந்தது. நாங்கள் பிரத்யட்ச நோக்குடையவர் களாக இருக்கவேண்டும் என்று எங்கள் அதிகாரிகள் சமாதானம் சொன்னார்கள். "பல்வேறு கொள்ளைக் கூட்டத் தலைவர்கள் ஆளுக்கு ஒரு விதமாய் மக்களை நாசம்செய்து கொண்டும் யூதர்களைக் கொலை செய்துகொண்டும் நகரங்களுக்கு உணவு செல்லாமல் தடுத்துக்கொண்டும் இருப்பதை எதிர்ப் புரட்சி என்று கருதி ஒடுக்காமல் வேறு என்ன செய்வது?" என்று அதிகாரிகள் கேட்பார்கள்.

எங்கள் படையிலிருந்த கட்சி அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் புதிதாய் அமைக்கப்பட்ட பல பட்டாளங்களுக்குப் பிரித்து அனுப்பப்பட்டார்கள். போல்ஷவிக்குகள் என்ற முறையில் புதிய பட்டாளங்களுக்கு அஸ்திவாரமாய் விளங்கவேண்டியது எங்கள் கடமையாயிற்று. புதுப் பட்டாளத்தில் சேர்ந்த சில நாட்களுக்கெல்லாம் எங்கள் பட்டாளம் வால்கா பிரதேசத்துக் குடியானவர்கள் அடங்கிய ஒரு செஞ்சேனைப் படைக்கு அனுப்பப் பட்டது. கியப்புக்குத் தெற்கே வெற்றிகரமாய் முன்னேறிக் கொண்டிருக்கும் விவசாயிகளின் கெரில்லாக் கூட்டங்களைச் சமாளிக்க வேண்டியது எங்கள் வேலையாயிற்று. அப்போது அந்தப் பிரதேசத்தில் சண்டைபோட எங்கள் படைகளுக்கு ஆர்வமே இல்லை.

ட்ரிப்போலியை ஜெர்மானியர் சுற்றி வளைத்துக்கொள்ளும் நடவடிக்கையில் முதன் முதலாக நாங்கள் போரிட்டோம். இந்தப் பிரதேசத்தில் ஸ்டோராங், ஜெஸ்யோனி என்ற இரு கெரில்லாத் தலைவர்களின் கை மேலோங்கியிருந்தது. இரண்டு மாதத்திற்கு முன்புதான் ஜெஸ்யோனி ஒரு போல்ஷவிக் ரெஜிமெண்டைத் திடீரெனத் தாக்கி ஒருவர் பாக்கியில்லாமல் கொன்றுசென்றான். போல்ஷவிக்குகள் எல்லாரும் தங்கள் குடிசைகளில் தூங்கிக் கொண்டிருந்த சமயம். ஜெஸ்யோனியின் கெரில்லாக்கள் தங்களுடைய வண்டிகளில் வந்து திடீரெனத் தாக்கினார்கள். போல்ஷவிக்குகள் எல்லோரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

நாங்கள் நெருங்கியதும் ஜெஸ்யோனி டினீப்பர் நதியின் கிளையில் பின்வாங்கியதோடு தமது தலைமைக் காரியாலயத்தையும் லாவலிஸ்காவிலிருந்து ட்ரிப்போலிக்கு மாற்றிக்கொண்டான். காலி செய்யப்பட்ட தலைமைக் காரியாலயத்தில் எங்களுக்கு சில காகிதங்களும் ஜெஸ்யோனியின் கையெழுத்திட்ட பிரகடனங்களும் கிடைத்தன. அவைகளில், " நமது அருமைத் தாய் உக்ரைனை விடுதலை செய்யுங்கள், சகல யூதர்களையும் கம்யூனிஸ்ட்களையும் அழியுங்கள் " என்று குடியானவர்களைக் கேட்டுக்கொண்டிருந்தான் ஜெஸ்யோனி.

அப்போது நடந்த சண்டையில் எதிரி இருக்கும் இடமே தெரியவில்லை. ஜெர்மனியால் அபாயம் மட்டும் அல்ல, இதர சங்கடங்களும் இருந்தன. என்னைச் சுற்றித் துப்பாக்கிக் குண்டுகள் பறக்க ஆரம்பித்தபோது எனக்கு முதலில் பயமாய்த்தான் இருந்தது. எங்கள் துப்பாக்கிகளாலும் வெறும் கைகளாலும் தரையில் நாங்கள் பதுங்குவதற்கான குழிகள் வெட்டிக்கொள்ளும்படி அதிகாரிகள் உத்தரவிட்டனர். இரவில் இந்தக் குழிகளில் தங்கும் நாங்கள் குளிரினால் வெட வெடத்துப் போவோம். பகலிலேயோ உஷ்ணம் தாளாமலும் பசி தாகத்தாலும் வாடுவோம். இப்படி முன்னணியில் நான்கு தினங்கள் இரவு பகலாய் சரியான உணவு இன்றிக் கழித்தோம்.

கடைசி நாள் பசி தாங்கமுடியாமல் எதிரி கடுமையாயும் மதி யாது நடுவாந்தரத்திலிருந்த ஒரு பட்டாணி வயலைக் கொள்ளை யடிக்க முயற்சித்தோம். எதிரி குண்டுகள் மழை போல் வர்ஷிக்கவே நாங்கள் திரும்ப வேண்டியதாயிற்று. கைக்குக் கிடைக்காத அந்தப் பட்டாணியைப் போல என் ஆயுளில் நான் சாப்பிட்டுள்ள எந்த பண்டமும் அவ்வளவு ருசியுள்ளதாய்த் தோன்றவில்லை. மூன்றாவது நாள் விடியற்காலையில் பொதுத் தாக்குதலுக்கு உத்தரவு வந்தது. நாங்கள் எல்லோரும் முன்னேபாய்ந்தோம். எவ்வித எதிர்ப்புமே இருக்கவில்லை. எதிரி ஓடிப்போய்விட்டான் என்று தோன்றிற்று. ஆனால் திடீரென எனது தோழர்கள் ரோடு ஓரத்தில் உள்ள ஒரு சாக்கடைப் பள்ளத்தில் பதுங்கி ஓடுவதைக் கண்டேன். "ஜாக் கிரதை! குதிரைப் படைகள்!" என்று யாரோ கத்தினார்கள். எங்களை நோக்கி ஒரு புழுதி மண்டலம் வந்துகொண்டிருந்தது. நாங்கள் யாவரும் ரோடு ஓரத்தில் சாக்கடைகளில் பதுங்கினோம். நான்மட்டும் அந்தப் புழுதி மண்டலத்தை நன்றாகக் கவனித் தேன். குதிரைப் படையுமல்ல, சிப்பாய்களுமல்ல. வெறும் ஆடுகள்! எனக்குத் துளிக்கூடக் காயமில்லை. விஷயம் தெரியாமல் என் தோழர்கள் ஒரு ஆட்டு மந்தைக்குப் பயந்து சிதறி ஓடுவதைக் கண்டு எனக்கு ஆத்திரமாய் இருந்தது. நான்தான் படை அதிகாரிபோல எல்லோரையும் திட்டினேன்; ஓடுகிறவர்களைத் தடுப்பதற்காக அவர்கள் தலை உயரத்துக்கு மேலே சுட்டும் பார்த்தேன்,

"சுத்தப் பேடிகளா! பழையபடி அணி வகுத்து நில்லுங்கள்! இல்லையென்றால் உங்கள் எல்லோரையும் சுட்டுத் தள்ளிவிடுவேன்!" என்று கத்தினேன்.

என் தோழர்களில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களின் உதவியைக்கொண்டு, சிதறிப்போன படையை ஒன்று சேர்த்தேன்.

"முட்டாள்களா! அது வெறும் ஆட்டு மந்தை, தெரிய வில்லையா!" என்று அவர்களை ஏளனம் செய்தேன்.

எப்படியோ படையை மறுபடி சீர் செய்து அதன் அதிகாரத்தையும் மேற்கொண்டேன். படையின் அதிகாரிவந்து சேர்ந்தபோது நாங்கள் அந்த ஸ்தலத்திலேயே விட்டுக்கொடுக்காமல் நிற்பதைக் கண்டார். என்னையறியாமல் நான் ஒரு பெரிய காரியத்தை சாதித்துவிட்டேன். இருந்தாலும் இதற்காக எனக்கு மரண தண்டனைகூட கிடைக்கவிருந்தது! இந்த சம்பவம்பற்றி அதிகாரபூர்வமான விசாரணை நடந்தது. எங்கள் படைகள் முழுவதுமே போரில் வெகு மோசமாக நடந்து கொண்டன என்றும், சில பகுதிகள் அவசரப்பட்டுத் தாக்கின என்றும், இதனால் எதிரி அவனைச் சுற்றி நாங்கள் ஏற்படுத்தியிருந்த வியூகத்தை உடைத்துக்கொண்டு போவது சாத்தியமாயிற்று என்றும் தெரிந்தது. மேலும், ஏதோ நிர்வாகப் பிசகினால், என்னுடைய படைப் பகுதி போர் முன்னணியில் தப்பான இடத்தில் இருந்தது. படையின் மேலதிகாரியாயிருந்த ஸ்கிரிப்னிக் தாங்க முடியாத கோபமடைந்தார். படை சிதறியதற்கு போல்ஷவிக்குகளே காரணம் என நினைத்து, தாமே ஒரு போல்ஷவிக்கான அவர், " மற்றவர்களுக்கெல்லாம் ஒரு படிப்பினையாக இருக்கட்டும். படையிலுள்ள கம்யூனிஸ்ட்களை சுட்டுத் தள்ளுங்கள்! " என்று உத்தரவிட்டார். உடனே, என் படைப் பகுதியின் அதிகாரி, தமது பகுதியில் இருக்கும் இரண்டு கம்யூனிஸ்ட்கள் மிக அற்புதமாக நடந்துகொண்டதாகவும், குழப்பத்துடன் முறியடிக்கப்படுவதை அவர்களே தடுத்தனர் என்றும் சொன்னார். " அப்படியானால் அவர்களுக்கு மேல் உத்தியோகம் அளிப்போம். அவர்களை காமிஸார் ஆக்கிவிடுங்கள் " என்றார் ஸ்கிரிப்னிக். இந்த சம்பவத்தின் மூலம் நான் செஞ்சேனையில் ஒரு படைப்பகுதியின் தலைவனான காமிஸார் ஆனேன்.

எனக்கு உத்தியோக உயர்வு கிடைத்ததும் ஒரு பிரச்னை என் மனதை உறுத்தியது. காமிஸார் என்ற முறையில் படைப் பகுதியின் மேலதிகாரிக்கு நிகரான அளவு எனக்கும் மாதம் 3000 ரூபிள்கள் சம்பளம் கிடைத்தது. முதல் தடவை

ட்ராட்ஸ்கியின் வேண்டுகோள் என் மனதைக் கவர்ந்தது. ஒரே படைக்கு இரண்டு அதிகாரிகள் இருப்பதன் சங்கடத்தை நான் அனுபவத்தில் நன்ருக உணர்ந்தேன். காமிஸார் வேலையிலிருந்து எனக்கு ஓய்வு கொடுத்து, செஞ்சேனை அதி காரிகள் பள்ளிக்கூடத்திற்கு என்னை அனுப்பும்படி தலைமைக் காரியாலயத்தைக் கேட்டுக்கொண்டேன். என் வேண்டுகோள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மறுபடியும் நான் கோமெல் நகருக்கே போக வேண்டிய தாயிற்று. ஏனெனில் நான் பயிற்சி பெறுவதற்காகப் போன மின்ஸ்க் காலாட்படைப் பள்ளிக்கூடம் கோமெல் நகருக்கு மாற்றப்பட்டிருந்தது.

கோமெல்லில் காலாட்படை அதிகாரிகள் பள்ளிக்கூடம் ஒரு விஸ்தாரமான கட்டடத்தில் இருந்தது. அக்கட்டடம் முன்னர் பாதிரிகள் பள்ளியாக இருந்தது. பாடசாலை சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருந்தது எனக்குக் குதூகலத்தை உண்டாக் கியது. நான் நல்லதொரு மெத்தையில் படுத்து, சுத்தமான தோர் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு உறங்கி ஒரு வருஷத்துக்கு மேலாகிவிட்டது. ஆகையால் அவைகளைக் கண்டபோது அபரிமித சந்தோஷமடைந்தேன். வகுப்பு அறை களின் சுவர்களில் துப்பாக்கிகளின் யந்திர விவரங்களைக் காட்டும் படங்கள் இருந்தன. அடுக்கடுக்காய் சிறு துப்பாக்கிகளும் பீரங்கிகளும் வைக்கப்பட்டிருந்தன. பாடசாலையின் வாயிலில் உள்ள காவல் சிப்பாயும், இவ்வளவு காலமாய் நான் கண்டு பழகிவந்த கந்தல் அணிந்த யுத்தகள சிப்பாய்களைப் போலி ராமல், மிக எடுப்பாய் உடை தரித்து நின்ருன். போர்முனைச் சிப்பாய்கள் செய்ததுபோல இவன் தனது துப்பாக்கியை ஒரு கயிறு கட்டி அலட்சியமாய் தோளில் மாட்டிக்கொண்டிருக்க வில்லை. வெகு கம்பீரமாய்க் கையில் பிடித்திருந்தான்.

க்ஷவரம் செய்துகொண்டு குளித்து ஒரு புதிய உடையும் ராணுவ ஓவர்கோட்டும் பெற்றுக்கொண்டபோது நான் புது

மனிதனுக விளங்கினேன். தரைமட்டம், யுத்த தந்திரம், ராணுவ விதிகள் முதலிய பெரிய பெரிய சமாசாரங்களைப்பற்றிக் கை நிறையப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு போகும்போது எனக்கேற்பட்ட தன்மதிப்பு கொஞ்சநஞ்சமல்ல.

இந்தப் பள்ளிக்கூடத்தில் என் காலம் சந்தோஷமாகவே கழிந்தது. குழப்பமான நிலைமையில், முப்புறமும் விரோதிகளால் சூழப்பட்டும்; பண்டங்களுக்கு ஓயாப் பஞ்சம் இருந்தும் இந்தப் பள்ளிக்கூடம் அமைதியாக திடநம்பிக்கையுடன் நடந்து வந்தது.

இளம் குடியானவர்களும் தொழிலாளர்களுமான மாணவர் குழாம் ராணுவதந்திரப் பிரச்னைகளை சரிவரப் புரிந்துகொள்ள விடாப்பிடியாய்ப் பாடம் படித்தது எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. உபாத்தியாயர்களுக்கே ஊக்கம் இருக்காது. ஆனல் மாணவர்களோ ஆர்வத்துடன் துடிப்பார்கள். இதனுல் நாளாவட்டத்தில் உபாத்தியாயர்கள் மனதும் மாறி விட்டது. ஏதோ சொல்லிக்கொடுத்தோம் என்றிராமல் சிரத்தையோடு பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். எங்கள் படிப்பு நிதானமாக நடந்ததென்ருலும் நிச்சயமான, பயனுள்ள வகையில் சென்றது.

ராணுவப் படிப்பைத்தவிர, க்ரைலென்கோர்வின் புகழ்பெற்ற பாடப் புத்தகத்தின்மூலம் அரசியல் விவகாரங்களையும் கற்ருேம். அரசியல் விவகார வகுப்புகளை நடத்த உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சி மிகச் சிறந்த நபர்கள் சிலரை அனுப்பியது. மார்க்ஸிஸத்தில் நேரிடை அனுபவம் பெற்ற இவர்கள் எங்களுக்குக் கட்சித் திட்டம், சோவியத் அர்சாங்கத்தின் கொள்கைகள் முதலியவற்றுடன் மார்க்ஸிஸத்தின் ஆரம்பக் கொள்கைகள் சிலவற்றையும் போதித்தார்கள். ஏற்கனவே அரசியல் அனுபவம் சிறிது உண்டாகையால் நான் உபாத்தியாயர்களுக்கு உதவியாக இருந்தேன். இந்தக் காலத்தில் இதர பண்டங்களுக்குப் பஞ்சமிருந்ததென்ருலும் புத்தகங்கள் நிறையக்

கிடைத்தன. மாஸ்கோவிலும் பெட்ரோகிராடிலும் உள்ள அச்சகங்கள் ஓய்வு ஒழிவின்றி உழைத்தன. செஞ்சேனை போன இடமெல்லாம் கட்டுப் பிரசுரங்கள் கட்டுக்கட்டாய் வந்து கொண்டேயிருந்தன. போல்ஷவிக் கொள்கைகள் மாணவர்களுக்கு சுலபத்தில் பிடிபட்டுவிட்டன. உழைப்பாளிகளுக்குச் சொந்தமான ஒரு புது உலகத்தை லெனினும், ட்ராட்ஸ்கியும் எப்படி ஸ்தாபிக்கிறார்கள் என்பதற்குத் தாங்களே உதாரணங்கள் அல்லவா? முன்பெல்லாம் அவர்களுக்கு எதிர்காலத்தைப்பற்றி அதிக நம்பிக்கை கிடையாது. ஆனால் இப்போதோ ஸோவியத் ஆட்சியில் உயர்தர அதிகாரிகள் ஆவோம் என்ற நம்பிக்கை இருந்தது.

இளம் சோவியத் குடியரசுக்கு 1919-ம் வருஷம் குளிர் காலத்தில் ஒரு பெரிய நெருக்கடி நேர்ந்தது. ஜெனரல் யூடேனிச் தலைமையில் ஒரு வெள்ளைரஷ்ய சேனை பெட்ரோகிராடு நகரை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. இந்த சேனைக்கு ப்ரிட்டிஷார் தளவாடம் கொடுத்து உதவினார்கள். இதே சமயம் ஜெனரல் டெனிகின் தலைமையில் மற்றொரு சேனை மாஸ்கோமீதும் டுலா நகர்மீதும் படையெடுத்துவந்தது. இந்த சேனை உக்ரைன் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டு ஓரேல் நகரையும் பிடித்துவிட்டது. வடக்கே பிரிட்டிஷ், அமெரிக்கத் துருப்புகளின் உதவியோடு ஜெனரல் மில்லர் ஆர்க்கேஞ்சல் துறைமுகத்தையும் அதன் சுற்று வட்டாரத்தையும் பிடித்துவிட்டார். யூரால் ஜில்லாக்களில், அட்மிரல் கோல்சாக் வால்கா நதி தீரத்தில் முன்னேறிவந்தார். போல்ஷவிஸம் என்ற தொல்லையை ஒழித்துவிட 14 தேசங்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாய் வின்ஸ்டன் சர்ச்சில் அறிவித்தார். நேச நாடுகளின் கடல் முற்றுகை ரஷ்யாவில் பஞ்சத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

நாங்கள் காலாட்படைப் பள்ளிக்கூடத்தில் ஆறு மாதம் படிப்பதற்குள், அந்தப் பிரதேசத்தைக் காப்பதற்காக நான்கு தடவை போர்முனைக்கு அழைக்கப்பட்டோம். பள்ளி மாணவர்

கள் 400 பேரில் 150 பேர் யுத்தகளத்தில் பலியானார்கள். என் வகுப்பில்மட்டும் 30 மாணவர்களில் 15 பேர் நாலே மாதத்தில் உயிரிழந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் எங்களுக்கு முதன் முதலாக அளிக்கப்பட்ட வேலை எங்கள் மனதுக்குப் பிடிக்காததாய் இருந்தது. தெற்குப் போர்முனையில் ஒரு குதிரைப்படை கலகம் செய்து, போர்முனைக்குச் செல்ல மறுத்தது. இதைச் சமாளிக்க எங்களை அனுப்பினார்கள். கலகக்காரர்களைச் சூழ்ந்துகொண்டு சண்டையிட்டோம். அவர்களுடைய தலைமை அதிகாரியையும் படையின் காமிஸாரையும் கைது செய்தோம். கலகம் செய்தவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பிடுங்கிக்கொண்டோம். கலகத் தலைவர்களும் பல போர்வீரர்களும் ராணுவ விசாரணைக்கு உள்ளாகி சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்த வேலை முடிந்து நாங்கள் எங்கள் பள்ளிக்கூடத்துக்குத் திரும்பும்போது எங்களுக்குப் பிரமாதமான புகழ் இருந்ததென்றாலும், மனதில் மனக்கசப்பே அதிகமாயிருந்தது. ஆனால் போர்வீரனின் கடமையில் ஒரு முக்கியமான அம்சத்தை அறிந்து கொண்டோம்.

நாங்கள் ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்குத் திரும்பியபோது எங்களைச் சிறிது சந்தேகத்துடனேயே வரவேற்றார்கள். ஆறுமாத காலம் பல அரசியல் கிளர்ச்சிக்காரர்களிடம் பயிற்சி பெற்ற ஒரு இளம் அதிகாரி எதற்குப் பயன்படுவான்? அரசியல் காரணத்துக்கன்றி ராணுவத் திறமைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பழைய அதிகாரிகள் இந்தக் கேள்வியை கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் என்னைக் கடுமையான சோதனைக்குள்ளாக்கினார்கள். ஆனால் நான் பரீட்சையில் வெற்றி பெற்றேன். இதன்பிறகு அரசியல் காமிஸார் ஒருவர் என்னைப் பரீட்சித்தார். இந்தப் பரீட்சை முதல் பரீட்சையைவிடக் கடினமாக இருந்தது. மார்க்ஸியத்தில் என்னுடைய ஞானம் அதிகமில்லையென்றாலும் என்னுடைய நோக்கங்கள் சரியாகவே இருக்கின்றன என்று அந்தக் காமிஸாரே ஒப்புக் கொள்ளும்படி பதிலளித்தேன்.

இதன்பின், இல்யூசெங்கோ என்ற பழைய அதிகாரி ஒருவர் தலைமை வகித்துவந்த ஒரு ரிஸர்வ் ரெஜிமெண்ட்டுக்கு என்னை அனுப்பினார்கள். என்போலவே மற்றொரு ராணுவக் கல்லூரிப் பட்டதாரியும் அப்படைக்கு வந்தான். இல்யூசெங்கோ அகம்பாவக்காரர். தமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்று நினைப்பவர். தமது அந்தஸ்தை ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பதற்காக அவர், அடுத்தாற்போலிருந்த தம் வீட்டிலிருந்து ரெஜிமெண்டின் காரியாலயத்துக்கு குதிரை வண்டியிலேயே வருவார், வண்டியிலேயே போவார். இல்யூசெங்கோ என்னை தம்கீழ் உள்ள படைகளின் கடைசி ப்ளாட்டூனில் கடைசிப் பகுதிக்குத் தலைமை வகிக்கும்படி நியமித்தார். இந்தப் படைப்பகுதிதான் எங்கள் படைகளில் மிகச் சிறியது. அதாவது இதிலுள்ள ஆட்கள்தான் படையிலுள்ள மற்ற எல்லோரையும் விடக் குள்ளமானவர்கள். ஆனால் நானே படையிலுள்ள அதிகாரிகளிலேயே மிக உயரமானவன். இப்படி ஒரு அசம்பாவிதச் சேர்க்கை உண்டாக்கி வேடிக்கை பார்ப்பதில் இல்யூசெங்கோவுக்கு ஒரு திருப்தி.

சில நாட்களில் எங்கள் ரெஜிமெண்டுக்கு காமிஸார் ப்ளுக்காவ் வந்து சேர்ந்தார். இந்த சமயம் நானும் அவரும் பேசிய ஒரு விஷயம் என்னையும் அறியாமல் எனது எதிர் காலத்தை நிர்ணயித்தது. காஸ்ப்பியன் கடலில் உள்ள ஸோவியத் கடல்படையின் அதிகாரி ராஸ்கால்நிகாவ் அந்தக் கடற்கரையில் பாரசீகத் துறைமுகமான என்ஸிலியில் ரஷ்யத் துருப்புகள் சிலரைக் கரையிறக்கியதாகவும், அவர்கள் பர்ஸிய மக்களால் குதூகலமாய் வரவேற்கப்பட்டதாயும் நாங்கள் ஒரு நாள் ஒரு பத்திரிகைச் செய்தியைப் பார்த்தோம். நான் காமிஸார் ப்ளுக்காவைப் பார்த்தேன். அவர் என்னைப்பார்த்தார். இருவருக்கும் தோன்றியது ஒரே எண்ணம்தான். நாங்கள் பாரசீகத்தை விடுதலை செய்யப்போகிறோம்! அதன் மூலம் ஆசியாவில் சோஷலிஸ்ட் புரட்சி ஆரம்பமாகிவிடும்!

நாங்கள் நெருங்க வேண்டியதுதான் தாமதம், அடிமைப்பட்ட கீழ்த்திசை மக்கள் அனைவரும் வீறுகொண்டு எழுவார்கள் !

அப்போது எங்களுக்கிருந்த அளவற்ற நம்பிக்கையை நான் முற்றும் வர்ணிப்பதுகூட இப்பொழுது சாத்தியமல்ல. ஆனால் எங்கள் மனதில் இம்மாதிரி எண்ணங்கள் இருந்தன என்பதற்கு இதை உதாரணமாகச் சொல்லுகிறேன். பெரிய பெரிய ஏகாதிபத்திய வல்லரசுகளை எப்படி முறியடிப்பது என்று நாங்கள் பேசிக்கொள்வோம். கிழக்கத்திய மக்களை எப்படித் தூண்டிவிடலாம் என்று சிந்தனை செய்வோம். கிழக்கத்திய பாஷைகளைக் கற்றுக்கொண்டு, வர்த்தகர்கள் வேஷத்தில் இந்தியா, அப்கானிஸ்தான் முதலிய நாடுகளில் பிரவேசித்து அங்கெல்லாம் தேசீயப் புரட்சிக்கு உள்ளூர ஏற்பாடு செய்யலாம் என்று கோட்டை கட்டுவோம். ஒரு பெரிய யுத்தத்தின் நடுவில் அகப்பட்டுக்கொண்டிருந்த ஒரு சின்னஞ் சிறிய ராணுவ அதிகாரிக்கு இவ்வித எண்ணம் தோன்றுவது ஏதோ நகைக்கத்தக்க விஷயம் போல் தோன்றினாலும், இவ் விஷயம் என்மனதை விட்டு அகல மறுத்தது. போகப் போக என் வாழ்வையே இது மாற்றிவிட்டது.

போலந்து யுத்தம் முடிந்தவுடன் 16-வது சேனையின் ராணுவக்கௌன்ஸில் மாஸ்கோவிலுள்ள ராணுவ மேலதிகாரிகள் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்காக என்னைத் தேர்ந்தனுப்பியது. ஒரு ரெஜிமெண்டின் தலைவன் என்பதற்கு அடையாளமான நான்கு நீண்ட சதுரங்கள் கொண்ட சின்னம் அணிந்து பெருமையுடன் போனேன் • நான்.

ராணுவ உபயோகத்துக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஹோட்டல்கள் ஒன்றில் நான் தங்கியிருக்க அனுமதிச் சீட்டு கிடைத்தது. அந்த ஹோட்டல் இருந்த சிறிய சதுக்கம் பார்வைக்கு ரம்மியமாய் இருந்தது. ஆனால் அதன் மத்தியில், அக்டோபர் புரட்சியில் இடிந்த வீடுகளின் சுவர்கள் சீர்படாமலே கிடந்தன. தெருவின் மத்தியில் எரிந்துபோன

ஒரு உயரமான கட்டடத்தின் சுவர்கள் நின்றன. வீடுகளின் முன் பகுதிகளெல்லாம் தெருவில் நடந்த சண்டையினால் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்த ஹோட்டலில் எனது அறைக்குப் பக்கத்து அறையில் ஒரு பழைய ஸ்நேகிதன் இருந்தான். ஷூரா ரிச்சேவிச் என்ற அவன் கலைக் கமிஷனுக்குக் காரியதரிசி, மாஸ்கோ நகரை நன்கு அறிந்தவன். எங்கும் பணத்துக்கு மதிப்பிருக்கவில்லையாதலால் கலைஞர்கள் தங்களுடைய கலைத் திறமையைக் காட்டி உணவு தானியங்கள், சர்க்கரை, காய்கறிகள், வெண்ணெய் முதலியவற்றைப் பெற்றார்கள். நண்பன் ஷூராவின் வேலை இம்மாதிரி பண்டமாற்றுக்கு ஏற்பாடு செய்வதாகும். ஷூரா இந்த நடவடிக்கைகளில் நடுவே தானும் கமிஷன் அடித்துவிடுவான். கமிஷன் பெறுவது சட்டவிரோதம் என்றாலும் அவன் அப்படி இப்படி ஏராளமான உணவுப் பண்டங்களைச் சேர்த்து வைத்திருந்தான். அவனிடம் சர்க்கரைக்கு பதிலாக உபயோகப்படும் சாக்கரைன் இருந்தது. காய்ந்த காரட் கிழங்குகளிலிருந்து கஷாயம் தயாரித்து சாக்கரைன் சேர்த்து "தேனீர்" அளிப்பான்.

நான் படித்துவந்த மேலதிகாரிகள் கல்லூரியின் ஆசிரியர்களில் ஒருவர்கூட புரட்சி அனுபவம் கொண்டவர் அல்ல. அவர்கள் அனைவரும் பழைய ஜார் ராணுவத்தில் புகழ்பெற்ற தளபதிகள். நோவிட்ஸ்கி சகோதரர்கள்; யுத்த தந்திரத்தைப்பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ள நெஸ்நமால்; 1917-ல் தாற்காலிக அரசாங்கத்தில் யுத்த மந்திரியாய் இருந்த வெர்க்காவ்ஸ்கி; 1905-ல் ரஷ்யா-ஜப்பான் யுத்தத்தில் போரிட்ட மார்ட்டினவ்; போர்ட் ஆர்தர் துறைமுகத்தைப் பலப்படுத்துவதற்கு மூலகாரணமாய் இருந்தவரும் "க்ருபாட்கினனுடைய துன்மந்திரி" எனப் பெயர் பெற்றவருமான வெலிச்கோ; குதிரைப்படைத் தந்திரங்களில் நிபுணரான காட்டோவ்ஸ்கி; யுத்த சாஸ்திரத்திலும் சரித்திரத்திலும் அற்புத மேதையான ஸ்வெச்சின்—இவர்கள் எல்லோரும் அந்தக் காலத்தில் மாஸ்

கோ ராணுவ மேலதிகாரிகள் கல்லூரியில் ஆசிரியர்களாயிருந்தனர்.

வாழ்க்கையின் எதிர்பாரா சம்பவச் சுழலில் சிக்குண்ட இவர்கள், ராணுவமே தொழிலாகக் கொண்ட போர்வீரர்களுக்குரிய தனி முறையில் தங்களது தற்போதைய நிலைமையை அமைதியாக ஏற்றுக்கொண்டார்கள். வீழ்ச்சியுற்ற ரஷ்யாவை மீண்டும் செப்பனிட்டு முன்னுக்குக் கொண்டுவர உழைக்கும் எந்த அரசாங்கத்துக்கும் அவர்கள் சேவை புரியத் தயாராய் இருந்தார்கள். ஸோவியத் அரசாங்கம் இதை சாதிக்க முடியுமா என்பதைப்பற்றி அவர்களில் பலருக்கு சந்தேகம் தான். ஆயினும் புதிய சேனை ஒன்றை உருவகப்படுத்தும்படி லெனினும் ட்ராட்ஸ்கியும் விடுத்த வேண்டுகோளுக்கு அவர்கள் விசுவாசத்துடன் செவி சாய்த்தனர்; தங்களால் இயன்றதெல்லாம் செய்ய முன்வந்தனர். அவர்களுடைய உழைப்பின் பயனாகவே செஞ்சேனைக்கு பயிற்சிபெற்ற புதிய அதிகாரிகள் ஏற்பட்டனர். அவர்களது சேவைக்காக அவர்களுக்குரிய நன்றி செலுத்துவது கடமையாகும்.

ராணுவ மேலதிகாரிகள் கல்லூரியில் படித்துவந்த மாணவர்களோ ஆசிரியர்களுக்கு நேர் விரோதமான அனுபவமுள்ளவர்கள். மாணவர்கள் எல்லோரும் உள்நாட்டு யுத்தத்தில் யுத்தகள அனுபவம் பெற்றவர்கள்; யுத்தமென்றால் என்னவென்பதை நன்கு உணர்ந்தவர்கள்; யுத்தத்தைப்பற்றிக் கொள்கையளவில் ஒன்றும் தெரியாவிட்டாலும் அனுபவத்தின் மூலம் யுத்த தந்திரங்களிலும் படை வியூக அமைப்புகளிலும் நிபுணர்களெனப் பெயர் எடுத்தவர்கள் பலர். மாணவர்களில் சிலருக்கு எழுத்துவாசனை கூடக் கிடையாது. ஆனால் நெப்போலியனையும் க்ளாஸ்விட்ஸையும் நெட்டுரு செய்திருந்த பல தளபதிகளை யுத்த களத்தில் முறியடித்துப் புகழ் வாங்கியிருந்தார்கள்!

அபூர்வமான இந்த மாணவர்கள் ராணுவக் கல்லூரியில் படிப்பதுமட்டுமல்ல, எப்பொழுது தேவையானாலும் குடியரசைக்

காப்பதற்காக யுத்த களத்துக்கு விரைந்து செல்லத் தயாராயும் இருந்தார்கள். ஆசிரியர்களுக்கும் அவர்களது போதனு வேலையில் அடிக்கடி தடை ஏற்பட்டுவிடும். ரகசியப் போலீசார் அவர்களை சந்தேகித்தோ அல்லது சந்தேகப் பேர்வழிகளுக்கு ஜாமீனுக்க் கருதியோ அவர்களை அழைத்துச் சென்று சிறிது காலம் காவலில் வைத்திருந்து அனுப்புவார்கள். அவர்களும் இம்மாதிரியான அனுபவங்களை சகஜமாகவே எடுத்துக் கொண்டார்கள். எப்பொழுது கிளம்பிச் செல்ல வேண்டு மென்றாலும் மூட்டை முடிச்சுகளைத் தயாராக வைத்திருந்தார்கள்!

ராணுவக் கல்லூரி வகுப்புகள் மூன்று பிரிவாக இருந்தன. கீழ் வகுப்பு, நடு வகுப்பு, மேல் வகுப்பு என மூன்றிலுமாக சுமார் 600 மாணவர்கள் இருந்தனர். ஐந்து பேர் ஒரு சிறு தொகுதியாகவும், ஒவ்வொரு தொகுதியை மேற்பார்வை செய்ய ஒரு ஆசிரியரும் இருந்தனர்.

எங்கள் யுத்தக் கல்லூரியும் வெளிநாட்டு இலாகாவும் சேர்ந்து கீழ்த்திசை பாஷைகள் வகுப்பு நடத்தப்போவதாக ஒருநாள் பத்திரிகைகளில் பார்த்தேன். எனக்கு மிகுந்த சந்தோஷமாயிருந்தது. கிழக்கத்திய நாடுகளில் புரட்சியைப் பரப்ப வேண்டுமென்ற என்னுடைய பழைய ஆசை இன்னும் இருக்கத்தான் இருந்தது. ஆகையால் என்னுடைய ராணுவப் படிப்பைத் தவிர கீழ்த்திசை பாஷைகள் கற்பதற்கும் விண்ணப்பம் செய்துகொண்டேன். என்னைச் சேர்த்துக்கொண்டார்கள். ஒரே சமயத்தில் ஹிந்துஸ்தானி, அரபி, பாரஸீக பாஷை ஆகிய மூன்றிலும் தேர்ச்சி பெறப் படிக்கலானேன்.

பாஷைகள் கல்லூரியின் தலைவர் ஜார் அரசரின் கடற் படையில் அதிகாரியாயிருந்த ஒரு உயர்குல இளைஞர். பல பாஷைகள் நன்கு அறிந்தவர். அவர் பெயர் டாலிவோ-டாப்ராவால்ஸ்கி.

கீழ்த்திசை பாஷைகள் கல்லூரியின் திறப்புவிழா ராணுவக் கல்லூரியின் பெரிய ஹாலில் நடைபெற்றது. புதிய பாஷைகள் கற்பதற்காக சுமார் 70 பேர் சேர்ந்திருந்தோம். இந்த 70-ல் பாதிப்பேர் ராணுவ அதிகாரிகள், பாதிப்பேர் வெளி நாட்டிலாகாவிலிருந்து வந்த சிவில் அதிகாரிகள். திறப்பு விழாவில் ஜெனரல் ஸ்மெஸ்லரேவ் பிரசங்கம் செய்தார். இவர் தமது 40 வருஷ அனுபவத்தில் பெரும்பாகம் கிழக்கத்திய நாடுகளில் இருந்தவர். எங்களது படிப்பின் நோக்கத்தைப் பற்றி—அதாவது, மத்திய கிழக்கில் ரஷ்ய சாம்ராஜ்யமும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் சந்திக்கும் எல்லை நாடுகளில் நாங்கள் என்ன சாதிக்கமுடியும் என்பதுபற்றி—அவர் ஆர்வத்துடன் பேசினார்.

"புகழ்பெற்ற பீட்டர் அரசர் காலம் முதலாகவே ரஷ்ய சாம்ராஜ்யத்தின் பார்வை உஷ்ண தேசங்களை நோக்கி, இந்து மகா சமுத்திரத்தின் திசையில் சென்றுள்ளது. இந்தப் பிரதேசத்தில் ரஷ்ய விஸ்தரிப்புக்கு பிரிட்டிஷார் எப்போதும் தடையாய் இருந்துள்ளார்கள். ஸோவியத் புரட்சியின்மூலம் நாம் நமது ஏகாதிபத்தியத்தைக் களைந்தெறிந்துவிட்டோமே, இப்பொழுது இதையேன் சொல்கிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். ஸோவியத் குடியரசுக்கு ஏகாதிபத்திய நோக்கம் இல்லையாதென்பது உண்மை. ஆனால் உலகில் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு உட்பட்டு வாடும் சகல மக்களுக்கும் விடுதலை வாங்கித்தருவதே ஸோவியத் புரட்சியின் பரந்த லட்சியம். முக்கியமாக கிழக்கத்திய நாடுகள் சுதந்தரம் அடையச் செய்வது அதன் நோக்கம். இந்த விடுதலைக்குப் பெரும் தடையாக உள்ளது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே. ஆசிய மக்களுக்கு சுதந்தரமளிக்க வேண்டுமென்றால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சக்தியை முறித்துத்தான் ஆகவேண்டும். நமக்கும் சரி அவர்களுக்கும் சரி அதுவே பரம விரோதி. இதுதான் உங்கள் கடமை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எப்படி சமாளிப்பதென்பதுபற்றி எங்கள் அனுபவத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்."

அவர் பேசிக் கொண்டிருந்தபோது அறையிலிருந்த இதர மாணவர்களைக் கவனித்துப் பார்த்தேன். அவர்களில் பெரும் பாலோர் இளைஞர்கள். தங்கள் சக்தியில் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள் என்று தோன்றிற்று. ஆனால், கொஞ்ச நாளில், ராணுவம், கிழக்கத்திய பாஷைகள் இரண்டு படிப்பை யும் சமாளிக்கமுடியாமல் பலர் பாஷைப் படிப்பிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

அந்தக் காலத்தில் என்னுடன் படித்தவர்களில் பலர் ஸோவியத் ரஷ்யாவின் சிறந்த ராஜதந்திரிகளாகவும் ராணுவத் தலைவர்களாகவும் புகழடைந்திருக்கிறார்கள். ஐந்து வருஷங் களுக்குப் பிறகு, நான் பாரசீகத்தில் இரண்டு வருஷம் கான்ஸல்-ஜெனரலாக இருந்துவிட்டு அந்நாட்டிலிருந்து வெளி யேறியபோது மத்தியக் கிழக்கு நாடுகளில் இருந்த ஸோவியத் ராஜதந்திரப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் மாஸ்கோ பாஷைக் கல்லூரியில் தேர்ந்தவர்கள் என்பதைக் கண்டேன். இதற்குப் பல வருஷங்களுக்குப் பிறகும் சைனா, ஜப்பான் தேசங்களி லுள்ள ரஷ்ய அதிகாரிகளில் மாஸ்கோ பாஷைக் கல்லூரி மாணவர்களே நிறைய இருந்தனர்.

1920-ல் எங்கள் கல்லூரியிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியில் தொழிற்சங்க இயக்கத்தைப் பற்றிக் கடுமையான விவாதம் நடந்தது. மொத்த மாணவர்களில் முக்கால் பங்கு பேர் இதில் கலந்துகொண்டார்கள். ஸோவியத் அரசாங்கம் ஒன்றில் தொழிற்சங்கங்கள் என்ன முறையில் இயங்கவேண்டும் என்பது விவாதம்.

ஸோவியத் தலைவர்களில் லெனின், ஸினோவீவ், டாம்ஸ் டாக் ஆகியோர் தொழிற்சங்கங்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உட் பட்டிருக்கவேண்டும் என்றும், அதே சமயம் தொழிலாளர் களின் நலன்களைப் பாதுகாப்பதில் தொழிற்சங்கங்களுக்கு ஓரளவு சுதந்திரம் இருக்கவேண்டும் என்றும் கூறினார்கள். ட்ராட்ஸ் கியோ தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துடன் மேன்மேலும் ஐக்

இயப்பட்டு விடவேண்டுமென்று வாதித்தார். அரசாங்கமே தொழிலாளர்களைச் சேர்ந்ததாய் இருப்பதால் அவர்களுடைய பொருளாதார நலன்களைப் பாதுகாக்க விசேஷ ஸ்தாபனங்கள் தேவையில்லை என்றார் ட்ராட்ஸ்கி. புக்காரின் இந்த இரண்டு கருத்துக்களுக்கும் நடு மையமாகப் போக முயற்சி செய்தார். தொழிலாளர்களின் எதிர்க்கட்சி என்ற கட்சியோ அரசாங்கத்தின் தலையீடின்றி தொழிற்சங்க ஸ்தாபனங்களே பொருள் உற்பத்தி முழுவதையும் நிர்வகித்து நடத்த வேண்டும் என்று வாதித்தது.

மாணவர்களிடையே விவாதம் மிகக் கடுமையாக இருந்தது. நான்கு கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களும் எங்கள் கல்லூரியில் வந்து பேசினார்கள். பிரசங்க முடிவில் அபிப்பிராயம் அறிவதற்காக வோட்டு எடுத்தபோது, மொத்த கம்யூனிஸ்ட் மாணவர்கள் 300 பேரில் 13 பேர்தான் ட்ராட்ஸ்கிக்கு ஓட்டளித்தனர். லெனினுக்கு 32 ஓட்டுகள் கிடைத்தன. தொழிலாளரின் எதிர்க்கட்சிக்கோ 250 பேர் ஆதரவு அளித்தனர். ராணுவக் கல்லூரி மாணவர்களுடைய கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய அபிப்பிராயத்தை இவ்வாறு மனம் விட்டுத் தெரிவித்தது. என்னைப் பொறுத்தமட்டில் ராணுவ பிரதம சேனாதிபதியான ட்ராட்ஸ்கியிடம் எனக்கு மிகுந்த மரியாதை உண்டென்றாலும் இந்த விஷயத்தில் அவர் கருத்து பிசகு என்று நினைத்து லெனினுக்கு ஓட் செய்தேன்.

மாஸ்கோவில் ஒரு மகாநாட்டில் 1922-ம் வருஷம் இறுதியில் லெனின் பேசினார். இதுவே அவரது வாழ்க்கையின் கடைசி பிரசங்கமாக முடிந்தது. அவர் பேசிய சமயம் நான் மேடைக்கு வெகு சமீபத்தில் நின்றுகொண்டிருந்தேன். அவர் பேசும்போது மிகவும் கஷ்டப்பட்டுப் பேசுவதுபோலத் தோன்றிற்று. ஆனால் அதுவே அவரது கடைசிப் பிரசங்கம் ஆகும் என்று நாங்கள் யாரும் நினைக்கவில்லை. தமது சுருக்கமான தெளிவான வாக்கியங்களால் எதையும் அழகுற விளக்குவதற்கு அவர் எப்போதும் உயிரோடிருப்பார் என்று நாங்கள் நினைத்துக்

கொண்டிருந்தோம்! லெனின் பேசியபோது அவரது நெற்றிப் புருவத்தில் வியர்வை முத்தாக அரும்பியது. அவருக்கு சிந்தனை செய்வதே சிரமமாகவும் பேச்சே பெருமுயற்சியாகவும் இருந்ததுபோல் தோன்றிற்று. பேசி முடிந்ததும், உள்ளூர ஏதோ வலியினால் கஷ்டப்படுபவர்போல பெருமூச்சு விட்டுக் கொண்டு உட்கார்ந்தார். போல்ஷவிக் தலைவர்களில் மற்றவர் களை நாங்கள் புகழ்வோம், கௌரவிப்போம், மரியாதை செலுத்துவோம். ஆனால் லெனினிடம் எங்களைப் பிணைத்தது அன்புப்பாசமாகும். பதவிமோகம் என்பது லவலேசமுமற்ற தன்னலத் தியாகி அவர்.

அப்போதுகூட ஸ்டாலின் அதிகாரத்தைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்துவந்தார். ஸ்டாலின் இவ்வித சூழ்ச்சிகளில் முனைந் திருப்பார்; லெனினோ, ஸோவியத் மக்கள் விஷயமறிந்தவர் களாகவும் திறமைசாலிகளாகவும் விளங்கவேண்டும் என்பதற் காக அல்லும் பகலும் உழைப்பார். 'மக்கள் திறமை உயர்ந்துவிட்டால் அரசாங்கத்தை எந்த மடையனும் நடத்த லாம்' என்று லெனின் சொல்வார். லெனின் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வெளியே உள்ள எதிர்க்கட்சிகள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கடுமையான தடைகள் இடையாது. அவை பிற்காலத்தில் ஏற்பட்டவை. அப்போ தெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகள் பூரண ஜனநாயக முறையிலேயே நடந்துவந்தன. எல்லாப் பிரச்னை களைப்பற்றியும் மனம்விட்டுப் பகிரங்கமாய் விவாதிப்போம். அதி காரபீடத்துக்கு எதிரான அபிப்பிராயம் எதையாவது சொல்லி விட்டால் தண்டனைக்கு உள்ளாவோமே என்ற கவலை அந்தக் காலத்தில் இடையாது.

இந்த சந்தர்ப்பத்தில், ரஷ்ய உள்நாட்டு யுத்தத்தில் மிக நெருக்கடியான வருஷமாகிய 1919-ல் நடந்த ஒரு சம்பவத் தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஸிம்பராபோல் நகரில் இருந்த செஞ்சேனை அதிகாரி டைபென்கோவிடம் ராணுவ நிமித்தமாக ஒரு செஞ்சேனை கோஷ்டி போயிற்று. நான் அந்த கோஷ்டியிலிருந்தேன். உக்ரைன் மாகாணத்தில் மென்ஷவிக்* கட்சியின் மத்யக் கமிட்டி அங்கத்தினர் மாக்ஸிம் ஸ்டெர்ன் எங்கள் கோஷ்டியில் ஒருவர்.

நாங்கள் போனபோது ஸிம்பராபோல் நகரை எதிரிகள் முற்றுகையிட்டு வந்தார்கள். ஐம்பது மைலுக்கு அப்பால்தான் ஜெனரல் டெனிகின் தலைமையில் எதிரிப் படைகள் இருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் நகரில் ஒரு அரசியல் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று மாக்ஸிம் ஸ்டெர்ன் கேட்டார். கூட்டம் நடத்துவதற்காக் நகர நாடகக் கொட்டகை அவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. ஒரு பெரிய பொதுக்கூட்டத்தில் அவர் பேசினார். பொதுமக்களும் செஞ்சேனை வீரர்களும் அடங்கிய அக்கூட்டத்தில் அவர் மென்ஷவிக் கட்சியின் அபிப்பிராயங்களைத் திறம்பட எடுத்துரைத்தார். நாட்டில் ஒரே கட்சி சர்வாதிகாரம் செலுத்துவதைத் தாம் அடியோடு எதிர்ப்பதாய் வாதித்தார். நானும் மற்றும் இரண்டு போல்ஷவிக்குகளும் அவருக்குப் பதிலளித்தோம். விவாதம் காரசாரமாய் இருந்ததென்றாலும் மட்டுமரியாதையை மீறவில்லை. ஸ்டெர்ன் தம்முடைய கட்சியைப் போதிய அளவு தெளிவாக எடுத்துரைத்தும் பொதுக் கூட்டத்தினர் எங்களது தீர்மானத்திற்கே பெருவாரியாக வாக்களித்தனர்.

இந்த சம்பவத்தை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், ஸ்டாலினுடைய கொடூரமான அடக்குமுறை ஆட்சியைக் கண்டிப்பவர்கள் இத்தகைய நிலைமை லெனின் காலத்தில்கூட, ரஷ்யப் புரட்சியின் ஆரம்ப வருஷங்களில்கூட இருந்தது என்று நினைப்பது தவறு என்று காட்டத்தான்.

---

* மென்ஷவிக் கட்சி என்பது ரஷ்ய ஸோஷலிஸ்ட்களில் மிதவாதிகள் பிரிவு. போல்ஷவிக்குகள் தீவிர வாதிகள்; கம்யூனிஸ்ட்களென அழைக்கப்படுபவர்கள்.

—மொழிபெயர்ப்பாளர்

1921-ம்வருஷ ஆரம்பத்தில் ரஷ்யாவில் பெரிய நெருக்கடி ஒன்று ஏற்பட்டது. வெளிநாட்டு அபாயங்களைவிட சோவியத் ஆட்சிக்கே பேராபத்தாக விளங்கியது இந்த உள்நாட்டு நெருக்கடி. இதற்கு முக்கிய காரணம் உணவுத் தட்டுப்பாடு. உள்நாட்டு யுத்தகாலத்தில் கையிருப்பு உணவுகளையெல்லாம் உபயோகித்து விட்டோம். குடியானவர்களிடம் அரசாங்கம் அனுஷ்டித்த கொள்கையோ திருப்திகரமாய் இல்லை. உணவு தேவையானபோது கொள்முதலுக்காக விவசாயிகளை நெருங்கினார்களே தவிர மற்ற வேளைகளில் அவர்களை நினைவில் வைக்கவில்லை. குடியானவர்களோ அரசாங்கம் எடுத்துக் கொண்ட உணவு தானியங்களுக்கு பதிலாகத் தங்களுக்கு ஒன்றும் கிடைக்காததால் புதிதாய்ப் பயிர் சாகுபடி செய்ய மறுத்தார்கள். நகரங்களிலிருந்து தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய சாமான்கள் கிடைக்கும்வரை தங்கள் கையிருப்பிலுள்ள தானியங்களை விட்டுவிடுவதற்கு குடியானவர்கள் சம்மதிக்கவில்லை. நகரங்களிலோ பஞ்சம் காரணமாக பண்ட உற்பத்தி கிட்டத் தட்ட நின்றேபோயிற்று. பட்டினியால் வாடி உழன்ற தொழிலாளர்கள் போல்ஷவிக்குகளின் வாக்குறுதிகளில் நம்பிக்கை இழக்கலானார்கள். அதிருப்தி அதிகரித்தது. புரட்சி உண்டாகும் என்று கூட வதந்தி பரவிற்று. கஷ்டப்பட்டதுபோதும் என்று தொழிலாளர்களே அரசாங்கத்தைக் கைவிடத் தயாராய் இருந்தார்கள். தலைநகர் மாஸ்கோவில் நிலைமை அபாயகரமாக இருந்தது. செஞ்சேனையின் சில ரெஜிமெண்ட்களில் அதிருப்தியும் எதிர்ப்பும் இருப்பதாய்க் கூறினார்கள்.

ராணுவக் கல்லூரியில் இருந்த எங்களுக்கு ஒருநாள் திடீரென ஓர் உத்தரவு வந்தது. இரவு பகலாய் கல்லூரியிலேயே இருக்கவேண்டும், வேறெங்கும் போகக்கூடாது என்று உத்தரவிட்டார்கள். எங்களுக்குத் துப்பாக்கிகள் அளிக்கப்பட்டன. வகுப்பு அறைகள் எங்கள் வாசஸ்தலங்களாக மாறின.

மத்தியக்கமிட்டி சார்பில் நிலைமையை விளக்குவதற்காக கார்ல் ராடக் எங்கள் கல்லூரிக்கு வந்தார். ஒல்லியாய், மங்க

லான கண்களுடன், பார்வைக்கு வசீகரமற்றவராய்த் தோன்றிய ராடக் மூன்று மணி நேரம் வெகு சாதுரியமாய்ப் பேசினார். பேச்சை மாணவர்கள் நிசப்தமாய் கேட்டனர். ராடக் போலிஷ் காரராதலால் அவர் ரஷ்ய பாஷையை உச்சரித்தது கர்ண கடூரமாக இருந்தது. ஆயினும் அவர் பேச ஆரம்பித்துப் பத்துப் பதினைந்து நிமிஷங்களில் நாங்கள் அவரது உச்சரிப்பை அடியோடு மறந்துவிட்டோம். அவருடைய மனப்பூர்வமான பேச்சிலும் வாதங்களிலும் மனம் லயித்துப்போனோம்.

நிலைமை பேராபத்தாக இருக்கிறதென்பதை அவர் மறைக்க முயலவில்லை. குடியரசுத் தலைவரான காலினின் சில தொழிற்சாலைகளுக்கு விஜயம் செய்தபோது தொழிலாளர்கள் கேள்விகளுடன் கோஷங்களுடன் அவரை வரவேற்றார்களாம். "பேச்சுபோதும், உண்ண ரொட்டி கொடுங்கள்" என்று கோஷமிட்டார்களாம். அவர் மீது ஆணிகளையும் குறடுகளையும் கூட எறிந்தார்களாம்.

ராடக் சொன்னார்: "தொழிலாளர்களிடையே அரசியல் விழிப்புள்ள முன்னணி நமது கட்சிதான். ஆனால் தொழிலாளர்கள் பொறுமை யிழந்துவிட்டார்கள். யுத்தத்துக்கும் தியாகத்துக்கும் தயாராய் இருக்கும்படி சொல்லிக்கொண்டு முன்னேறும் முன்னணியைப் பின்பற்ற அவர்கள் தயாரா யில்லை . . . . தங்கள் பொறுமையின் எல்லையை அடைந்து விட்ட தொழிலாளர்களை உத்தேசித்து நாம் விட்டுக்கொடுக்க வேண்டுமா? அவர்களுக்கு நல்லது எது, தீயது எது என்று நமக்குத் தெரிந்த அளவு அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் போக்கைப் பிற்போக்கு என்றுதான் சொல்ல வேண்டும். ஆகையால் நாம் தொழிலாளரின் தோல்வி மனோபாவத்துக்கு விட்டுக்கொடுக்கலாகாது. ஜயிப்போம் என்று நமக்குள்ள உறுதியை அவர்களுக்கும் உண்டாக்கி முன்னேற வேண்டும் என்று நமது கட்சி தீர்மானித்திருக்கிறது. பெரிய சம்பவங்கள் நிகழவிருக்கின்றன. நீங்கள் எதற்கும் தயாராயிருக்க வேண்டும் . . . . ." . . . . . .

அதாவது புரட்சியின் விரோதிகளை மட்டுமன்றி, கட்சிக்கு ஆதாரவாளர்களாயிருந்த பாமர மக்களையும் ஒடுக்க நாங்கள் தயாராய் இருக்க வேண்டும். இது நான் மாடக் கூறியதன் சாராம்சம்.

ஒன்றிரண்டு வாரங்களில் நடந்ததும் இதேதான். மாஸ்கோவில் கம்யூனிஸ்ட் கட்சியின் 10-வது மகாநாடு நடந்து கொண்டிருந்தது. அப்போது ஸோவியத் குடியரசின் முக்கிய கோட்டையும் பெட்ரோகிராடு (பின்னர் லெனின்கிராடு) நகரின் காவல் கோட்டையுமான க்ரான்ஸ்டாட் நகரின் பொது மக்கள் கலகம் செய்தார்கள். உணவுப் பஞ்சம் அதிகரித்து மக்கள் ஆர்வமற்றிருந்த அந்தச் சமயத்தில் இந்தப் பேராபத்தும் குடியரசுக்கு நேர்ந்தது. குடியரசின் விரோதிகள் இதைப் பயன்படுத்திக்கொண்டு மறுபடி உள்நாட்டுக் குழப்பத்தை உண்டாக்கலாம் என்று நினைத்தார்கள். போல்ஷுவிக்குகளை எதிர்த்த எல்லோரும் புது ஊக்கத்துடன் உழைத்தார்கள். டெனிகின், ராங்கல் ஆகிய முடியாட்சிவாதிகள் க்ரான்ஸ்டாடுக்குத் தங்கள் தூதர்களை அனுப்பி மக்களைத் தங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ள முயற்சித்தார்கள். க்ரான்ஸ்டாட் கலகம் வெற்றியடைந்தால், "கம்யூனிஸ்ட்களின்றி ஸோவியத் ஆட்சி" என்ற கோஷத்துடன் ரஷ்யப் புரட்சியை அழிக்கும் சின்னமாக அந்நகரம் விளங்கும் என்றும், இதன் பயனாக முதலாளித்துவ ஆட்சி மறுபடி வந்துவிடும் என்றும் போல்ஷுவிக்குகளான நாங்கள் பயந்தோம். நெருக்கடி பிரமாதமாய் இருந்ததால் விஷயத்தை க்ரான்ஸ்டாட் நகர மக்களுடன் விவாதித்து சமரசமாய்த் தீர்க்க அவகாசம் இல்லை. ஸோவியத் அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தது.

மாஸ்கோவில் கூடிய கட்சி மகாநாடு, கட்சியில் பேதங்களை உண்டாக்கும் விவாதங்கள் கூடாதென்றும் யாவரும் ஒருமுகப் பட்டு இருக்கவேண்டும் என்றும் தீர்மானித்தது. தொழிலாளர் எதிர்க்கட்சி என்ற பிரிவு கலைக்கப்பட்டது. ஐக்கியத் துக்கு விரோதமான எந்த நடவடிக்கையும் கூடாது என்று

தடுக்கப்பட்டது. மகாநாட்டின் பிரதிநிதிகளில் நூற்றுக்கணக்கான பேர் நேராக க்ரான்ஸ்டாட் போர்முனையில் சண்டை செய்யச் சென்றார்கள். எங்கள் கல்லூரியிலிருந்து ஒரு வகுப்பு முழுவதும் அப்படியே சென்றது.

எங்கள் வகுப்புத் தோழர்கள் இரண்டு வாரங்களுக்குப் பிறகு வெற்றி வீரர்களாய்த் திரும்பினார்கள். ஆனால் அவர்களுக்கு உற்சாகமே இருக்கவில்லை. ராணுவப் பள்ளிக்கூட மாணவர் படைகளில் ஒரு பகுதிக்கு டூர்ச்சான் என்பவர் தலைமை வகித்தார். பனிக்கட்டியைத் தாண்டி நகரிலுள்ள கலகக்காரர்களைத் தாக்கும்படி அவர் உத்தரவிட்டார். பின்லந்து வளைகுடாவின் வட கரையிலிருந்து மாணவர்கள் முன்னேற முயன்றனர். கலகக்காரர்கள் வசமிருந்த கோட்டைகள் குண்டுமாறி பொழிந்தன. பல விடங்களில் பனிக்கட்டி பெரும் பாறைகளாகச் சிதறி உடைந்தது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் பனிப் பாறைகளுக்கு அடியிலிருந்த குளிர் நீரில் மூழ்கி இறந்தார்கள். இரண்டாவது தாக்குதல் தெற்குக் கரையிலிருந்து நடைபெற்றது. பனிக்கட்டியின்மீது தாங்கள் போவது தெரியாமல் இருப்பதற்காக மாணவர்கள் வெள்ளை உடைகளை அணிந்திருந்தனர். என்ன ஆனாலும் சரி, க்ரான்ஸ்டாட் நகரை அடைந்தே தீர வேண்டும் என்பது அவர்களுக்கு உத்தரவு. அவர்களிலும் பலர் க்ரான்ஸ்டாட்டை அடைவதற்கு முன்பே உயிரிழந்தனர். அவர்களில் இருவர் பயம் தாங்காமல் பனிக்கட்டியில் சிக்கிக்கிடந்த ஒரு படகில் அமர்ந்துகொண்டு படைத்தளத்துக்குத் திரும்ப மறுத்தார்கள். உடனே படையின் தலைவன் இதர துருப்புகள் கண்ணெதிரிலேயே அவ்விருவரையும் சுட்டுக் கொன்றான். தாக்குதல் மீண்டும் தொடங்கியது. ஸோவியத் துருப்புகள் மீண்டும் படு நஷ்டத்துக்குள்ளானபோதிலும், இம்முறை வெற்றிகரமாய் க்ரான்ஸ்டாட் கோட்டையை அடைந்தார்கள். கோட்டையினுள்ளே தெருத் தெருவாய் சுமார் இரண்டு மணி நேரம் சண்டை நடந்தது. அன்றிரவுக்குள் கலகம் ஒடுக்கப்பட்டது. கலகக்

காரர்கள் வசம் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

ராணுவக் கல்லூரியில் நான் படித்துக்கொண்டிருந்த சமயத்தில் என் தாயாருக்கு உடல் நலமில்லையென்றும், டைபாயிடு சுரத்தினால் பிடிக்கப்பட்டு ஒரு ராணுவ ஆஸ்பத்திரியில் கிடப்பதாகவும் கடிதம் வந்தது. தாயாரைப் போய்ப் பார்ப்பதற்கு அனுமதி கேட்டேன். சில மாதங்களுக்குமுன் ஒரு கிராமாந்தர ரயில்வே ஸ்டேஷனில் அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டபோது என் தாயார் திடகாத்திரத்துடன் விளங்கினாள்; ஆஸ்பத்திரியில் நான் அவளைச் சந்தித்தபோது மெலிந்து நெற்றியெல்லாம் சுருங்கி, கூனல் விழுந்தவளாய்க் காட்சியளித்தாள். என் தாயாரை ஆஸ்பத்திரியிலிருந்து அழைத்துக் கொண்டு மாஸ்கோ திரும்பினேன். என்னுடைய உணவை அவளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தேன். உணவு அதிகமில்லையென்றாலும் சீக்கிரமே அவளுக்கு சுய பலம் ஏற்பட்டது.

மாஸ்கோவிலுள்ள மக்களில் பெரும்பாலோரைவிட எங்கள் நிலைமை எவ்விதத்திலும் மோசமில்லையாயினும் என் தாயார் மனமுடைந்துபோயிருந்தாள். போல்ஷவிக்குகளைக் காரசாரமாய்த் திட்டுவாள். ஒரு தீய லக்ஷியத்திற்காக என் வாழ்வையே பாழாக்கிக் கொண்டுவிட்டேன் என்று என்னைக் கண்டிப்பாள்.

“இரண்டு வருஷமாய் சண்டை போட்டாய். ஏராளமான பேர் இறந்தார்கள், கஷ்டப்பட்டார்கள். எல்லாம் எதற்காக? நாமெல்லோரும் இங்கே பட்டினி கிடந்து சாக, க்ரெம்லினில் காமிஸார்கள் (மந்திரிகள்) ஆடம்பரமாய் சுகவாழ்வு வாழ்கிறார்கள். இதற்குத்தான் போரிட்டீர்களா?” என்று கேட்பாள்.

எங்கள் தலைவர்கள் சிக்கனமாகவே வாழ்கிறார்கள் என்று அவளிடம் பன்முறை சொல்லியும் பயன் இருக்கவில்லை. ஒரு நாள் நானும் பொறுமையை இழந்துவிட்டேன். “ப்ரானிட்ஸ்காயா சீமாட்டியிடம் தினம் இருபத்தைந்து கோபெக் காசுக்காக

உயிரைக் கொடுத்து நீ உழைத்தாய், மறந்துவிடாதே! நாங்களும் கஷ்டப்படத்தான் செய்கிறோம். ஆனால் நாங்கள் கஷ்டப்படுவது எல்லோருக்கும் சுபிக்ஷமும் சந்தோஷமும் அளிக்கக்கூடிய புது சமூகத்தை அமைப்பதற்காகவே" 'என்று கோபமாகச் சொல்லோனன்.

பொகாராவில் ஸோவியத் தூதராக யூரேனேவ் நியமிக்கப்பட்டபோது, கிழக்குத்திசை பாஷைகள் அறிந்த அதிகாரிகள் வேண்டுமென்று ராணுவக் கல்லூரிக்குக் கோரிக்கை அனுப்பினர். ராணுவக் கல்லூரியிலிருந்து நான் உள்பட ஐந்துபேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொகாராவில் ரஷ்ய தூதுகோஷ்டியின் ராணுவ அதிகாரிகளாக அனுப்பப்பட்டோம்.

பொகாராவுக்கு நாங்கள் பிரயாணம் செய்ததே விசித்திரமானது. முன் காலங்களில் தூரதேசங்களுக்குச் செல்லும் யாத்ரீகர்கள் கோஷ்டிபோல இருந்தது எங்கள் கோஷ்டி. தூதர் காரியாலய அதிகாரிகள் மட்டும் 46 பேர் இருந்தனர். எங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஒரு ரயில் நிறைய நாங்கள் இருந்தோம். சமையற்காரர், காரியாலய குமாஸ்தாக்கள் முதலியோர் தவிர செஞ்சேனைத் துருப்புகள் சிலரும் எங்களுடன் வந்தார்கள். எங்கள் கோஷ்டியில் கல்யாணமானவர்கள் தங்கள் குடும்பங்களுடன் வந்தனர். உணவு, வைத்திய சாமான்கள், ஆயுதங்கள், பண்டமாற்றுக்கான பொருள்கள், வெகுமதிகள் உள்பட ஏராளமான சாமான்களும் எங்களுடன் வந்தன.

எங்கள் ரயிலில் இருந்த முதல் வகுப்பில் ஒரு ஸ்திரீ பயணம் செய்தாள். அவள் பொகாராவில் இருந்த ஒரு ராஜதந்திரியின் மனைவி என்றும், ராஜ தந்திரி காலமாகிவிட்டார் என்றும் அறிந்தேன். அவள் ஆசியாவாசியாக சற்று கருத்தவளாய் இருப்பாள் என்று நினைத்தேன். ஆனால் அவளை எனக்கு அறிமுகம் செய்துவைத்தபோது அவள் ஒரு ரஷ்யப் பெண் என்றும் பார்வைக்கு வசிகரமான இளம் யுவதி

என்றும் கண்டேன். எல்லோருடனும் ஸரஸமாகப் பழகும் சுபாவம் கொண்டிருந்தாள் அவள். அந்தப் பெண் உண்மையில் பொகாரா ராஜநந்திரி எவருடைய மனைவியல்ல. ஸோவியத் தூதரான ஏப்ரிலேவ் என்பவரது மனைவி. தமது கணவரின் மரணத்துக்குப் பிறகு மாஸ்கோ வாழ்வு பிடிக்காமல், வேறெங்காவது அமைதியாய்க் காலம் கழிப்போம் என்று பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். ஆனால், சின்னாட்களில், எதற்காக மாஸ்கோ வாழ்வை வெறுத்தாளோ, அதே நிலைமை ரயிலில் உண்டாகிவிட்டது. மாஸ்கோவில் எப்படி நடக்குமோ அப்படியே ஆண்களில் பெரும்பாலோர் அவளது அழகில் மயங்கி, அவள் இட்ட பணியைச் செய்யத் தயாராய் இருந்தனர். அபூர்வமாகவே அவள் ஆண்களில் சிலரது நட்பை ஏற்றுக்கொள்வாள். ஆனால் அதுகூட அவளுக்குத் திருப்தி. அளிக்காது. உடனே மறுபடி தனிமை வாழ்வில் ஈடுபட்டுவிடுவாள்.

ஒரு நாள் அவள் தான் தனிமையை விரும்புவதைப் பற்றி என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தாள். நான், " நீ தனியாக தொல்லையின்றி இருக்க விரும்பினால் அதற்கு ஒரு வழி எனக்குத் தோன்றுகிறது. நீயோ அழகி, யாரும் விரும்பக் கூடியவள். நீ தனியாக இருப்பதனால்தான் இளைஞர்கள் உன்னைச் சூழ்ந்து கொள்கிறார்கள். எனக்கும் வாழ்வில் பெரிய ஏமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. என்னைப் பொறுத்த மட்டில் பெண்கள் எனக்கு அத்தியாவசியம் இல்லை. ஆனால், நம் இருவருடைய சௌகரியத்திற்காக ஒரு ஏற்பாடு சொல்கிறேன். பெயரளவில், அதிகாரபூர்வமாய் நீ என் மனைவியாக இரு. ஆனால் உண்மையில் உன் இஷ்டப்படி வாழ்ந்து கொள்ளலாம். இந்த யோசனை எப்படி இருக்கிறது ? " என்று கேட்டேன்.

அந்தப் பெண்மணி—ஆல்கா பெடரோவ்னா—இதுவும் ஒரு வேடிக்கை என்று உரக்கச் சிரித்தாள். ஆனால் நான் சொல்வது வேடிக்கையல்ல, மனப்பூர்வமான ஏற்பாடு என்று தெரிந்

தரும் சிறிது யோசனை செய்துவிட்டு, " சரி, ஏற்பாட்டை நான் ஒப்புக்கொள்கிறேன். பொகாரா போய்ச் சேர்ந்ததும் நாம் கல்யாணம் செய்துகொள்வோம் " என்றான்.

இச் செய்தியை எங்கள் பிரயாணத் தோழர்களிடம் தெரிவித்தோம். எல்லோரும் எங்களை வாழ்த்தினார்கள்.

பொகாராவில் இருந்த ஸோவியத் தூதர் காரியாலயம் முழுவதும் ஒருவித கொடிய மலேரியா ஜுரத்தினால் பிடிக்கப்பட்டிருந்தது. மத்திய ஆசியாவில் சகஜமாக இருந்த இந்த விஷஜுரம் ஒன்று ஆளைக்கொன்றுவிடும் அல்லது அவனுக்கு சக்தியே இல்லாமல் உறிஞ்சிவிடும். பொகாராவில் இருந்தவர்கள் வெறும் நடைப் பிணங்களாகவே இருந்தனர்.

என்னை மணக்கப்போகும் ஆல்காவுக்கு பொகாரா காரியாலயத்தில் ஒரு சிநேகிதை இருந்தாள். மரூஷியா என்ற அந்தப் பெண் ஆல்காவை குதூகலமாய் வரவேற்றாள். ஆல்காவின் கல்யாணத்திற்கான ஏற்பாடுகளை ஆடம்பரத்துடன் செய்யவேண்டிய தனது கடமை என அவள் நினைத்தாள். எங்கள் திருமணம் படாடோபமற்ற வெறும் சட்டபூர்வ சடங்காக முடியும் என்பதை அவள் அறியாள். கல்யாணத்துக்காக தூதர் யூரனேவ் தமது சொந்த வண்டியை எங்கள் உபயோகத்துக்குக் கொடுத்திருந்தார். புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த வண்டியில் நாங்கள் நகரசபை மண்டபத்தை அடைந்தோம். நகர சபையை அடைந்ததும்தான், கல்யாணத்தைப் பதிவு செய்ய மரூஷியாதவிர மற்றொரு சாட்சியும் வேண்டும் என்பதை அறிந்தோம். நல்ல வேளையாக அந்தச் சமயம் என் நண்பன் ஒருவன் தெருவில் போய்க்கொண்டிருந்தான். அவனை இழுத்து சாட்சிபோடச் செய்தேன். கல்யாணப் பதிவு காரியாலயத்தில் நுழைவதற்கு முன் ஆல்கா என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, " இன்னமும் நீங்கள் தயார்தானே ? நாம் ஏதோ தமாஷ் போல கல்யாணத்தை நினைக்கிறோம் ! " என்றாள்.

" அதெல்லாம் இல்லை. நான் இன்னமும் தயார்தான் " என்று பதிலளித்தேன்.

கல்யாணத்தைப் பதிவு செய்வதுபோல் சுலபமான விஷயம் ஏதும் இல்லை. நாங்கள் எங்கள் கையெழுத்துகளைப் போட்டோம், சாட்சிகள் தங்கள் கையெழுத்துகளைப் போட்டனர். பதிவு 'ரிஜிஸ்டரை மூடிக்கொண்டே அந்த ஸோவியத் அதிகாரி " இன்புற்று வாழுங்கள் " என்ருர். கல்யாணம் முடிந்து விட்டது.

அதன்பின் நாங்கள் ஒரு சிறு ஹோட்டலுக்குச் சென்று சற்று நேரம் குதூகலமாய்க் காலம் கழித்தோம்.

அன்று மாலை எங்கள் வாசஸ்தலத்துக்குத் திரும்பியபோது நான் என் மனைவியிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு மேல் மாடியில் திறந்த வராந்தாவில் படுத்துக் கொள்வுதற்குச் சென்றேன். இதைக்கண்டு எங்கள் சிநேகிதை மருஷியாவுக்குக் கோபம் வந்துவிட்டது. புதிதாகக் கல்யாணமான இந்தத் தம்பதிகளின் சந்தோஷத்துக்கு தானே பொறுப்பு என்று நினைத்துக் கொண்டிருந்தாள் அல்லவா ? எங்கள் கல்யாணத்தின் தெளிவான ஏற்பாட்டைப்பற்றி அவள் அறிந்ததும் அவளுக்கு அடங்காக் கோபம் வந்தது. எல்லாம் வெறும் வேஷம்தானு? தன்னையும் மற்றவர்களையும் ஏமாற்றுவதற்காகத்தாளு இவ்வளவும் ! நாங்கள் இருவரும் சுத்த முட்டாள்கள் என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குப் போய்விட்டாள் மருஷியா.

நான் அன்றும் அதன் பின்னரும் இரவில் தனியாகவே மாடியில் உறங்கினேன்.

பொகாராவின் சரியான அரசியல் நிலைமையை அறிய நாங்கள் முயற்சி செய்தோம். பொகாரா ஒரு மக்கள் குடியரசு. ஒரு மந்திரி சபையால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. நாஸிர்கள் எனப்பட்ட மந்திரிகள் அனைவரும் பிரசித்தமான

பொகாரா இளைஞர் கட்சி அங்கத்தினர். வர்த்தகர்களிடையே முற்போக்கான இளைஞர்களின் கட்சி அது. துருக்கியில் கமால் ஆதரவில் இளம் துருக்கியர்கள் செய்தது போல தாங்களும் தேசியச் சீரமைப்புக்கு உழைக்கவேண்டும் என்று பொகாரா இளைஞர்கள் கருதினார்கள். நவநாகரிக யந்திர சாதனங்களோ கைத்தொழில்களோ அல்லது திட்டமான தொழிலாளர் வகுப்போ இல்லாத ஒரு நாட்டில் ஸோவியத் அமைப்பது என்பது சற்று விசித்திரமாகத் தோன்றிற்று. ஆனால் அங்கும் ஒரு ஸோவியத் அரசாங்கம் ஏற்பட்டது. பொகாரா இளைஞர்கள் கட்சி பொகாரா கம்யூனிஸ்ட் கட்சியாக மாறியது. கம்யூனிஸ்ட் சர்வதேச ஸ்தாபனத்தில் இந்தக் கட்சி ஒரு "அனுதாபி" ஸ்தானம் பெற்றது. புதிய அரசாங்கத்தின் உத்தரவுப்படி பொகாரா மன்னரான எமீரின் சொத்துக்களும் பிரபுக்களின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன. வர்த்தகர்கள் சொத்துக்களும் நிலசுவான்தார் சொத்துக்களும் பாதிக்கப்படவில்லை. ரஷ்ய ஆலோசகர்கள் இருவரைக்கொண்டு ரகசிய போலீஸ் இலாகா ஏற்படுத்தப்பட்டது. சந்தேகத்தின் பேரில் பலர் கைதானார்கள். ஆனால் எவரும் சுடப்படவில்லை. பொகாரா அரசாங்கங்கள் நூற்றுக்கணக்கான வருஷங்களாகல் எப்படி நடந்து வந்துள்ளனவோ, அதேபோல புது அரசாங்கமும் நடந்தது. மந்திரிகள் ரத்தினக் கம்பளத்தில் அமர்ந்து பக்கத்தில் உள்ள கற்றுச் சொல்லிகளிடம் அரசாங்க உத்தரவுகளைத் தெரிவித்துக் கொண்டிருப்பார்கள். அந்தக் கற்றுச் சொல்லிகள் மண்டியிட்டு உட்கார்ந்த வண்ணம் மந்திரிகள் சொல்வதையெல்லாம் பாரசிக மொழியில் எழுதிக்கொண்டே போவார்கள். இது நடந்து கொண்டிருக்கும்போது பல இளைஞர்கள் குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டேயிருப்பார்கள். அவர்களில் சிலர் இடுப்பில் கைத்துப்பாக்கி மாட்டியிருப்பார்கள். அரசாங்கம் இப்படி நடந்தது.

பொகாராவின் புதிய யஜமானர்களுக்கு எங்கள் உதவி தேவையாயிருந்திருக்கலாம். வெளிப்பார்வைக்கு எப்படி

நடந்தாலும், உள்ளூர எங்களை விரோதிகளாகவே கருதினார்கள். ஸோவியத் அரசாங்கம் ஏற்பட்டிருந்தாலும் ரஷ்யா ரஷ்யாதான் என்று நினைத்தார்கள். அவர்களுக்கு ரஷ்யாவைப் பற்றிய பயம் இன்னும் நீங்கவில்லை. இதையறிந்த நாங்கள் அவர்களது உள்நாட்டு விவகாரங்களில் முடிந்தவரை தலையிடாமலே இருந்தோம். . தலையிடுவதற்கு எங்களுக்கு அவர்களைப்பற்றி அதிகம் தெரியவும் தெரியாது. பொகாரா கம்யூனிஸ்ட்கள் பகலெல்லாம் வியாபாரம் நடத்துவார்கள். இரவில் வியாபாரம் முடிந்தபின் தங்கள் கட்சிக் கூட்டங்களை நடத்துவார்கள். அவர்களை புரட்சிவாதிகள் என்பதைவிட தேசீயவாதிகள் என்பதே பொருத்தமாகும். பைஸுல்லா. கோட்ஜயேவ் என்ற இளம் தலைவனின் பெரு முயற்சியிட்டும் இருக்கவில்லையென்றால் அவர்களில் பெரும்பாலோர் பகிரங்கமாய் இஸ்லாமிய அனுதாபிகளாக மாறியிருப்பார்கள்.

பொகாராவில் ரஷ்ய தூதர் காரியாலயத்திற்குப் புதிதாக வந்தவர்கள்கூட சீக்கிரமே மலேரியாவுக்கு பலியானார்கள். சில தினங்கள் காரியாலயத்தைச் சேர்ந்த அனைவரும் நோயுற்றிருப்போம்; காரியாலயத்துக்கே விடுமுறை விடும்படி நேர்ந்து விடும்.

ஆல்காவுக்கும் மலேரியா பிடித்துக்கொண்டது. நான் அடிக்கடி அவளைப் போய்ப் பார்ப்பேன். அவள் படுக்கையருகே சில புஷ்பங்களைவைத்து அவளது உடல் நலத்தைப்பற்றி விசாரித்துவிட்டுக் காரியாலய அலுவலாய்க் கிளம்பி விடுவேன். இப்படிக் கொஞ்ச காலம் சென்றதும் ஒரு நாள் அவள் தன்னை நான் கவனிப்பதுகூட இல்லையென்று வருத்தப்பட்டாள். நானோ சிக்கலான நிலைமையிலும் சாமர்த்தியமாக, அவளுக்குச் சிறிதும் சந்தோஷக் குறைவின்றி நடந்து கொண்டதாய் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன்! ஆல்கா என்னிடம் கோபித்துக் கொண்டது மட்டுமன்றி கடுமையாகவும் பேசினாள். வார்த்தை முற்றுமுன் நான் அறையைவிட்டு வெளியேறினேன். வெளியே வந்ததும் என் குதிரைமேல் ஏறிக்கொண்டு காரியா

லயத்தின் போலதிகாரிகளுடன் வேலை விஷயமாகச் சென்றேன். என்னையும் அறியாமல் என் குதிரையைத் தட்டிவிட்டு எல்லோருக்கும் முன்னால் சென்றேன். எனக்கு சரியாய் வரும்படி அவர்களையும் போட்டிக்கு அழைத்தேன். அவர்களும் வந்தனர். தலைதெறிக்கும் வேகத்தில் பல தோட்டங்களையும் சிற்றோடைகளையும் தாவிடிச் சென்றோம். கோஷ்டியில் நான் ஒருவனே பயிற்சிபெற்ற சவாரிக்காரன். மற்றவர்கள் எல்லாரும் சிறிது நேரத்தில் அலுப்படைந்து போனார்கள். தூநர் யூரனேவ் தமது குதிரையிலிருந்து கிட்டத்தட்ட கீழே விழுந்துவிட்டார். என்னைத் திட்டிக்கொண்டே பின்னால் வந்தார் அவர். எனக்கிருந்த வெறியில் அவரது வசவு காதில் விழவில்லை. கடைசியில் யூரனேவ் தமது கைத்துப்பாக்கியை எடுத்து, “ நிற்கப் போகிறாயா இல்லையா ? ” என்று கத்தினார். நின்றோம். மேல்மூச்சு வாங்க அவர், “ நீ மட்டும் நின்றிரா விட்டால் உன் குதிரையை சுட்டுத் தள்ளியிருப்பேன் ” என்றார்.

பொகாராவில் மலேரியா ஜுரம் என்னையும் அடிக்கடி பாதித்தது. எனக்கு அப்போது ஒரு புது நண்பன் ஏற்பட்டான். ஆமு நதியிலுள்ள செஞ்சேனைக் கடல் படைப் பகுதியைச் சேர்ந்த மாலுமி அவன். அந்தக் கடற்படைப் பகுதி ஒரு விசித்திரமான சிருஷ்டி. அது அந்தப் பிரதேசத்தின் அரசியலில் அப்போதும் முக்கியமாக விளங்கியது. எனது நண்பன் மிஸ்சா என்னைப் பார்க்க வரும்போது தனது மனைவியையும் அழைத்து வருவான். அவ்விருவரும் மதுபானப் பிரியர்கள். மிஸ்சா வரும்போது, எனது ஜுரத்திற்கு நல்லதென என்னையும் மதுபானம் அருந்தச் செய்வான். என் மனைவி ஆல்காவோ தன் கீழ் அறையிலிருந்தவாறே நாங்கள் மூவரும் குதூகலமாய்ப் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்துக் கொண்டிருப்பாள். அவளுக்குக் கோபமாகவரும். ஆனால், எங்களிடையே இருந்த சுமூகக் குறைவினால் நாங்கள் இருவரும் மனம் விட்டுப் பேசுவதென்பது முடியாததாகி விட்டது. முடிவில் ஆல்கா ரஷ்யாவுக்குத் திரும்புவதென்று

தீர்மானித்தான். அவளது சாமான்களை வண்டியில் வைத்து ஸ்டேஷனுக்கு அனுப்ப உதவி செய்தேன். அதே வண்டியில் தான் நாங்கள் கல்யாணத்திற்குக் கிளம்பினோம். நாங்கள் பிரிந்தபோது இருவருக்கும் துக்கம் நெஞ்சை அடைத்தது.

பொகாராவின் கிழக்குப் பாகத்தில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு வந்தது. முடிதுறக்கும்படி செய்யப்பட்ட எமீரின் ஆட்கள் தொல்லை கொடுத்து வந்தார்கள். அந்தப் பிரதேசத்திலிருந்து வந்த செய்திகள் தெளிவாயில்லை. ஒன்றுக்கொன்று முரணாகவும் இருந்தன. அங்கே குடியானவர்களிடம் கோதுமை வாங்கும்படி அனுப்பப்பட்ட ஸோவியத் பிரதிநிதிகள் சென்ற இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டார்கள். அங்குள்ள ரஷ்ய கான்ஸல் மலேரியா ஜுரத்தினால் அவதிப்படுவதாகவும் உடனே தம்மை வேறிடம் மாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேயிருந்தார். யூரனேவ் என்னை கிழக்கு பொகாராவின் கான்ஸல் ஜெனரலாகவும் ராணுவப் பிரதிநிதியாகவும் நியமனம் செய்தார். அந்தப் பிரதேசத்தின் நிர்வாகத் தலைநகரான கார்ஷிக்கு நான் உடனே கிளம்பினேன்.

கார்ஷி அப்கானிஸ்தான எல்லையிலிருந்து 150 மைலுக்கும் குறைவான தூரத்தில் உள்ள ஒரு சிறு நகரம். ஒரு மலைச் சரிவில் இருந்தது. அங்கிருந்த சோவியத் துருப்புகள் குறைவு தான். அவர்களுக்கும் உடல் நலமில்லை. உள்ளூர்க் கம்யூனிஸ்ட்களோ ஒருபுறம் வர்த்தகம், ஒருபுறம் மசூதிகளில் பிரார்த்தனை, ஒருபுறம் முனிசிபல் அலுவல்கள் என்று தங்கள் பொழுதைப் போக்கினார்கள். அவர்களுக்கும் எங்களைப்போன்ற ஸோவியத் பிரதிநிதிகளுக்குமிடையே நல்லுறவு இருக்கவில்லை. எங்களுக்கு உணவு கொடுக்கக்கூட அவர்களுக்கு மனம் வரவில்லை. இதனால் நாங்கள் வலுக்கட்டாயமாய் உணவு சேகரிக்க வேண்டியதாயிற்று.

நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் கிழக்கு பொகாரா மக்கள் தங்கள் கோதுமையையும் அரிசியையும்

எங்களுக்குக் கொடுக்க இஷ்டப்படவில்லை. மாஜி அரசர் எமீரின் ஆட்களான பஸ்மாச்சி கோஷ்டியினர் ஏற்கனவே கார்ஷி நகரை இரண்டு தடவை கொள்ளையடித்திருந்தார்கள். நகரின் மூன்றில் ஒரு பங்கு வீடுகள் பாழாய்க் கிடந்தன. அவைகளில் இருந்தவர்கள் ஒன்று கொலை செய்யப்பட்டிருக்கவேண்டும், அல்லது பயந்தினால் மலைகளில் ஓடி ஒளிந்திருக்க வேண்டும். இடிந்துபோன அந்த வீடுகளின் உயிரற்ற கூடுகளையும் அவை களைச் சுற்றி இருந்த கனி நிறைந்த திராட்சைத் தோட்டங்களை யும் பார்ப்பதற்குப் பரிதாபமாயிருக்கும்.

நகரிலிருந்த ஸோவியத் துருப்புகளுக்கு காலம் போவதே சிரமமாக இருக்கும். எமீரின் 'பஸ்மாச்சி' கோஷ்டியினர் இரவு நேரங்களில் கொள்ளையடிக்க வருவார்கள். துருப்புகள் வருவதற்குள்ளாகவே அவர்கள் கொள்ளையடித்துவிட்டு வெளி யேறிவிடுவார்கள். கார்ஷி நகரின் சீதோஷ்ணம் எங்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. உஷ்ணம் தாங்கவில்லை. வாரந் தோறும் பலர் ஜுரத்தினால் மடிந்தனர். எங்களது ரகசியத் தகவல் ஆட்கள் எமீரின் கோஷ்டிகளைப் பற்றி சரியான விவரங் கள் தரவில்லை. எதிரிகளோ ஆங்கிலேயருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். அப்கானிஸ்தானத்துக்கும் பாமீர் மலையுச்சிக்கும் நடுவே உள்ள கரடு முரடான மலைகளில் பல எதிரி மலைஜாதியார் இருந்தனர். அவர்களிடையே ஆங்கி லேயர் நடமாட்டம் அதிகமாயிருந்தது; ஆங்கிலேயர் உணவுப் பொருள்களை வாங்கிக் கொண்டு நிறையத் தங்கமும் வெள்ளி யும் கொடுத்தார்கள்.

கார்ஷியில் நான் இரண்டு மாதம் தங்கியிருந்தேன். என் உடல் நலத்தைப் பாழாக்க அதே போதுமானதாக இருந்தது. விஷ ஜுரம் மட்டுமல்ல, காலில் ஒருவகை ரணமும் ஏற்பட்டது. என் காலை நீட்டிக்கொண்டு படுக்கையில் படுத்தபடியே நான் காரியாலய வேலை பார்ப்பேன். என்னைப் பார்க்க வரும் வெளி யாட்களைக்கூட படுக்கையில் சாய்ந்தபடியேதான் வரவேற்பேன். காலில் ரணங்கள் மிக அதிகமாயிருந்தபடியால் பூட்ஸ் போட்டுக்

கொள்வது முடியாமல், அதற்குப் பதில் ஒரு காலில் ஸ்லிப்பர் மாட்டிக் கொண்டிருப்பேன்.

என்னுடைய வேலை ஒழுங்கற்றதாக இருந்தது. என் கீழுள்ள அதிகாரிகள் தங்களுக்கு உணவு சரிவரக் கிடைக்க வில்லை என்றும் உள்ளூர் ஜனங்களிடமிருந்து நாங்களே உண வைப் பறிமுதல் செய்வதற்கு அநுமதி வேண்டுமென்றும் கேட்பார்கள். பொகாரா ராணுவத்தின் அதிகாரிகள் என்னிடம் ஆலோசனைக்கு வருவார்கள். அல்லது தங்களுடைய மேலதி காரிகளின் உத்தரவுகளை சரிவரப் புரிந்து கொள்வதற்காக என்னிடம் விளக்கம் கேட்பார்கள். இப்படி நாள் முழுவதும் வேலை செய்து கொண்டிருக்கும் எனக்கு மாலை ஐந்து மணி சுமாருக்கு திடீரென ஜுரம் ஏற்படும். இருட்டும்வரை ஜுரம் விடாது. அதன்பின் நான் அலுத்துச் சலித்து சக்தியற்றுப் போனதும் ஜுரமும் விட்டுவிடும்.

மலேரியா என் பலத்தையெல்லாம் உறிஞ்சி விட்டது. ராணுவத்தைச் சேர்ந்த வயதான டாக்டர் ஒருவர் என்னை "வாட்கா சிகிச்சை" எடுத்துக்கொள்ளும்படி சொன்னார். அந்த டாக்டர் சதா காலமும் வாட்கா மதுவில் மூழ்கி இருப்பவர் ஆனால் எனக்கு அந்த வைத்தியம் பிடிக்கவில்லை.

1921-ம் வருஷம் அக்டோபர் முடிவில் மாஸ்கோ ராணுவ அதிகாரிகள் கல்லூரி வெளியே உள்ள தனது மாணவர்களை யெல்லாம் ஒரு புதுப் பயிற்சிக்காகத் திருப்பி அழைத்தது. என்னுடைய வேலையை எனது காரியதரிசியிடம் ஒப்படைத்து விட்டு நான் கார்ஷியிலிருந்து வெளியேறினேன். போகும் போது என் சாமான்களில் சில விலைமதிப்பற்ற பொருள்கள் இருந்தன. வேறொன்றும் அல்ல. ஒரு மூட்டை கோதுமை மாவு, ஒரு மூட்டை திராட்சைப் பழம், பொகாரா குடியரசு எனக்கு அளித்த இரண்டு பட்டு உடைகள், ஒரு கெட்டியான பருத்திப் போர்வை—இவ்வளவுதான். இந்தப் பெரிய சொத்து கொள்ளைக்காரர்களின் கவனத்தைக் கவருவதாக

இருக்குமேயென்று பிரயாணம் முழுவதும் நான் கண்கொட்டாமல் விழித்திருக்கவேண்டியதாயிற்று !

மாஸ்கோ ராணுவ அதிகாரிகள் கல்லூரியில்கூட கம்யூனிஸ்ட் ஆள் களையெடுப்பு நடந்திருந்தது. உள்நாட்டு யுத்தத்தின்போது சில லட்சம்பேர்களே அங்கத்தினராய் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியில் இப்போது 20 லட்சத்திற்குமேல் அங்கத்தினர் இருந்தனர். உள்நாட்டு அபாயம் இப்போது தீர்ந்துவிட்டதால் புது அங்கத்தினர்களைப்பற்றி கட்சித் தலைவர்கள் கவனம் செலுத்தினார்கள். ஆள் களையெடுப்பின் முக்கிய நோக்கம் விரும்பத்தகாத பேர்வழிகளையும் சுயநலமிகளையும் வெளியேற்றுவதே என்று சொல்லப்பட்டது !

எனக்கு இவ்வித களையெடுப்பைப் பற்றி நன்றாய்த் தெரியும். உள்நாட்டு யுத்த காலத்தில் கோமெல்லில் இரண்டு களையெடுப்புகள் நடந்தபோது பார்த்திருக்கிறேன். எதிரியின் ஆபத்து நீங்கியதும் கட்சி தனது அங்கத்தினர்கள் எல்லோரையும் அழைத்து அபாயகாலத்தின்போது அவர்கள் ஒவ்வொருவரும் எங்கே இருந்தார்க்ள் என்னென்ன செய்தார்கள் என்று விசாரிக்கும்: சரியாக பதில் சொல்லாதவர்களைப பற்றிப் பேச்சே இல்லே, அவர்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

கல்லூரியிலிருக்கும்போது ஒரு நாள் இரவு எனக்கு ஒரு கடிதம் வந்தது. இது அபூர்வமான சம்பவம். ஏனெனில் நான் எனது தாயாருடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவில்லை. எனக்குக் கடிதம் எழுத மற்றவர்களோ யாருமில்லை. ஆகையால் யாரிடமிருந்து வந்திருக்குமென்று ஆச்சரியப்பட்டேன். கடிதத்தின் மேலிருந்த கையெழுத்து என்னுடைய சட்ட பூர்வமான மனைவியாகிய ஆல்கா பெடரோவ்னாவுடையது. அவள் தன்னுடைய தகப்பனருடன் டாம்பாவ் மாகாணத்தில் வசித்து வந்தாள். எங்கள் இருவருடைய தாம்பத்ய உறவு அர்த்தமற்றதாக இருப்பதால் விவாகரத்து மூலம் அதை முடித்துக் கொள்ளலாம் என்று

அவள் யோசனை சொல்லியிருந்தாள். நானும் அதற்கு சம்மதித்துப் பதில் அனுப்பினேன். ஆனால் நான் மாஸ்கோவிலும் அவள் எங்கோ ஒரு மாகாணத்திலும் இருந்ததால் விவாகரத்து வாங்குவதென்பது சுலபமாயில்லை. விவாகரத்து ஏற்பாட்டுக்காக ஒருவருக்கொருவர் பல கடிதங்கள் எழுத வேண்டியிருந்தது. போகப் போக அவளுடைய கடிதங்களெல்லாம் அடக்கமாகவும் வெளிமனிதர் ஒருவருக்கு எழுதுவதுபோல சம்பிரதாயமாகவும் இருந்தன. ஒரே ஒரு கடிதத்தில்மட்டும் தனக்கு மலேரியா ஜுரம் இன்னும் தீரவில்லை என எழுதியிருந்தாள். அந்த சமயத்தில் எனக்கும் மலேரியா ஜுரமிருந்தது. மாஸ்கோவில் உஷ்ணதேச வியாதிகள் கழகத்தில் சிகிச்சை பெற்று வந்தேன். மூன்றே மாதத்தில் பூரண குணம் அளிப்பதாய் டாக்டர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னபடி நடக்கவில்லை ; இருப்பினும் என்னுடைய வைத்தியர்களை வந்து பார்ப்பது நலம் என்று ஆல்காவுக்கு யோசனை சொன்னேன்.

இரண்டு வாரங்கள் சென்றன. ஒருவித பதிலும் இல்லை. ஒரு நாள் என் பரீட்சைகளுக்காக அறையில் தனியாகப் படித்துக்கொண்டிருந்தேன். மாலைவேளை. யாரோ கதவைத் தட்டினார்கள். வெளியே பனி பெய்துகொண்டிருந்தது. கதவைத் திறந்தேன். நடுக்கும் குளிரில் ஏராளமான கம்பளி உடைகளை அணிந்துகொண்டு ஆல்கா உள்ளே நுழைந்தாள். அவளது வரவால் அறை குதூகலமாக விளங்கியது.

ஆல்கா எதற்காக வந்திருக்கிறாள் ? சிகிச்சையைப் பற்றிப் பேசவா, விவாகரத்தைப் பற்றிப் பேசவா ? நாங்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு சிரித்தவண்ணம் உட்கார்ந்திருந்தோம். இருவரும் வேண்டிய காலம் அசடுகளாய் இருந்தது போதாதா ? இருவர் மனதிலும் அந்த எண்ணமே இருந்தது.

மறுநாள் ரஷ்யா-ஜப்பான் யுத்தத்தைப் பற்றி எனக்குப் பரீட்சை. பரீட்சை நடத்திய ஜெனரல் மார்ட்டினவ் நான்

இந்தப் பாடத்தை நன்ருகப் படித்திருக்கிறேன் என்பதை அறிவார். ஆகவே ஒப்புக்காக போர்ட் ஆர்தர் துறைமுகத்தின் பாதுகாப்பைப்பற்றி இரண்டொரு சாதாரணமான கேள்விகளைக் கேட்டார்.

போர்ட் ஆர்தரா ? அதைப் பற்றி ஒன்றுமே நினைவிருக்க வில்லை !

"என்ன சமாசாரம் ? உன் மூளை என்னவாயிற்று !" என்று கிண்டல் செய்தார் ஜெனரல் மார்ட்டினுவ். கருணை வைத்து இன்னும் ஐந்து தினங்களுக்குப் பிறகு என்னை மீண்டும் பரீட்சை செய்வதாகச் சொல்லி அனுப்பினுர். மறு பரீட்சையில் நான் தேறினேன். அன்றிரவு என் மனைவியை அழைத்துக் கொண்டு தலைநகரில் உல்லாஸமாய்ப் பொழுது போக்கினேன்.

ராணுவ அதிகாரிகள் கல்லூரியில் படித்துக்கொண்டிருக் கும்போதே நான் வெளிநாட்டிலாகாவில் மந்திரி சிஷேரின் கீழ் வேலை செய்யலாம் என்று யூரனேவ் சொன்னுர். ஸோவி யத் வெளிநாட்டு மந்திரி சிஷேரின் அலுப்பு சலிப்பு இல்லாமல் வேலை செய்யக்கூடியவர். போதும் போதும் என்று சொல்லு மளவுக்குக் காரியதரிசிகளுக்கு வேலை கொடுத்துக்கொண்டே இருப்பார். இரவில் மிகக் குறைவாகவே தூங்குவார். இரவு நேரத்தில்தான் நன்ருய் உழைப்பார். ஆகையால் இருபத்தி நான்கு மணி நேரமும் அவருக்குக் காரியாலய ஊழியர்கள் தேவையாய் இருந்தது. பகல் இரவு எந்நேரமும் இரண்டு காரியதரிசிகள் மாறி மாறி இருந்து வருவார்கள். இரவு நேரம் வேலை செய்ய நான் சம்மதித்தேன்.

வெளிநாட்டிலாகா அப்போதே விஸ்தாரமான குட்ஸ் நெட்ஸ்கி-மாஸ்ட் கட்டடத்துக்கு வந்து விட்டது. இந்தக் கட்ட டத்தில்தான் இப்போதும் (1945) அது இருக்கிறது. சிஷேரின் ஓயாமல் அனுப்பிக் கொண்டேயிருந்த குறிப்புகள் ஐரோப்பா வின் வெளிநாட்டிலாகாக்களுக்கு எல்லையில்லாத் தலைவலி

யாக இருந்தது. அபார ஞாபகசக்தி உடைய அவர் இந்தக் குறிப்புகளைத் தாமே நன்றாக யோசனை செய்து தயாரிப்பார்.

சிஷேரினுடன் வேலை செய்துவந்தவர்களில் அநேகமாய் எல்லோரும் இப்போது மறைந்து போய்விட்டார்கள். சிலர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், சிலர் சிறையில் மடிந்து ஒழிந்தார்கள். அவர்கள் பெயர்களை ஞாபகப் படுத்திக்கொண்டு பார்த்தால் ஏதோ கனவில் தோன்றியவர்கள்போல் இருக்கிறது.

சிஷேரினுக்குக் கீழ் வேலை செய்தவர்களில் முதல்வர் டெக்னர் என்ற இளைஞர். நாசுக்கான சுபாவமும் வசீகரிக்கும் குணமும் உடைய அவர் பதினைந்து வருஷங்கள் வெளிநாட்டிலாகாவில் அரிய சேவை செய்தபின் லிதுவேனியாவுக்கு தூதருக்குப் பதிலாக அனுப்பப்பட்டார். 1937-ல் நம்ப முடியாததான அபாண்டங்கள் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இவரைத்தவிர இன்னும் பல பெயர்களும் ஞாபகத்துக்கு வருகின்றன. மனப்பூர்வமான கம்யூனிஸ்ட் ஊழியரும், அதிகிழக்கு இலாகாவின் டைரக்டர் பதவி வகித்தவரும், 1937-ல் விசாரணையின்றி சுட்டுக் கொல்லப்பட்டவருமான ஸுகர்மன்; ஜார் காலத்திலேயே புரட்சி செய்ததற்காக சிறைவாசம் அநுபவித்தவரும் ஸோவியத் அரசாங்கத்தில் பால்கன் பிரதேச இலாகா அதிகாரியாக இருந்தவரும், 1935-ல் ஸைபீரியாவுக்குக் கடத்தப்பட்டு அங்கே சுட்டுக் கொல்லப்பட்டவருமான ஸாண்டோமெர்ஸ்கி; ஸோஷல் டெமொகிராட் இயக்கத் தலைவர்களில் ஒருவரும், சில காலம் உதவி வெளிநாட்டிலாகா மந்திரியாக இருந்தவரும், பின்னர் சர்க்கஸ்கள், ஸங்கீத சபைகள் சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு மாற்றப்பட்டு 1937-ல் கைது செய்யப்பட்டவருமான கனேட்ஸ்கி—இவ்வாறு பலர்.

சிஷேரினுக்குப் பின் வெளிநாட்டு மந்திரியான லிட்வினோவின் காரியதரிசிகளில் பெரும்பாலோரும் இந்த கதிக்குள்ளானார்கள். ஒரு சிலரைத் தவிர மற்றெல்லோரும் ரகசியப் போலீஸாரின் காவல்கூடங்களில் மறைந்து போனார்கள். லிட்வி-

லுக்கு மிகவும் பிடித்தமான டிவில்காவ்ஸ்கி ஆள் களை யெடுப்பு ஏற்படுவதற்கு ஒரு வருஷம் முன்னுல் ஒரு மோட்டார் விபத்தில் மாண்டார். இல்லையெனில் அவருக்கும் இதே கதி நேர்ந்திருக்கும். மற்றெரு அந்தரங்கக் காரியதரிசி எலியனு ஸ்லைலென்கோ நல்ல வேளையாக வெளியேறித் தப்பினுள். அவள் மாக்ஸ் ஈஸ்ட்மனைக் கல்யாணம் செய்து கொண்டாள். ஈஸ்ட்மன் தமது புகழ்பெற்ற நூலான **லெனின் மரணத் துக்குப்பின்** என்ற புஸ்தகத்தைப் பிரசுரம் செய்தபோது எலியனு பாரிஸில் உள்ள ரஷ்ய தூதராலயத்தில் தலைமைக் காரியதரிசியாக இருந்தார். ஈஸ்ட்மன் தமது நூலில் ரஷ்யா வில் சர்வாதிகாரம் ஏற்பட்டு வருவதை திறம்பட எடுத்துரைத் திருந்தார். "லெனினுடைய விருப்பம்" என்று குறிப்பிடத் தக்க தஸ்தாவேஜு ஒன்று இருப்பதைப் பற்றியும் அவர் அந் நூலில் வெளியிட்டிருந்தார். இது சம்பந்தமாய் ஸோவியத் அதிகாரிகளுக்கு ஏதோ சந்தேகம்போலும். எலியனு உடனே மாஸ்கோ திரும்பவேண்டுமென்று உத்தரவிட்டார்கள். ஆனுல் அவள் புத்திசாலித்தனமாக மறுத்து விட்டாள்.

1937-ல் பலியிடப்பட்டவர்களில் கியாதி வாய்ந்தவர் காரகான். இவர் ஸோவியத் ரஷ்யாவின் உதவி வெளிநாட்டு மந்திரியாக இருந்தவர். சிஷேரினுடன் நெருங்கி உழைத்தவர். இவர் 1937-ம் வருஷம் டிசம்பர் 16-ந் தேதியன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

ப்ரெஸ்ட்-லிட்டாவ்ஸ்க் சமாதானத்துக்குப் பின் காரகான் சைனுவில் ரஷ்ய ராஜதந்திர உறவை மீண்டும் ஸ்தாபிக்கும்படி பீகிங் நகருக்கு அனுப்பப்பட்டார். பின்னர் முஸ்தாபா கமாலின் அரசாங்கத்துக்கு தூதராக அங்காரா சென்றுர். பல சர்வதேச ஒப்பந்தங்களில் ரஷ்யா சார்பில் அவர் கையெ ழுத்திட்டிருக்கிறுர். அவரை ஏன் சுட்டுக் கொன்றுர்களென்று யாருக்கும் தெரியாது. அவரைப்பற்றிய விசாரணை வெகு ரக சியமாய் நடந்தது. அதன்பின் ரஷ்யாவில் அவர் ஞாபகம்கூட இருக்கக்கூடாதென்று எல்லா தஸ்தாவேஜுகளையும் மாற்றினுர்

கள். காரகான் வசீகரமானவர்; பெண்கள் அவரிடம் எளிதில் மயங்கி விடுவார்கள். இதனால் சர்வாதிகாரி ஸ்டாலினுக்கும் அவருக்கும் ஏதோ மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஸ்டாலின் தமது புகழுக்கு சிறிது இழுக்கு நேர்ந்தாலும் அதை சுலபத்தில் மறப்பவரல்ல. பெண் விஷயம் போன்ற ஏதோ சில்லறை சம்பவம்தான் காரகான் வீழ்ச்சிக்குக் காரணமாய் இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

காரகான், மாஸ்கோ நடனசாலையில் முக்கியமான நாட்டியக்காரியான மரினு ஸெமெனேவொ என்பவளை மணந்து கொண்டார். அவரைச் சுட்டுக் கொல்வதற்குமுன் மரினு அவரை விவாகரத்து செய்துவிட்டு தனது பூர்வீகப் பெயருடன் நடன அரங்கத்தில் இருந்து வரலாம் என்று ரஷ்ய மேலதிகாரிகள் யோசனை சொன்னார்கள். தனது கணவனைக் கொலைக் களத்துக்கு அனுப்பிய கொடூர மனிதர்களின் சந்தோஷத்திற்காக மரினு இன்னும் (1945-ல்) நாட்டியம் ஆடி வருகிறாள்!

ஜினேவா மகாநாட்டின்போது வெளிநாட்டு மந்திரி சிஷேரினுடன் இரண்டு இளைஞர்கள் வந்திருந்தனர். அவர்களில் பெக்ஸடியான் என்பவர் ஒருவர். ஆர்மீனியா குடியரசின் மந்திரிசபைத் தலைவர் அவர். ஆனால் அவர் 1937-ல் திடீரென மறைந்து போனார். அவருக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை.

கோடைகாலம் நெருங்க நெருங்க ராணுவ அதிகாரிகள் கல்லூரியில் என் படிப்பு மிகக் கடுமையாயிற்று. வெளிநாட்டிலாகாவில் வேலை செய்ய அவகாசம் இருக்கவில்லை. இருப்பினும் வெளிநாட்டு மந்திரி சிஷேரினை அடிக்கடி பார்ப்பதுண்டு. 1925-ம் வருஷம் க்ரெம்லினில் நடந்த 14-வது கட்சி மகாநாட்டின்போது அவரைக் கடைசியாகப் பார்த்தேன்.

அப்போது கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு அவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அவருக்கு சந்தோஷம் தாங்கவில்லை. பாவம்! அதுதான் அவர் தம் வாழ்க்கையில் அனுபவித்த கடைசி

சந்தோஷமாகும். ஏனெனில் அவரை வெளிநாட்டிலாகாவிலிருந்து விரட்டிவிட லிட்வினுப் கோஷ்டியினர் பெருமுயற்சி செய்தனர். அவர் செய்த ஒவ்வொரு முடிவையும் வியர்த்தமாக்குவதே தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். லிட்வினுவுடன் வேலை செய்வது முடியாத காரியம் என்று சிஷேரின் முடிவில் தெரிவித்தார். மத்தியக் கமிட்டியின் மகாநாட்டில், லிட்வினுப் தம் கொள்கைக்கு நேர் எதிர் கொள்கை உள்ளவர் என்றும் சிஷேரின் பகிரங்கமாய்க் கூறினர். அப்போது சிஷேரினுக்கு உடல் நலமில்லை. ரஜா எடுத்துக்கொண்டு வியெஸ்பேடன் சுகவாசஸ்தலத்துக்குப் போய் ஓய்வெடுத்துக் கொண்டார். ஆனால் அதற்குள் அவரை மாஸ்கோவுக்குத் திரும்பி வரும்படி அழைத்தார்கள். அப்போதும் அவர் வெளிநாட்டு மந்திரியாக இருந்தார். இருப்பினும், அவரை வேலைக்குத் திரும்பும்படி செய்வது பெரும்பாடாகிவிட்டது.

மாஸ்கோவுக்கு வரும்படி செய்வதற்காக காரகான் வியெஸ்பேடனுக்குப் போய் சிஷேரினை பேட்டிகண்டார். எப்படியோ சிஷேரினை மாஸ்கோவுக்குக் கொண்டு வந்தார்கள். என்றாலும், அது காதோடு காது வைத்த மாதிரி அவரை நீக்கி விட்டு அவர் ஸ்தலத்தில் வேறொருவரை நியமிப்பதற்காகத்தான்! லிட்வினுவ் புதிய வெளிநாட்டிலாகா மந்திரியானர். சிஷேரின் அரசியலிலிருந்து அடியோடு மறைந்தார். அவர் காலமாவதற்குமுன்பே ரஷ்ய மக்கள் அவரை மறந்துவிட்டனர். தன்னை நிர்ப்பந்தமாய்ப் பதவியிலிருந்து கிளப்பினார்கள் என்ற ஒரு குறை மட்டுமல்ல; அவருக்குப் பிற குறைகளும் இருந்தன. தமக்குக் கீழ் இருந்தவரும் தம்மை நீக்கிவிட்டு மந்திரி ஸ்தானத்தில் அமர்ந்தவருமான லிட்வினுவ் தம்மிடம் சிறிதும் நன்றி செலுத்தவில்லை என்பதுதான் அவருக்குப் பெருங் குறை. ரஷ்யப் புரட்சி காலம் முதலாகவே வெளிநாட்டு மந்திரியாக இருந்து கடினமான சந்தர்ப்பங்களில் ஸோவியத்துகளை அபாயமின்றிக் காத்த சிஷேரின், பதவியை இழந்ததும் ஒரு மோசமான சிறு வீட்டில் சரியான உணவும் இதர சௌகரியங்

கஷ்டமின்றி வாழ நேர்ந்தது. ஆனால் நல்லவேளையாக கட்சியின் மத்தியக் கமிட்டி தலையிட்டு அவருக்குப் போதுமான சௌகரி யங்கள் கிடைக்கும்படி செய்தது. தமது கடைசி வருஷங்களை அவர் தனிமையில் கழித்தார். தமது ஓய்வு காலத்தில் அவ் ருக்கு சாந்தி அளித்தது சங்கீதமும் படிப்புமே. பியானோ வாசிப்பதில் சிறந்தவரான அவர் சங்கீதத்தின்மூலம் தமது வியாகூலத்தை மறந்தார். பிஷேரின் இறந்தபோது அவரை க்ரெம்லின் கோட்டைக்குள் அடக்கம் செய்ய அனுமதி மறுத்து விட்டார்கள். அவரது உடல் ஒரு மடத்தில் அடக்கம் செய்யப் பட்டது.

கட்சியைச் சீர் செய்வதற்காக ஆள் களையெடுப்பு என்ற பெயரில் கட்சித் தலைவர்கள் முதலில் சுட்டுக் கொல்லப்பட்டார் கள். இது எதிர்ப்பார்க்கக்கூடியதே. சிந்தனையாளர்களை முதலில் ஒழிக்கவேண்டும் என்று ஸ்டாலின் நினைப்பது அவரது நோக்கத்துக்கு இசைந்ததுதான். அவர்களை ஒழித்தபின் ராணுவத் தலைவர்களையும் பிறகு கைத்தொழில் தலைவர்களையும் கிட்டத்தட்ட அதே சமயத்தில் ராஜதந்திரிகளையும் அவர் ஒழித்துக்கட்டினார். லிட்வினாவின் உதவியாளர்கள் நால்வரில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மூன்றாமவர் சிறையில் மடிந்தார். நான்காமவர் போன இடம் தெரியவில்லை. லிட்வி னாவின் பழைய நண்பர்களும் அந்தரங்க சிஷ்யர்களுமான தூதர்கள் யூரனேவும் ரோஸன்பெர்கும்கூட மறைந்து போனார் கள். சுமார் 15 வருஷ காலமாய்த் தாம் ஒன்று சேர்த்துப் பயிற்சி அளித்த இலாகாத் தலைவர்களும் ராஜதந்திரிகளும் ஒருவர் பின் ஒருவராய் மரண தண்டனைக்குள்ளாவதைக் கண்டு லிட்வினாவ் கலங்கவில்லை; சிரித்துக்கொண்டே இருந்தார். "அவர்கள் துரோகிகள். அவர்கள் தொலைந்தது நல்லதாகி விட்டது" என்றார் அவர். தம்மை பொறுத்த மட்டில் பதவி நிரந்தரமானது என்று நினைத்தாரா? அல்லது தமது குடும்பத் தார் தன் நன்னடத்தைக்கு ஜாமீனாக இருந்ததனால் இவ்வாறு மேல் பூச்சுக்காக சந்தோஷம் காட்ட வேண்டியிருந்தா?

ஸ்டாலின் தாம் ஹிட்லருடன் கைகோத்த சமயம், பல காலம் நமது நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்த லிட்வினுவைக் கூட கைகழுவிவிட்டார். அப்போது சோவியத் அரசாங்கத்திலேயே உயர் பதவியிலிருந்த யூதர்களில் முக்கியமானவர் லிட்வினுவ்தான். லிட்வினுவ்தவிர மற்றும் ஒரே ஒரு யூதர்தான் பதவியில் இருந்தார். அவர் பெயர் லஸார் தகனேவிச்.

அடுத்த இரண்டு வருஷங்களில் சில விசேஷ சந்தர்ப்பங்களில் மட்டும் லிட்வினுவ் பொது வைபவங்களில் காட்சியளித்துக்கொண்டிருந்தார். பார்வைக்கு சாதாரணமாக வாழ்ந்து வருபவரைப் போல் அவர் தோன்றினர். ஆனல் அவர் எங்கே குடியிருக்கிருர், எங்கிருந்து வருகிருர், எங்கே போகிருர், என்ன செய்துகொண்டிருக்கிருர் என்று யாருக்கும் தெரியாது. இது மாதிரி அவர் காட்சியளிக்கும் சந்தர்ப்பங்களில் மாஸ்கோவிலுள்ள வெளிதேச ராஜதந்திரிகள் அவர் இன்னும் உயிருடன் இருக்கிருர் என்பதை அறிந்து ஆச்சர்யத்தோடு பார்ப்பார்கள். ஹிட்லர்-ஸ்டாலின் உறவு முறிந்து ஜெர்மனியுடன் யுத்தம் ஆரம்பமானபோது லிட்வினுவ் அவரது ரகசிய சிறைச்சாலையிலிருந்து வெளிக்கொண்டுவரப்பட்டார். இங்கிலாந்தில் அவருக்கு மரியாதை உண்டாகையால் இங்கிலீஷ் மக்களுக்கென ரேடியோ மூலம் பேசினுர். மேற்கத்திய நாடுகள் ஐரோப்பாமீது படையெடுக்க வேண்டுமென்று ரஷ்யா சார்பில் கேட்டுக்கொண்டார். இதன் பிறகு அமெரிக்கப் பிரமுகர் ஹாரிமன், பிரிட்டிஷ் பிரமுகர் பீவர்புருக் பிரபு இருவரும் ஸ்டாலினை சந்தித்த சமயம் லிட்வினுவ் கூட இருந்தார். 1941-ம் வருஷம் நவம்பர்மாதம் அவருடைய அஞ்ஞாத வாசம் ஒருவாறு முடிந்தது. லிட்வினுவ் அமெரிக்காவில் ரஷ்ய தூதராக நியமிக்கப்பட்டார்.*

* * * *

ரஷ்ய ராஜதந்திரிகள் ஐரோப்பிய சர்வாதிகாரிகளுடன் பேரம் பேசிக்கொண்டிருக்கையில் நான் மாஸ்கோ ராணுவக்

---

* சமீபத்தில் லிட்விநுவ் ஒரு ஆஸ்பத்திரியில் உடல் நலம் இன்றி மரணம் அடைந்தார் என்று மாஸ்கோ சின்னுட்களுக்கு முன் அறிவித்தது.

—மொழி பெயர்ப்பாளர்.

கல்லூரியில் மீண்டும் சேர்ந்து மேல் பயிற்சி பெற்று வந்தேன் யுத்தம் சம்பந்தமான பல நேரிடைப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தேன். ஒருநாள் கல்லூரியிலிருந்து நான் வந்துகொண்டிருக்கும்போது யூரனேவ் என்னைச் சந்தித்தார். "என்னை ரீகாவுக்கு தூதராக நியமித்திருக்கிறார்கள். உனக்கு சம்மதமானால் உன்னையும் அழைத்துப் போகலாம் என்றிருக்கிறேன். என்ன சொல்லுகிறாய்? பேஷ், அப்படியானால் இந்த வார முடிவுக்குள் நாம் கிளம்பி விடுகிறோம்".

யூரனேவின் முயற்சியால் காரியங்கள் வேகமாய் நடந்தன. லாட்வியாவின் தலை நகரான ரீகாவில் தூதராலயத்தின் காரிய தரிசியாக என்னை நியமித்தார்கள். நியமனம் கிடைத்து நாற்பத்தெட்டு மணி நேரத்தில் ரயிலேறிவிட்டோம்.

புரட்சி, உள்நாட்டுப் போர், கலவரங்கள் முதலியவைகளால் ஏற்பட்ட சங்கடங்கள் தீர்ந்து ரஷ்யாவில் வளம் ஏற்பட நாளாயிற்று. நாட்டின் சில பாகங்களில் கொடும் பஞ்சமிருந்தது. எங்கும் உணவுத் தட்டுப்பாடு, வறுமை. ரஷ்ய எல்லையை நாங்கள் தாண்டியதும் நாங்கள் கண்டது இதற்கு நேர் விரோதமாக இருந்தது. லாட்வியா தலைநகரம் ரீகா சுத்தமானது, சுகமானது. இவ்வளவு சுத்தமானதோர் நகரை பின்லாந்திலுள்ள வைபுரி தவிர வேறெங்கும் நான் பார்த்ததில்லை. ரீகாவின் தெருக்களில் தும்புதூசி கிடையாது. கடைகள் கவர்ச்சியானவை, பண்டங்கள் நிறைந்தவை. ஏழை மக்களின் குடிசைகள் வர்ணமயமாய்க் காட்சியளித்தன. எங்கள் காரியாலயம் மிக ஆடம்பரமாயிருந்தது. விலையுயர்ந்த கண்ணாடிகளும் மேஜை நாற்காலிகளும் இருந்தன. சரியான 'பூர்ஷ்வா' சூழ்நிலை. நாங்கள் போய்ச் சேர்ந்ததும் எங்களுக்கு நடந்த உபசாரமும் அளிக்கப்பட்ட சிற்றுண்டிகளும் எங்களை பிரமிக்க வைத்தன. அவ்வளவு ஆடம்பரமான உபசாரத்தை நாங்கள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

சர்வதேச கம்யூனிஸ்ட் மகாநாட்டின் நான்காவது கூட்டம் மாஸ்கோவில் கூடிய சமயம் நான் மாஸ்கோ திரும்பினேன்.

நான் வந்த ரயிலில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலர் பிரயாணம் செய்தனர். உத்ஸாகம் மிகுந்த ஜெர்மனி கிளாரா ஜெட்கின்; கம்யூனிஸ்ட்களிலேயே மிக மோசமான சந்தர்ப்பவாதி எனக்கூடிய செக்கோஸ்லாவாக்கியர் பொஹூமிர் ஷ்மெரால்; போலந்திலிருந்து வந்த வாலெட்ஸ்கி; ஹங்கேரியப் ப்ரொபஸர் வார்கா; ப்ரான்ஸிலிருந்து போரிஸ் ஸுவாரின்—இவர்கள் எல்லோரும் வந்தார்கள். ஸுவாரினும் நானும் நெருங்கிய நண்பரானோம்.

* * *

இளம் கம்யூனிஸ்ட்களான நாங்கள் பணம் என்ற ஏற்பாட்டை ஒருவாறு ஒழித்தாகிவிட்டது, இனி பணமே தேவையில்லை என்ற நம்பிக்கையுடன் வளர்ந்து வந்தோம். உள்நாட்டு யுத்த காலத்தில் பணத்துக்கு மதிப்பில்லாமல் செய்திருந்தது ஸோஷலிஸ லக்ஷியப் பாதையில் ஒரு மைல்கல் என்றே நாங்கள் நினைத்திருந்தோம். உண்மை இதுவல்ல. மக்களிடம் பணத்திற்கு மதிப்புபோய்விட்டதனாலும், பண்டங்கள் மிகக் குறைவாய் உற்பத்தியானதால் பணம் கொடுத்து அவைகளை வாங்குவதென்று அசாத்தியமாயிருந்ததனாலுமே பணத்துக்கு மதிப்பின்றிச் செய்திருந்தார்கள். உண்மையில் பணத்திற்கு மதிப்பின்றிச் செய்த ஏற்பாடு உடனடியான குறுகியகால ஏற்பாடு மட்டுமின்றி நீண்டகாலக் கொள்கையுமாகும். கட்சியின் பொருளாதார நிபுணர்களான லெனின், புகாரின், பிரியோப்ராஜென்ஸ்கி ஆகியோர் கூடி ஸோஷலிஸ வளர்ச்சியில் ஒரு அம்சமாக இருக்கும்படி இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

உள்நாட்டு யுத்தம் முடிந்த பிறகு காகிதப் பணத்துக்கு மதிப்பே இருக்கவில்லை. தொழிலாளர்களுக்கு ரயில் பயணம், மோட்டார் போக்குவரத்து, தபால் வசதி, நாடகங்கள், சினிமாக் காட்சிகள் முதலியவற்றை இலவசமாய் அளிப்பதென்ற கொள்கை அப்போது அமுலுக்கு வந்தது. இதனால் பணத்திற்குத் தேவையும் குறைந்தது. வரிசையாய்ப் பல பூஜ்யங்கள் நிறைந்த மாபெரும் தொகைக்கான ஒரு ரூபிள் நோட்டை

விட ஒரு சாதாரண கைக்குட்டைக்கு மதிப்பு அதிகமிருந்தது! அரசாங்க அச்சுச்சாலை ரூபிள் நோட்டுகளுக்கு வரிசைக் கிரம எண் அடிக்கும் சிரமத்தையும் மேற்கொள்ளவில்லை. நோட்டு களைத் தனித் தனியாய்க் கத்தரித்தனுப்பும் வழக்கத்தையும் நிறுத்தி விட்டது. தபால் தலைகள் அச்சடித்த பெரிய தாள்கள் போல வரி வரியாய்ப் பல நோட்டுகள் அச்சடித்த பெரிய தாள்களை எங்களுக்குக் கொடுத்தார்கள். நானே பல சமயம் இந்தத் தாள்களைப் பொட்டணம் கட்டும் காகிதமாக உபயோகித் திருக்கிறேன்; சுவற்றில் ஒட்டும் காகிதமாக இவை உபயோகிக்கப் பட்டிருப்பதையும் பார்த்திருக்கிறேன்.

கொஞ்ச நாளில் மதிப்பற்ற இந்த நோட்டுகள் அச்சடிப்ப திலும் நெருக்கடி ஏற்பட்டது. நோட்டுகள் அடிக்கக் காகிதம் இல்லை!

இப்போதோ நிலைமை மாறிவிட்டது.. மறுபடியும் பணத் துக்கு மதிப்பு ஏற்பட்டது. வர்த்தகம் மீண்டும் தலையெடுத்தது. வரிகளை ரொக்கமாகக் கட்டாமல் பண்டங்களாகக் கட்டலா மென்று சொன்னார்கள். விவசாயிகளுக்கு சாதகமான ஏற்பாடு இது. இந்தப் புதிய ஏற்பாடு அமுலுக்கு வந்ததால் ஒவ்வொரு சாமானும் முன்போலவே பணம் கொடுத்து வாங்க வேண்டும் என்று ஏற்பட்டது. வர்த்தகத்துக்குத் தடை இல்லை என்றதும் பல பழைய சாமான்கள் திரும்ப வந்தன. மாஸ்கோ மக்க ளுக்கு மிகவும் பிடித்தமான குளிர்கால ஆடைகளை மறுபடி விற்கத் தொடங்கினார்கள். பல ஹோட்டல்கள் மீண்டும் திறக் கப்பட்டன. அவைகளில் சங்கீத கோஷ்டிகள் கிளப்பிய இன் னிசை கையில் காசில்லாமல் தெருவில் நடந்து செல்லும் எங்கள் காதில் விழும். எங்களைப் பொறுத்த மட்டில் உணவு, ஸ்நானம், பொழுதுபோக்கு எதைத் தொட்டாலும் காசில் லாமல் முடியவில்லை.

புரட்சியில் புகழ்பெற்ற நாங்கள் திடீரென பணத்தின் அருமையை உணர்ந்தோம். ஆனால் பணம்தான், எங்களிடம்

இல்லை. பணம் சேர்த்துக் குவிப்பதென்பது எங்களில் ஒருவருக்கும் தோன்றாத விஷயம். எங்களில் ஒரு சில அதிர்ஷ்டசாலிகள் ஒன்றிரண்டு ஜோடி பூட்ஸ்கள் அதிகப்படியாய் வைத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் இருக்கும். கம்யூனிஸ்ட் அதிகாரிகளில் மிக உயர்ந்தவர்கள்கூட மாதம் சுமார் 200 ரூபிள் சம்பளம் பெற்றார்கள். அதாவது திறமை படைத்த ஒரு தொழிலாளிக்குக் கிடைக்கும் சம்பளம். இப்பொழுது பணம் திரும்பி வருவதென்றால் பணக்காரர்களும் மறுபடி ஏற்பட்டுவிடமாட்டார்களா? முதலாளித்துவத்தை மீண்டும் ஏற்படுத்திவிடும் வழுக்கலான பாதையில் அல்லவா நாம் செல்கிறோம்? இவ்வாறு நாங்கள் ஒருவருக்கொருவர் கவலையுடன் கேட்டுக்கொள்வோம். மாஸ்கோ ராணுவ மேலதிகாரிகள் கல்லூரியின் அழகான உடைகளை அணிந்து, பளப்பளப்பான மெடல்கள் ஒளிவிடத் தெருவில் போன நாங்கள் உள்நாட்டு யுத்தத்தின் வீரர்கள் எனப் புகழப்பட்டோம். மாஸ்கோவில் நாங்கள் அலையாத இடம் இல்லை; எங்கு சென்றாலும் பண்டங்கள் எங்கள் சக்திக்கு மீறியவையாக இருப்பதைக் கண்டோம். கொள்ளை லாபம் அடிப்பவர்கள் எங்களை அலட்சியமாய் நடத்தினார்கள். நாங்கள் சண்டை போட்டதெல்லாம் வியர்த்தமாகிவிட்டதோ என்ற சந்தேகம் எங்களுக்கு எழுந்தது.

ஒரு நாள் மாலை எங்களில் சிலர் யுத்தக் கல்லூரியிலிருந்து கிளம்பி ட்வெர்ஸ்காய் ரோடு வழியாக புஷ்கின் சிலை வரை பன்முறை உலவி வந்தோம். எங்களுக்குள் பேச்செல்லாம் புரட்சி இப்படி முடிந்து விட்டதே என்பதைப்பற்றித்தான். புரட்சி வியர்த்தமாகி விட்டதென்றும் எங்களுக்குத் துரோகம் செய்துவிட்டார்கள் என்றும் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு வெளியேறும் காலம் வந்துவிட்டதென்றும் பேசிக்கொண்டோம். "முதலாளித்துவம் திரும்பி வருகிறது. பணமும், நாம் முன்பு எதிர்த்துப் போரிட்ட ஏற்றத் தாழ்வுகளும் மீண்டும் ஏற்பட்டு வருகின்றன" என்றே கருதினோம்.

* * *

1922-ம் வருஷம் முடிவில் ஸோவியத் அரசாங்கம் பால்ட்டிக் நாடுகளையும் போலந்தையும் ஓர் ஆயுதப் பரிகரண மகா நாட்டுக்கு அழைத்தது. இம்மகாநாட்டின் காரியதரிசிகளில் ஒருவனாக நான் நியமிக்கப்பட்டேன். பின்லாந்து மகாநாட்டுக்கு வரவில்லை. ஸோவியத் தூது கோஷ்டிக்கு லிட்வினவ்தான் தலைமை வகித்தார். போலந்து தேசத்தின் பிரதிநிதிகளாக ராட்ஸிவில் ராஜகுமாரரும் ஷ்ராகாவிவிக்ஸும் வந்தார்கள். அவர்கள் பின்லந்து, லாட்வியா, எஸ்தோனியா ஆகிய நாடுகளை மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி செய்தார்கள். லிதுவேனியா போலந்துடன் ராஜீய உறவு கொள்ளவில்லையென்றாலும் ரஷ்யாவுடன் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பி மகா நாட்டுக்கு வந்தது.

இதன்பின்னர் நடந்த இன்னும் பல மகாநாடுகளைப் போலவே இந்த மகாநாடும் உருப்படியாக ஒன்றும் செய்யாமல் கலைந்தது. ஆனால் எங்கள் அண்டை அயலார்களுடன் நாங்கள் நெருங்கிப் பழக இது சந்தர்ப்பம் அளித்தது.

* * *

சமீப காலமாகவே மாஸ்கோவில் வாழ்க்கை முறையும் அபிப்பிராயங்களும் தீவிர மாறுதல் அடைந்து வந்தன. நானும் இம் மாறுதல்களால் பாதிக்கப்பட்டேன். கீழ்த்திசை பாஷைகள் கற்பதென்று நான் தீர்மானித்தது கிழக்கத்திய நாடுகளில் புரட்சிப் பிரசாரம் செய்யலாம் என்ற நோக்கத்துடன் அல்லவா? பாரசீகத்திலும், அப்கானிஸ்தானத்திலும் புரட்சி வேகம் அதிகரித்து வருகிறது என்று கருதினேன். அந்நாடுகளில் வியாபாரி வேஷத்தில் பிரயாணம் செய்துகொண்டு உள்ளூர புரட்சித் தீயை மூட்டிவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போதோ மாஸ்கோவிலேயே புரட்சியின் வேகம் தணிந்து விட்டது. புரட்சியால் பாதிக்கப்படாத அண்டை நாடுகளுடன் ஸோவியத் ரஷ்யா ஸ்நேகபாவத்துடன் இருந்தது. பேராபத்துகளையும் சமாளித்துக்கொண்டு ரகசியப் புரட்சி நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கு பதி

லாக வேலையைத் வெளிநாட்டிலாகாவில் அமைதியாய் வேலை பார்க்கும் ஒரு அதிகாரியாக நான் மாறிக் கொண்டிருந்தேன். இளம்பிக்காரனாகவும் புரட்சிக்கு விதை விதைப்பவனாகவும் இருப்பதற்கு பதிலாக ஒரு சாதாரண அரசாங்க உத்யோகஸ்த னாக இருக்கப்போகிறேன் என்பதை நினைத்தால் பகிரென்றது. வெளி நாட்டிலாகா பாரஸீகத்தில் எனக்கென்று ஒரு கான்ஸல் உத்தியோகத்தை காலியாக வைத்திருப்பதாய்த் தெரிவித்தது. மாஸ்கோவைவிட்டு வெளியேறினால் போதும் என்று தோன்றிய தால், படிப்பு முடிந்தவுடன் பாரசீகம் போகத் தயார் என்றேன்.

ராணுவக் கல்லூரியில் எனது கடைசி வருஷப் படிப்பு நடந்துவந்த சமயம் நானும் என் மனைவியும் ஹோட்டேல் லிவாடா என்ற விடுதியில் ஒரு அறை வைத்துக் கொண்டிருந் தோம். என் மனைவியின் தாயார் எங்களுடனேயே தங்கியிருந் தார். அறையில் ஒரு பகுதியை மறைத்து அவளுக்கென ஒதுக்கி வைத்தோம். ராணுவ அதிகாரிகளால் எங்களுக்கு அளிக்கப்பட்ட உணவு போதுமானதாக இருந்திருக்கும். ஆனால் அதை அளித்த முறையினால்தான் சங்கடம் ஏற்பட்டது. நாங்கள் மாதம் இவ்வளவு இறைச்சி வாங்கலாம் என்று குறிப்பிடுவார்கள். இதை அவ்வப்போது வாங்கிக்கொள்வது முடியாது. எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் வாங்கியாக வேண்டும். ஐஸ் பெட்டிகள் இல்லாமல் இந்த இறைச்சியை கெடாதபடி வைத்திருப்பது சாத்தியமில்லை. ஆகவே இறைச்சி வாங்கிய ஒரு வாரத்திற்கு அதையே நிறையத் தின்று தீர்ப் போம். மாதத்தின் பாக்கி நாட்களில் இறைச்சி கிடையாது.

இந்த சமயம் என் மனைவி ஆல்கா பெடரோவ்னா கர்ப்பவதி யானாள். மலேரியா நோயினாலும் பல வருஷம் போதுமான போஷாக்கில்லாதிருந்ததாலும் அவளுக்கு தேக பலம் மிகவும் குறைந்திருந்தது. கர்ப்பவதியாகிவிட்டதால் சிரமம் அதிகரித்தது. உணவு அருந்துவதுகூட கஷ்டமானதாகவிருந் தது; கடுமையான குமட்டலும் அடிக்கடி ஏற்பட்டது. படுத்த

படுக்கையாய் இருந்தாள். அவள் கர்ப்பச் சிதைவு செய்து கொள்வதுதான் நல்லது என்று டாக்டர் சொன்னார். அந்த வார்த்தையைக் கேட்டதுமே அவள் முகத்தில் ஏமாற்றம் குடிகொண்டது. வேறு ஒரு டாக்டரைக் கேட்டுப்பார்ப்போம் என்று தீர்மானித்தோம். நான் கல்லூரிக்குப் போக வேண்டி யிருந்ததால் தன் தாயாரைக் கூட்டிக்கொண்டு வேறொரு வைத்தியரிடம் அவள் போனாள். நான் கல்லூரியினின்று திரும்பியபோது அவள் மீண்டும் படுக்கையில் இருந்தாள். அவளது முகம் சிவந்திருந்தது. எனக்கிருந்த பயத்தில் என்ன நடந்ததென்று அவளைக் கேட்க மனம் வரவில்லை. பிற விஷயங்களைப் பற்றி அலட்சியமான குரலில் பேசிக் கொண்டிருந்தேன்.

"டாக்டர் என்ன சொன்னார் என்று தெரிந்துகொள்ள உங்களுக்கு ஆசையே இல்லையோ?" என்று வருத்தத்துடன் கேட்டாள்.

அவள் பிரசவிக்கலாம் என்றும், ஆனால் அதற்காக போஷாக்கான உணவு உட்கொள்ள வேண்டும் என்றும், அப்படிச் செய்தால் நிலைமை திருப்தியாகும் என்றும் டாக்டர் சொன்னாராம். அடுத்த சில தினங்கள் அவள் மிகவும் பலஹீனமாக இருந்தாள்; மெலிந்து போனாள். எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்து அவள் தன்னுடைய கிராமத்துக்குச் சென்று அங்கே தன் தகப்பனாருடன் இருந்து உடம்பைத் தேற்றிக் கொள்ள வேண்டுமென்றும், பிரசவத்துக்குப் பத்து தினங்கள் முன்பு மாஸ்கோவுக்கு வரலாம் என்றும் தீர்மானித்தோம். அவளுடைய தகப்பனார் ராஸ்கஸோவோ என்ற கிராமத்தில் வசித்து வந்தார். அங்கே காய்கறிகள், பால், ரொட்டி எல்லாம் தாராளமாய்க் கிடைத்தன. நல்ல ஓய்வு, சுகாதாரமான கிராம வாழ்வு, புஷ்டியான உணவு எல்லாம் இருக்கும்; மாஸ்கோவில் அவஸ்தைப்படாமல் அவள் உடம்பு தேறுவாள் என்றே இந்த ஏற்பாடு செய்தோம்.

ஆல்கா தன் கிராமத்துக்குப் போனபிறகு என் படிப்பில் முனைந்தேன். ராணுவக் கல்லூரியின் படிப்பைத் தவிர கீழ்த்

திசைப் பாஷைகள் படிப்பிலும் நான் ஒரே சமயத்தில் தேற வேண்டியிருந்தது. 1921 முதல் நான் ஹிந்துஸ்தானி படிப் பதை நிறுத்திவிட்டு பாரசீக பாஷையில் தீவிர கவனம் செலுத் தினேன். அம்மொழி எங்களில் பலரை வசீகரித்தது. எங் கள் ஆசிரியரான மிர்ஸா ஸப்பர்கான் என்ற இறவர் எனக் கிருந்த சிரத்தையைக் கவனித்து மேற் செலவின்றி எனக்கு தனியாகப் பாடம் சொல்லிக் கொடுத்தார். கொஞ்ச காலத்தில் அவர் பாரசீக மொழியில் பேசுவதைக் குறிப்பெடுக்கும் அள வுக்கு நான் தேர்ந்து விட்டேன்.

1923-ம் வருஷம் ஜூலை மாதம் 10-ந் தேதி நான் கல் லூரியில் என் கடைசிப் பரீட்சையில் கியாதியுடன் தேறினேன். கல்லூரிப் பட்டம் எனக்களித்தார்கள். இதே சமயம் என் மனைவியின் பிரசவத்திற்கான நாளும் நெருங்கியது. தான் உடனே மாஸ்கோவுக்குப் புறப்பட்டு வருவதாக எந்த நாளும் அவளிடமிருந்து கடிதம் வருமென எதிர்பார்த்தேன். அவள் வந்தால் மாஸ்கோவிலுள்ள சிறந்த பிரசவ ஆஸ்பத்திரிகளில் ஏதாவதொன்றில் சேர்ப்பதென்று தீர்மானித்திருந்தேன். ஒரு நாள் நான் வீடு திரும்பியபோது ஒரு தந்தி காத்திருந்தது. "இரட்டைக் குழந்தைகள். இரண்டும் பையன்கள். ஆல்கா செளக்யம்—அப்பா" என்று தந்தி கூறியது.

சந்தோஷம் அதிகமாயிருந்ததென்றாலும் எனக்குக் கவலை விடவில்லை. இரட்டைக் குழந்தைகள் காலத்துக்கு முன்ன தாகவே பிறந்திருக்க வேண்டும். என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தேன். இரு தினங்கள் கழிந்தன. ஜூலை 12-ந் தேதி ஹோட்டல் வேலையாள் ஒரு தந்தியைக் கொண்டு வந்து கொடுத்தான். இரண்டே வார்த்தைகள் இருந்தன: "ஆல்கா இறந்தாள்."

உணர்ச்சியற்றவனாய் மேல் மாடியிலுள்ள என் அறைக்கு ஏறிச் சென்றேன். அறையிலுள்ள படுக்கையில் உட்கார்ந்து கொண்டு அந்தச் சிறு துண்டுக் காகிதத்தைப் புரட்டிப் புரட்டிப்

பார்த்தேன். அதிலிருந்த நம்பமுடியாத இரண்டு வார்த்தை களையும் திரும்பத் திரும்பப் படித்தேன். எல்லாச் சுற்றி அறையிலிருந்த பொருள்கள் வழக்கமாக இருப்பது போலவே இருந்தன. ஆல்காவின் உடைகள் எதிரே ஒரு மூலையில் தொங்கின. அலமாரியில் அவளது மூக்குக் கண்ணாடியும் பல் தேய்க்கும் பிரஷ்ஷும் இருந்தன. எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. என்னுடைய இளம் வாழ்வில் மீட்க முடியாததான இவ்வளவு பெரிய ஆபத்து இதுவரை ஏற் பட்டதில்லை. யுத்தகளத்தில் சாவை நேருக்கு நேர் பார்த் திருக்கிறேன். ஆனால் மிகவும் பிரியமான ஒருவரை இவ்வளவு இளம் வயதில் இழப்பது இதுவே முதல் தடவை. இந்த அனுபவம் என்னை பிரமிக்க வைத்தது. என் நா வரண்டது; கண்கள் கலங்கிப் போயின.

எனது நண்பர்கள் என்னைத் தேடிவந்து ஆறுதல் சொன் னார்கள். அவர்களுக்கெல்லாம் நானும் பதில் சொன்னேன். அடுத்தபடி செய்ய வேண்டிய முதல் காரியம் ராஸ்கலோவோ கிராமத்துக்குக் கூடிய விரைவில் போவதாகும். நான் கிளம்பு வதற்கு அனுமதி வருவதற்குள் மூன்று நாட்களாகி விட்டன. ரஜா பெற்றுக் கொள்ளுதல், ரயில் பிரயாணத்துக்கு ராணுவ அனுமதிச் சீட்டு, இதர பிரயாணப் பத்திரங்கள் இவைகளைப் பெற்றுக் கொள்வதில் இவ்வளவு தவக்கம். இந்த மூன்று நாளும் என் மனதில் என்னென்ன தோன்றிற்றென்று சொல் லவே முடியாது. ஆல்கா இறந்து விட்டாள் என்பதை என் மனம் நம்ப மறுத்தது என்ற ஒரு விஷயம் மட்டும் நன்றாக நினைவிருக்கிறது. அந்த துக்க சம்பவம் நடைபெறவேயில்லை போலவும், ஏதோ சொப்பன மயக்கத்தில் நான் அவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்றும், சொப்பனம் கலைந்து சீக்கிரமே ஆல்காவைச் சந்திப்பேன் என்றும் ஓயாமல் தோன்றும்.

ரயில் பயணத்தின்போதும் என் மனம் இதே வகையில் உழன்றது. நான் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்ததும்

என்னையும் அறியாமல் ஆல்கா வந்திருக்கிறாளா என்று எட்டிப் பார்த்தேன். எல்லாம் பொய்க் கனவு என்று எனக்குச் சொல் வதற்காக அவள் நிச்சயம் ஸ்டேஷனில் காத்திருப்பாள் என்று நினைத்தேன். ஆனால் அவள் வரவில்லை. வயல்கள் வழியே வீட்டுக்குச் செல்லும் பாதையிலும் அவளைக் காணவில்லை. ரயில் எப்பொழுது வருகிறதென்று அவளுக்குத் தெரியாதோ ? ஓ, இப்போது புரிந்தது. பிரசவத்துக்குப் பிறகு அவள் இவ்வளவு சீக்கிரத்தில் எழுந்து நடமாட முடியாதுதான்.

வீட்டில் துக்கத்தின் சாயல் படர்ந்திருந்தது. சுற்றி யிருந்த மரங்கள்கூட துக்கத்தால் வாடியிருந்ததுபோல் தோன் றின. என் மாமனார் வெளியே வந்தார். ஒன்றும் சொல்லா மல் என் கையைப் பிடித்துக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றார். படுக்கையில் வெண்மையாக இரண்டு துணிக் குவியல்கள் இருந்தன. ஸன்னமான குரல் கேட்டது.

வாழ்க்கைச் சுவை மிகுந்திருந்த எனது ஆல்காவை நினை வூட்ட எனக்கு மிஞ்சியது முனகிக் கொண்டிருக்கும் இவ்விரு சிசுக்கள்தானா ? அவைகளைக் கண்டு எனக்குச் சற்றுக் கோபம் கூட உண்டாயிற்று. அவைகளாலல்லவா எனது ஆல்கா உயி ரிழந்தாள்.

" குழந்தைகளுக்கு அலெக்ஸாண்டர், போரிஸ் என்று பெயரிட்டாள். அவைகளைத் தன் கையிலெடுத்து வைத்துச் சீராட்டினாள். அப்போது அவளுக்குக் குதூகலம் தாங்க வில்லை " என்று என் மாமனார் அமைதியுடன் சொன்னார்.

ஆல்கா மாஸ்கோவுக்குக் கிளம்பிக் கொண்டிருந் தாளாம். அப்போது, எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே பிரசவ வேதனை ஏற்பட்டதாம். மிகவும் கஷ்டப்பட்டாளாம். வேதனை தொடர்ந்தாற்போல் இரண்டு நாட்காலம் நீடித்ததாம். இரட்டைக் குழந்தைகளில் இரண்டாவது குழந்தையை வைத் தியர் ஆயுதம் போட்டு எடுக்க வேண்டியதாயிற்றாம். பாவம், கிராம வைத்தியருக்கு இத்தகைய நெருக்கடியை சமாளிப்பதில்

அனுபவம் இல்லே. பிரசவத்தின்போது ஆல்கா நிறைய ரத்தம் இழந்து விட்டாள். அடுத்த 48 மணி நேரம் உயிருக்குப் போராடி, காலமானுள்.

" அவளே எங்கே புதைத்தீர்கள் ?"

புதிதாய்த் தோண்டி மூடப்பட்டிருந்த சவக்குழி அருகே நின்றபோதுதான் உண்மை நிலைமையைத் தெளிவாய் உணர்ந் தேன். என் மாமனும் நானும் வயல்கள் வழியே நடந்து வந்தோம். சாவு உண்மையானதுதான். வீட்டில் இரு சிசுக் களும் முனகிக் கொண்டே இருந்தன. சாவைப் போலவே வாழ்வும் உண்மையானதுதான்.

கிழவனர் ஒரு துணியைப் பாலில் நனைத்து குழந்தைகள் வாயில் வைத்தார். அச்சிறு குழந்தைகள் முனகலே நிறுத் தின. அப்போது குழந்தைகளேப் பார்க்க டாக்டர் வந்தார்.

" குறைப் பிரசவம். ரொம்ப பலஹீனமாயிருக்கின்றன. பிறந்து ஆறு நாள் ஆகவில்லே. அதற்குள் இரண்டுக்கும் வாயு உபத்திரவம் வந்து விட்டது. எப்படியாவது பிழைக்கட்டு மென்று இவைகளே அநாவசியமாய் வாட்டி வதைப்பதில் அர்த்தமில்லே. இந்தக் குழந்தை எந்த நிமிஷமும் கண்ணே மூடிவிடக் கூடும். மற்றது இன்னும் ஒன்றிரண்டு தினங்கள் நீடிக்கலாம் " என்று சொன்னுர் டாக்டர்.

குழந்தைகள் பிழைக்கட்டும் என்று ஆல்கா இறந்தாள். இப்போது இந்தக் குழந்தைகள்கூட உயிர்வாழ இடமில்லேயா ? இந்த எண்ணம் எனக்குத் தோன்றியதும் அதுவரை வெறும் மாமிசப் பிண்டங்களாய்த் தோன்றிய அந்த இரு ஜீவன்களிட மும் திடீரென ரத்தபாசம் ஏற்பட்டது. அவைகளேக் கட்டாயம் காப்பாற்றிப் பிழைக்கச் செய்ய வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது. அவ்வளவுதான். அடுத்த க்ஷணம் ஒரு குதிரை யில் ஏறி, பக்கத்து கிராமத்தில் இருந்த ஒரு பிரசித்தமான டாக்டரைப் பார்க்க அதிவேகமாய்ப் போனேன்.

"டாக்டர் இப்போதே என்னுடன் வாருங்கள். இரண்டு குழந்தைகள் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கின்றன. அவைகளை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும்" என்று படபடப்புடன் கூறினேன்.

டாக்டர் தமது சிறிய வண்டியில் எங்கள் கிராமத்துக்கு வந்தார். குழந்தைகளை வெகுநேரம் பரிசோதனை செய்தார்.

"ஹும், அந்த டாக்டர் சொன்னது சரிதான் போலிருக்கிறது. இந்தக் குழந்தைகளைக் காப்பாற்றுவது துர்லபம். இருந்தாலும் முயற்சி செய்து பார்க்கலாம். இதோ பசும்பால் கொடுக்கிறீர்களே, இதுதான் குழந்தைகளைக் கொல்கிறது. குழந்தைகளுக்கு வேண்டியது தாய்ப்பால்" என்றார்.

ஒரு மருந்தை எழுதிக் கொடுத்தார், அதை பல சின்னஞ் சிறு பாகங்களாக்கி மணிக்கு ஒரு பாகம் வீதம் கொடுக்கும்படி சொன்னார். குழந்தைகளின் பாட்டனார் இதைக் கவனித்துக் கொண்டார். வீட்டில் வேறு யாரும் இல்லை.

இதற்குள் நான் மீண்டும் குதிரையில் ஏறி தாய்ப்பால் தரக்கூடிய தாதி எவளாவது கிடைப்பாளா என்று விசாரித்துச் சென்றேன். என்னுடைய ராணுவ உடை கிராம மக்களுக்கு நம்பிக்கையூட்டவில்லை. என்னை சந்தேகத்துடன் பார்த்தார்கள். தேடித் தேடி, கடைசியில் ஒரு குடியானவன் குடிசையை அடைந்தேன். அங்கே ஒரு இளம் தாய் இருப்பதாகச் சொன்னார்கள். கதவைத் தட்டினேன். கதவைத் திறந்த பெண்ணிடம் சமாசாரத்தைச் சொல்லி அவள் என்ன கேட்டாலும் கொடுக்கிறேன், எனக்குக் கிடைக்கும் உணவு ரேஷன்களைக்கூடத் தருகிறேன் என்றெல்லாம் வாக்குறுதி அளித்தேன். அந்தக் காலத்தில் நகரத்தில் வேலை பார்க்கும்படி ஒரு விவசாயியை ஒப்புக் கொள்ளச் செய்வது சுலபமான காரியமல்ல. மேலும் கிராமப்புறம் முழுவதிலும் ராணுவத்தினரைக் கண்டால் வெறுப்பு, நம்பிக்கைக் குறைவு. அந்தப் பெண் நான்

சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, மிக்க மரியாதையுடன் தன்னால் வர முடியாதென்று சொல்லுகிறான். என் இளம் குழந்தைகள் இரண்டும் தாய்ப்பாலில்லாமல் மடியத்தான் வேண்டுமா ?

சலிப்புடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். வழியில் என்னவோ தோன்றிற்று. திடீரென, ஒரு குடிசைக்குள் நுழைந்தேன். தாதி வேலைக்கு யாராவது கிடைப்பார்களா என்று விசாரித்தேன். கையில் ஒரு குழந்தையுடன் அங்கிருந்த ஓர் பெண் என் குழந்தைகளைப் பாலூட்டி வளர்க்க சம்மதித்தாள். அது மட்டுமல்ல. தன் குழந்தையையும் எடுத்துக்கொண்டு என்னுடனேயே என் வீட்டுக்கு வந்தாள்.

நல்ல திடகாத்திரமான அந்தக் குடியானப் பெண் என் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள ஒப்புக் கொண்டது எனக்கு நம்பிக்கை அளித்தது. இருந்தால்கூட ஒவ்வொரு தடவையும் நான் வெளியே போய்விட்டு வீட்டில் நுழையும்போது என் மனம் கவலையால் துடிக்கும். சிசுக்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றன, நோய் தீரவில்லை ஆனால் மூச்சு இருக்கின்றது என்று சொல்லுவார்கள். அதைக் கேட்பதற்கே ஆச்சரியமாக இருக்கும். என் ஆச்சரியத்தைவிட அதிக ஆச்சரியமடைந்தார் டாக்டர். பத்தாவது தினம் அவர் வியப்புடன், " மனித சக்திக்கு மீறிய அதிசயங்களை நாம் இப்போது நம்புவதில்லை ; இல்லையென்றால் நான் இதை ஒரு அதிசய சம்பவம் என்று நிச்சயம் கூறுவேன் " என்றார். மேலும், " என்னால் முடிந்ததெல்லாம் செய்துவிட்டேன். இனி இவைகளை எப்படியாவது மாஸ்கோவுக்குக் கொண்டுசென்று அங்கே நிபுணர்களைக்கொண்டு வைத்தியம் பார்த்தால் ஒருவேளை பிழைக்கக்கூடும். ஆனால் ஒன்று. பிரயாணத்தில் இருக்கும் அபாயம் கொஞ்சநஞ்சமல்ல. சிறு அதிர்ச்சியும் ஆபத்தாக முடியலாம். ஜாக்கிரதை !" என்றார்.

இரவு முழுவதும் என்ன செய்வதென்று குழம்பிக் கொண்டிருந்தேன். முடிவில் ஆனது ஆகட்டுமென்று குழந்

தைகளை மாஸ்கோவுக்குக் கொண்டு செல்லத் தீர்மானித்தேன். அன்றே அதிகாலையில் குழந்தைகளுடனும் தாதியுடனும் அவளுடைய குழந்தையுடனும் மாஸ்கோவுக்குக் கிளம்பினேன். இவ்வாறு, ஒன்றுக்குப் பதிலாக மூன்று இளம் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது!

அந்த கிராமாந்தர ரயிலில் ஒதுக்கப்பட்ட பெட்டிகள் இருக்கவில்லை. வண்டியில் கூட்டம் நிறைந்திருந்தது. குடியானவர்கள் தங்கள் மூட்டைமுடிச்சுகளுடன் நெருக்கமாய் அமர்ந்திருந்தார்கள். அசல் பட்டிக்காட்டுப் புகையிலையால் செய்த சுருட்டுகளை ஓயாமல் புகைத்துக்கொண்டிருந்தார்கள். மேல் தட்டுகளில் படுத்திருந்த நபர்களோ தங்கள் முரட்டு பூட்ஸ்களைக் கழட்டி தட்டுகளின் சங்கிலியில் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். என்னுடன் இருந்த மூன்று குழந்தைகளுக்கும் மேலே இது மாதிரி இரு பாதரட்சைகள் ஊசலாடின. ரயிலில் நெருக்கடி அதிகமாய் இருந்ததால் உட்கார்ந்த இடத்தைவிட்டு நகரக்கூட முடியவில்லை. நடைபாதைகளிலும் ஆட்கள் இருந்தனர். வியர்வை நாற்றம் பொறுக்கவில்லை.

மாஸ்கோவை அடைய 36 மணி நேரம் ஆயிற்று. என் குழந்தைகள் இரண்டும் ஓயாமல் முனகிக்கொண்டேயிருந்தன. அவை இன்னும் உயிரோடு இருக்கின்றனவென்று அறிவிப்பது போலிருந்தது அந்த முனகல். மாஸ்கோவரை உயிருடன் வந்தாயிற்று, ஆகையால் அவைகள் நிச்சயம் பிழைக்கும், ஆல்காவின் தியாகம் வீண்போகவில்லை என்று நான் நம்பினேன்.

மாஸ்கோவில் மழை பொழிந்துகொண்டிருந்தது. மூன்று குழந்தைகளையும் தாதியையும் ரயில்வே பிரயாணிகள் தங்குமிடத்தில் விட்டுவிட்டு, பொது சுகாதார இலாகாவுக்கு விரைந்து சென்றேன். அங்குள்ள அதிகாரி ஒருவர், "கைக் குழந்தைகளுக்கான வைத்தியசாலை நிறைந்து விட்டது. துளி இடம் இல்லை. ஒன்றும் செய்வதற்கில்லை" என்று கையை

விரித்தார். வெளி நாட்டிலாகாவுக்கு ஓட்டோட்டமாய்ச் சென்றேன். லியான் காரகான் என்னை அன்புடன் வரவேற்ருர்.

“ உனக்கு உத்தியோக உயர்வு கொடுத்து மாகூ பிரதேசத்தில் ரஷ்ய கான்ஸலாக அனுப்ப உத்தேசிக்கிறேம். மாகூ அரசன்தான் உனக்குத் தெரியுமே, பாரசீக மன்னன் ஷாவுக்கு எதிராய்க் கலகம் செய்து தனி அரசு ஸ்தாபித்திருப்பவன், ரொம்பத் தந்திரசாலி. அவனை உன்னால் சமாளிக்க முடியுமா ?”

காரகான் என் முகத்தை அதுவரை கவனிக்கவில்லை. என்னைக் கவனித்துப் பார்த்தபோதுதான் வெளிநாட்டிலாகாவில் உயர்வேலைக்காக நான் வரவில்லை என்பதை உணர்ந்தார்.

“ என்ன சமாசாரம் ?” என்று விசாரித்தார்.

என் கதை முழுவதையும் கேட்டதும் டெலிபோனை எடுத்து சுகாதார இலாகாவின் உதவி காமிஸாரைக் கூப்பிட்டார். அந்த அதிகார்ரி, குழந்தைகளுக்கு எப்படியாவது வைத்தியசாலையில் இடம் கண்டுபிடித்துத் தருவதாய் ஒப்புக்கொண்டார். குழந்தைகளை உடனே கொண்டுவரும்படியும் சொன்னர்.

தாதியும் நானும் குழந்தைகளை எடுத்துக்கொண்டு ஒரு திறந்த வண்டியில் ஏறினேம். வேறு ஒரு வண்டியும் கிடைக்கவில்லை. மழை இன்னும் பெய்துகொண்டிருந்தது. குழந்தைகளின்மேல் என்னுடைய பெரிய ராணுவ மேலங்கியை விரித்துப் போர்த்தியிருந்தேன். டாக்டர் ஸ்பெரான்ஸ்கி தலைமையில் நடந்த கைக்குழந்தைகள் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தோம். வழக்கமான சம்பிரதாயங்களில் காலத்தைப் போக்காமல் குழந்தைகளை உடனே உள்ளே அனுமதிக்கும்படி செய்வதற்கு அந்த புகழ்பெற்ற வைத்தியரையே நான் அழைக்கும்படி நேர்ந்தது.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டவுடன் ஒரு தாதி முதல் காரியமாக இரு குழந்தைகளையும் ஒரு மெத்தை தைத்த

மேஜையிலிருந்து எடுத்திருந்தான். குழந்தைகளிடமிருந்து முனகல் சப்தம்கூட வரவில்லை. எனக்கு மனம் துடித்தது. அவைகளில் ஒன்றின் வாயிலிருந்து சிறிதளவு நுரை தட்டியது. போரிஸ் என்ற அக்குழந்தை உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தது. உடனே ஒரு லேடி டாக்டர் செயற்கை முறையில் அக்குழந்தைக்கு சுவாசமூட்டினாள். சாவிலிருந்து மயிரிழை தப்பிப் பிழைத்தான் போரிஸ். சில மணி நேரத்தில் என் குழந்தைகள் இருவரும் விசேஷமான உஷ்ணப் பெட்டிகளில் வைக்கப்பட்டனர். அவர்கள் பிழைப்பது நிச்சயமாயிற்று. குழந்தைகள் மிகவும் நோஞ்சானாக இருந்தபோதிலும் அவை தங்கள் உயிருக்காகப் போராடியது வியக்கத்தக்கதாய் இருந்தது. இன்று (1945-ல்) அவர்களுக்கு வயது 22.

* * *

மாஸ்கோ ராணுவக் கல்லூரியில் எங்கள் படிப்பு முடிந்து நாங்கள் பட்டம் பெற்றதற்கு அடையாளமாக ஒரு பெரிய கொண்டாட்டம் நடந்தது. மாஸ்கோ நடன அரங்கத்திலிருந்து புகழ்பெற்ற நக்ஷத்திரங்கள் வந்து கல்லூரியின் பெரிய ஹாலில் நடனமாடினார்கள். பல பிரசங்கங்கள் நிகழ்ந்தன. இந்த வைபவத்தின்போது, மரினோ என்ற இடத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி ஓய்வு ஸ்தலத்தில் தங்கியிருக்க கட்சியின் மத்யக் கமிட்டி மாணவர்களில் இருபது பேருக்கு அழைப்பு விடுத்தது. அவர்களில் நானும் ஒருவன். இந்த மாறுதல் எனக்கு சந்தோஷம் அளித்தது. ஹோட்டல் வாழ்க்கை அலுத்துப் போயிருந்ததால், புது இடம் போவோம் என்ற நம்பிக்கை சந்தோஷத்தை உண்டாக்கியது.

மரினோ வாசஸ்தலம் ஒரு பெரிய மாளிகையில் இருந்தது. நாவலாசிரியர் டர்கனேவ் விவரமாய் வர்ணித்துள்ள பிரபுக்கள் மாளிகையில் இது ஒன்று. ஒரு சமயம் இது ஒரு ராஜகுமாரரின் சொத்தாக இருந்தது. காக்கஸஸ் பிரதேசத்தை வென்ற பரியாடின்ஸ்கி ராஜகுமாரர் தாம் கைதுசெய்து கொண்டுவந்த

காக்கஸஸ் சுதந்தர வீரர் ஷாமிலை இங்கே அடைத்து வைத்திருந்தார். பிரான்ஸில் வார்ஸேல்ஸ் நகரில் உள்ளது போல இங்கே பல பாதைகளில் இரு புறமும் மரங்கள் செழிப்பாக வளர்ந்திருந்தன.

ஓய்வு ஸ்தலத்தில் தங்குபவர்களின் சௌகர்யத்தை நன்கு கவனித்து அவர்களுக்குப் போதுமான அளவு நல்ல உணவு தரவேண்டும் என்று ஓய்வு ஸ்தல நிர்வாகி ஸ்ட்ரிஜாக்குக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி உத்தரவிட்டிருந்தது. ஸ்ட்ரிஜாக் இந்த உத்தரவை கண்ணும் கருத்துமாய் நிறைவேற்றுவார்; செலவுதான் போட்ட திட்டத்தைவிட அதிகமாகி விடும். இதனால் முடிவில் அவரைப்பற்றி விசாரணை நடத்தினார்கள். அதன் பயனாய் அவர் தற்கொலை செய்துகொண்டு விட்டார்.

மரினோ ஓய்வு ஸ்தலத்தில் இருந்த வசதிகளையும் சொகுசையும் கண்டு நான் திகைத்துப் போனேன். கரேலியன் தீபகற்பத்திலிருந்து வந்த பர்ச் மரங்கள், உஷ்ண தேச மஹாகனி போன்ற அபூர்வமரங்களால் செய்யப்பட்ட சாமான்கள் அறையில் நிறைந்திருந்தன. மேல் விதானத்திலிருந்து ஜ்வலிப்பான பட்டைக் கண்ணாடி தொங்கியது. அலங்கார தீபங்கள் கொண்ட பெரிய விருந்து அறைக்குள் நான் முதன்முதலாக நுழைந்தபோது எனக்கு சென்ற சில வருஷங்களில் நாங்கள் அனுபவித்திருந்த கஷ்டங்களே ஞாபகத்துக்கு வந்தன. பெரிய மேஜைகள், சுவாரஸ்யமான பேச்சு, கவலையற்ற சிரிப்பு—எனது பழைய கஷ்டங்கள் எனக்கு ஞாபகம் வந்ததில் ஆச்சர்யமென்ன? இந்தக் கனி வகைகளில் சிறிதளவு கிடைத்திருந்தால்கூட போதுமே, எனது ஆல்கா பிழைத்திருப்பாளே! அவள் ஒருத்தி மட்டும்தானா? அவளைப் போல் பல்லாயிரக் கணக்கான இதர பெண்களும் போஷாக்குக் குன்றி உயிரிழந்திருக்கிறார்களே! என் தேசத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் துக்கத்தில் என் துக்கம் எம்மட்டு?

யுத்தக் கல்லூரியில் மாணவர்கள் என்ற முறையில் பிறர் பொருமைப்படத்தக்க விதம் நாங்கள் உணவு ரேஷன் பெற்ற தைப்பற்றியும், ஆல்காவும் நானும் அந்த உணவைக் கொண்டு திருப்தி அடைய வேண்டியிருந்ததைப்பற்றியும், இங்கே கட்சியின் மத்தியக் கமிட்டியால் அளிக்கப்படும் தடபுடலான உணவைப் பற்றியும் நினைத்துப் பார்த்தபோது எனக்கு மனக் கசப்புதான் மிஞ்சும், உணவில் வெறுப்புத் தட்டும். உணவுத் தட்டை ஒதுக்கித் தள்ளி விடுவேன். அழகான விருந்து ஹாலைக் கண் டாலே எரிச்சலாய் இருக்கும். ஹாலுக்கே போகாமல், உணவை என் அறையிலேயே சாப்பிடுவதற்கு அனுமதி பெற்றுக் கொண் டேன். அருமையான புஸ்தகங்களில் லயித்துப் போகும்போதும் மரங்களில் மிதந்து வரும் காற்றை அனுபவித்துக்கொண்டு இயற்கை எழிலை ரஸித்துக்கொண்டிருக்கும்போதும்தான் மன அமைதி இருக்கும்.

* * *

1923-ம் வருஷம். அக்டோபர் மாதம் மாஸ்கோ நகரில் பிரமாதமான படபரப்பு ஏற்பட்டது. ஜெர்மன் புரட்சிக்காக நாங்கள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தோம். ஸிநோவிவ் மேற்பார்வையில் ஸர்வதேச கம்யூனிஸ்ட் ஸ்தாபனம் இந்தப் புரட்சியின் சகல அம்சங்களையும் திட்டமிட்டு வந்தது. பாரஸீக பாஷைக்குப் பதிலாக ஜெர்மன் பாஷை படிக்காமல் போனேமே என்று வருந்தினேன்.

இதற்கு சற்று முன்னால், புரட்சியால் ஏற்படப் போகும் ஸோவியத் ஜெர்மன் குடியரசு எவ்விதமான வெளிநாட்டுக் கொள்கையைக் கைக்கொள்ள வேண்டும் என்று "ப்ராவ்டா" பத்திரிகையில் ஸிநோவிவ் பல கட்டுரைகள் வரைந்தார்! ஜெர்மன் தொழிலாளர்களின் திறமையில் எனக்கு நம்பிக்கை இருந்ததென்றாலும் ஸிநோவிவ் பிறக்காத குழந்தைக்குப் பெயர் வைக்கிறார் என்று நினைத்தேன்.

பாரஸீகத்துக்கு தூதராய் நியமிக்கப்பட்டிருந்த போரிஸ் ஷூமியாட்ஸ்கியுடன் நானும் போக வேண்டுமென்று வெளி

நாட்டிலாகா உத்தரவிட்டது. ஷுமியாட்ஸ்கி தன்னை வந்து பார்க்கும்படி சொல்லி அனுப்பினார். இரண்டு வருஷகாலம் இந்த அரிய மனிதருடன் உழைக்கும் அனுபவம் பெற்றேன். இவர் ஸோஷலிஸத்தில் பழம் பெருச்சாளி. 1905-ம் வருஷம் நடந்த புரட்சியின்போதே கிழக்கு ஸைபீரியாவில் க்ராஸ் னோயார்ஸ்க் நகரில் ஸோவியத் நிர்வாகத்தை ஸ்தாபித்தவர் இவர். மார்க்ஸ் தத்துவங்களை நன்றாக அறிந்தவர். சுமார் 40 வயதிருக்கும். யூதர். பரந்த முகம். நெளி நெளியான தலைமயிர். இயற்கையாய் அதிகாரம் தொனிக்கும் கனத்த சாரிரம். ஷுமியாட்ஸ்கிக்கு அலுப்பு என்பதே கிடையாது. இரவு பகலாய் வேலை செய்வார். எதையும் ஊன்றிக் கவனிப் பார். தம் கொள்கைகளை விடாப்பிடிவாதமாய்ப் பின்பற்றுவார். பெரும் தலைவர்களுக்குள்ள சகல குணங்களும் வாய்க்கப் பெற்றவர். பாரஸீகத்தில் தூதராகவும் வர்த்தகப் பிரதிநிதி யாகவும் இருக்கும்படி அவரை அனுப்பினார்கள். இந்தப் புகழ் பெற்ற மனிதர் 1937-ல் நடந்த களையெடுப்பின்போது "மக்களின் விரோதி" எனக் குற்றம் சாட்டப்பட்டு மறைந்து போனார்.

ஷுமியாட்ஸ்கி, வட பாரசீகத்தில் ஒரு மாகாணமான கிலானில் கான்ஸல்-ஜெனரலாக என்னை நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னார். கிலான் காஸ்பியன் கடலை ஒட்டிய பிர தேசம். பாரசீகத்திற்கே பொருளாதார கேந்திரம் வாய்ந்தது. ரஷ்ய கான்ஸல்-ஜெனரலின் காரியாலயம் ரெஷ்ட் என்ற பிர சித்திபெற்ற வியாபாரஸ்தலத்தில் இருந்தது. பாரசீகத்தில் ரஷ்ய செல்வாக்கு நீடிக்க முக்கியமானதான என்ஸேலி துறை முகமும் (இப்போது பெஹ்லவி என்று அழைக்கப்படுகிறது) என் பிரதேசத்தில் இருந்தது. கிலான் மாகாணம் மிகவும் சுகா தாரக்கேடான பிரதேசம். பாரசீக பாஷையில் ஒரு பழமொழி உண்டு—"மோர்க் மிக்காக்கி, கிலான் பெரோ". அதாவது— "உயிரைவிடவேண்டுமா ? கிலானுக்குப் போயேன்."

புதிதாய்ப் பதவி ஏற்கத் தாம் செல்லுகையில் ஒரு யுத்தக் கப்பலில் காஸ்பியன் கடலைக் கடந்து செல்வதே தமது அந்தஸ்

துக்கு ஏற்றது என்று ஜாமியாட்லி தீர்மானமாய்க் கூறினார். அதன் பேரில் நாங்கள் பிரயாணம் செய்ய ஒரு நாசகாரிக் கப்பல் தரப்பட்டது. அந்தக் கப்பல் மிகப் பழையதென்றாலும், பார்வைக்கு நன்றாயிருந்தது. நாங்கள் பயணம் செய்தபோது கடலில் கொந்தளிப்பு இருந்தது. கப்பலின் ஆட்டம் எங்களில் பலருக்குக் குமட்டலை உண்டாக்கியது. இதிலிருந்து குணமாவதற்கு எனக்குப் பல நாட்களாயின. பாரசீகத்தின் தரையில் கால் வைத்தபோதுகூட, கண்காணாத அலைகளினால் பூமி சுற்றிச் சுற்றி ஆடுவதுபோல் தோன்றிற்று.

ஸோவியத் அரசாங்கம் பாரசீகத்திடம் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட புதிய கொள்கையை அனுஷ்டிப்பதாய்ப் பிரகடனம் செய்திருந்தது. ஆனால் கொள்கை அனுஷ்டானத்துக்கு வந்தபோதோ, ஸோவியத் ரஷ்யாவின் கொள்கைக்கும் பழைய ஜார்களின் ஏகாதிபத்யக் கொள்கைக்கும் அதிக வித்தியாசம் இருக்கவில்லை. பழைய ஆட்சியின் ராஜதந்திரிகள் பொருளாதாரப் பிடிப்பின்மூலம் கொஞ்சம் கொஞ்சமாக பாரசீகத்தில் நுழைந்துகொண்டு நாடு முழுவதையும் கைக்குள் போட்டுக்கொள்ள முயன்றனர். காஸ்பியன் கடல்பற்றி இரு நாடுகளுக்கும் இருந்த பழைய ஒப்பந்தம் அக்கடலில் பாரசீகம் யுத்தக் கப்பல்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. ஆனால் பாரசீகத் துறைமுகமான என்ஸோலியில் இரண்டு ரஷ்ய பீரங்கிப் படகுகள் இருப்பதை அனுமதித்தது. "ஏகாதிபத்திய உணர்ச்சியற்ற" ஸோவியத் அரசாங்கம் ஏற்பட்டும் நிலைமை மாறவில்லை. பழைய ஜாரின் கடல் படைப் படகுகளுக்குப் பதிலாக புதிய ஸோவியத் அரசாங்கத்தைச் சேர்ந்த பீரங்கிப் படகுகள் இருந்தன என்ற ஒரு மாறுதலே ஏற்பட்டது.

இது தவிர கிலான் மாகாணக் கடற்கரையிலும் மஸந்தேரான் பிரதேசத்திலும் மீன்பிடிப்பு ஸ்தலங்கள் ரஷ்ய ஆதிக்கத்திலேயே இருந்தன. கிலான் கடற்கரையிலிருந்து பாரசீகத்-

தலைநகரம் டெஹ்ரானுக்குப் போகும் ஒரே பாதை உட்பட பல சமாசாரங்களில் தனி சலுகை கொண்ட ஒரு ரஷ்ய கம்பெனியும் இந்தப் பிரதேசத்தில் இருந்தது.

இந்த சலுகைகள் எல்லாவற்றையும் ரத்து செய்ய சம்மதித்து, பழைய ஜார் ஏகாதிபத்திய அரசாங்கம் அனுபவித்து வந்த பல சலுகைகளை 1921-ல் ஸோவியத் அரசாங்கம் விட்டுக் கொடுத்ததென்னவோ உண்மைதான். இதற்கென ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானதும் வாஸ்தவந்தான். ஒப்பந்தம் கையெழுத்தாயிற்றே தவிர, அதன் ஷரத்துக்கள் மனப்பூர்வமாய் அமல் செய்யப்படவில்லை. காஸ்பியன் கடலில் மீன் பிடிக்கும் உரிமை ரஷ்யர்களுக்கே இருந்தது. என்ஸேலி துறைமுகமும் எங்கள் கையிலேயே இருந்தது. நாங்கள் வெளியேறினால் அந்தப் பிரதேசம் முழுவதும் ஆங்கிலேயர் வசம் போய்விடும் என்று பயந்தோம். அந்த சமயத்தில், செல்வாக்குள்ள பாரசீக ராணுவ மந்திரி ரீஸா கானுடைய ஆதரவுடன் பாரசீகத்தில் ஆங்கிலேயர் பிரபலமாயிருந்தார்கள். இதே ரீஸா கான்தான் பிற்காலத்தில் பாரசீகத்தின் மன்னராகி அந்நாட்டுக்கு உண்மையான சுதந்தரத்தையும் பெற்றுக் கொடுத்தார்.* துருக்கியில் கமால் பாஷா செய்தது போல தமது நாட்டிலும் பல சீர்த்திருத்தங்களை அவர் மக்களுக்கு வழங்கினார். வெகு நாட்களுக்கு முன் பாரசீகத்தில் இருந்து வந்த ரஷ்ய காஸ்ஸக் குதிரைப்படையில் ரீஸ்கான் ஒரு சிறிய அதிகாரியாக இருந்தார். அதனால் அவருக்கு ரஷ்ய பாஷை நன்கு தெரிந்திருந்தது.

கிலானில் பதவி ஏற்ற சின்னாட்களிலேயே, கம்யூனிஸ்ட் என்ற முறையில் எனது மனச்சாட்சிக்கு சோதனை ஏற்பட்டது.

---

*சென்ற மகா யுத்தத்தின்போது பிரிட்டிஷ் துருப்புகளும் ரஷ்யப் படைகளும் 1941 ஸெப்டம்பர் மாதம் ஈரானில் புகுந்த சமயம் பாரசீக மன்னராயிருந்த ரீஸாகான் பதவியிலிருந்து நீக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார். இதற்கு மூன்று வருஷங்கள் கழித்து, அவர், பாரசீகம் திரும்பாமலே இறந்தார்.

பாரசீகத்தில் ரஷ்யாவுக்கு சலுகைகள் இருந்த முற்காலத்தில், பணம் படைத்த பாரசீகர்கள் ரஷ்யப் பிரஜைகளாகி அதன் மூலம் தங்கள் சொத்து சுதந்தரங்களுக்கு ரஷ்யாவின் பாது காப்பைப் பெற்றுவந்தார்கள். இந்த ஆட்கள் இப்போது என்னிடம் வந்து தங்களுடைய பிரஜா உரிமைச் சீட்டுக்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று கோரினார்கள். கம்யூனிஸ்ட் என்ற முறையில், 'இவர்கள் வெறும் பணக்கார முதலாளிகள், இவர்களுக்கு எவ்வித கருணையும் காட்டக் கூடாது' என்று தான் எனக்குத் தோன்றிற்று. ஆனால் எனது மேலதிகாரி யான நாதர் ஷுமியாட்ஸ்கி அவர்களுடைய உரிமைச் சீட்டுகளைப் புதுப்பித்துக் கொடுத்தாகவேண்டும் என்று தீர்மானித்தார். "அவர்கள் முதலாளிகளாயிருக்கலாம், ஆனால் அவர்கள் பாரசீகத்திலுள்ள ரஷ்யப் பிரஜைகள். ஆகையால் ரஷ்யப் பிரஜைகளுக்கு உதவி செய்வது நம் கடமை" என்றார் ஷுமி யாட்ஸ்கி. அவர்கள் மூலம் பாரசீகத்தில் எங்கள் ஆதிக்கத்தை விஸ்தரிப்பது சாத்தியமாகும் என்பதே அவர்களை ஷுமியாட்ஸ்கி ஆதரிக்கக் காரணம்.

* * *

1924-ம் வருஷம் ஜனவரி மாதம் ஒரு நாள் காலையில், தூங்கிக் கொண்டிருந்த என்னை டெலிபோன் மணி எழுப்பியது. என்ஸெலியிலிருந்த ரஷ்ய உதவி கான்ஸல் டெலிபோனில் பேசினார். உணர்ச்சியுடன், "வ்ளாடிமீர் இல்லிச் இறந்து விட்டார்" என்றார்.

"என்ன, லெனினா?"

"ஆம். லெனின்தான்."

பித்துப் பிடித்தவன் போல மேஜையில் உட்கார்ந்து விட் டேன். லெனினும் எங்களைப்போல் ஒரு மனிதர்தான் என்பதை நாங்கள் எல்லோரும் மறந்துபோயிருந்தோம். அவருக்கு உடல் நலமில்லை என்பது என்னவோ தெரியும். அவர் இறந்து

விடுவாரென யாரும் நினைக்கவில்லை. அவர் இல்லையென்றால் கட்சி என்னா ஆகும்? புரட்சி என்னா ஆகும்? நெஞ்சைப் பிளக்கும் இந்த பயங்கரச் செய்தி பாலைவனத்து அனல் காற்றுப் போல எங்கேச் சுழட்டியது. எதிலும் மனம் ஓட வில்லை. என்ன செய்வதென்று தெரியாமல், டெலிபோன் மூலம் டெஹ்ரானிலுள்ள தூதர் ஷூமியாட்ஸ்கியிடம் பேசி, மேல் உத்தரவு வேண்டும் என்று கேட்டேன்.

எனக்கு நிறைய வேலை இருந்தது. என் கீழுள்ளவர்களுக்கு எப்படி நடந்து கொள்ளவேண்டுமென உத்தரவிட வேண்டும்; மாஸ்கோவுக்குத் தந்திகள் அனுப்ப வேண்டும்; உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களைக் கூட்டி ஆலோசனை நடத்த வேண்டும்; என் எல்லையிலுள்ள ஸோவியத் பிரஜைகள் அனைவரையும் அழைத்து ஒரு கூட்டம் நடத்த வேண்டும்; பாரசீக அதிகாரிகளிடம் விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும்; செய்தியைக் கேட்டு என்னை வந்து பார்த்த நூற்றுக் கணக்கான பாரசீகப் பிரமுகர்களைச் சந்திக்க வேண்டும்; அவர்களும் நகரில் உள்ள ஸோவியத் பிரஜைகளும் கலந்துகொண்டு லெனினுக்கு மரியாதை செலுத்துவதற்கு சந்தர்ப்பமளிக்க வேண்டும்.

செய்தி கிடைத்த அன்றே, லெனினுக்கு மரியாதை செலுத்தும் வைபவம் ஒன்று எனது காரியாலயத்திலுள்ள பெரிய ஹாலில் நடந்தது. "உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்!", "உலக நாடுகளிலுள்ள நடுக்கப்பட்டோரே, ஏகாதிபத்தியத்தை ஒழிக்க ஒன்று படுங்கள்" என்று ரஷ்ய மொழியிலும் பாரசீக மொழியிலும் கூறும் சிவப்புச் சீலைகள் வழக்கம் போல ஹாலின் குறுக்கே கட்டப்பட்டிருந்தன. இந்த கோஷங்களுக்குக் கீழே ஒரு மேடை அமைத்திருந்தோம். அதில் ஏறி நின்று லெனின் மரணத்தைப்பற்றிய அதிகார பூர்வமான அறிக்கையைப் படித்துவிட்டு சில வார்த்தைகள் பேசினேன். பாரசீக சிவில் கவர்னரும் ராணுவ கவர்னரும், ஏராளமான

மெடல்கள் தரித்திருந்த ஒரு பாரசிகத் தளபதியும், உள்ளூர் மசூதிகளின் முல்லாக்களும், வர்த்தக சபைகளின் தலைவர்களும் மேடையோரம் கீழே நின்றுகொண்டிருந்தார்கள். எல்லோரும் துக்கச் சின்னங்கள் அணிந்திருந்தனர். இவர்களில் பலர் உண்மையாகவே வருத்தமுற்றிருக்கக் கூடும். ஏனெனில் ஆசியா முழுவதிலுமே லெனின் விடுதலை ஜோதியாக விளங்கத் தொடங்கியிருந்தார். பாக்கூ நகரிலுள்ள பாரசிக கான்ஸலான மொஹமெத் ஸயீத் பாரசிக வெளிநாட்டு இலாகாவின் சார்பில் மரியாதை செலுத்தினார். (இவரே பிறகு மாஸ்கோவில் பாரசிக தூதராகவும் பின்னர் பாரசிக பிரதம மந்திரியாகவும் இருந்தார். 1944-ல் ஸ்டாலினுடைய நிர்ப்பந்தத்தின்பேரில் இவர் பிரதம மந்திரி பதவியிலிருந்து நீக்கப்பட்டார்). கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது, மேலே மாட்டப்பட்டிருந்த கோஷங்களைப்பற்றி ஞாபகம் வந்தது. அந்த சந்தர்ப்பத்தில் அவை எவ்வளவு பொருத்தமற்றவை என்று நினைத்துப் பார்த்தேன். அத்துடன் இன்னொரு எண்ணமும் தோன்றிற்று. இவர்கள் எல்லோரும் லெனினுக்கு மரியாதை செய்கிறார்கள்; லெனின் போதித்துள்ள வேறு சில கோஷங்களைக் கேட்டால் இவர்கள் வெறுப்புத் தட்டிப் போகலாம். அதைவிட இது மேலல்லவா என நினைத்தேன்.

அன்றிரவு அலுத்துப்போய் நான் எனது வீட்டுக்குள் நுழைந்தேன். பல அறைகள் கொண்டது என் வாசஸ்தலம். அறைகள் எல்லாம் காலியாக இருந்தன. எனக்கோ யோசனையெல்லாம் லெனினைப் பற்றியே. எவ்வளவு பெரிய கீர்த்திமானாயிருந்தாலும் அவரது வாழ்க்கையும் என்றோ ஒரு நாள் முடிய வேண்டியதுதானே? தலைவர்கள் காலமாகலாம். மக்கள் வாழ்க்கைக்கு முடிவேது?

கண்ணெதிரே லெனினுடைய உருவப்படம் தொங்கிக் கொண்டிருந்தது. அதுவரை நான் அந்தப் படத்தைப் பார்த்ததேயில்லை போலத் தோன்றிற்று. உற்று நோக்கினேன். கண்ணில் நீர் மல்கியது.

இரவில் வெகுநேரம்வரை யாருமற்ற அந்த அறைகளில் மேலும் கீழும் நடந்துகொண்டேயிருந்தேன். நான் இளைஞனு யிருந்த போது ராணுவத்தில் என்னுடன் இருந்த போர்த் தோழர்கள் உயிரிழந்து பலரும் ஒன்ருகப் புதைக்கப்பட்டதைப் பார்த்திருக்கிறேன். சில மணி நேரத்திற்கு முன்புதான் ஜீவ னுடன் குதூகலமாய் வாழ்ந்தவர்கள் நொடிப் பொழுதில் மண்ணுக்கடியில் சென்று விடுவார்கள். இந்தப் பழைய சம்ப வங்கள் எனக்கு ஞாபகம் வந்தன.

இப்போது என்ன நேரும்? முன்பின் கண்டிராத மாபெரும் கடலில் பல கொந்தளிப்புகளைச் சமாளித்துக்கொண்டு செல்லவேண்டிய கப்பல் போன்ற எங்கள் தாய்நாட்டின் நிர்வா கத்தை யார் மேற்கொள்வார்கள்? கடலோ கொந்தளிக்கிறது. கப்பல் யந்திரங்களோ பழுதானவை. மாலுமிகளோ அனுபவ மற்றவர்கள். ஆனால் மாலுமிகளும் சரி கப்பல் எஞ்சினியர்க ளும் சரி துணிவு மிகுந்தவர்கள். ரஷ்யாவில் திறமைசாலிகள் இன்னும் சிலர் பாக்கியிருந்தனர். ட்ராட்ஸ்கி, டாம்ஸ்கி, பயாட காவ், ரைக்காவ், புகாரின், ராடக்—ஸ்டாலின் பெயர் எனக்குத் தோன்றவேயில்லை. அவரை யாருக்குமே தெரியாது. லெனின் காலமான அந்த 1924-ம் வருஷம், ஸ்டாலின் ரஷ்யாவுக்கெல்லாம் தலைவராவார் என்று தோன்றவே யில்லை. ஸினோவிவ், காமனேவ் இருவரும் லெனினுடைய வாரிசு தாங்கள்தான் என்று ட்ராட்ஸ்கிக்குப் போட்டியாக நிற்கக் கூடும்; ஆனால் என்னுடைய தலைமுறை ரஷ்யர்கள் ட்ராட்ஸ்கி யையே விரும்புவார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று நினைத்தேன்.

* * *

பாரசீகத்தில் எங்கள் வர்த்தகச் செல்வாக்கை வளர்ப்பதற் காகப் பல ஸோவியத்-பர்ஷிய கம்பெனிகளை ஷுமியாட்ஸ்கி ஸ்தாபித்து வந்தார். ஸோவியத் பிரமுகர்களும் பாரசீக வர்த்தகர்களும் சேர்ந்து நடத்திய இந்தக் கம்பெனிகளுக்கு நிதி

உதவுவதற்காக ஷூமியாட்ஸ்கியின் யோசனையின்பேரில் ஒரு ஸோவியத்-ஈரானியன் பாங்கி அமைக்கப்பட்டது. ஆர்க்கஸ் என்ற கம்யூனிஸ்ட் யூத இளைஞர் இந்த பாங்குக்கு நிர்வாகஸ்தராய் நியமிக்கப்பட்டார். நிதி விஷயத்தில் அபூர்வமான திறமை படைத்தவர் அவர். அரசாங்க உத்தியோகம் பார்த்த நாங்கள் அப்போதிருந்த கம்யூனிஸ்ட் கட்சி விதிப்படி மாதம் 250 ரூபிள்களுக்கு மேல் சம்பளம் பெறவில்லை. இந்தக் கம்பெனிகளில் டைரக்டராக இருந்த ஸோவியத் பிரமுகர்களுக்கோ அதன் பாரசீக டைரக்டர்களுக்கு சமமாய் வருமானம் கிடைத்தது. அதாவது, எங்களைப்போல இரண்டு மூன்று மடங்கு அதிகமான வரும்படி. கொண்டவர்களாய் இருந்தனர். ஸோவியத் டைரக்டர்களில் ஆர்க்கஸ் ஒருவரே கட்சிப் பிரமுகர்களுக்கு அனுமதிக்கப்பட்டதற்கு அதிகமாய்க் கிடைத்த பணத்தையெல்லாம் கட்சியின் நிதியில் சேர்த்து வந்தார். ஆர்க்கஸ் பிற்காலத்தில் மாஸ்கோவிலுள்ள ராஜாங்க பாங்கின் உப தலைவர் ஆனார். ஸினோவிவ் சதி விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஆர்க்கஸ் ஒருவர். ஆனால் அவர் ஒருபோதும் கோர்ட்டுக்கு நேரில் கொண்டு வரப்படவில்லை. தம் குற்றங்களை ஒப்புக்கொண்டுவிட்டதாய் அவரிடமிருந்து வாக்குமூலமும் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்படவில்லை. சதி விசாரணை என்ற பிரசார வித்தைக்கு உடந்தையாக இருக்க மறுத்து, அதன் உண்மைக் கொடூரத்தை அவர் வெளிப்படுத்தினார். நடக்காதிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் நடந்ததாய் சாட்சி சொல்ல அவர் மறுத்து விட்டார். அதன் பின் அவர் பெயர் வெளிவரவேயில்லை. அவர் ரகசியமாய் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கவேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

சிறிது காலத்திற்கெல்லாம் டெஹ்ரானில் உள்ள ரஷ்ய தூதர் காரியாலயத்தில் முதல் காரியதரிசி பதவி எனக்கு அளித்தார்கள். இந்த சமயம் பார்த்து என்னை மலேரியா நோய் பிடித்துக் கொண்டது. என்னை வாட்டி வதைத்து என்ஸெலியிலுள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறும்படி செய்

தது. டப்ரிஸ் நகரில் காவ்ஸல் ஜெனரலாக இருந்த . ஸ்லா வுட்ஸ்கி எனக்கு பதிலாக வந்துசேர்ந்தார். இவர் பிறகு ஜப் பானில் ரஷ்ய தூதரானார். மாஸ்கோ கீழ்த்திசை மொழிகள் கழகத்தில் என்னுடன் பாரசீக பாஷை படித்த இருவரில் இவர் ஒருவர். மற்றொருவரான பாஸ்ட்டுகாவ் பிற்காலத்தில் பாரசீகத்தில் ரஷ்ய தூதர் ஆனார். 1936-38-ல் நடந்த மாபெரும் ஆள் களையெடுப்பில் இருவரும் மறைந்து போனார்கள்.

* * *

1924-ம் வருஷ முடிவில் ஆஸ்பத்திரியிலிருந்து வெளி யேறியதும் நான் ஓய்வெடுத்துக்கொள்ள ஷுமியாட்ஸ்கி ரஜா கொடுத்தார். அச்சமயம் ரோம் நகரில் தூதராக இருந்த யூரனேவ் விடுமுறையைத் தம்முடன் கழிக்கும்படி என்னை அழைத்தார்.

என்னுடைய காரியாலய வேலைகளை லெவிட்ஸ்கி என்பவ ரிடம் ஒப்படைத்துவிட்டு ரஜாவில் சென்றேன். லெவிட்ஸ்கி கம்யூனிஸ்ட் கட்சியில் வெகு நாளாய் அங்கம் வகிப்பவர். 1909-ம் வருஷம் முதலே கட்சியில் இருந்த அவர், பிறகு எதிர்க்கட்சியில் சேர்ந்தார். 1938-ம் வருஷ ஆள் களையெடுப்பின் போது மறைந்து போனவர்களில் இவரும் ஒருவர்.

இத்தாலிக்குக் கிளம்புவதற்கு முன்னால் நான் டெஹ்ர ானுக்குப் போய் ஷுமியாட்ஸ்கியை சந்தித்தேன். அங்கே, அவருக்கு வர்த்தக உதவியாளரான மெயர்ஸ் அமெரிக்காவி லிருந்து தாய்நாடு திரும்பியிருந்த ரஷ்யர். அமெரிக்கக் கைத் தொழில் திறமையில் நன்முக ஊறிப் போனவர். வெட்டிப் பேச்சுக்குப் பதிலாக உடனுக்குடன் தீர்மானம் செய்து காரியங் களை நடத்திவைக்கும் பழக்கம் உள்ளவர். இவரும் டைபெட்ஸ் என்ற மற்றொருவரும் பிற்காலத்தில் ஸோவியத் மோட்டார் கைத்தொழில் நிர்வாகத்தின் டைரெக்டர்கள்

ஆனார்கள். இந்த இரண்டு பெரும்பட்ட ஆள் கவியெடுப்பில் போன இடம் தெரியாமல் மறைந்தார்கள். மெயர்வின் மனைவி மிக அழகானவள். இவள், பிற்காலத்தில் ஸோவியத் அரசாங்கத்தின் உதவி பிரதம மந்திரியாகவிருந்த வெலேரி மெஞ்லாவ்ஸ் என்பவரை மணந்து கொண்டாள். மெஞ்லாவ்ஸ் விசேஷ அலுவல்கள் பேரில் பன்முறை அமெரிக்கா சென்றிருக்கிறார். அங்கே அவரை நன்கு அறிவார்கள். ஆள் கவியெடுப்பிற்கு பலியான அறிஞர்களில் இவரும் ஒருவர்.

என் உடம்பு கிட்டத்தட்ட நன்றாகத் தேறிவிட்டதைப் பார்த்து ஷுமியாட்ஸ்கி நம்மையறியாமல் என் விடுமுறையையே பாழ் செய்துவிட இருந்தார். தமது ராணுவ அதிகாரியான ஜெனரல் பொப்ரிட்ஷேவுக்கு உதவியாளராக என்னை நியமிக்கலாமென்று சிபார்சு செய்தார் ஷுமியாட்ஸ்கி. பொப்ரிட்ஷேவோ உடனே தெற்குப் பாரசீகத்தில் மலைஜாதியினர் வசிக்கும் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்ய என்னை அழைத்தார். ஆனால் எனக்கு பிரயாணத்தை ஏற்க சக்தியில்லை என்று சொல்லிவிட்டு, இத்தாலிக்குக் கிளம்பிச் சென்றேன். காஸ்பியன் கடலை குறுக்கே தாண்டி, காகஸஸ் மலைப்பிரதேசம் வழியாகச் சென்று, பேட்டுன் துறைமுகத்தில் ஒரு இத்தாலியக் கப்பலில் ஏறினேன். அக்கப்பல் நேப்பிள்ஸ் நகருக்குச் சென்று கொண்டிருந்தது. அதில் உள்ள செளகர்யங்களும் நல்ல உணவும் சுத்தமான சூழ்நிலையும் சமீப காலத்தில் நான் அனுபவித்திருந்த வாழ்க்கைக்கு நேர் மாறாக இருந்தன.

இத்தாலியில் இருந்த ரஷ்ய தூதயாலயம் மிகச் சிறந்த முறையில் நடந்து வந்தது. மற்றவர்களெல்லோரும் கைவிட்டு விட்ட புரட்சி ஆர்வத்தை யூரனேவ் கைவிடவில்லை. புரட்சியின் ஆரம்ப காலத்தில் இருந்த லட்சிய வேகத்துடன் அவரது காரியாலயம் இயங்கியது. தூதர், அவரது குடும்பம், காரியாலய குமாஸ்தாக்கள், சேவகர்கள் எல்லோரும் சமமாய் ஒரே அறை

யில் உணவு அருந்தினார்கள். எல்லோருக்கும் ஒரே தரமான உணவு பரிமாறப்பட்டது. காரியாலய வேலை நேரம் போக மற்ற வேளைகளில் உத்தியோக ஏற்றத் தாழ்வுகளை யாரும் பொருட்படுத்தவில்லை. இதனால் காரியாலய ஊழியர்கள் பூரனேவிடம் தோழமையும் மிகுந்த மரியாதையும் காட்டினார்கள். அவரது உத்தியோக அந்தஸ்து அளிக்கக்கூடிய கௌரவத்தை விட இந்த அன்புப் பாசம் அவருக்குப் பன்மடங்கு மதிப் பளித்தது.

ஆனால், பாவம், சில மாதங்களில் பூரனேவின் உத்தியோகத்துக்கே திடீரென முடிவு ஏற்பட்டது. இத்தாலிய கம்யூனிஸ்ட் தலைவர் மாட்டியோட்டியை ரோம் நகரில் சில காலிகள் பட்டப்பகலில் எங்கோ தூக்கிப்போய் விட்டார்கள். இது நடந்ததற்கு முதல் தினந்தான் பூரனேவ் முஸ்ஸோ லீனியை ஒரு விருந்துக்கு அழைத்திருந்தார். முஸ்ஸோலீனி யும் அழைப்பை ஏற்றார். மாட்டியோட்டி சம்பவத்தின் பயனாக முஸ்ஸோலீனியின் பாஸிஸ ஆட்சியே அடியோடு நொருங்கி விழுந்துவிடுமென்று தோன்றிற்று. ஐரோப்பிய நாடுகளின் தொழிலாளர்களெல்லாம் மனம் கொதித்து மாட்டியோட்டி சம்பவத்தை வன்மையாய்க் கண்டித்தார்கள். முஸ்ஸோலீனியை ஆதரித்தவர்கள்கூட இந்த சம்பவத்துக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சிரமப்பட்டு மறுத்தார்கள். முஸ்ஸோ லீனியின் ஆட்சி ஆட்டம் கண்டுவிட்டதென்பதை இது காட்டிற்று.

ஒரு வார காலம் முஸ்ஸோலீனி ஆட்சியின் நிலைமை கவலைக்கிடமாயிருந்தது. மணிக்கு மணி நெருக்கடி அதிக ரித்தது. அவரது அரசாங்கம் பிழைக்காது என்று அந்நிய நாட்டு ராஜதந்திரிகள் நம்பினர். அரசியல் கொலை காரண மாய் பதவியை இழப்பாரானால், அவர் மறுபடி பதவிக்கு வருவது முடியாது என்பதை யாரும் அறிந்திருந்தார்கள். இப்படிப்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அவருக்கு

ரஷ்ய தூதர் விருந்தளிப்பதை இத்தாலிய கம்யூனிஸ்டுகளும் மிதவாதிகளும் விரும்பவில்லை. விருந்தை ரத்து செய்யும்படி பூரனேவை வற்புறுத்தினார்கள். பூரனேவின் காரியாலய ஊழியர்களும் இத்தாலிய கம்யூனிஸ்டுகள் சொல்வதையே ஆதரித்தனர். மாஸ்கோவிலிருந்து வந்த உத்தரவும் விருந்து அரு சிதம் என்றே கூறிற்று. முஸ்ஸோலீனியின் ஆட்சிக்கு முடிவு காலம் வந்து விட்டதென்றே மாஸ்கோ நினைத்தது.

ஆனால் மற்றவர்களைவிடத் தாமே நிலைமையை சரியாக உணர்ந்திருந்தார் என்று பூரனேவ் நிரூபித்தார். முஸ்ஸோலீனிக்கு இருந்த எதிர்ப்பை அவர் சரிவர மதிப்பிட்டார். அவரை எதிர்க்கும் கட்சிகளுக்கு மன உறுதி கிடையாது, தாங்கள் தீர்மானிப்பதை நிறைவேற்றி வைக்க அவர்களுக்கு வசதியும் இல்லை என்ற உண்மையை சரிவரப் புரிந்துகொண்டார். பாஸிஸ நிர்வாகத்துக்கோ பலம் வாய்ந்த அரசியல் ஸ்தாபனம் ஒன்றும், எந்த எதிர்ப்பையும் சமாளிக்கக்கூடிய அதிகார வர்க்கமும் ஆதரவாயிருந்தன என்பதை அறிந்திருந்தார். இந்த நிலையில் ரஷ்யா இத்தாலியுடன் தன் உறவை முறித்துக் கொண்டு பாஸிஸ நிர்வாகத்தை விரோதித்துக் கொள்ள அவர் இஷ்டப்படவில்லை. அக்காலத்தில் முஸ்ஸோலீனியின் இத்தாலி யும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும்தான் ரஷ்யாவுடன் சிநேகமாக இருந்தன. (வர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் அதிருப்தி அடைந்த நாடுகளின் தலைமையை ஏற்பதற்கு ஸோவியத் ரஷ்யா அவ்வப்போது முயற்சி செய்து வந்தது என்பது பொதுவாய்த் தெரிந்த விஷயமே).

ஆகையால் முஸ்ஸோலீனிக்கு அந்த ஆடம்பரமான விருந்து நடைபெற்றது. ஒரு சோஷலிஸ்ட் புரட்சி நிர்வாகத்தின் ராஜீயப் பிரதிநிதியான பூரனேவ், பாஸிஸ அரசாங்கத் தலைவர் பெனிடோ முஸ்ஸோலீனியை வரவேற்று விருந்து நடத்தினார்! இந்தச் சம்பவம் இத்தாலிய வட்டாரங்களில் பேச்சுக்கு இடமாயிற்று; இத்தாலிக்கு வெளியேயும் இதைப்பற்றிப்

பேச்சு இருந்தது. ஸோவியத் ராஜ தந்திரிகள் தேவை நேர்ந்தால் உலக சோஷலிஸ ஐக்கியத்துக்கு விரோதமாகவும் நடந்து கொள்வார்கள் என்பதை இந்த சம்பவம் தெளிவாய்க் காட்டியது.

இந்த சம்பவத்தின் பயனாக யூரனேவ் மாஸ்கோவுக்குத் திருப்பியழைக்கப்பட்டார். ஆனால், முஸ்ஸோலீனியின் பாஷிஸ நிர்வாகம் தனக்கு நேர்ந்த நெருக்கடிகளை சமாளித்து நின்றதிலிருந்து யூரனேவ் செய்தது ராஜ தந்திர முறைப்படி சரியென்று தெரிந்தது. இருந்தபோதிலும் யூரனேவுக்கு மாஸ்கோவில் மதிப்புக் குறைந்து விட்டது. லிட்வினாவின் சிநேகத்தினாலேயே அவர் பேராபத்திலிருந்து தப்பினார். உத்தியோக ரீதியில் அவருக்குள்ள முதன்மை போயிற்று. அதாவது முதல்தரமான தேசங்களில் தூதராக நியமிப்பதற்கு பதில் இரண்டாம் தரமான இடங்களுக்கு அவரை அனுப்பினார்கள். முதலில் வியன்னாவுக்கும், பிறகு டெஹ்ரானுக்கும் சென்றார் அவர். மாட்டியோட்டி சம்பவம் முற்றும் மறக்கப் பட்டபின் யூரனேவ் டோக்கியோவில் தூதராக நியமிக்கப்பட்டார். இதை உத்தியோக உயர்வு என்று கருத வேண்டும். ஸ்டாலினுடைய நேரடியான ஆமோதிப்பின்றி இது நடைபெற்றிராது. டோக்கியோவிலிருந்து யூரனேவ் 1937-ல் பெர்லினுக்கு தூதராய் நியமிக்கப்பட்டார். அப்போது ஹிட்லரிடம் தமது சன்னத்துகளை சமர்ப்பிப்பதற்காக அவர் பெர்க்டஸ்காடன் (ஹிட்லரின் மலை வாசஸ்தலம்) வருமாறு அழைக்கப்பட்டார். அங்கே ஹிட்லருடன் உணவு அருந்தும்படியும் அழைப்பு இருந்தது. இந்த அழைப்பு வந்த இரண்டொரு வார காலத்துக்கெல்லாம் உடனே மாஸ்கோவுக்குத் திரும்பும்படி யூரனேவுக்குக் கட்டளை வந்தது. அங்கே ஓரிரவு அவர் மறைந்து போனார்.

இத்தாலியிலிருந்து நான் தாயகம் திரும்பும்போது பெர்லினில் ரஷ்ய தூதர் காரியாலயத்தில் சிறிது காலம் தங்கியிருந்தேன். நவம்பர் புரட்சியின் கொண்டாட்டம் அப்போது

நடந்தது. கொண்டாட்டத்தில், பழங்கால போல்ஷவிக்கும் லெனின் காலத்தில் அவருக்குக் கீழ் கட்சிக் காரியதரிசியாக இருந்தவருமான க்ரெஸ்ட்டின்ஸ்கி சிந்தனையைக் கிளறும் ஓர் சொற்பொழிவாற்றினார். க்ரெஸ்ட்டின்ஸ்கி லெனினைப் போலவே உண்மையான புரட்சி லட்சியவாதி. அவருக்கு அதிகாரத்திலோ கௌரவத்திலோ ஆசை இல்லை. அவர் தமது கடைசிக்காலம்வரை முழு மனதுடன் கட்சிக்காகவும் புரட்சிக்காகவும் உழைத்தார். அவர் எப்படி மரணமடைந்தார் என்பதைப் பின்னால் சொல்கிறேன்.

நான் மாஸ்கோவை அடைந்தபோது, சைனுவில் ஒரு கான்ஸல் ஜெனரல் உத்தியோகம் ஏற்கும்படி கட்சியின் மத்தியக் கமிட்டி என்னை நியமித்தது. எனது உடல் நிலையை உத்தேசித்து அதை ஏற்பது கடினம் என்று தெரிவித்தேன். மீண்டும் செஞ்சேனைக்குத் திரும்பிப் படை நிர்வாக வேலையில் ஈடுபடுவது எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் கம்யூனிஸ்ட் அதிகாரி என்ற முறையில் என் இஷ்டப்படி வேலை தேடிக்கொள்ள எனக்கு உரிமை இருக்கவில்லை. கட்சியின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருடைய எதிர்காலமும் உத்தியோக வாழ்வும் கட்சியின் மத்தியக் கமிட்டியால் ரகசியமாய்த் தீர்மானிக்கப்பட்டன. கட்சியின் பெரிய கட்டடத்தில் ரகசியமாய்க் கூடும் அக்கமிட்டி ராணுவ அதிகாரிகளின் தலைவிதியைக் கூடத் தீர்மானித்தது. நியமனப் பகுதி என்ற ஒரு தனி கட்சிப் பிரிவு, சதுரங்கவிளையாட்டில் காய்களை நகர்த்துவதுபோல் கம்யூனிஸ்ட் அதிகாரிகளை இஷ்டப்படி மாற்றிக்கொண்டிருந்தது. உதாரணமாக, எனது நண்பன் ஒருவனுக்கு ஏற்பட்டதுபோல, மாஸ்கோவில் ராணுவத்தின் தளபதியாக இருக்கும் ஒருவரை திடீரென மத்திய ஆசியாவில் பருத்தியும் அபினும் சாகுபடி செய்யும்படி கட்சியின் மத்யக்கமிட்டி தீர்மானிக்கக்கூடும். இந்தத் தீர்மானம் அர்த்தமற்றது என அந்த நபர் ஆட்சேபித்தால் அல்லது புதுத் தொழிலில் தமக்கு அனுபவமே கிடையாது என்று சொன்னால் அவருக்கு ஓரே பதில்தான் கிடைக்கும் ; " ஒரு போல்ஷவிக்கி

றும் பிடிக்கமுடியாத கோட்டையே கிடையாது" என்பதே அந்த பதில்.

மற்றவர்களைவிட நான் அதிர்ஷ்டசாலி என்றே சொல்ல வேண்டும். சைனு போக விரும்பாத என்னை மாஸ்கோ விலேயே வைத்திருக்க மத்தியக்கமிட்டி தீர்மானித்தது. பல மொழிகளில் எனக்குள்ள பரிச்சயத்தினாலும் வெளி உலகத் தொடர்பு எனக்கிருந்ததாலும் வெளி விவகாரங்கள் சம்பந்தப் பட்ட ஒரு வேலையை எனக்கு அளித்தார்கள். என்னுடைய எதிர்கால உத்தியோகத்தைப் பற்றிப் பேசுவதற்காக மத்தியக் கமிட்டியின் காரியதரிசி மாலடாவை நான் சந்தித்தேன். ஒரு மணி நேரம் பேசினோம். பேச்சின்முடிவில், அடுத்த நான்கு வருஷகாலத்தில் என் வாழ்வை நிர்ணயிக்கும் ஒரு உத்தர வுடன் வெளியேறினேன். மாலடாவ் கையெழுத்திட்டிருந்த இந்த அச்சடித்த காகிதத்தில் என் பெயர், நான் சேர வேண்டிய ஸ்தாபனத்தின் பெயர், உத்தியோகத்தின் விவரம் இவைகளை மட்டுமே கையெழுத்தில் பூர்த்தி செய்திருந்தார்கள். "பாரசிகத்தில் கான்ஸல் ஜெனரலாக இருந்த தோழர் பார் மைன் வெளிநாட்டு வர்த்தக இலாகாவில் மெஸ்டுனு-ராட்னுயா-நீகா ஸ்தாபனத்தின் டைரக்டர்களில் ஒருவராக வேலை அளிக்கப் பட்டிருக்கிறார்" என்று அந்த உத்தரவு கூறியது. இந்த ஸ்தாபனம்தான், வெளிநாட்டு வர்த்தக இலாகா மேற்பார்வை யில் மாஸ்கோவில் நடந்துவந்த சர்வதேசப் புஸ்தகக் கம்பெனி.

* * *

மாஸ்கோவில் நான் வசித்துவந்த அடுத்த நான்கு ஆண்டு கள் என் வாழ்க்கை சரியான கம்யூனிஸ்ட் அதிகாரியின் வாழ்க் கையாக இருந்தது. பகல் முழுவதும் காரியாலய வேலையிலும், மாலை வேளைகளில் கட்சி வேலையிலும் ஈடுபட்டிருந்தேன்.

மெஸ்டுனு-ராட்னுயா-நீகாவின் வேலை வெளிநாடுகளிலிருந்து புத்தகங்களையும் கல்வி சாதனங்களையும் இறக்குமதி செய்வ தாகும். வெளிநாட்டு இறக்குமதி ஒரே நிதானமாய் இருந்தது.

ஆனால் உள்நாட்டில் ஸோவியத் பள்ளிக்கூடங்களும் கல்வி ஸ்தாபனங்களும் பெருகவே காகிதம், பேனா, பென்ஸில் போன்ற பொருள்களின் தேவை பிரமாதமாய் அதிகரித்தது. நான் பதவி ஏற்றபோது, வருஷத்துக்கு 60 லக்ஷம் ரூபிள் மதிப்புக்குப் பொருள்களை வாங்கினோம். இதில் 50 லட்சம் ரூபிள் வெளிநாடுகளில் பேனா பென்ஸில் முதலியவை வாங்குவதற்கு செலவாயிற்று. இந்தப் பண்டங்களில் சிலவற்றை ஸ்யானிலேயே உற்பத்தி செய்யும்படி வெளிநாட்டினர் சிலருக்கு சலுகை அளிக்கப்பட்டிருந்தது.. அவர்கள் எங்கள் கண்ணெதிரே பணக்காரர்கள் ஆவதைக் கண்டோம். இவ்வாறு சலுகை பெற்ற கம்பெனிகளில் மிகப் பெரியது டாக்டர் ஹாமர் என்ற அமெரிக்கர் நடத்திய கம்பெனியாகும். அந்நியர் லாபம் அடைவதைக் கண்டு, மாஸ்பாலிகிராப் என்ற அரசாங்க ஸ்தாபனம் பென்ஸில்களை மலிவாக உற்பத்தி செய்ய முன்வந்தது. ஆனால் அது தயாரித்த பென்ஸில்கள் மிகவும் மட்டாகமாய் இருந்தன. விலை அதிகமாயிருந்தாலும் டாக்டர் ஹாமரின் பென்ஸில்களையே யாரும் விரும்பினார்கள். எங்கள் திறமையின்மையைக் கண்டு அந்த அந்நியர்கள் நிச்சயம் பரிகசித்திருக்கக்கூடும்.

அந்நியருக்கிணையாய் நாங்கள் போட்டியிட்டதன் நோக்கம் எப்படியாவது இறக்குமதியைக் குறைப்பதுதான். இதற்கென்ன வழி என்று யோசித்ததில், மெஸ்டோரா-ராட்னாயா-நிகா ஸ்தாபனம் ஆபீஸ்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதில் முனைந்தது. அந்நியரது பொருள்களை இறக்குமதி செய்யச் செலவிடும் தொகையில் ஒரு சிறு பகுதியைக்கொண்டு யந்திரங்கள் தருவித்துவிடலாம்; அப்போது பணத்தை வெளிநாடுகளுக்கு அள்ளிக் கொடுக்கும் பிரச்னை இராது, அந்நியப் பொருள்களை நம்பி வாழ வேண்டியிராது; உள்நாட்டில் முக்கியமான பிரச்னையாயிருந்த வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சமாளித்துவிடலாம் என்ற யோசனையில் இக்காரியம் நடந்தது.

இந்த ஏற்பாட்டின்படி எங்கள் முதல் தொழிற்சாலை மாஸ்கோவில் அமைக்கப்பட்டது. அதில் டைப்ரைட்டர் ரிப்பன்களும் கார்பன் காகிதமும் தயாரித்தோம். புகழ்பெற்ற ரஸாயன நிபுணர் விளாடிமிர் இப்பாட்யேவ் எங்கள் திட்டம் வெற்றிபெற உதவி செய்தார். (இந்தப் பேரறிஞர் இப்போது, 1945-ல் அமெரிக்காவிலுள்ள நார்த்வெஸ்டர்ன் சர்வகலாசாலையில் புரொபஸராக இருக்கிறார். அமெரிக்காவிலிருந்து ரஷ்யாவுக்குத் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டார் இவர்).

மாஸ்கோ தொழிற்சாலைத் திட்டத்துக்கு வர்த்தக மந்திரி லியோனிட் க்ராஸின் பூரண ஆதரவளித்தார். திட்டத்தில் ஆர்வமுள்ள என்னை தொழிற்சாலை நிர்வாகியாக நியமித்ததோடு, சாதாரண பேனாக்கள் தயாரிக்கும் இன்னொரு ஸ்தாபனத்தை லெனின்கிராடில் கட்டும் பொறுப்பையும் அளித்தார்கள்.

லெனின்கிராடுக்கு நான் விஜயம் செய்தபோது அங்கே பழைய சாக்லேட் தொழிற்சாலை ஒன்று இருப்பதைக் கண்டேன். இத்தொழிற்சாலையை நகரசபை எடுத்துக் கொண்டிருந்தது. எலிகள் நிறைந்து ஈரம் தங்கிக் கிடந்தது தொழிற்சாலைக் கட்டடம். முன்பு தொழிற்சாலையின் சொந்தக்காரனாய் இருந்தவனையே தொழிற்சாலையைக் காபந்து செய்யும் அதிகாரியாக நியமித்திருந்தார்கள். அந்த ஆசாமி, அந்தக் கட்டடம் எக்காரியத்துக்கும் பயன்படாது, என் வேலைக்காக அதை மாற்றி அமைக்க மிகுந்த செலவாகும் என்று நான் நம்பும்படி செய்ய முயற்சித்தான். எதற்காக அப்படிச் சொன்னானோ தெரியாது. தனக்குச் சொந்தமாயிருந்த தொழிற்சாலையின் காலிக் கட்டடத்தையாவது தன்னிடமே வைத்திருக்கலாமென்று அவன் நினைத்திருக்கக்கூடும். அவனுடைய ஆட்சேபனைகளையெல்லாம் ஒதுக்கித்தள்ளி கட்டடத்தை மாற்றியமைத்து, பெர்லினிலும் ப்ராக் நகரிலும் வாங்கிய யந்திரங்களைக் கொண்டுவந்து சீக்கிரமே தொழிற்சாலையை ஆரம்பித்தோம். “க்ராஸின் தொழிற்சாலை” என்றழைக்கப்பட்ட

இந்த ஸ்தாபனம், ஜெர்மன் நிபுணர் ஒருவரது நிர்வாகத்தில் சீக்கிரமே நானூறு இளம் கம்யூனிஸ்ட்களுக்கு வேலை அளித்தது. ஜெர்மன் நிபுணர் எங்களுக்கு மிகுந்த சகாயமாய் இருந்தார். நவ நவமான அவரது யோசனைகளும் காரியத்தில் அவரது ஊக்கமும் எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே நாங்கள் வெற்றி அடையும்படி செய்தன. அடுத்த சில மாதங்களுக்குள்ளாகவே, டாக்டர் ஹாமரின் பேனாக்களுக்கு நிகரான பேனாக்களை எங்கள் தொழிற்சாலை தயாரித்தது. இன்னும் சிறிது காலத்தில் அந்நியப் பேனாக்களைவிட மேலானதான பேனாக்களும் தயாரித்தோம். எங்கள் பென்ஸில் தொழிற்சாலையில் தயாரான பென்ஸில்கள்மட்டும் டாக்டர் ஹாமரின் பென்ஸில்களுக்கு நிகராய் ஒரு நாளும் வரவில்லை.

அந்நிய முதலாளிகளுக்கும் எனக்கும் நடந்த போட்டியில் ஒரு புது அம்சத்தை இப்போது உணர்ந்தேன். எங்கள் பொருள்களைவிட டாக்டர் ஹாமர்போன்ற அந்நியர் தயாரிக்கும் பொருள்கள் கிராக்கியாக இருந்தபோதிலும் ரஷ்ய அரசாங்க ஸ்தாபனங்கள் அவைகளையே விரும்பின. எங்கள் பொருள்கள் உபயோகத்துக்கு லாயக்கானவை என்று அந்த ஸ்தாபனங்கள் நம்பும்படி செய்வதற்கு வெகு காலமாயிற்று. 1929-க்குள் கிராவின் தொழிற்சாலை அந்நியர் போட்டியை வெற்றிகரமாய் சமாளித்தது. மாஸ்கோ, லெனின்கிராடு இரண்டிடங்களிலும் இருந்த அந்தத் தொழிற்சாலை வருஷந்தோறும் 60 லட்சம் ரூபிள் மதிப்புக்குப் பேனாக்கள் உற்பத்தி செய்தது; ஆயிரம் தொழிலாளர்கள் அங்கே உழைத்தனர்.

கிராவின் தொழிற்சாலை வெற்றி எங்கள் சொந்த வெற்றி; 'புதுப் புதுத் திட்டங்களில் பணத்தைப் போடுவது அபாயம்; வெளிநாடுகளிலிருந்து ஆபீஸ் தேவைகளை இறக்குமதி செய்து உள்நாட்டில் விநியோகிப்பதோடு திருப்தியடைவதே மேல்' என்று ஓயாமல் புத்திமதி சொல்லிவந்த வெளிநாட்டு வர்த்தக இலாகாவின் கையை நாடாமலே வெற்றி அடைந்துவிட்டோம். புதிய கைத்தொழில் ஒன்றை உண்டாக்கியதுமன்றி, ஸோவியத்

அரசாங்கத்துக்கு வெளிநாட்டுச் செலாவணியில் வருஷா வருஷம் 50 லக்ஷம் ரூபிள் பணம் மிச்சம் பிடித்துக் கொடுத்தோம்.

என்னைப் பொறுத்தமட்டில், எங்கோ மத்தியக் கிழக்கில் ராஜதந்திரப் பேச்சுகள் நடத்துவதைவிட இந்த தொழிற்சாலை வேலை பிடித்திருந்தது. இது நாட்டுக்கு நேரடியான சேவை என்று தோன்றியது. கிழக்கத்திய நாடுகளில் வேலை பார்க்க வேண்டுமென்ற ஆசையையும் மறக்கலானேன்.

கொஞ்ச காலத்தில் "ட்ராட்ஸ்கியம்" என்ற பிரச்னை மாஸ்கோவிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் கவனத்தைக் கவர்ந்தது. எங்கும் இதைப்பற்றியே பேச்சு. எங்கோ பாரசிகத்தில் இருந்தபோதுகூட நான் இந்த சச்சரவின் எதிரொலியைக் கேட்டிருந்தேன். இளைஞர்களான நாங்கள் முதலில் பிரச்னை மிக சுலபமானதென நினைத்தோம். 'லெனினுக்கு வாரிசு யார் என்பதே கேள்வி; ட்ராட்ஸ்கி ஒருவரே அதற்குத் தகுதியானவர்' என்று எங்களில் பெரும்பான்மையோர் நம்பினோம். தமக்குப் போட்டியாய்த் தோன்றிய மற்றெல்லோரையும்விட ட்ராட்ஸ்கி பன்மடங்கு மேலானவர். அவர் ஒருவருக்கே பாமர மக்களின் ஆதரவு முழுமனதுடன் கிடைக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். ரஷ்யப் புரட்சி வியர்த்தமாகிவிடாமல் செய்து ஸோவியத் அரசாங்கத்தைக் காத்ததில் லெனினுடன் சரிநிகர் சமானமாய் உழைத்தவர் அவரே என்பதும் எங்களுக்குத் தெரியும். பல வருஷங்களாய், ட்ராட்ஸ்கியின் பெயரைச் சேர்க்காமல் லெனின் பெயரைச் சொல்வதில்லை. "லெனினும் ட்ராட்ஸ்கியும் வாழ்க!" என்பதே வழக்கமான கோஷமாகவிருந்தது.

ஆனால் இப்போதோ, ட்ராட்ஸ்கி கம்யூனிஸ்ட் கொள்கைக்கு விரோதமாய் நடக்கிறார் என்று கட்சியின் இதர தலைவர்கள் குற்றம் சாட்டினார்கள்! இளைஞர்களான எங்களுக்கு இதைப் பற்றித் தீர்ப்புக்கூற அனுபவமும் இல்லை, விஷயஞானமும் இல்லை.

கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினர்களிடையே மார்க்ஸீயம் போலவே தோன்றும் போலி வாதங்கள் பிரமாதமாயிருந்தன. ட்ராட்ஸ்கியின் செல்வாக்கைக் குலைக்க நடந்த சதிகளில் இதுவும் ஒன்று. இதைக்கண்டு நாங்கள் மனம் நொந்துபோனோம். கொள்கைப் பிசகுகள் எப்படியிருந்தாலும், ட்ராட்ஸ்கிக்கு இருந்த புகழும் செல்வாக்கும் கட்சிக்கும் நாட்டுக்கும் பயன் படுமே. குணத்திலும் திறமையிலும் அவரே தலைவ ராயிருக்கத் தகுந்தவரெனத் தெரிந்துவிட்டதே! இன்னும் சந்தேகமென்ன?—என்று நினைத்தோம். தலைவர்களிடையே தனி நபர் போட்டி இருந்ததைக் கண்டு நான் மிக்க ஏமாற்ற மும் கலக்கமும் அடைந்தேன். இந்தப் போட்டிப் பூசல்கள் எதில் முடியுமென்று 1925-ம் வருஷம் எங்களில் யாருமே எதிர்பார்க்கவில்லை.

அப்போது நடந்த போராட்டத்தை ஸ்டாலினுக்கும் ட்ராட்ஸ் கிக்குமிடையே அபிப்பிராயபேதம் என்று எவரும் கூறவில்லை. கட்சியில் தமக்கிருந்த மெஜாரிட்டி ஆதரவு என்ற திரையின் மறைவில் ஸ்டாலின் வெகு சாமர்த்தியமாய்த் தமது சொந்த குறிக்கோளை நிறைவேற்றி வந்தார். மற்ற தலைவர்களெல் லாம் தங்களுக்குத் தோன்றிய விஷயங்களைப்பற்றி இருபது வருஷ காலமாய்ப் பல நூல்கள் எழுதியிருக்க, ஸ்டாலின் ஒரே ஒரு உபயோகமற்ற புஸ்தகம்தான் எழுதியிருந்தார். இதை அவர் தமக்கு சாதகமாய்ப் பயன்படுத்தியதுதான் அவ ரது சூழ்ச்சித் திறமையைக் காட்டுகிறது. மற்ற தலைவர்கள் தங்கள் புஸ்தகங்களில் புரட்சிக்கு முன்னால் கூறியுள்ள சமா சாரங்களை எடுத்து வைத்துக்கொண்டு கட்சிக் கொள்கைக்கு விரோதமாய் எழுதியிருக்கிறார்கள் என்று நம்பும்படி செய் வதுதான் ஸ்டாலினுடைய முக்கிய ஆயுதம். ஒரு பாரா, ஒரு வரி அல்லது ஒரு வார்த்தையை எடுத்துக்கொண்டு, “இன்னும் தம் தவறை உணராத தோழர்” என்று அங்க லாய்த்துக்கொண்டே எந்த பிரசித்திபெற்ற போல்ஷவிக் தலைவர் மீதும் குற்றம் சாட்டுவது அவருக்கு சகஜமாயிருந்தது. அவர்

கள் பதிலுக்கு ஸ்டாலின்மீது குற்றம் சாட்ட அவர்தான் எவ்வித நூலும் எழுதிவிடவில்லையே !

இந்த சச்சரவின் ஆரம்ப காலத்தில் நாங்கள் ஸ்டாலினுடைய சொல்லிலும் எழுத்திலும் ஏமாந்துபோனோம். மற்ற தலைவர்கள் பேச்சிலும் எழுத்திலும் தனிப்பட்டவர்களைத் தாக்குவது சாதாரணமாயிருக்க, ஸ்டாலின் மட்டும் லெனினுடைய அத்தியந்த பக்தன் போலவும், தமது தோழர்களின் போக்கில் உள்ள பிழைகளை நிர்ப்பட்சபாதமாய் சுட்டிக்காட்டி லட்சியத்துக்காகவே உழைப்பவர்போலவும் தோன்றினார். பிற தலைவர்களுக்குள்ள புத்திகூர்மையோ தீட்சணிய ஜ்வலிப்போ அவரிடம் இருக்கவில்லை. வெளியே இவ்வளவு தூரம் சாதுபோல நடித்த அவர், உள்ளூர தனி நபர் போட்டிப் பொறாமைகளைத் தூண்டிவிட்டுக்கொண்டேயிருந்தார் என்பது எங்களுக்குத் தெரியாது. அவர் கிளப்பிய கொள்கை வாதங்களுக்கும் அப்போதிருந்த கட்சி நிலைமைக்கும் கொஞ்சம்கூட சம்பந்தமில்லை என்பதையும் நாங்கள் அறியவில்லை.

இந்த சச்சரவுகளின் ஆரம்ப காலத்தில் ட்ராட்ஸ்கி வாயைத் திறக்கவேயில்லை. மௌனமாய்த் தனித்து நின்றார். பதவிக்காகப் போட்டியிடுவது தமக்கு கௌரவக் குறைவு என்று நினைத்தார். பல வருஷங்களாய் தாம் சாதித்துள்ள விஷயங்களிலிருந்து யாரும் தம் கொள்கைகளைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளலாமே; தமது கொள்கை சரி என்று ஸ்தாபிப்பதற்காகப் பத்திரிகைகளிலும் கட்சிக்கூட்டங்களிலும் வாதித்துக் கால விரயம் செய்வது தேவையில்லை என்று அவர் கருதினார். மக்களிடையே தம் செல்வாக்கு எப்படியிருந்தாலும் அரசியல் ஸ்தாபனத்தைத் தம் கைக்குள் வைத்திருக்க வேண்டியதும் அவசியமென அவர் கருதவில்லை.

தம் கொள்கையை ஸ்தாபிக்க எந்த எதிர்ப்பையும் சமாளிக்கத் தயாரென்று ட்ராட்ஸ்கி மட்டும் ஒரு வார்த்தை சொல்லியிருப்பாரானால், கட்சியில் பெரும்பாலோர் அவரையே பின்

பற்றியிருப்பார்கள். அவர் அவ்வாறு செய்யவில்லை. அதற்கு மாறாக, கட்சித் தலைவர்களாகக் கடும் போட்டி நடந்துகொண்டிருந்த சமயத்தில், வைத்திய சிகிச்சைக்கென்று தலை நகரிலிருந்து தொலை தூரத்திலுள்ள காகஸஸ் பிரதேசத்துக்குப் போய்விட்டார். இதுதான் சமயமென்று, ஸ்டாலின், தனக்கு எதிராயிருந்த மற்றவர்களையும் ஒருவர் பின் ஒருவராய் கண்காணா இடங்களுக்கு "கட்சி வேலையின் பேரில்" அனுப்பி, கட்சி ஸ்தாபனம் முழுவதையும் தம் கைக்குள் போட்டுக்கொண்டார். சண்டை போட்டுத்தான் தீரவேண்டும் என்று ட்ராட்ஸ்கி தீர்மானித்தபோது, எல்லாம் முடிந்துவிட்டது. இதே தீர்மானத்தை சிறிது காலத்துக்கு முன்னால் செய்து, கட்சி மகா நாட்டில் ஒரு பிரசங்கம் செய்திருந்தால் போதும், அவருக்கு வெற்றி கிடைத்திருக்கும். ஆனால், இப்போது, கட்சி முழுவதும் ஸ்டாலின் பிடிக்குள் போய்விட்டது..

"நிரந்தரமான புரட்சியும் தோழர் ட்ராட்ஸ்கியும்" என்ற தலைப்பில் ஸ்டாலின் அக்காலத்தில் எழுதிய கட்டுரைகளைப் படித்தபோது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி நன்றாய் நினைவிருக்கிறது. புரட்சி நின்றுவிடாமல் சர்வதேச முறையில் பல நாடுகளில் நடக்கவேண்டும்; ஒரு நாட்டின் எல்லைக்குள் அல்லது ஒரு குறிப்பிட்ட நிலையில் புரட்சி நின்றுவிட்டால் அது நிச்சயம் வியர்த்தமாகிவிடும் என்பது ட்ராட்ஸ்கியின் வாதம். இதை மிகவும் மரியாதையான முறையில் மறுதலித்தார் ஸ்டாலின். லெனின் எழுத்துக்களிலிருந்து பல மேற்கோள்கள் காட்டி, புரட்சியில் குடியானவர்களுக்குள்ள பங்கை ட்ராட்ஸ்கி மறந்தே போய்விட்டார் என்று வருத்தம் தெரிவித்தார். வெளி தேசங்களில் தொழிலாளர் புரட்சிகளுக்காகக் காத்திராமல், ருஷ்யாவில் குடியானவர்களது ஆதரவைப் பெற்றால் போதும், ஸோஷலிஸ லட்சியம் கைகூடிவிடும் என்றார் அவர்.

...அவருடைய வாதங்கள் தர்க்கரீதியானவை அல்ல, அவருடைய பகட்டான வாக்குறுதிகளில் ஒன்றுகூட நிறைவேற வில்லை என்பது இருபது வருஷங்களுக்குப்பின் இப்போது

தெளிவாய்த் தெரிகிறது. ட்ராட்ஸ்கிமீது அவர் சுமத்திய அபாண்டங்கள் எவ்வளவு மோசமானவை என்பதும் இப்போது தெளிவாகிவிட்டது. ட்ராட்ஸ்கி குடியானவர்களை மறந்தார் என்பது பொய். குடியானவர்கள் மீது ஸ்டாலின் சுமத்தியுள்ள கஷ்ட நஷ்டங்களுக்கு நிகரான கஷ்டங்களை வேறெவரும் சுமத்தியிருக்க முடியாது. கம்யூனிஸ்ட் கட்சி குடியானவர்களிடம் கடைபிடிக்கவேண்டிய கொள்கைகளென லெனின் வகுத்துள்ள விதிகளை சகல அம்சங்களிலும் ஸ்டாலின் புறக்கணித்திருக்கிறார். வளம் மிக்க ஸோஷலிஸ சமுதாயம் அமைப்பதற்கு பதிலாக ஒரு யதேச்சாதிகாரக் கொடுங்கோன்மையையே ஸோவியத் யூனியன் நிர்மாணித்திருக்கிறது. நாகரிகம் வளராத ஆதிகாலத்தில் இருந்ததைவிட அதிகமான அளவில் இன்று ரஷ்யாவில் மனிதனுக்கு மனிதன் வித்தியாசங்கள் இருக்கின்றன. மனித உயிரைத் துச்சமாக மதிக்கும் கொடுங்கோன்மையும் இன்றைய ரஷ்யாவில் உள்ளது போல அவ்வளவு மோசமாய் புராதன காலத்தில் இருக்கவில்லை.

இவை இப்போது ஐயமின்றித் தெரிந்தபோதிலும், 1925-ல் கொள்கை வாக்குவாதச் சுழல்களில் அகப்பட்டுக்கொண்ட எங்களுக்கு ஸ்டாலின் கூறுவதே சரியென்றும், கட்சியை முன்விட்டு எங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை மறந்துவிடவேண்டும் என்றும்தான் தோன்றின. ட்ராட்ஸ்கியின் "நீடித்த புரட்சி"க் கொள்கை அபாயமான தத்துவம் என்று நாங்கள் நினைத்தோம். காமனேவ், ஸினோவிவ், ஸ்டாலின் ஆகியோர் தலைமையிலிருந்த மத்தியக் கமிட்டியை ஆதரித்து வாக்களிப்பதே சரியென்று தீர்மானித்திருந்தோம். ட்ராட்ஸ்கிக்கு விரோதமாய் வாக்களிக்க நாங்கள் விரும்பவில்லைதான். ஆனால் அவர் வாயைத் திறவாமல், தமது "தவறான வழி"யிலேயே சென்று கொண்டிருந்ததால் அவருக்கெதிராக வாக்களிப்பது எங்கள் கடமையென்று கருதினோம்.

கட்சித் தீர்ப்பைக்கண்டு ட்ராட்ஸ்கி யுத்தசபைத் தலைவர் பதவியை ராஜீநாமா செய்தார். சலுகைகள் கமிட்டித் தலைவர்

என்ற இரண்டாந்தரப் பதவி அவருக்கு அளிக்கப்பட்டது. தந்திரசாலியான ஸ்டாலின் இதற்குள் ட்ராட்ஸ்கியை பகிரங்கமாய்ப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. பாமர மக்களிடையே ட்ராட்ஸ்கிக்கு இருந்த செல்வாக்கு பிரமாதமாயிருந்தது. தாம் பதவிக்கு வருவதற்காகவே ஸ்டாலின் ட்ராட்ஸ்கியைத் தாக்குகிறார் என்று கட்சி துளி சந்தேகித்திருந்தால் போதும்; அப்படியே அவரைக் கைகழுவியிருக்கும். ஆனால் கெட்டிக்காரரான ஸ்டாலின், தான் திரை மறைவில் இருந்துகொண்டு ஸினோவிவையும் காமனேவையும் முன்னே தள்ளினார். பாவம், அவர்கள் உற்சாகத்துடன் ட்ராட்ஸ்கியத்தை எதிர்த்தார்கள். ஸினோவிவ், லெனினுக்கு அடுத்த வாரிசு தாம்தானென்று நினைக்கும்படி செய்தார் ஸ்டாலின். ஸ்டாலினுக்குத் தக்க கையாட்களாகிவிட்ட இவர்கள், அதே சமயத்தில் தங்கள் செல்வாக்குக்கும் பங்கம் விளைவித்துக் கொண்டார்கள். பல வருஷங்களுக்குப் பின் இவர்களையே வெளியேற்ற ஸ்டாலின் தீர்மானித்தபோது, கட்சியில் இவர்களுக்கு இருந்த ஆதரவு வெகு சொற்பமே!

அடுத்த ஒன்றரை வருஷம் கட்சியில் உள்விவகாரச் சண்டைகள் அடங்கியிருந்தன. 1926-ல் மறுபடி திடீரென கட்சிப் பிளவு ஏற்பட்டது.

கட்சியின் 15-வது மகாநாட்டில் நிலைமை நம்பமுடியாதபடி மாறிற்று. மாஸ்கோ ஸோவியத்தின் அக்கிராசனரும் உதவி பிரதம மந்திரியுமான காமனேவ் உட்பட ஸினோவிவ் கோஷ்டியினர் கட்சியில் சிறுபான்மையினர் ஆகிவிட்டார்கள்.

வழக்கம்போல கொள்கை, நடைமுறை முதலிய பிரச்னைகளைப்பற்றி மகாநாட்டில் விவாதம் நடந்தது. ஒரே ஒரு தேசத்தில் மட்டும் ஸோஷலிஸம் கைகூடுமா என்பது முதல் பிரச்னை. ட்ராட்ஸ்கியின் "உலகப் புரட்சி" தத்துவத்தில் நம்பிக்கை கொள்ளத் தொடங்கியிருந்த ஸினோவிவும் காமனேவும் இது நடக்காத காரியம் என்றனர். ஸோஷலிஸம்

சர்வதேசியமானது; அதற்கு தேச எல்லைகள் கிடையாதென்று அவர்கள் வாதித்தனர். ஸ்டாலினே, தன் எல்லையில் ஸோஷலிஸம் ஸ்தாபித்து நிலையாக நீடித்திருக்கும்படி செய்வதற்குத் தேவையான எல்லா வசதிகளும் ரஷ்யாவுக்கு இருக்கிறது என்றார். கட்சித் தீர்மானத்தின் வாசகம் இரு தரப்பினரையும் திருப்தி செய்வதாக இருந்தது. தனி ஒரு நாட்டில் ஸோஷலிஸத்தை ஸ்தாபிக்க முடியும், ஆனால் உலக முழுவதும் புரட்சி பரவும்வரை ஸோஷலிஸம் பரிபூரணமாகாது என்றது தீர்மானம். உலகம் நெடுகப் புரட்சி நடக்க உதவுவதை ஆதரிப்பவர்களும் சரி, உலகம் எப்படிப் போனாலும் ரஷ்யாவை பலப்படுத்துவோம் என்று வற்புறுத்தியவர்களும் சரி தீர்மானத்தின் சாமர்த்தியமான வாசகத்தில் மயங்கிப் போனார்கள். இதே சாமர்த்தியப் பேச்சைத்தான் ஸ்டாலின் இன்றும் கையாளுகிறார். ஸ்டாலின் ஜனநாயகங்களுடன் ஒத்துழைக்கப் போகிறாரா அல்லது ஐரோப்பா முழுவதிலும் ஸோவியத் திட்டத்தைப் பரப்பப் போகிறாரா என்று புரிந்து கொள்ள முடியாதபடி இருக்கின்றன ஸ்டாலினுடைய பேச்சுகள்.

கட்சி மகாநாட்டில், இரண்டாவதாக ஸோவியத் கைத்தொழில்கள் எப்படியிருக்க வேண்டும் என்ற பிரச்னை விவாதத்துக்கு வந்தது. அவை அசல் ஸோஷலிஸ முறையில் நடப்பதாக ஸ்டாலின் கூறினார். காமனேவ் இதை மறுத்து, "அரசாங்க முதலாளித்துவ" முறையிலேயே அவை நடப்பதாய் வாதித்தார். கைத்தொழில்களில் வரும் லாபத்தில் ஒரு பாகத்தைத் தொழிலாளிகளுக்குத் தந்துவிடவேண்டும் என்பது அவர் வாதம்.

மகாநாட்டை முன்னிட்டு ஸ்டாலின் முன்னதாகவே தகுந்த ஏற்பாடுகள் செய்திருந்தார். லெனின்கிராடு தவிர மற்றெல்லா நகரங்களின் பிரதிநிதிகளும் ஸ்டாலினுக்குக் கட்டுப்பட்டவர்கள். கட்சியின் பொதுக் காரியதரிசி ஸ்டாலினால் நியமிக்கப்பட்ட உள்ளூர்க் கட்சிக் காரியதரிசிகளே மகாநாட்டுப் பிரதிநிதிகளைப் பொறுக்கியவர்கள். அவர்கள் ஸ்டாலினிக்கு

ஆதரவாக இருந்ததில் ஆச்சரியமில்லை. மேலும், ட்ராட்ஸ்கியைத் தாக்குவதில் ஸினோவீவ் காட்டிய ஆக்ரோஷமும் உபயோகித்த வசைமொழிகளும் கட்சி அங்கத்தினர்கள் பலர் அவரை வெறுக்கும்படி செய்திருந்தன. அவரது தலைமைப் பதவிக்காலத்தில் சர்வதேச கம்யூனிஸ்ட் ஸ்தாபனம் பல தோல்விகளை அடைந்திருந்ததும் அவரது செல்வாக்கை பாதித்தது. ஸினோவீவ் வீழ்ச்சியுற்றால் பாதகமில்லை என்று நினைத்தவர்களில் நானும் ஒருவன். கட்சியில் பெரும்பாலோர் என்னைப்போலவே நினைத்தார்களென்று தோன்றிற்று. ஸ்டாலின் இந்த உணர்ச்சி வேகத்தைப் பயன்படுத்திக்கொண்டு, தமது அந்தரங்க நோக்கத்தைச் சாதித்து முடித்தார். ஸினோவீவ் கோஷ்டி தோற்று வெளியேறிற்று.

இந்தக் குழப்பத்தின் நடுவே தெளிவான சிந்தனையோடு பிரச்னைகளை சீர்தூக்கி முடிவு செய்வது எப்படி? எங்களைவிட விஷயம் தெரிந்தவர்களான வயது வந்த தலைவர்களையே இளைஞர்களான நாங்கள் பின்பற்றினோம். என்ன சந்தேகமிருந்தாலும் சரி, கட்சிக்குள் ஒற்றுமை முக்கியம் என்று நினைத்தோம். எப்போதும் கட்சியின் மத்தியக் கமிட்டித் தீர்ப்புகளை ஆதரித்தவர்களில் நான் ஒருவன். அந்தக் கமிட்டியில் என்னென்ன சூழ்ச்சிகள் நடந்தனவோ நாங்கள் அறியோம். அறிந்திருந்தாலும், கட்சி ஒற்றுமையைக் குலைத்து விடப்போகிறோமே என்ற பயத்தில் மத்தியக் கமிட்டியையே ஆதரித்திருப்போம். கட்சியில் பிளவு ஏற்பட்டுவிட்டால் புரட்சியின் விரோதிகள் ஒன்று கூடி அதைப் பயன்படுத்திக்கொண்டு விடுவார்கள் என்று கட்சித் தலைவர்கள் வற்புறுத்தினார்கள். இந்த பயமுறுத்தல் லெனினுடைய உண்மையான தோழர்களை வீழ்த்த ஸ்டாலினுக்குப் பேருதவியாயிருந்தது.

கட்சியில் ஒரு தீவிரப் பகுதி ஸினோவீவ் கோஷ்டியுடன் சேர்ந்தது. இவர்கள், தொழிலாளரின் சங்கடங்களுக்காக வாதித்தார்கள். தொழிலாளர்களுடைய சம்பளங்கள் குறைவாகவே இருந்தன. ஆனால் புதிய பொருளாதாரக் கொள்

கைப்படி. ஈடுபவர்களும் " அனுமதிக்கப்பட்ட முதலாளி "களும் நிறைய சம்பாதித்தார்கள். இதைக்கண்டு தொழிலாளர் குமுறினார்கள். தொழிலாளர்களுக்குள்ளேயும் சம்பள வித்தியாசம் நிறைய இருந்தது. மொத்தத்தில் மாஸ்கோ தொழிலாளிக்கும் முதல் மகா யுத்தத்தில் தோற்ற ஜெர்மனியின் தொழிலாளிக்கும் அதிக வித்தியாசம் இருக்கவில்லை. மாஸ்கோ தொழிலாளியின் நிலைமை சில அம்சங்களில் மோசமாயிருந்தது என்றுகூட சொல்லலாம்.

புரட்சி முடிந்ததும், தொழிலாளர்கள் வசிப்பதற்கெனப் பல அழகான கட்டடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இவைகளில் வசித்து வந்த தொழிலாளர்களிடம் திடீரென வாடகை கேட்கத் தொடங்கவே · தொழிலாளர்கள் வாடகை கட்ட முடியாமல் தவித்தனர். அவர்கள் ஒவ்வொருவராகத் தங்கள் பழைய வாசஸ்தலங்களுக்கே திரும்பினார்கள்.

தொழிலாளர் நலனில் அக்கரை கொண்ட பல தீவிர வாதிகள் கட்சி ஒற்றுமையைவிட தொழிலாளர் நலன் முக்கியம் என்று கருதி, எதிர்ப்பு கோஷ்டியில் சேர்ந்தனர். என்ன சேர்ந்து என்ன பயன்? பிளவு கூடாது என்ற பயம் ஒரு புறம், ஸ்டாலின் தயவால் புதிதாய்க் கட்சியில் சேர்ந்திருந்த ஏராளமான இளைஞர்கள் அவரை ஆதரித்தது ஒரு புறம்—பத்து லக்ஷம் பேரில் பத்துப் பதினையாயிரத்துக்குமேல் எதிர்ப்பு கோஷ்டிகளை ஆதரிக்கவில்லை.

எதிர்ப்புத் தலைவர்கள் மகாநாட்டுப் பிரதிநிதிகளின் தீர்ப்பைப்பற்றிக் கவலைப்படாமல், கட்சியின் சாதாரண அங்கத்தினர்களது ஆதரவைப் பெறுவதில் முனைந்தார்கள். சாதாரண அங்கத்தினர்களில் பெரும்பாலோர் ட்ராட்ஸ்கியையும் எதிர்ப்பு கோஷ்டிகளையுமே ஆதரித்தனர்.

1927-ம் வருஷம் அக்டோபர் மாதம் ரஷ்யப் புரட்சியின் பத்தாவது ஆண்டு விழாவை முன்னிட்டு லெனின்கிராடு நகரில் ஒரு வைபவத்துக்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

மக்களின் ஆர்வத்தை மதிப்பிட விரும்பிய ட்ராட்ஸ்கியும் மற்ற எதிர்ப்புத் தலைவர்களும் ஒரு மோட்டார் காரில் நகரைச் சுற்றிப்பார்த்து வந்தனர். போக்குவரத்து நெருக்கடியினால், டாரிடே அரண்மனைக்கெதிரில் மோட்டார் நின்றுவிட்டது. மோட்டார் நின்ற இடத்துக்கு சமீபத்தில்தான், மத்தியக்கமிட்டி அங்கத்தினர்களுக்கென விசேஷ மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. மோட்டாரில் சில பிரசித்தமான தலைவர்களைக் கண்ட ஒரு அப்பாவி போலீஸ்காரன் மேடையில் காலியாயிருந்த இடத்துக்கு அவர்களை அழைத்துச் சென்றான்.

மேடையின் கடைசிக் கோடியில் ட்ராட்ஸ்கி உட்கார்ந்திருக்கிறார் என்று உடனே வார்த்தை பரவியது. ஜனங்கள் ஆயிரக் கணக்கில் அவரைச் சூழ்ந்துகொண்டு சந்தோஷ ஆரவாரம் செய்தனர். காலினின் உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் உட்கார்ந்திருந்த மேடைகள் கவனிப்பாரற்றுப்போயின. போலீஸார்கூட, கூட்டத்தை சமாளிக்க முடியாமல், தாங்களும் உணர்ச்சி வயப்பட்டு ஆரவாரத்தில் கலந்து கொண்டார்கள். இதைக்கண்ட ஸ்டாலின் சிஷ்யர்கள் சிலர் கூட்டத்தின் நடுவே சென்று, கூட்டத்தின் ஆர்வத்தைக் குறைக்கும் முறையில் சீட்டியடித்து கோஷமிட்டனர். ஜன சமுத்திரத்தில் அவர்கள் முயற்சி பாழாயிற்று. வேறு வழியின்றி, காலினின் முதலியவர்கள் தங்கள் மேடைகளிலிருந்து இறங்கிவந்து ட்ராட்ஸ்கி முதலியோர் இருந்த மேடையில் அமர்ந்தனர்! தங்களை நாடி ஆரவாரம் வராவிட்டால், ஆரவாரத்தை நாடித் தாங்கள்போக வேண்டியதுதானே! இவர்களைக் கண்ட பிறகும் கூட்டம் "ட்ராட்ஸ்கி! ட்ராட்ஸ்கி!" என்றே கோஷித்துக் கொண்டிருந்தது.

இந்த சம்பவத்தின்மூலம் மக்களின் உணர்ச்சியை அறிந்து கொண்ட எதிர்ப்புத் தலைவர்கள் ஏழை எளியோரின் குடிசைகளுக்கும் சென்று தங்கள் கட்சியை எடுத்துரைக்கத் தலைப் பட்டார்கள். ஒரு காலத்தில் அரசாங்கத்துக்கே தலைவர்களாயிருந்த அவர்கள், தொழிலாளர்களின் எளிய இல்லங்களில்

உலக விவகாரங்களைப் பற்றியும் கைத்தொழில்களை அரசாங்கம் ஏற்று நடத்துவதுபற்றியும் விளக்கினார்கள்.

சைனாவில், இச்சமயம் வெற்றிகரமான புரட்சி நடந்து கொண்டிருந்தது. சர்வதேச கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் ஸோவியத் ஆலோசகர்களின் உதவியுடன் நடந்து வந்த இப்புரட்சி ரஷ்யர்களுக்குப் பெருமகிழ்ச்சி யளித்தது. அரசியல் உணர்ச்சியும் அபரிமிதமாய்ப் பெருகியது. ஆனால், எதிர்ப்புத் தலைவர்கள் ஸ்டாலினுடைய சினக் கொள்கையைக் கண்டித்தனர். கம்யூனிஸ்ட்கட்சியினரை ஆதரிப்பதற்குப் பதிலாக, அவர்களை எதிர்த்த குவோமின்டாங் தலைவர் சியாங்-கை-ஷேக்கையும் இதர நடுத்தர வகுப்புத் தலைவர்களையும் ஸ்டாலின் ஆதரிக்கிறார் என்று ட்ராட்ஸ்கியும் ஸினோவீவும் அவரைக் கண்டித்தார்கள்.

சின கம்யூனிஸ்ட் கட்சி குவோமின்டாங்குக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று ஸ்டாலின் உத்தரவிட்டது வாஸ்தவமே. இதனால் சினக் குடியானவர்களும் தொழிலாளர்களும் புரட்சி செய்வதற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது. சின கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராயும் தொழிற்சங்க ஸ்தாபனங்களுக்கு எதிராயும் ஷாங்காய் நகரில் ராணுவ நடவடிக்கை எடுக்க சியாங்கை ஷேக் ரகசிய ஏற்பாடுகள் செய்து வருகிறுரென்று கிடைத்த பல எச்சரிக்கைகளை ஸ்டாலின் பொருட்படுத்தவில்லை. மாஸ்கோ வில்லுள்ள சின சர்வகலாசாலையின் தலைவராய் இருந்த ராடெக் சினப் பிரச்னையை விவரமாய் அறிந்தவர். அவரே ட்ராட்ஸ்கி, ஸினோவிவ் முதலியவர்களுடன் சேர்ந்துகொண்டு ஸ்டாலினுடைய போக்கை பலமாக எதிர்த்தார்.

ஸ்டாலின் கொள்கையின் விபரீதப்பலன் விரைவில் தெரிந்தது. சியாங்-கை-ஷேக் பரிபூரணமாய் ஒத்துழைப்ப தாக வாக்களித்திருக்கிறுர் என்று கட்சிக் கூட்டத்தில் ஸ்டாலின் தெரிவித்தார். என்றைய தினம் அவர் இவ்வாறு சொன் ஞரோ அதே தினம்தான் ஷாங்கை நகரில் கம்யூனிஸ்ட்களைப்

தொழிற்சங்கத் தலைவர்களையும் சியாங்-கை-ஷேக் படுகொலை செய்தார் என்ற செய்தி வந்தது. மேலும் சைனாவெங்கும் கம்யூனிஸ்ட்களுக்கு விரோதமாய் உணர்ச்சிவெள்ளம் பெருக்கெடுத்தது. காண்டன் நகரில், கம்யூனிஸ்ட்கள் புரட்சி செய்து அமைத்திருந்த ஸோவியத் குடியரசு மூன்றே தினங்களில் ரத்த வெள்ளத்தில் ஒடுக்கப்பட்டது.

சீன சம்பவங்களினால் ஸ்டாலினுடைய மதிப்புக்கு மிக்க பங்கமேற்பட்டது. எதிர்ப்புத்தலைவர்கள் இதுதான் சமயம் என்று தங்கள் முயற்சியை அதிகரித்தனர். எதிர்ப்பை ஒடுக்க ஸ்டாலின் பலாத்காரத்தையும் உபயோகிக்கத் தொடங்கினார். கட்சிக் கூட்டங்களில் எதிர்ப்புத் தலைவர்கள் பேச எழுந்தால் சீட்டியடித்துப் பேச்சைக் கேட்க முடியாமல் செய்யவும், எதிர்ப்புத் தலைவர்கள் கட்சி அங்கத்தினர்களை சந்தித்துப் பேசும் சமயங்களில் அந்தக் கூட்டங்களைக் கலைக்கவும் காலிப்படைகளை ஏற்பாடு செய்தார். எப்படியாவது எதிர்ப்பை ஒடுக்குவதே நோக்கமாக உழைத்தது ஸ்டாலின் கீழிருந்த கட்சியின் மத்தியக் கமிட்டி.

அக்காலத்தில், ரகசியப் போலீஸும் சாதாரண போலீஸும் கம்யூனிஸ்ட் கட்சிச் சண்டை விவகாரங்களில் தலையிடாமலிருந்தனர். அவர்கள் உதவியை ஸ்டாலின் நாடவில்லை; காலிக் கும்பல்களைக் கொண்டே காரியத்தை சாதித்துவந்தார். ஆனால், 1927-ம் வருஷம் நவம்பர் 7-ந் தேதிக் கொண்டாட்டங்களின் போது எதிர்ப்புத் தலைவர்கள் தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்யக்கூடும் என்று வதந்தி பரவவே, எதிர்ப்பை ஒடுக்க ரகசியப் போலீஸ், சாதாரண போலீஸ் முதலிய அரசாங்க ஸ்தாபனங்களை ஸ்டாலின் உபயோகிக்கத் தொடங்கினார்.

மாஸ்கோவின் பிரசித்திபெற்ற ஸ்தலமான செஞ்சதுக்கத்தில் ஒரு வீட்டின் மாடியில் எதிர்க்கட்சித் தலைவர் ஓர் அறை வைத்துக்கொண்டிருந்தார். நவம்பர் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் மூன்று கோஷ்டிகள் ஒன்றுகூடும் ஸ்தலத்தை

நோக்கியிருந்தது இந்த அறை. நமது அறைக்கு வெளியே வராந்தா கைப்பிடிச் சுவற்றில் லெனின், ட்ராட்ஸ்கி, ஸிநோவீவ் ஆகியோரது உருவப்படங்களை வைத்து அலங்கரித்திருந்தார் அந்தலைவர். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே கூடி "ட்ராட்ஸ்கி வாழ்க, எதிர்க்கட்சி வாழ்க!" என்று கோஷ மிட்டார்கள். அவ்வளவுதான் ரகசியப் போலீஸாரும் சாதாரண போலீஸாரும் அந்த மாடி வீட்டுக்குள் பாய்ந்தார்கள். படங்களையெல்லாம் எடுத்தெறிந்து அவர்களை ஸ்டேஷனுக்கு கொண்டு சென்றார்கள்.

கொண்டாட்டத்தின்போது, ட்ராட்ஸ்கியை ஆதரிக்கும் சிலர், "லெனின் லக்ஷியங்கள் ஓங்குக!" "சந்தர்ப்பவாதிகள் ஒழிக, ஐக்கியம் உண்டாகுக!", "லெனின் கட்சியில் ஒற்றுமை வளர்க!" என்று எழுதப்பட்டிருந்த பெரிய அட்டைகளை ஒரு ஊர்வலத்தின் நடுவே எடுத்துச் சென்றார்கள். இந்த அட்டைகளையும் போலீஸ் ஆட்கள் கைப்பற்றிக்கொண்டு அவைகளை எடுத்துச் சென்றவர்களை அடித்துத் துன்புறுத்தினார்கள்.

செஞ்சதுக்கத்தில் நடந்த கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள ட்ராட்ஸ்கி அழைக்கப்படவில்லை. அழைப்பின்றி செஞ்சதுக்கத்தில் நுழைவது சாத்தியமில்லை. என்ன செய்வ தென்று புரியாதவர்போல ட்ராட்ஸ்கி தமது மோட்டார்காரில் இங்குமங்கும் போய்க்கொண்டிருந்தார். அவரைக் கண்ட வுடன் மக்களுக்கேற்பட்ட உத்சாகத்தில் மக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். அந்தக் குழப்பத்தில் யாரோ அவரை நோக்கிச் சுட்டார்கள். வேறு சிலர் அவருடைய மோட்டாரின் கண்ணாடியை உடைத்துத் தூளாக்கினார்கள். இதை யார் செய்திருப்பர் என்று சொல்லத் தேவையில்லை.

அன்றைய வைபவங்களில் நான் நேரில் கலந்துகொண்டேன். தலைவர் மேடைக்கருகே எனக்கு இடம் தந்திருந்தார்கள். சற்றுத் தள்ளி, லெனின் சமாதி இருந்தது. மேடையி லிருந்தவர்கள் யாவருமே என்ன நேருமோவென்ற கவலை

கொண்டிருந்தனர். எதிர்ப்புத் தலைவர்கள் லெனின் சமாதியை அருகே அணுகியிருந்தால், உணர்ச்சி வெள்ளத்தில் மக்கள் என்ன செய்து விடுவார்களோ என்று கவலைப்பட்டு, எதிர்ப்புத் தலைவர்கள் சமாதியை நெருங்க முடியாதபடி போலீஸார் தடுத்துவிட்டனர்.

ஆறு மணி நேரம் நடந்த வைபவத்தில் எதிர்பாரா சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது. ஊர்வலக் கோஷ்டிகள் அணியணியாய் வந்து லெனின் சமாதிக்கு வணக்கம் செலுத்தின. இதில் சீன மாணவர் கோஷ்டி ஒன்றும் இருந்தது. இந்த கோஷ்டியினர், தலைவர்கள் மேடைக்கு சமீபமாய் வந்ததும், அதுவரை தங்கள் உடைகளில் ஒளித்து வைத்துக்கொண்டிருந்த ஒரு செஞ்சீலையை விரித்தார்கள். "சீனப் புரட்சியில் துரோகம் செய்த சந்தர்ப்பவாதிகள் ஒழிக!" என்ற சொற்கள் அதில் இருந்தன.

இந்த மாணவர்களில் பெரும்பாலோர் பின்னர் சைனாவில் அநியாய மரணமடைந்தனர். சீன கம்யூனிஸ்ட் கட்சி சுதந்தரமாய் இயங்கும் சக்தி பெற்றிருந்தும், குவோமின்டாங் தலைவர்களின் ஆக்ஞைக்கு உட்பட்டு நடக்கும்படி உத்தரவிட்டார் ஸ்டாலின். இதனால் கம்யூனிஸ்ட் கட்சி படுநாசமடையவே, அபக்யாதிக்கு பயந்து திடீரெனக் கொள்கையை மாற்றிக் கொண்டு, குவோமின்டாங்கை எதிர்த்துக் கலகம் செய்யும்படி உத்தரவிட்டார். இது, தும்பைவிட்டு வாலைப் பிடித்த கதையாயிற்று. காண்டன் நகரக் கலகத்தில் ஏராளமான கம்யூனிஸ்ட் இளைஞர்கள் உயிரிழந்ததுதான் இதனால் ஏற்பட்ட பலன்!

நாளாக ஆக, கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே அபிப்பிராய பேதங்கள் வலுத்துவந்தன. கட்சிக் கூட்டங்களில் ட்ராட்ஸ்கி பேசுவதுகூட ஸ்டாலினுக்குப் பிடிக்கவில்லை. அவர் பேச எழுந்தால், கூட்டுக் கொல்லும்படி தன் கையாட்களை ஏவிவிட்டார் அவர். ஸ்டாலின் இஷ்டப்படி ஆடும் நபர்களே கமிட்டியில்

நிறைந்திருந்தனர். ட்ராட்ஸ்கி கடைசியாகக் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர் பேசாமலிருக்கும்படி செய்ய என்னென்னவோ தடுப்பு நடவடிக்கைகள் நடந்தன. ஓயாத இரைச்சலும் காலிக் கூச்சலும் இருந்தபோதிலும், ட்ராட்ஸ்கி விடாமல் பேசினார். அனைத்து மொழிகளில் ஸ்டாலினுக்கு சாட்டை மேல் சாட்டை கொடுத்தார். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

கட்சிக் கமிட்டிகளை தம் ஆட்களைக் கொண்டு நிரப்பியது போலவே, கட்சியின் சாதாரண அங்கத்தினர்களிலும் தமக்கு விரோதமானவர்களை வெளியேற்றத் தலைப்பட்டார் ஸ்டாலின். எதிர்க் கட்சியை ஆதரித்தவர்கள் ஒவ்வொருவராய் நீக்கப் பட்டனர்.

1927-ம் வருஷம் நவம்பரில் கட்சியின் 15-வது மகாநாடு நடக்கவிருந்தது. எதிர்க்கட்சி தன் அபிப்பிராயங்களை வெளியிட சந்தர்ப்பம் கிடைத்துவிடப் போகிறதே என்று, ஸ்டாலின் முன் யோசனையுடன் வேலை செய்தார். மகாநாடு ஆரம்பிப்பதற்கு சில தினங்களுக்குமுன், கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாக ட்ராட்ஸ்கி, ஸினோவீவ், காமனேவ் மூவரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். இந்த நடவடிக்கைக்குப் பின், ரைக்காவ், புகாரின், டாம்ஸ்கி முதலிய வலதுசாரித் தலைவர்கள் புடைசூழ ஸ்டாலின் மகாநாட்டு மேடைமீதேறினார். கரகோஷம் அபாரமாயிருந்ததில் ஆச்சரியமென்ன ?

இந்த மகாநாட்டில்கூட நான் ஸ்டாலினையே ஆதரித்தேன். பெரும்பான்மையினரை ஆதரித்தால், பிளவுகள் நீங்கிவிடுமென நினைத்தேன்.

அடுத்தபடி ஸ்டாலின் செய்த காரியம் மாஸ்கோவை பிரமிக்க வைத்தது. அவர் கட்சியின் பொதுசபையைக் கேளாமலே, ட்ராட்ஸ்கியை மத்திய ஆசியாவுக்குக் கடத்திவிடத் தீர்மானித்தார். இவ்வளவு நடந்தும், ஸ்டாலினை ஆதரித்த நாங்கள், நிலைமை தானே திருந்திவிடும் என்றும் கொடூரமான அடக்குமுறை தேவையாயிராது என்றும் நினைத்தோம்.

ஆனால் ட்ராட்ஸ்கி கடத்தப்பட்டதுதான் தாமதம், பகலிய போலீஸ் மும்முரமாக நடவடிக்கை துவக்கியது.

ஒருவர்பின் ஒருவராய் எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதும் நாடு கடத்தப்படு வதும் சகஜமாயிற்று. செஞ்சேனையில் உள்ள கம்யூனிஸ்ட்கள் முணுமுணுக்கத் தொடங்கினார்கள். ஆனால் எதிர்ப்புக்குக் காலம் தாண்டிவிட்டது. ட்ராட்ஸ்கியின் கட்சி தோற்றுவிட்டது.

எதிர்க்கட்சியினர் எச்சரிக்கை செய்தபடியே, அடுத்த வருஷம் நாட்டில் பல சங்கடங்கள் ஏற்பட்டன. குடியானவர் கள் தங்கள் மகசூலை அரசாங்கத்துக்குக் கொடுக்கும்படி செய்ய கடுமையான நடவடிக்கைகள் தேவையாக இருந்தன. கொள் முதல் அதிகாரிகள் துருப்புகள் சகிதம் சென்று கிராமங்களில் வீடு வீடாய் சோதனை செய்தனர். தானியம் மறைத்து வைத்திருக்கிறார்களாவென்று பார்த்த அவர்கள், குடியான வர்களின் விதை தானியத்தைக்கூட விட்டுவைக்கவில்லை. ஆயிரக்கணக்கான குடியானவர்கள் கைது செய்யப்பட்டு சிறை வாசம் அனுபவித்தார்கள். பலாத்காரமும் அடக்குமுறையும் தலைவிரித்தாடின. நிலைமை நாளுக்கு நாள் மோசமாயிற்று. ஸ்டாலினுடைய அர்த்தமற்ற நடவடிக்கைகளினால் விவசாயம் சீர்குலைந்தது. எதிர்காலமே பயங்கரமாய்த் தோன்றிற்று. மத்திய ஆசியாவுக்கு நாடு கடத்தப்பட்ட ட்ராட்ஸ்கியும் அவர் போன்ற இன்னும் பல்லாயிரம் தலைவர்களும் தங்கள் தாய கத்துடன் ரகசியத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார்கள். கட்சியிலுள்ள ஸ்டாலின் கோஷ்டியினர் இதனால் பரபரப் படைந்தார்கள். ட்ராட்ஸ்கி தமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளவில்லையென்றால் அவர் கைது செய்யப்படுவார் என்று எச்சரிக்கை பிறந்தது. ட்ராட்ஸ்கி அதை மதிக்கவில்லை. ஸ்டா லினும் தம்முடைய எச்சரிக்கைப்படி நடக்கத் துணியவில்லை. இதற்கு மாறாக ட்ராட்ஸ்கியை தேசத்துக்கு வெளியே நாடு கடத்திவிடப் போவதாக வதந்தி பரவலாயிற்று. பயங்கர மான செய்திகள் கேட்டுக் கேட்டு பழகிப்போன எங்களுக்கே

இது போலிபோல் இருந்தது. கம்யூனிஸ்ட்களுக்குள்ளே எவ்வளவுதான் அபிப்பிராயபேதம் இருந்தாலும் அது கம்யூனிஸ்ட்களுக்கும் முதலாளித்துவ வெளி உலகுக்கும் உள்ள அபிப்பிராய பேதத்துக்கு நிகராகாது என நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் ட்ராட்ஸ்கி ரஷ்யாவின் எல்லையில் கால் வைக்கக்கூடாதென்று சொல்வதென்றால் அது அவரை முதலாளிகளிடம் ஒப்படைப்பதேயாகும் அல்லவா? மத்தியக் கமிட்டியின் இந்தத் தீர்ப்பைப்பற்றி உள்ளூர எனக்கே வெறுப்புத்தட்டியது. ஆனால் யாரும் எதும் செய்யத் துணியவில்லை. எதிர்க்கட்சி என்ற பெயரில் இருந்த வலதுசாரிக் கம்யூனிஸ்ட்கள் மௌனம் சாதித்தார்கள்.

ஸ்டாலினுடைய 50-வது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது பத்திரிகைகள் பக்கம் நிறைய அவரைப் புகழ்ந்து எழுதின. அவருக்கு அதிகாரபூர்வமாய் கட்சித் தலைவர் என்ற பட்டம் அளிக்கப்பட்டது. 1924-ல் நான் ஸ்டாலின், "கட்சிக்குத் தலைவர் ஒருவர் தேவையே இல்லை. கட்சித் தலைமை ஓரிடத்தில்தான் உண்டு, மத்தியக் கமிட்டியிடம்" என்று கூறியதை நான் மறக்கவில்லை. இந்த வாதம் ட்ராட்ஸ்கி கட்சித் தலைவர் ஆகாமல் தடுப்பதற்காகவே கையாளப்பட்டதென்பது இப்போது நன்றாய்த் தெரிந்தது. எங்களையெல்லாம் ஸ்டாலின் நன்றாக ஏமாற்றிவிட்டார் என்ற சந்தேகம் எனக்கு உதித்தது.

ஸ்டாலினுடைய பேச்செல்லாம் வெறும் தந்திரம். அவரது அழகான வாதமெல்லாம் எப்படியாவது கட்சித் தலைமையைத் தாம் கைப்பற்றிக் கொள்வதற்காகத்தான் என்பது நன்றாய் விளங்கியது.

சென்ற நான்கு வருஷங்களாக மாஸ்கோவில் ஒழுங்காக வாழ்வு நடத்திவந்ததால் நான் நோய் நொடியற்று சௌக்கியமாய் இருந்தேன். ஆனால் இன்னும் கிழக்கத்திய நாடுகளுக்குப் போக வேண்டுமென்ற ஆசை இருந்துவந்தது.

மீண்டும் பாரிசுக்குக் வர்த்தகப் பிரதிநிதியாய் நானே போக வேண்டுமென்று வெளிநாட்டு வர்த்தக இலாகா சொன்னபோது நானும் போவதற்குத் தயாராய் இருந்தேன். ஆனால் ராணுவ மேலதிகாரிகள் ரிஸர்வ் ஜாப்தாவில் என் பெயர் இருந்ததால் நான் பாரிசுக்குத் திரும்பிப் போவதை ராணுவ இலாகா விரும்பவில்லை. எங்கள் விமானப்படைக்காகவும் புதிய தளவாடக் கைத்தொழிலுக்காகவும் ஸோவியத் அரசாங்கம் பாரிஸ் நகரில் ஏராளமான பண்டங்களை வாங்குவதால், ராணுவ அனுபவமும் வர்த்தக அனுபவமும் உள்ள நான் பாரிஸ் போகலாம் என்று ராணுவ இலாகா யோசனை கூறியது. எல்லை முடிவற்ற கட்சிச் சண்டைகளுக்கிடையே மாஸ்கோவில் நாலு வருஷகாலம் வாழ்ந்ததன் பயனாக வேறு எங்கேனும் தொலைந்தால் போதும் என்று எனக்குத் தோன்றியது. 1929-ம் வருஷம் ஜனவரி மாதம் ஸோவியத் வர்த்தக தூது கோஷ்டியில் வேலை செய்வதற்காக பாரிஸ் நகருக்குப் புறப்பட்டுச் சென்றேன்.

* * *

பாரிஸ் நகரின் அடக்கமான அழகு என்னை வசீகரித்தது. காலத்தின் போக்கினாலும் புகை, பனி முதலியவைகளாலும் மங்கியிருந்த பாரிஸ் கட்டடங்களின் தோற்றத்தில் கவிதையழகைக் கண்டேன். மாஸ்கோ வாழ்க்கைக்கும் பாரிஸ் வாழ்க்கைக்கும் நிரம்ப வித்தியாசமிருந்தது. மாஸ்கோ வாழ்க்கை எவ்வளவுக் கெவ்வளவு கடுகடுப்பாயிருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு பாரிஸ் வாழ்க்கை குதூகலமாயும் செழிப்பாயுமிருந்தது. ஆனால் இந்தச் செழுமை எனக்குப் பிரமாதமாய்ப்படவில்லை. ஏழை பணக்காரரிடையே மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் இருப்பதே என் கண்ணில் உறுத்தியது. "எங்கள் ஐந்து வருஷத் திட்டம் மட்டும் பூர்த்தியாகட்டும், ரஷ்யாவின் வாழ்க்கை நிலை இதையெல்லாம் தூக்கியடித்துவிடும்! ஏழை பணக்காரரென்ற வித்தியாசமின்றி யாவரும் சரிசமமாய் இன்புற்று வாழ்வோம்!" என்று சொல்லிக்கொண்டேன்.

இப்படி ஒரு பக்கம் தோன்றினாலும், அந்த சமயம் மறு பக்கம், பாரிஸிலுள்ள ஏழை மக்களின் வாசஸ்தலங்களுக்கும் ரஷ்யாவில் ஏழை மக்களின் வாசஸ்தலங்களுக்கும் உள்ள வித்தியாசம் கண்ணேக் கவர்ந்தது. முதலாளித்துவ நாடாகிய பிரான்ஸில் ஏழைகள் இருப்பார்கள், படுமோசமான சூழ் நிலையில் வசிப்பார்கள் என்பது நான் எதிர்பார்த்ததுதான். ஆனால், நேரில் பார்த்தபோது பாரிஸைவிட ரஷ்யாவில்தான் ஏழை மக்களின் விடுதிகள் மோசமாயிருந்தன. புரட்சியை சாதித்து விட்டோம்; மக்களின் துயர்கள்தான் தீரவில்லை. லட்சிய ஸோஷலிஸ ஆட்சியை நோக்கி ஆமைவேகத்தில்தான் நகர்ந்து சென்றோம்.

பாரிஸில் எனக்கு மிகவும் வியப்பளித்த விஷயம் அங்கே பத்திரிகைகள் அனுபவித்த சுதந்தரம்தான். ஏராளமான பத்திரிகைகள் வெவ்வேறு அபிப்பிராயங்களை ஆதரித்து வந்தன. தங்களுக்குப் பிடிக்காதவர்களை தாராளமாய்த் தாக்கி எழுதின. பெரிய பெரிய பிரமுகர்களையும் விட்டு விடவில்லை. ஜீவாதார மான தத்துவங்களைக்கூட பத்திரிகைகள் தங்கு தடையின்றி எடுத்துரைத்தன. எங்கள் நாட்டிலோ போல்ஷவிக் கட்சி பத்திரிகைகளுக்கு சுதந்தரம் கொடுப்பதற்கு பயந்து கொண் டிருந்தது. அவ்வாறு பத்திரிகைகளுக்கு சுதந்தரம் தருவது நாட்டுக்கு ஆபத்து என்று பகிரங்கமாய்க் கூறியது. கம்யூ னிஸ்ட் கட்சி தவிர மற்ற இடதுசாரிக் கட்சிகளுக்கு அபிப்பிராய சுதந்தரம் கொடுத்தல்கூட நாட்டுக்கு ஆபத்தாய் முடியும், இந்த சிறு எதிர்ப்பின் மூலம் வெளிநாட்டு முதலாளித்துவம் எப்படியாவது உள்ளே நுழைந்துவிடும் என்று கம்யூனிஸ்ட் கட்சி எங்களுக்கு போதித்தது. பாரிஸோ பத்திரிகை சுதந் தரத்தினால் அபாயம் இல்லையென்பதைக் காட்டியது. நிர்வாகம் செய்யும் கட்சிக்கு மக்களிடையே ஆதரவு இருக்குமானால் பத் திரிகை சுதந்தரம் ஆபத்தாய் விளங்குவதற்கு பதில் பாது காப்புக்கு அஸ்திவாரமாகவும் முற்போக்குக்கு அரணாகவும் விளங்கும் என்று பாரிஸ் பத்திரிகைகள் நிரூபித்தன.

அடுத்த நான்கு ஆண்டுகள் நான் பாரிஸ், ப்ரஸ்ஸெல்ஸ் (பெல்ஜியம்), மிலான் (இத்தாலி) ஆகிய நகரங்களில் உழைத்தேன். இந்த நான்கு வருஷகாலம் நான் செய்த காரியங்களைப்பற்றி விளக்குவதற்கு இந்தச் சமயம் ருஷ்யாவில் அமுலாகிக் கொண்டிருந்த முதல் ஐந்து வருஷத்திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகும்.

மத்திய ஆசியாவுக்கு நாடுகடத்தப்பட்டிருந்த ட்ராட்ஸ்கியும் அவரது தோழர்களும் ரகசியமாய் பல பிரசுரங்கள் வெளியிட்டு வந்தார்கள். அப்பிரசுரங்களில் ஸ்டாலின் கோஷ்டியை ட்ராட்ஸ்கி கண்டித்திருந்தது கட்சியிலிருந்த பெரும்பாலான அங்கத்தினர்களைக் கிளறிவிட்டது. இதன் பலனாக ஸ்டாலின் தம்முடைய முதல் ஐந்து வருஷ கைத்தொழில் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டியதாயிற்று. அவர் தயாரித்திருந்த நகல் திட்டம் உப்பு சப்பற்றிருந்தது. தன் எதிரிகளின் கண்டனங்களைப் பார்த்த அவர், கட்சியை மயக்குவதற்காக பகட்டானதோர் திட்டம் தயாரித்தார். தன்னைக் குறைகூறிய முற்போக்காளர்களின் திட்டங்களையும் மிஞ்சுவதாயிருந்தது இந்தத் தீவிரமான திட்டம். பொருள் உற்பத்திக்கு அவர் வரைந்திருந்த புது எல்லையைப் பார்த்தபோதே அது காரிய சாத்தியமான திட்டமல்ல என்பது தெரிந்தது.

இந்தத் திட்டம் ஸ்டாலினுக்கு நன்கு பயன்பட்டது. தம்மைக் குறை சொன்ன தீவிரவாதிகள் வாயடைத்துப் போகச் செய்ததுடன், மிதவாதிகளின் சக்தியைக் குலைக்கவும் இது உபயோகப் பட்டது. ரைக்காவ், புகாரின் முதலிய வலதுசாரி மிதவாதத் தலைவர்கள் நடுத்தர வகுப்பின் விவசாய அரசாங்கம் அமைக்க முயலுகிறார்கள் என்று நினைத்து, கட்சி ஸ்டாலினை மனப்பூர்வமாய் ஆதரித்தது.

ஸ்டாலின் இந்த ஆடம்பரமான திட்டத்தைத் தயாரித்ததற்கு வேறொரு காரணமும் இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே கடுமையான அடக்குமுறையும் வெளியே நாட்டில்

பஞ்சம் பட்டினி முதலிய தொல்லைகளும் இருந்ததால், மக்கள் தங்கள் கவலைகளை மறக்கும்படி செய்ய ஏதாவதொரு படா டோபமான திட்டம் தேவையாயிருந்தது!

விவசாயத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, ஸ்டாலின் ஏற் கனவே கூட்டுப்பண்ணைத் திட்டத்தை அமல் செய்திருந்தார். யந்திரக் கலப்பைகளும் விவசாய சாதனங்களும் பெரும் அள வில் உற்பத்தி செய்தால்தான் இம்முறை வெற்றிகரமாய் நடந்தேறும் என்பது புலனாயிற்று. இதனாலும், வைதுசாரித் தலைவர்களின் கண்டனங்களை சமாளிப்பதற்காகவும் அடிக்கடி ஐந்து வருஷத்திட்டத்தில் பல மாறுதல்கள் செய்யப்பட்டு வந்தன. உற்சாகம் குன்றாமலிருப்பதற்காக, திட்டத்திலீடு பட்ட ஒவ்வொரு அதிகாரியும் தலைக்குத்தலை லட்சியத்தை உயர்த்திக்கொண்டே போனார். ஐந்து வருஷத்திட்டத்தை நாலே வருஷத்தில் முடித்துவிடுவோம் என்றார் ஸ்டாலின்!

ஸ்டாலினுடைய இரும்புப்பிடியை வெறுத்த போல்ஷவிக் கட்சி அறிஞர்கள்கூட, தேசநலத்தை முன்னிட்டுப் பொறுமை யுடன் இருந்தனர். 'அவருடைய குறுகிய மனப்பான்மையும் கொடுங்கோலாட்சியும் நாட்டுக்கு பாதகம் விளைவித்துவருகின்றன. ஆனால் அந்த மனிதனுடைய முரட்டுப்பிடிவாதம் அவரது ஆட்சிக்கு உயிரூட்டி, ரஷ்யாவுக்குக் கைத்தொழில் வளம் அளிக்கிறது. மனித யத்தனத்துக்கும் மீறிய இந்த உழைப்பு சில வருஷங்களில் அமோகமான பலன் அளித்து விடும். அதன்பின் ஸ்டாலினுடைய கடுமையும் தணிந்து விடும்; நாட்டில் சுபிட்சம் நிலவும்' என்றே அவர்கள் நம்பினார்கள்.

அக்காலத்தில் ரஷ்ய மக்களிடையே "கைத்தொழிலில் அமெரிக்காவுக்கு நிகராவது போதாது; அதை மிஞ்சிவிட வேண்டும்!" என்பதே கோஷமாயிருந்தது. நாட்டின் கைத் தொழிலைப் பெருக்கி அமெரிக்காபோல் செய்துவிடவேண்டும் என்ற ஆர்வத்தில் உழைத்தோம். இதே ஆர்வத்தினால் தான், ஸ்டாலினுடைய கொள்கை தவறு என்று தோன்றிய

போதிலும் அவரை விடாமல் ஆதரித்தோம். எதிர்க்கட்சித் தலைவர்களிடையேகூட இந்த மனப்பான்மை இருந்தது. அவர்களுடைய தோல்விக்கும் இந்த மனப்பான்மையே காரணமாயிருந்தது.

" ஸ்டாலினுடைய நடைமுறை கொடுமையானதாகவும் முரட்டுத் தனமாகவும் இருக்கலாம். ஆனால் அவர் நடத்திவரும் வேலை அவருக்கும் நமக்கும் உள்ள வித்தியாசத்தைவிட முக்கியமானது. காரியத்தைச் செய்வதில் அவர் கடுமையான முறைகளை மேற்கொள்ளக்கூடும். ஆனால் காரியத்தைச் செய்து வருகிறாரே!" என்று எதிர்க்கட்சித் தலைவர்கள்கூட ஒப்புக் கொண்டார்கள். ஸ்டாலின் கையாண்ட அரசியல் முறைகளினால் ஸோஷலிஸ சமுதாயம் அமைக்க நாங்கள் புரிந்த பெரும் தியாகங்கள் வீணாகிவிடும் என்று எங்களில் எவரும் எதிர்பார்க்கவில்லை. ரஷ்யாவில் இருந்தவர்கள், தங்கள் உழைப்பில் செலுத்திய கவனத்தில் எதிர்காலம் என்ன ஆகும் என்பதைப்பற்றி யோசனை செய்யக்கூட அவகாசம் இருக்கவில்லை. நாட்டுக்கு வெளியே இருந்த எங்களுக்கோ ரஷ்யாவின் உண்மை நிலைமைபற்றி சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. சர்க்கார் ஆதிக்கத்திலிருந்த பத்திரிகைகள் எழுதிய அழகழகான வர்ணனைகளே எங்களுக்குக் கிடைத்தன. தாங்கவொண்ணாத கஷ்டங்களையும் சமாளித்து ஐந்து வருஷத் திட்டத்தை சரிவர நிறைவேற்றிவருகிறார்கள், சுபிட்சம் நெருங்கிவருகிறது என்று நாங்கள் நினைத்தோம்; எங்கள் பங்குக்கு ஆர்வத்துடன் உழைத்தோம்.

வெளிநாடுகளில் இருந்த ரஷ்யப் பிரதிநிதிகள் யாவரும் ஒரு முக்கியமான காரியத்தில் ஈடுபட்டிருந்தோம். ரஷ்ய நாணயத்தின் சர்வதேச மதிப்பு குறையாமலிருப்பதற்காக, எப்படியாவது தங்கம் சேர்க்கவேண்டியிருந்தது.

ரஷ்யா வெளிநாடுகளில் வாங்கிய பொருள்களுக்கு நாங்கள் அளித்த கையொப்பச் சீட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து

கொண்டிருந்தன. அவைகளுக்கு காலாகாலத்தில் பணம் கட்டவேண்டியது அவசியமாயிற்று. வெளிதேச வர்த்தகமாதலால் அந்நியச் செலாவணியில் இந்தத் தொகைகளைக் கட்டவேண்டியிருக்கும். ரஷ்ய கஜானாவில் அந்நிய நோட்டுகள் ஒரு சிலவே இருக்கும்; ஆனால் ரஷ்ய அதிகாரிகள் உண்மையை வெளிக்குக் காட்டாமல் தைரியமாய் நிலைமையைச் சமாளித்து வருவார்கள். ஸோவியத் நாணயம் ஈடு இணையற்றது, அதைப்போல் ஸ்திரமதிப்புள்ள நாணயம் உலகிலேயே இல்லை, தான் கொடுக்க வேண்டிய கடன்-பாக்கிகளைக் காலாகாலத்தில் கொடுக்க ரஷ்யா ஒருநாளும் தவறியதில்லை என்று கம்யூனிஸ்ட் பத்திரிகைகள் பறைசாற்றிவந்தன. இதென்னவோ ஆச்சரியமான உண்மைதான். எத்தனையோ சங்கடம் இருந்தபோதிலும், ஸோவியத் சர்க்கார் எப்படியோ ஒரு கடன் விடாமல் எல்லாவற்றையும் காலாகாலத்தில் சமாளித்தது. ஏதாவது பெரும் தொகை கட்டவேண்டிய கெடு வந்துவிட்டால், தொகையைக் கட்டி முடிக்கும்வரை வெளிநாட்டு வர்த்தக இலாகாவிலுள்ள எங்களுக்கும் மாஸ்கோ அரசாங்க பாங்க் அதிகாரிகளுக்கும் இராத்தூக்கம் கெட்டுவிடும்.

ரஷ்ய நாணய மதிப்பு குறையாதிருப்பதற்காக கையிருப்பில் தங்கம் சேர்த்துவைத்துக்கொள்ள நாங்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஏற்றுமதியை எவ்வளவு தூரம் அதிகரிக்க முடியுமோ அவ்வளவு தூரம் அதிகரித்து வந்தோம். நாங்கள் ஏற்றுமதி செய்யாத பொருளே இல்லை. பட்டினி கிடக்கும் எங்கள் மக்களுக்கே தேவையாயிருந்த உணவுப் பொருள்களைக் கூட ஏற்றுமதி செய்தோம்! புது மார்க்கெட்டுகள், புது ஏற்றுமதித் திட்டங்கள் என்றெல்லாம் ஏற்றுமதி வர்த்தகத்தை மேன்மேலும் பெருக்க முயற்சித்து வந்தோம்.

ஆனால், நாங்கள் எவ்வளவோ சாதுர்யமாய் நினைத்துத் தயாரித்த திட்டங்கள் எல்லாவற்றையும்விட ரஷ்ய யாத்திரிகர்கள் இலாகா தயாரித்திருந்த ஒரு புதிய திட்டம் குறிப்பிடத்தக்க-

தாயிருந்தது. பொருள் ஏற்றுமதிக்கு பதிலாக மனிதர்களையே ஏற்றுமதி செய்யலாம் என்பதுதான் அந்தத்திட்டம்.

சோவியத் ரஷ்யாவிலிருந்து வெளிநாடுகளுக்குக் குடியேறுவது பல வருஷ காலமாகத் தடுக்கப்பட்டிருந்தது. அரசாங்கக் காரியமாய்ச் செல்லும் யாத்திரிகர்கள், அதிகாரிகள், எஞ்சினியர்கள் முதலியோரே நாட்டுக்கு வெளியே போக அனுமதி கிடைக்கும். ரஷ்யப் புரட்சிக்கு முற்பட்ட காலத்திலும் ரஷ்யப் புரட்சியின்போதும் நாட்டைவிட்டு வெளியேறிய நூற்றுக்கணக்கான ரஷ்யர்கள் பிரான்ஸ், அமெரிக்கா முதலிய நாடுகளில் வசித்து வந்தார்கள். இவர்களில் சுயமுயற்சியால் முன்னுக்கு வந்த பலர் ரஷ்யாவில் உள்ள தங்கள் உறவினர்களையும் தாங்கள் இருந்த இடங்களுக்கு அழைத்துச் செல்ல விரும்பினார்கள். இதுவரை அவர்கள் செய்த முயற்சியெல்லாம் வியர்த்தமாயின. யாத்திரிகர்கள் இலாகா தயாரித்திருந்த புது திட்டப்படி தங்கள் உறவினர் வருவதற்காக வெளிநாட்டிலுள்ள இதர ரஷ்யர்கள் போதுமான பணம் கட்டினால் உறவினர்களை அழைப்பலாம் என்று ஏற்பாடாயிற்று.

சாதாரணமாய், ரஷ்யாவிலிருந்து வெளியே போக அனுமதிச்சீட்டுக்கு பத்துப் பன்னிரண்டு ரூபிள் கட்டணம் கட்டினால் போதும். ஆனால், புதுத் திட்டப்படி ரஷ்யாவை விட்டு நிரந்தரமாய் வெளியேற விரும்புகிறவர்கள், தங்கள் அனுமதிச் சீட்டுக்காக 800 முதல் 1,500 டாலர் வரை ரொக்கமாகக் கட்டவேண்டும்! அந்நியச் செலாவணியில் இவ்வளவு பெரிய தொகை ஒன்றைக் கட்டினால், எங்கோ ஸைபீரியாவில் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் ஒரு எலும்புக்கூட்டுக்கு கதிமோட்சம் ஏற்படும்; சுயேச்சையாய் நடமாடுவோம் என்ற நம்பிக்கையையும் இழந்துவிட்ட அந்த "மக்களின் விரோதியை" வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய ரஷ்ய சர்க்கார் தயாராயிருக்கும்!

பட்ஜெட் திட்டத்தை எப்படியாவது சரிக்கட்ட வேண்டும் என்ற கவலை பாரிஸில் இருந்து எங்களுக்கும் இருந்ததென்றாலும், இம்மாதிரி மனிதர்களைப் பண்டமாற்று செய்வது எங்களுக்குப் பிடிக்கவில்லை. இந்த விவகாரத்தில் நாங்கள் அதிகம் ஈடுபடவில்லை. ஆனால் பல ரஷ்ய தூதர்கள் இதில் மும்முரமாய் ஈடுபட்டு, நாட்டுக்கு நிறைய நாணயச் செலாவணி சேர்த்துக் கொடுத்தார்களாம்.

1930-ம் வருஷ முடிவில் எங்கள் தாயகத்திலிருந்து கிடைத்த செய்திகள் மிகவும் கவலை தருவதாயிருந்தன. கைத்தொழில்கள் அமைப்பதில் பெருமித வெற்றி கண்டுவிட்டதாய்க் கூறப்பட்டபோதிலும், மக்கள் நிலைமை பற்றிய விவரங்கள் திருப்தியளிப்பதாயில்லை. கூட்டுப் பண்ணை முறையை நிர்ப்பந்தமாய் அமுல் செய்வது, பணக்கார விவசாயிகளைக் கைது செய்து கடத்துவது, அறிஞர்களுக்குத் தண்டனை, கட்சியில் பிணக்கு, ரேஷன் திட்டத்தில் நெருக்கடி, நாட்டின் எல்லைப் பகுதிகளில் கலகங்கள்,—எங்கும் அமைதி இல்லை. வெளி நாடுகளில் ரஷ்ய வர்த்தக தூதுகோஷ்டிகளில் உழைக்க அனுப்பப்பட்ட சில நிபுணர்கள் மாஸ்கோ திரும்ப மறுத்து விட்டார்கள். அவர்களில் பலர் வெளிநாடுகளில் பல கம்பெனிகளில் வேலை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களில் பெரும்பாலோருக்கு அரசியல் பற்றுதல் எதும் கிடையாது; ரஷ்யாவில் தரித்திர வாழ்க்கைக்குத் திரும்ப அவர்கள் விரும்பவில்லை. அவ்வளவுதான்.

இதனால், வெளிநாடுகளிலுள்ள ரஷ்ய தூதர் காரியாலயங்களிலும் இதர ஸ்தாபனங்களிலும் இருந்தவர்களுடைய பூர்வோத்திரங்களைப் பரிசீலனை செய்வதென்று கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானித்தது. இந்த ஆள் வடிகட்டும் வேலைக்கென ஒரு பரிசீலனை கமிஷன் ஐரோப்பாவின் சகல தலைநகர்களுக்கும் விஜயம் செய்து, ஆங்காங்கே உள்ள ஸோவியத் பிரதிநிதிகளை ஈவு இரக்கமின்றிக் குறுக்கு விசாரணை செய்தது. அவர்களுடைய

அந்தரங்க வாழ்க்கை, பொழுது போக்கு, குடும்ப விவகாரங்கள், நண்பர்கள்—ஒன்றுவிடாமல் எல்லா விஷயங்களையும் தோண்டித் துருவி ஆராய்ந்தார்கள். கமிஷன் எங்களையும் விசாரித்தது. கமிஷன் அங்கத்தினர்களில் ஒரு கிழவனார் மமதையுடன் எங்கள் போக்கைக் கடுமையாய்க் கண்டித்தார். நாங்களெல்லோரும் சுற்றிலுமுள்ள பூர்ஷ்வா சூழ்நிலையில் மயங்கிப்போய் கம்யூனிஸக் கொள்கையிலிருந்து தவறிவிட்டது போல அவர் எண்ணினார். எனக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் நினைப்பது தவறென்று காரசாரமாய்ப் பதிலளித்தேன். இது எதிர்பாராதவிதமாய்ப் பலனளித்தது. பாரிஸிலுள்ள ரஷ்யர்களின் கம்யூனிஸ்ட் கமிட்டியின் காரியதரிசியாக என்னைத் தேர்ந்தெடுக்கும்படி கட்சியின் மத்தியக் கமிட்டி மாஸ்கோவிலிருந்து சிபார்சு அனுப்பியது! பரிசீலனைக் கமிஷன்முன் ஆஜரானவர்கள் சுமார் நூறுபேரில், இவ்வாறு தண்டனையின்றித் தப்பியவர்கள் பதினாறேபேர்தான். மற்றவர்களில் சிலர் கண்டனத்துக்குள்ளானார்கள், சிலர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர், சிலருக்கு வேலை போயிற்று.

பாரிஸில் எனக்குமுன் கட்சிக் காரியதரிசியாக இருந்தவர்கள் மனப்பூர்வமாய் உழைக்கவில்லை. ஆகையால், பொய்யும் பித்தலாட்டமும் சகஜமாயிருந்தன. இதை ஒழிப்பதில் நான் முனைந்தேன். இதில் பாரிஸிலிருந்த எங்கள் தூதர் டவ்கலேவ்ஸ்கி எனக்கு உறுதுணையாயிருந்தார். நானும் அவரும் இதனால் நெருங்கிய நண்பர்களானோம். கலை, இலக்கியம் முதலியவைகளில் பற்றுதலுள்ள ரஸிகர் அவர். சில சமயம் நானும் அவரும் சீட்டாடுவோம். ஸோவியத் பாங்கின் பாரிஸ் கிளைத்தலைவர் மூரடியான், பெட்ரோலிய நிபுணர் ஆஸ்ட்ராவ்ஸ்கி ஆகிய இருவரும் எங்களுடன் சேர்ந்து விளையாடுவார்கள். மூரடியான் இப்போது (1945-ல்) எங்கோ ஒரு காவல் கூடத்திலோ சிறைச்சாலையிலோ வாடிக்கொண்டிருக்கிறார். ஆஸ்ட்ராவ்ஸ்கி போன இடம் தெரியவில்லை. தூதர் டவ்கலேவ்ஸ்கி,

நம்பிக்கையாக, ஆள் கவிஎடுப்புப் படலம் ஆரம்பிப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார்.

பாரிஸில் எங்களுடன் பொழுதுபோக்க வந்தவர்களில் அங்கே ரஷ்ய கான்ஸல் ஜெனரலாயிருந்த நிக்கோலஸ் குஸ்மின் ஒருவர். இவர் ரஷ்யப் புரட்சிக்கு முன்னதாகவே லெனி னுக்குக் கீழ் தொண்டராக உழைத்துவந்தவர். 1917-க்கு முன் பாரிஸில் நீண்டகாலம் வசித்தவர். புரட்சிக்குப்பின், வடக்கே வெண்கடல், ஆர்க்கேஞ்சல் பிரதேசத்தில் படை யெடுத்து வந்திருந்த பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளுக்கெதி ராய் செஞ்சேனையை நடத்திச் சென்றவர். புரட்சி முடிந்தபின், தாம் வெகுகாலமாய் வாழ்ந்து பழகிய பாரிஸ் நகரை மீண்டும் பார்க்க ஆசைப்பட்டதால், இவர் பாரிஸுக்கு கான்ஸல் ஜெனரலாக அனுப்பப்பட்டார். பாரிஸின் காற்றை சுவாசிப்பதே அவருக்குப் பேரானந்தமளித்தது.

ஒருசமயம் குஸ்மின் மாஸ்கோவுக்குப் போயிருந்தபோது, தமது நண்பர் வாரஷிலாவிடம், முதலாளித்துவ நாடொன்றில் தாம் வசிக்க நேர்ந்தது பற்றிக் குறைப்பட்டாராம். அவர் திரும்பிவந்த சில வாரங்களில் ஒரு தந்தி வந்தது. நண்ப னுக்கு உதவி செய்கிறோம் என்ற உண்மையான நம்பிக்கை யில், குஸ்மினுக்கு கிழக்கு ஸைபீரியாவில் வேலை வாங்கிக் கொடுத்திருந்த சந்தோஷச் செய்தியைத் தெரிவித்திருந்தார் வாரஷிலாவ் !

பாரிஸ் வாழ்க்கைக்குப்பின் ஸைபீரியாவின் பொட்டல் வாழ்க் கை குஸ்மினுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அங்கே அவரது வரண்ட வாழ்க்கையில் ஒரு பெண்ணைக் காதலிக்கத் தொடங்கி னார். உடனே அவரை ஆர்க்கேஞ்சல் துறைமுகத்துக்கு மாற்றி னார்கள். அங்கே துருவக்கடல் கப்பல் போக்குவரத்து அவர் மேற்பார்வையிலிருந்தது. அவருடைய துரதிர்ஷ்டம், அவர் பதவியேற்ற சின்னாட்களில் ‘ஸிபிரியாகாவ்’ என்ற கப்பலுக்கு விபத்தேற்பட்டு, அது மூழ்கியது. 1936–37-ல் அவர் விசா

முக்கியத்துவமான சமயம் இந்த சம்பவத்திற்கு அவரே பொறுப்பாளியெனக் குற்றம் சாட்டினார்கள். அவர் செய்த உண்மையான குற்றம், ஒரு காலத்தில் அவர் ஸினோவிவின் நண்பராயிருந்தார் என்பதுதான். இந்த விசாரணையில் குஸ்மின், “மக்களின் விரோதி” என்று குற்றம் சாட்டிக் கொல்லப்பட்டார்.

1931-ம் வருஷம் பாலிட்பீரோ என்னை ப்ரெஸெல்ஸ் நகரில் சோவியத் வர்த்தகப் பிரதிநிதியாக நியமித்தது. அப்பொழுது பெல்ஜியம் சோவியத் சர்க்காரை அங்கீகரிக்கவில்லை. ஆகையால் வர்த்தகப் பிரதிநிதியாகிய நான் ஓரளவு ராஜீயப் பிரதிநிதியாகவும் இருக்க நேர்ந்தது. ப்ரெஸ்ஸெல்ஸுக்கு நான் போவதற்கு அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப் பல மாதங்களாயின. அவை வருவதற்குள், இதாலியிலுள்ள மிலான் நகரில் இறக்குமதி டைரக்டர் ஜெனரல் என்ற பதவி ஏற்கும்படி அழைப்பினார்கள். இதாலியில் யந்திரங்கள் வாங்குவது என்னுடைய முக்கிய வேலை. இதில் எனது உதவிக்காக பூச்சின் என்ற கம்யூனிஸ்ட் எஞ்சினியர் மாஸ்கோவிலிருந்து வந்தார். பூச்சின் இளைஞர், சிரத்தையுடன் உழைக்கும் விஞ்ஞானி. வளர்ந்துவரும் ருஷ்ய ரஸாயனக் கைத்தொழிலை மேன்மேலும் விருத்தி செய்வதற்காக அவர் அப்பொழுது கண்ணும் கருத்துமாய் உழைத்து வந்தார். ஆனால் 1936-ல், ஸினோவிவ் விசாரணை நடந்த சமயம் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

என்னுடைய புதல்வர்கள் போரிஸ், ஷுரா இருவரும் அக்காலத்தில் மாஸ்கோ நகருக்கு வெளியே இருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் படித்து வந்தனர். நான் இதாலியில் இருந்தபோது அவர்களைப் பார்த்து வந்த ஒரு நண்பர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். ‘இடம் அழகாய்த்தான் இருக்கிறது. காற்றோட்டமான ஸ்தலம்தான். ஆனால் குழந்தைகளோ

பட்டினியால் தவிக்கிறனர். அவர்கள் பேச்சு கிறுக்குமாக இருக்கின்றது. துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறார்கள். பள்ளிக்கூடத்திலுள்ள வயதான பையன்கள் அங்குள்ள மாணவிகளிடம் தவறாக நடந்துகொள்கிறார்கள்'—என்றெல்லாம் எனது நண்பர் எழுதினார். முன்னர் பாரிஸில் இருந்தபோது நான் மாஸ்கோவுக்குச் சென்ற சமயம் ருஷ்யாவில் உண்மை நிலைமை எப்படியிருக்கிறது என்பதை நேரில் பார்த்திருந்தேன். ருஷ்யாவில் வாழ்க்கை மிளிர்கிறது, அங்கே மக்களின் சுபிட்சம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது என்றெல்லாம் ருஷ்ய சர்க்கார் பத்திரிகைகளும் ருஷ்யாவிடம் அனுதாபமுள்ள சில வெளிநாட்டுப் பத்திரிகைகளும் அலுப்பின்றி வர்ணிப்பது வழக்கம். ஆனால் எனது நண்பருடைய கடிதமும், ஏற்கெனவே நான் நேரில் பார்த்திருந்த விஷயங்களும் என்னுடைய பையன்கள் என்னுடன் இருப்பதே மேல் என்று தீர்மானிக்கத் தூண்டின.

என் பையன்கள் மிலான் ஸ்டேஷனில் வந்து இறங்கிய சமயம் நான் அவர்களை ஸ்டேஷனில் சந்தித்தேன். எட்டு வயதான அவர்கள் இருவரும் நோஞ்சான்களாய் இருந்தனர். அவர்கள் உடை மோசமான நிலையில் இருந்தது. பாவம், இத்தனை வருஷமும் அவர்களுக்குக் கிடைத்தது இதுதான் போலும்! வரும் வழியில் வியன்னா ஸ்டேஷன் போஜனசாலையில் ஏராளமான உணவுப் பொருள்களைக் கண்டதும் அவர்கள் பிரமித்துப் போனதாய் அவர்களை அழைத்து வந்த பெண் கூறினாள். தங்கள் வாழ்க்கையிலேயே கனவும் கண்டிராத அளவு உணவைக்கண்டு அவர்கள் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவில்லை. போரிஸ், "இவர்கள் இங்கே தங்கள் ஐந்து வருஷத் திட்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டார்களா? அதனால்தான் இவ்வளவு உணவு இருக்கிறதோ?" என்று கேட்டானாம். இந்த வாக்கியம் பிற்காலத்தில் மாஸ்கோவில் மிக்க பிராபல்யம் அடைந்தது, அதற்கு அப்பாலும் பரவியது.

ஏழு மாத காலத்திற்குப் பிறகு பெல்ஜியம் போவதற்கான அனுமதிச் சீட்டுகள் வந்து சேர்ந்தன. நானும் ப்ரஸல்ஸ் நகருக்குக் கிளம்பிச் சென்றேன். என்னுடைய குமாரர்களை கடலோரத்தில் உள்ள ஒரு பெரிய கிராமத்தில் விட்டுவிட்டு தலைநகரில் எனது அலுவல்களைக் கவனித்து வந்தேன்.

புது இடத்தில் எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தபோதிலும் கொஞ்சம் கொஞ்சமாய் வர்த்தகத்தை விருத்தி செய்வது சாத்தியமாயிற்று. கல்நார், மாங்கனீஸ் முதலியவைகளை விற்பதற்கு ஏற்பாடு செய்தேன். ரஷ்ய மரங்கள் விற்பனையும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது.

சில மாதங்களுக்கெல்லாம் நான் லண்டனுக்குப் போக வேண்டிய அலுவல் ஏற்பட்டது. அந்த மகத்தான ஆங்கிலேய நகரம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆங்கிலேய நாவலாசிரியர்களில் பெரும்பாலோரது நூல்கள் ரஷ்ய பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருந்ததால் எனக்கு இங்கிலாந்தைப் பற்றித் தெரியும். வறுமை, வெளிப்பூச்சு வேஷம், ஒழுங்கு, பழமைக்கு மரியாதை, பொதுவான நல்ல குணம், நான் கண்டிராத அளவு உந்நத வாழ்க்கை—இவை எல்லாம் கலந்தது ஆங்கில வாழ்க்கை என்பது என் எண்ணம். வெண்மையான டோவர் குன்றுகளை முதன் முதல் தடவையாகப் பார்த்தபோது எனக்கு அலாதி சந்தோஷம் உண்டாயிற்று. சீக்கிரம் பழைய உலகின் மிகப்பெரிய தலைநகரான லண்டன் வாழ்க்கையில் ஐக்கியமானேன். அந்நகரின் வாழ்வில் மிக நல்ல அம்சமும் இருந்தது; மிக மோசமான அம்சமும் இருந்தது. லண்டன் மக்களிடையே நான் கண்ட குறிப்பிடத்தக்க குணம், தனி மனிதர் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடு உணர்ச்சிதான்.

லண்டனிலிருந்து ப்ரஸ்ஸெல்ஸ் திரும்பியபோது, நான் இல்லாத சமயத்தில் என் காரியாலயமும் வாசஸ்தலமும் போலீஸ் சோதனைக்குள்ளாகியிருந்ததை அறிந்தேன். காரியாலய

இரும்புப் பெட்டியை பெல்ஜிய அதிகாரிகள் மூடி ஸீல் வைத்திருந்தனர். நான் உடனே போலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு வரவேண்டும் என்று ஒரு குறிப்பும் காத்திருந்தது. அதன்பேரில் போலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு உடனே சென்றேன். என்னுடன் வந்து அந்த இரும்புப் பெட்டியை சோதனை செய்ய விரும்புவதாய் அவர்கள் தெரிவித்தனர்.

என் இரும்புப்பெட்டி முற்றிலும் காலியாக இருந்தது. போலீஸ் அதிகாரிகள் அடைந்த வியப்புக்கு அளவேயில்லை. ஸீல் வைப்பதற்கு முன்னரோ அல்லது பின்னரோ, எப்படியோ நான் வெகு சாதுரியமாய் அந்த இரும்புப் பெட்டியைக் காலி செய்திருக்கவேண்டும் ; நான் பலே தந்திரசாலிதான் என்று அவர்கள் நினைத்தார்கள் !

இவ்விஷயத்தை மாஸ்கோவுக்கு அறிவித்ததும், நேரில் வந்து விவரமாய்த் தெரிவிக்கும்படி உத்தரவு வந்தது. பெல்ஜியத்தில் உள்ள ஆஸ்டெண்ட் நகரில் என்னுடைய குழந்தைகளை விட்டுவிட்டு மாஸ்கோவுக்குக் கிளம்பிச் சென்றேன். அங்கே காரியம் முடிந்ததும் மறுபடி ப்ரஸ்ஸெல்ஸ் நகருக்குப் பிரயாணமானேன். ஆனால் அதற்குள்ளாகவே என்னுடைய அனுமதிச்சீட்டு காலாவதியாகிவிட்டது. பெர்லின் நகரில் உள்ள பெல்ஜிய கான்ஸல் ஜெனரலிடம் சென்று என் அனுமதிச்சீட்டைப் புதுப்பிக்கும்படிக் கேட்டேன். என்னுடைய அனுமதிச்சீட்டைப் புதுப்பிக்கவேண்டாம் என்று தீர்மானமான உத்தரவு வந்திருப்பதாகவும், நான் பெல்ஜிய எல்லைக்குள் பிரவேசிக்கக்கூடாதென்றும் அவர் கூறினர்.

இதன் பயனாய் நான் மாஸ்கோவுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. அங்கே, யந்திர சாமான் இறக்குமதி செய்யும் "ஸ்டாங்கோ இறக்குமதி ஸ்தாபன"த்துக்கு உபதலைவனாய் நியமிக்கப்பட்டேன். கைத்தொழில் சாதனங்கள் உலகில் எங்கே கிடைத்தாலும் வாங்குவதுதான் என் முக்கியவேலை. இறக்குமதியான சாமான்களில் பெரும்பாகம் ரஷ்ய ராணுவ

தனியாடைக் கைத்தொழிலுக்கும் விசேஷ உற்பத்திக் கைத்தொழிலுக்கும் உபயோகப்பட்டது. அவ்விதக் கைத்தொழில்களும் ஒவ்வொரு அதிவேகமாய் விருத்தி செய்யப்பட்டு வந்தன.

• • •

1930-ம் வருஷம் 16-வது கட்சி மகாநாட்டுக்காக நான் விசேஷ அழைப்பின்பேரில் மாஸ்கோ போயிருந்தேன். அந்தத் தடவைதான் மாஸ்கோவில் சற்று அதிககாலம் தங்கியிருந்தேன். பாரிஸ், லண்டன், பெர்லின் ஆகிய நகரங்களிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசிகளும் இம் மகாநாட்டுக்கு வந்திருந்தார்கள்.

கட்சிக் கொள்கையை முரட்டுப்பிடிவாதமாய் நம்பியவர்கள் தவிர மற்றவர்களுக்கெல்லாம் கட்சிக் கொள்கையைப் பற்றி அப்பொழுது சந்தேகம் எழுந்தான் செய்தது. 1922 முதல் 1928 வரை நேர்ந்துள்ள "அபிவிருத்தி"யால், தலைநகரம் உருத்தெரியாமல் மாறியிருந்தது. வீடுகளைப் பார்த்தால் பாழடைந்தவை போலிருந்தன. கடைகள் என்பவை வெகு அபூர்வம். இருந்த கடைகளிலும், அலமாரிகள் காலியாக இருந்தன. கடை ஜன்னல்களில் காலி அட்டைப் பெட்டிகளும் தகர டப்பாக்களுமே இருந்தன. கேட்பவர்களுக்கு பதில் சொல்லி அலுத்துப்போன கடைக்காரர்கள் அந்த டப்பாக்களின்மீது கொட்டை எழுத்துகளில் "காலி" என்று எழுதி ஒட்டியிருந்தார்கள். மக்களின் உடைகள் நைந்து கிழிந்திருந்தன. துணியின் தரமும் மட்டமாயிருந்தது. இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் என்னுடைய பளபளப்பான பாரிஸ் உடைகளில் நான் தெருவில் போவதே சங்கடமாயிருந்தது.

எந்தப் பண்டத்தையெடுத்துக் கொண்டாலும் ஒரே பஞ்சப் பாட்டுதான். ஸோப்பு, பூட்ஸ்கள், காய்கறிகள், இறைச்சி, வெண்ணெய், எண்ணெய்ப் பொருள்கள்—இவை கிடைப்பது குதிரைக் கொம்பாயிருந்தது. மிட்டாய்க் கடைகளுக்குமுன் ஜனங்கள் நெடுந்தூரம் வரிசையாய் நிற்பார்கள். ரஷ்யாவை

அலைய அடியாய் சுற்றிப்பார்த்த பின், மக்கள் உணவுக்காக நிற்கவில்லையே, மிட்டாய்க்காகத்தானே நிற்கிறார்கள் என்று பெருமையாய்ச் சொல்லிக் கேட்டிருக்கிறேன். உண்மையென்னவென்றால், உணவு கிடைக்காமல் தவித்த மக்கள், உணவுப் பொருள் எது கிடைத்தாலும் போதுமென்று மிட்டாய்க்கடைக்கு முன் மணிக்கணக்கில் நின்றார்கள். சோயாவின் பருப்பும் செயற்கை சர்க்கரையும் கலந்து செய்யப்பட்டிருந்த அந்த மோசமான மிட்டாய்களுக்கு அவ்வளவு கிராக்கி இருந்தது.

அக்காலத்தில் மக்களின் சம்பளவிகிதமும் அதிகமாயிருக்கவில்லை. அப்படியே பணம் வந்தாலும் உணவும் அன்றாடத் தேவைகளும் கிடைக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் கிடையாது என்று சொல்வார்கள்; அது உண்மைதான். ஆனால், ஒரு தொழிலாளி தனக்குக் கிடைத்த சம்பளத்தைக் கொண்டு ஜீவனம் செய்வதுதான் கடினமான காரியமாயிருந்தது. அநேகமாய்க் காலியாயிருந்த கூட்டுறவுப் பண்டகசாலைகளில் மக்கள் பொறுமையுடன் இரவு பகலாய் வரிசையாக நிற்பார்கள். அங்கே கிடைத்த சொற்ப உணவுப் பண்டங்களைப் பெற அத்தனை போட்டி! ரஷ்யா தவிர வேறெந்த நாட்டிலும் அவ்வளவு மோசமான பண்டங்களை விற்பவர்கள் பொதுஜன கோபத்துக்கு இரையாகியிருப்பார்கள்.

கிராமங்களிலோ, நிலைமை நகரங்களைவிட மோசமாய் இருந்தது.

பண்ட நெருக்கடியைவிட மக்களிடையே ஏற்பட்டிருந்த லட்சிய நெருக்கடி அதிகமாயிருந்தது. ஐந்து வருஷத் திட்டத்தை நடத்தி வைப்பதற்குப் பொறுப்பான கம்யூனிஸ்ட்கள், அறிஞர்கள், தொழில் நிபுணர்கள், தொழிலாளர்கள் யாவர் முகத்திலும் அலுப்பும் கவலையுமே காட்சியளித்தன. நிலைமையை சாவதானமாய் அமைதியுடன் கவனிக்கும் தன்மையை அவர்கள் இழந்து விட்டனர். அவர்களுக்கு கறார் கண்டிப்பான மேல் உத்தரவுகள் ஓயாமல் வந்துகொண்டே

யிருக்க, நிலைமையோ கட்டுக்கு மீறிச் சென்றது. சங்கடங்கள் அதிகரித்தனவே ஒழியக் குறையவில்லை. இருந்தும், தன் ஆடம்பரமான பொய்க்கணக்குகள் காட்டும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தக் கலையே அவர்களின் பெரும்பாலோரை அரித்துத் தின்றது.

கட்சியின் 16-வது மகாநாட்டில் விசேஷமான சம்பவம் எதும் நடக்கவில்லை. பந்தய விளையாட்டுக்களைப்போல, மகா நாட்டில் கரகோஷம் பலமாயிருந்ததே தவிர, நிலைமையைப் பற்றிப் பிரத்யட்ச உணர்ச்சிகொண்ட விவாதம் எதும் நடக்க வில்லை. சர்வதேச நிலைமையைக் குறித்து ஸ்டாலின் பேசினார். வழக்கம்போல, அவரது பேச்சு சுமாராய்த்தான் இருந்தது. தமது ஜார்ஜியா மாகாண உச்சரிப்புடன் கையை ஆட்டி ஆட்டிப் பேசினார் அவர். உலகம் நெடுக கம்யூனிஸம் வெற்றிமாலை சூடும் நாள் நெருங்கிவிட்டது, ஜெர்மனியில் புரட்சி ஏற்பட விருக்கின்றது என்று உற்சாகமூட்டினார். பிரெஞ்சு ராணுவத் தலைவர்கள் ஸோவியத் குடியரசுக்கெதிராய் ஆக்கிரமிப்பு நோக் கம் கொண்டிருக்கிறார்களென்று அவர்களைக் கண்டித்தார்.

மகாநாட்டு நடவடிக்கைகள் எனக்கு ஏமாற்றத்தையளித்தன. ஆனால் நான் என் அபிப்பிராயத்தை வெளியே சொல்லத் துணியவில்லை. கட்சிப் பிரமுகர்கள் ஸ்டாலின் சொல்வதற் கெல்லாம் கரகோஷம் செய்தார்கள். அவர்கள் மனதில் இருந்த சந்தேகங்களுக்கும் அங்கே நடந்த பிரசங்கங்களுக்கும் சம்பந்தமே இல்லை. கூடினோம், நம்முடைய கைத்தொழில் "சாதனை"களுக்குப் புகழுரை பாடினோம், கட்சியின் பொதுக் கொள்கைகளை அங்கீகரித்தோம் என்று மகாநாடு கலைந்தது. நாட்டு மக்கள் பொறுமையின் எல்லையை அடைந்துவிட்டனர் என்பதைப்பற்றியோ, அடுத்தபடி என்ன நடக்கும் என்று எல்லோருக்கும் இருந்த கவலையைப் பற்றியோ மகாநாட்டில் விவாதமே இல்லை.

கட்சியின் வலதுசாரித் தலைவர்கள் பேச அனுமதிக்கப்பட்டார்கள்—தங்கள் போக்கு தவறானது, கட்சியின் பொதுக் கொள்கையே சரியானது என்று வருத்தம் தெரிவிக்க. அவர்கள் தோற்றுவிட்டார்கள் என்பதைவிட, முற்றிலும் சீர்குலைந்து போய்விட்டார்கள் என்பதே பொருத்தமாயிருந்தது. தங்கள் கொள்கைகளுக்காக சண்டை போடவும் திராணியற்றிருந்த அவர்கள், அப்போது முயற்சி செய்திருந்தால்கூட ஸ்டாலினுக்கு பலத்த எதிர்ப்பு உண்டாக்கியிருக்கலாம். வலதுசாரித் தலைவர்களில் டாம்ஸ்கியின் பேச்சு கம்பீரமாயிருந்தது. ஸ்டாலின் தமது பிரசங்கத்தில் டாம்ஸ்கியைப் பற்றிக் கிண்டல் செய்தார்.

கட்சிப் பிரமுகர்களின் கண்மூடித்தனமான பேச்சுகளுக்கிடையே, விவசாய மந்திரி டகால்லேவ், நாட்டில் கால்நடைகள் களைக்கு வழக்கின்றிக் கொல்லப்பட்டிருப்பதாய் தமது இலாகா அறிக்கையில் தெரிவித்தார். உண்மையைச் சொல்லத்துணிந்த இந்த அதிகாரி பின்னர் ஆள் களையெடுப்பின்போது மறைந்து போனார்.

ஸ்டாலின் தமது ஐந்து வருஷத்திட்டத்தை திறமையான நிர்வாகத்தினால் சாதிப்பதற்கு பதிலாக, பாமர மக்களின் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் வானளாவத் தூண்டிவிடுவதன்மூலமே சாதிக்க முயன்று வந்தார். இந்த முறையால் சில அதிசயிக்கத்தக்க வெற்றிகள் கிடைத்தன, உண்மைதான். ஆனால், இந்த சாதனைக்கான செலவுகளும் வானளாவிச் சென்றன.

ரஷ்யக் கைத்தொழில் அபிவிருத்திபற்றி எனக்கு நேரிடை அனுபவம் நிறைய உண்டு. ஏராளமான பொருள் நஷ்டமும்-ஆள் நஷ்டமும் அடைந்து நாங்கள் பொருள் உற்பத்தியின் பால பாடத்தைக் கற்றோம் என்றே நினைக்கின்றேன். கைத்தொழில் வளர்ச்சிக்காக ஆரம்பமுதல் இவ்வளவு தியாகங்கள் புரிந்துள்ள ரஷ்யா இப்போதாவது அமெரிக்காவுக்கு இணையாக வந்திருக்கிறதா ? சென்ற இரண்டாவது உலக மகாயுத்தத்

தினபோது ரஷ்யா நேச நாடாக இருந்த சமயம் அங்கே போய் வந்த பிரபல அமெரிக்கப் பத்திரிகாசிரியர்களில் ஒருவரான வில்லியம் எல். ஒயிட் மாஸ்கோ லெனின்கிராடு நகர்களிலுள்ள தொழிற்சாலைகளைப்பற்றிக் கூறியிருப்பதிலிருந்து, கைத்தொழிலில் இப்பொழுதும் ரஷ்யா எவ்வளவு தூரம் பின்தங்கியிருக்கிறதென்பது தெரிகிறது. யுத்த நிலைமையினால் ஏற்பட்ட மந்தம் என்று இதைக் கருதுவது அர்த்தமற்றது. ஏனெனில், யுத்தம் ஏற்பட்டால் மக்கள் சிந்தனை ஒரே திசையில் செல்லும்; அரசாங்க நிர்வாகத்திலுள்ள தொழில்களுக்கு இது சௌகரியமே தவிர கஷ்டமில்லை.

* * *

ஸ்டாலினை விட்டால் அவர் வகித்த பொறுப்பை ஏற்க வேறு தலைவர் இல்லை; நடு ஆற்றில் குதிரை மாறுவது போல இந்த சந்தர்ப்பத்தில் கட்சித் தலைமையை மாற்றலாகாது—இத்தியாதி காரணங்களினாலேயே 1932-ல் ஸ்டாலினிடம் கட்சி நம்பிக்கை தெரிவித்தது. ஆனால் என்ன நம்பிக்கை தெரிவித்து என்ன பயன், இரண்டு வருஷங்களில் நிலைமை மேலும் மோசமாயிற்றே தவிர சீர்படவில்லை. கைக்கும் வாய்க்குமானதோர் வாழ்க்கை நடத்துவதே பெரும் போராட்டமாகிவிட்டது!

அவ்வருஷம் உக்ரைனும் மற்றும் சில மாகாணங்களும் பஞ்சத்துக்குள்ளாயின. பஞ்சம் இயற்கைக் கோளாறால் ஏற்படவில்லை. கூட்டுப் பண்ணைமுறையை விவசாயிகள் மீது நிர்ப்பந்தமாய்ச் சுமத்தியதால் விவசாயம் சீர்குலைந்தது. இந்த நெருக்கடியின்போதும் அந்நியச் செலாவணிக்காக உணவுப் பண்டங்கள் கண்மண் பாராமல் ஏற்றுமதி செய்யப்பட்டன. கிராமங்களைப்போலவே நகரங்களிலும் தட்டுப்பாடு இருந்தது. ஆனால் அவ்வளவு கடுமையாய் இல்லை. நகரங்களில் ரேஷன் திட்டம் இருந்தது. ஆனால் இதில் சில குறிப்பிட்டவர்களுக்குத் தனிச் சலுகைகள் கிடைத்தன. சர்க்கார் காரியாலய

அதிகாரிகள் பண்டங்களை வாங்கிக்கொள்ள தனிக்கடைகள் இருந்தன. நிபுணர்களும் மேலதிகாரிகளும் வாங்கிக்கொள் வதற்காக இருந்த மற்றும் சில கடைகளில், சிறிது சிரமப் பட்டால் உணவு, உடைகள், மருந்துகள் முதலிய அபூர்வ சரக்குகள் கிடைத்து வந்தன. அந்நியர்களுக்கென இருந்த தனிக்கடைகளில் கிடைக்காத பொருளே இல்லை. அவை களுக்கான விலையை தங்கமாகவோ வெள்ளியாகவோ நகை களாகவோ அல்லது அந்நியச் செலாவணியிலோ செலுத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தம் மட்டும் இருந்தது. இந்தக்கடை கள் அந்நியருக்கென்று இருந்தனவே தவிர, இங்கே பெரும் பாலும் ரஷ்யர்களே சாமான் வாங்கிச் சென்றனர். தங்க மோதிரங்கள், வெள்ளி ஸ்பூன்கள், கடிகாரங்கள், சைனு, ஆர்ஜெண்டீனு தேச நோட்டுகள்—இவைகளைக்கூட இக்கடை களில் ஏற்றுக் கொண்டார்கள். இவைகளுக்கு பதிலாக ஸோப்பு, தேயிலை, ஆஸ்ப்ரின், துணிகள், பாதரட்சைகள் முதலிய அபூர்வப்பொருள்களை இக்கடைகள் விற்றன.

* * *

1933-ம் வருஷம் இன்புளுயன்ஸா நோய் கண்டு கிரெமலின் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்தேன். அங்கே டாக்டர் லெவின் என்பவர் எனக்கு வைத்தியம் பார்த்தார். டாக்டர் லெவின் தமது நோயாளிகளிடம் மிக்க கவனத்துடன் நடந்து கொள்வார். அரசாங்கத்துப் பிரமுகர்கள் அனைவருக்கும் அவரிடம் நம்பிக்கையுண்டு. ஆனால் இப்படிப்பட்ட மனிதர் 1938-ல் துரோகி எனச் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது அவர் வெளியிட்டதாய்க் கூறப்பட்ட வாக்குமூலத்தில், அவர் பிரபல ரஷ்ய ஆசிரியர் மாக்ஸிம் கார்க்கியின் உயிருக்கு ஹானி விளைவித்தார் என்று கூறப்பட்டிருந்தது. ரகஸியப் போலீஸ் தலைவர் யாகோடாவினுடைய உத்தரவின்படி கார்க்கி யின் அந்திய காலத்தில் அவருக்கு மருந்து கொடுத்து அவரது மரணத்தை துரிதப்படுத்தியதாக அவர் ஒப்புக்கொண்டதாய் அவ்வாக்குமூலம் கூறிற்று. யாகோடா ஸ்டாலினுடைய

கையானா. இந்த வழக்கின்போது அவர்மீதும் குற்றம் சாட்டப்பட்டது. அவரும் மரண தண்டனை பெற்றார். டாக்டர் லெவினை எனக்கு நன்கு தெரியும். நோயாளிகளுடைய கஷ்டத்தைக் குறைப்பதிலும் உயிரைக் காப்பதிலும் சலிக்காமல் உழைப்பவரான அவர் கார்க்கியை இவ்வாறு கொலை செய்தார் என்று சொன்னால் அது நம்பவே முடியவில்லை.

இந்த சமயம் என் மனதில் ஒரு பெரிய போராட்டம் நடந்துவந்தது. இருவரை கட்சியின் தீர்க்கதரிசனத்திலும் புத்திசாதுர்யத்திலும் அசையாத நம்பிக்கைகொண்டு, எங்களுடைய கஷ்ட நஷ்டங்கள் எல்லாவற்றிற்குமே ஐந்து வருஷத் திட்டம்தான் கதிமோட்சம் என்று நம்பியிருந்தேன். நாட்டுக்கு வெளியே வாழ்ந்து வந்ததாலும் என்னுடைய வேலையில் ஈடுபட்டிருந்ததாலும் கட்சி அதிகாரிகள் சொல்வதே உண்மை என்று நம்பிவந்தேன். சர்க்கார் பிரசாரத்தினால் முற்றிலும் ஏமாந்துபோனேன். அல்லும் பகலும் உழைக்கும்படியும் அளவுக்கு மீறிய கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளும்படியும் அரசாங்கம் மக்களைக் கேட்டுக்கொண்டு வந்தது எனக்குத் தெரியும். ஆனால் இந்தக் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்து, ஐந்து வருஷத்திட்டத்தின் பலன்களை சீக்கிரமே காண்போம் என்று நம்பியிருந்தேன். மாஸ்கோவை நேரில் பார்த்த போதுதான் உண்மை தெளிவாயிற்று. அங்கே ஒரு சிலரது வாழ்க்கையே விருத்தியடைந்திருந்தது. மற்றவர்கள் எல்லோரும், அதாவது பாமர மக்கள் அனைவரும், முன்னைவிட மோசமாகவே வாழ்ந்து வந்தனர். தாங்கள் படும் அவதியால், அவர்கள் உயிரற்ற நடைப்பிணங்களாக வாழ்ந்தனர். புகார் செய்யக்கூட அவர்களுக்குத் திராணி இல்லை.

:

நான் வசித்துவந்த கட்டடத்தின் காவலாளி சாயந்தர வேளையில் செருப்பு ரிப்பேர் செய்துவந்தான். தினம் ஏராளமான குழந்தைகள் அவனிடம் வந்துவிடும். "ஏனப்பா இப்படிக் கஷ்டப்பட்டு உழைக்கிறாய்?" என்று கேட்டேன்.

தினமும் எட்டு அல்லது பத்து மணி நேரம் உழைத்துவிட்டு போதாக்குறைக்கு இந்த வேலையையும் மேற்கொள்ளுகிறான் என்று எனக்குத் தெரியும்.

" ஏன்? எனென்றால் சாப்பாடு போதவில்லை. என் சம்பளத்தைக்கொண்டு ஏழு பேர் சாப்பிட வேண்டும். வருவா தென்னவோ 120 ரூபிள்தான். என்ன செய்வது?" என்றான்.

" இப்போதுதான் ரொட்டிக் கூப்பன் திட்டத்தை எடுத்து விட்டு அதற்கு பதிலாக சம்பளங்களை பத்தில் ஒரு பங்கு அதி கரித்திருக்கிறார்களே. அது நிச்சயம் உங்களுக்கு சௌகர்ய மான ஏற்பாடாகத்தான் இருக்க வேண்டும்" என்றேன்.

" அப்படியா நினைக்கிறீர்கள்? எங்கள் ஏழு பேருக்கும் தினம் ஐந்து கிலோ எடை ரொட்டி வேண்டும். எங்களால் உணவுக்காக வேறு ஒன்றும் வாங்கவோ முடியாது. இப்போது ரொட்டி விலையை ஏற்றிவிட்டார்கள். கறுப்பு ரொட்டி ஒரு கிலோ எடை ஒரு ரூபிளும் வெள்ளை ரொட்டி கிலோ எடைக்கு இரண்டு ரூபிளும் விற்கிறது. எனக்கு அதிகப்படியாய்க் கொடுக்கும் சம்பளம் மாதம் எட்டு ரூபிள்தானே? இன்னொரு சமாசாரமும் மறந்துவிட வேண்டாம். என் சம்பளத்தில் பத்தில் ஒரு பங்கை அதிகரித்துவிட்டதாய் நினைக்கிறீர்களா? இல்லை. என்னுடைய ரேஷன் கார்டின்படி ரொட்டிச் செலவு எவ்வளவோ அதில் பத்தில் ஒரு பங்கைத்தான் அதிகப்படி சம்பளமாய்த் தருகிறார்கள். நான் இரவில் வேலை செய்யா விட்டால் ஒன்று எங்காவது கொள்ளையடிக்கவேண்டும், அல்லது என்னுடைய குடும்பம் பட்டினி கிடக்கட்டும் என்று விட்டுவிட வேண்டும்" என்று அவன் பதிலளித்தான்.

தொழிலாளர் புரட்சி நடந்து பதினைந்து வருஷங்களுக்குப் பின்னும் உழைப்பாளிகள் இவ்வளவு மோசமான நிலையில் இருந்தார்கள் என்பதை அறிந்தபோது எனக்கு ஆத்திரமாய்

யாந்தது. ஆத்திரம் மட்டுமல்ல, வெட்கமாகவும் இருந்தது: லட்சக்கணக்கான பாமர மக்கள் வறுமையில் மாண்டு மடிந்தனர். சுபிட்சம் வந்துவிட்டது என்ற கருத்தில், தொழிலாளருக்குமட்டும் பண்டங்களை மலிவாக விற்கும் கடைகளை மூடி விட்டனர். புதிதாய்த் திறக்கப்பட்ட கடைகளில் எல்லாரும் வாங்கலாமென்றிருந்தது. விலைகள்தான் அகாதமாயிருந்தன. முன்பெல்லாம் இந்த விலையில் பண்டங்களை விற்றவர்கள் கடுந் தண்டனைக்குள்ளானார்கள். இப்போதோ இவர்களைக் கேட்பாரில்லை.

விலைவாசி உயர்வினால் ரூபிள் மதிப்பற்றிருந்தது. 1926-ல் ஒரு ரூபிளுக்கு எவ்வளவு சாமான்கள் வாங்க முடிந்ததோ அதில் நாற்பதில் ஒரு பங்குதான் இப்போது வாங்க முடிந்தது. விலைவாசிகள் விஷம்போல் ஏறியிருந்தும் சம்பள விகிதங்கள் முன்னை இருந்ததைப்போல் இரண்டு மடங்குகூடப் பெருக வில்லை. கைத்தொழில் அபிவிருத்தி என்ற பெயரால் அரசாங்கம் மக்களைக் கொள்ளையடித்தது என்றே சொல்லவேண்டும்.

பாமர மக்களை "நாட்டு மன்னர்" என்று படாடோபமாய் வர்ணிப்பது குறையவில்லையென்றாலும், அம் "மன்னர்"களின் அவதிக்கு விடிவே ஏற்படவில்லை. மக்களின் அவதி அதிகாரவர்க்கத்தின் கண்ணில் படவில்லை. அவர்கள் ஸ்டாலினுடைய ஸர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தனர்.

இந்த உண்மை எனக்கு நிதானமாய்த்தான் புலப்பட்டது. இதை உணர்வதற்குள் என் மனதில் பலத்த போராட்டம் நடந்தது. உண்மையை நேரில் பார்த்தும், கட்சியுடன் என்னைப் பிணைத்த பழைய பாசங்களும் உணர்ச்சிகளும் நான் உண்மையை உணர முடியாமல் தடுத்துவந்தன. கட்சியே கதியென, எனக்கு வயதுவந்த நாள் முதலாக கட்சிக்காகவே வாழ்ந்து வந்தவன் நான். எதை நினைத்தாலும், எதைச் சொன்னாலும், எதைத் தீர்மானித்தாலும் கட்சியை அது எப்படி

யிருக்கும் என்ற முறையிலேயே யோசனை செய்வேன்; தனிப் பட்ட எங்களுடைய ஞானத்தைவிட கட்சியின் பொதுப்படை ஞானம் மேலானது என்ற நம்பிக்கை என்னுள் வேரூறியிருந்தது. இதுவரை இப்படி வளர்ந்திருந்த எனக்கு, இப்போது சுயமாக யோசனை செய்து, கட்சிப் பற்றின்றி சுயமாய்த் தீர்மானிக்கா விட்டால் மண்டை வெடித்துவிடும் போலிருந்தது. "அப்படி யென்றால், கட்சியின் நடத்தையை நான் சீர்தூக்கிப் பார்த்து, அதைக் கண்டிக்கக்கூட நேருமே! அப்படிக் கண்டிப்பது சரியா?" என்ற கேள்வி என் மனதில் எழுந்தது.

கட்சிப் பற்றின்றி நான் சுயமாய் யோசனை செய்து, பிரச்னைகளைப்பற்றி சுயமாய் முடிவுகட்ட ஆரம்பித்தது இப்படித்தான். ஆனால், என் சொந்த யோசனையில் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்படப் பல வருஷங்களாயின.

இப்படி மனக்குழப்பமடைந்து தவித்தது நான் ஒருவன் மட்டுமல்ல. பல்லாயிரக்கணக்கான ரஷ்ய கம்யூனிஸ்ட்களுக்கு இதே அனுபவம் ஏற்பட்டிருந்தது. ரத்தம் தோய்ந்த 1937–38-ம் வருஷம் அவர்களில் பெரும்பாலோர் மனதில் இந்த போராட்டம் நிகழ்ந்ததென்பது உண்மை.

* * *

"ஸ்டாங்கோ இறக்குமதி ஸ்தாபன"த்தில் நான் நியமிக்கப் பட்டதுமுதல் ரஷ்ய அதிகார வர்க்கப் பிரமுகர்களில் ஒருவனாகி விட்டேன். அரசாங்க மேலதிகாரிகளில் ஒருவன் என்ற வகை யில், அரசாங்கத்தின் உள்ளெண்ணங்களை அறியும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

ரஷ்யா அக்காலத்தில் வெளிநாடுகளில் நிறைய சாமான்கள் வாங்கிவந்தது. ஆனால், ரஷ்ய அதிகாரிகள், "நாம் வாங்க வேண்டுமென்றால், அந்நிய முதலாளிகள் மாஸ்கோவுக்கு வரட்டுமே!" என்று ஜம்பமாய்ச் சொல்வது சகஜமாயிருந்தது. இவ்வாறு மாஸ்கோவுக்கு வந்திருந்த இங்கிலீஷ்காரர் ஒருவரை

நானே சந்தித்தேன். எங்களுடைய "பால் பேரிங்" தொழிற்சாலைக்கு அவரை அழைத்துச்சென்று காட்டினேன்.

"பால் பேரிங்கு" களை உற்பத்தி செய்வது சிரமமான காரியம். மயிரிழை பிசகாத நுணுக்கமான யந்திரங்களும், அதற்கொத் தாற்பரியமாய வேலை செய்யும் தொழிலாளர்களும் வேண்டும். இவைகளைச் செய்வதற்கான யந்திரங்கள் விலை அதிகமானவை. அவைகளைப் பரிபாலிப்பதிலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ப்ரௌன் என்ற அந்த ஆங்கிலேயருக்கு நான் எங்கள் தொழிற்சாலையைக் காட்டிவந்தபோது பல யந்திரங்கள் சும்மா நிற்பதைக் கண்டோம். அவைகளை ஓட்டுவதற்கு சரியான ஆட்கள் இல்லாமலே அவை சும்மா நின்றன. அதி நுணுக்கமான சில வேலைகளைச் செய்யும் யந்திரங்கள் இருந்த அறைகளுக்குப் போனபோது, மிஸ்டர் ப்ரௌன் தரையைப் பார்த்தார். தரை சிமிட்டித் தரை. "சிமிட்டித்தரை கூடாது. யந்திர ஓட்டத்தினால் சிமிட்டியிலிருந்து தூசி கிளம்பி யந்திரங்களில் படிந்து அவைகளை சீக்கிரமே கெடுத்துவிடும். தரைமீது எண்ணெய்ப் பசையுள்ள விரிப்பு போடுங்கள்" என்றார் அவர். இந்த யோசனையை நான் கைத்தொழில் இலாகாவுக்குத் தெரிவித்தேன்.

இரண்டு வருஷங்கள் கழித்து நான் அதே தொழிற்சாலைக்கு மறுபடி போக நேர்ந்தது. அங்கே உற்பத்தியான "பால் பேரிங்கு" கள் மிக மோசமாய் இருக்கின்றன என்று புகார்கள் வந்து கொண்டிருந்தன. தொழிலாளர்களில் யாரோ நாசவேலை செய்கிறார்கள் என்று காரணம் சொன்னார்கள். விசாரணைமேல் விசாரணை நடந்தது. அத்துடன், "என்ன ஆனாலும் உற்பத்தித் திட்டத்தை நிறுத்த மாட்டோம்" என்ற கோஷத்துடன் புதுப்புது முறைகளைக் கையாண்டனர். ஆயினும், அங்கே உற்பத்தியான "பால் பேரிங்கு" களில் ஏராளமானவை சரியாய் இல்லையென்று நிராகரிக்கப்பட்டன. நான் தொழிற்சாலையின் தரையைக் கவனித்தேன். பழைய

திமிட்டிருந்ததை அப்படியே இருந்தது! யந்திரங்களை நிறுத்தி தரையில் தேவையான மாறுதல்களைச் செய்வதற்கு அவகாசம் இல்லையென்று தொழிற்சாலை அதிகாரிகள் கூறினர். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இந்தத் தொழிற்சாலையைப் பற்றிப் பிரமாதமாய்ப் புகழ்ந்து, எப்படியாவது உற்பத்தியை மேன் மேலும் பெருக்கவேண்டும் என்று தூண்டிக்கொண்டிருந்தனர். இதனால், தொழிற்சாலை நிர்வாகிகள், துல்லியமான இந்த யந்திரங்களை நிறுத்தாமல் இரவு பகலாய் ஓட்ட வேண்டி யிருந்தது. சுத்தம் செய்வதற்குக்கூட அவகாசம் இன்றி ஓடியபடியால், இந்த யந்திரங்கள் தேய்ந்துபோய் அடிக்கடி நிற்க ஆரம்பித்தன; அதை ஓட்டியவர்களுக்கும் அலுப்பு ஏற்பட்டுவிட்டது. ஆனால் யந்திரக் கைத்தொழில் இலாகாவோ, கறார் கண்டிப்பாக, தொழிற்சாலையின் உற்பத்தி இன்னும் அரை மடங்கு அதிகரிக்கவேண்டும் என்று வற்புறுத்தியது. தொழிற்சாலையின் தலைவர் போடரோவ் முடியாது என்றார், உடனே அவர் சதிகாரர் என்று வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அதன்பின், மற்றும் பலரைப் போலவே, அவரும் மறைந்து போனார்.

போடரோவுக்குப் பிறகு மெலாமெட் என்ற எஞ்சினியர் அங்கே பதவி ஏற்றார். அரசாங்க அதிகாரிகள் கோரியபடியே உற்பத்தியை ஒன்றரை மடங்கு பெருக்கிவிடுவதாய் வாக்களித்தார். மூன்று மாதகாலம் அவ்வாறு செய்யவும் செய்தார். அவருக்கு பிரமாதமான புகழும் ஏற்பட்டது. ஆனால், உற்பத்தியில் சேதாரமும் அளவுக்கு மீறிப் பெருகியது. இதனால் தொழிற்சாலையின் பல பகுதிகளில் வேலையை அடியோடு நிறுத்திவிட வேண்டியதாயிற்று. தொழிற்சாலையின் யந்திரங்கள் வீணாகிப்போகும்படி விட்டுவிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு, மக்களின் துரோகி என தண்டிக்கப்பட்டார் எஞ்சினியர் மெலாமெட்.

மெலமெட்டுக்கு அடுத்தபடியாக யாஸலவில் என்ற இளம் எஞ்சினியர் தொழிற்சாலையின் நிர்வாகியானார். இவருக்கு என்ன நேர்ந்ததோ எனக்குத் தெரியாது.

ருஷ்யாக் கைத்தொழில் உற்பத்தியைப்பற்றி எழுதும்போது, எங்கள் பத்திரிகைகள், உற்பத்தி புதிய சிகரத்தை எட்டி விட்டதாய் வானளாவப் புகழுவது வழக்கம். ஆனால், அதற்கான செலவைப்பற்றி அவை வாயைத் திறக்கமாட்டா. எங்கள் தொழிற்சாலைகளில் யந்திரங்களைப் பழுது பார்ப்பதென்பதே அப்பொழுது கிடையாது. ஒடிகிறவரை ஓட்டும் என்று ஓட்டிக் கொண்டேயிருப்பார்கள். ஆகையால், தொழிலாளர் சம்பள விகிதங்கள் மிகக் குறைவாயிருந்தும் உற்பத்திச் செலவு முதலாளித்துவ நாடுகளின் உற்பத்திச் செலவைவிட அதிகமாக இருந்தது. தொழிலாளர் கூலி மிகக் குறைவாதலால் நஷ்டங்களை சமாளித்துக்கொண்டு பண்ட உற்பத்தியை மலிவாகச் செய்திருக்கலாம். ஆனால் திறமையற்ற அதிகாரவர்க்க மேற்பார்வையினால் பண்டங்கள் தாறுமாறாய் விளைந்தன; தொழிலாளர் வேலைநேரமும் வியர்த்தமாயிற்று. மொத்தத்தில் உற்பத்திச் செலவு அதிகரித்தது. ஸோவியத் கைத்தொழில்கள் பலவற்றிலும் இதே பாடம்தான்!

போட்டி இருந்தால்தான் கைத்தொழில் விருத்தியாகும். போட்டி முதலாளிகளோ சுதந்திரமான தொழிலாளர் ஸ்தாபனங்களோ இல்லாததுதான் எங்கள் கைத்தொழில் சரிவர வளராததற்குக் காரணம். போட்டி இல்லையென்றால், வீண் செலவின்றி, மேன்மேலும் சிறப்பான பொருள்களை மலிவாய்த் தயாரிக்க வேண்டுமென்ற தூண்டுதல் இராதல்லவா? எங்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தியில் ஏற்படும் நஷ்டங்களை சமாளிக்க ஒரு சுலபமான வழி வைத்திருந்தார்கள். உற்பத்தியில் நஷ்டம் ஏற்பட்டால், தொழிலாளர் சம்பளங்களைக் குறைத்து விடுவார்கள்! முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர்களை விட அதிகக் கடுமையாய் உழைத்தும், அவர்களுக்கு நிகரான

வாழ்க்கை வசதிகள் சோவியத் தொழிலாளர்களுக்குக் கிடைக் காததற்கு இதுதான் காரணம்.

முதலாளித்துவ நாடுகளைவிட மலிவான செலவில் அதிக மான பண்ட உற்பத்தி நடந்து பண்டங்களின் தரமும் உயர்ந்தா லொழிய சோஷலிஸ பொருளாதாரம் அர்த்தமற்றது என்று லெனின் ஒரு அடிப்படைக் கொள்கை வகுத்துள்ளார். பண்ட உற்பத்தி பெருகினால்தான் பாட்டாளிகளின் வாழ்க்கை நிலை உயரும் என்பது லெனின் கொள்கை. ரஷ்யக் கைத்தொ ழிலை நெருங்கிப் பார்க்கப் பார்க்க, நாங்கள் சரியான வழியில் தான் போய்க்கொண்டிருக்கிறோமா என்ற சந்தேகம் எனக்கு அதிகரித்தது.

சோவியத் அதிகாரவர்க்கம் சிக்கல் நிறைந்தது; அடிக்கடி சண்டிமாடுபோல் காரியத்திற்குப் பயனின்றிப் படுத்துவிடும். அதிகார வர்க்கத்தின் கீழ்த்தர அதிகாரிகள் தங்கள் சொந்த முயற்சியில் எதும் செய்யவொட்டாமல் சட்டதிட்டங்கள் தடுத்து வந்தன. இதனால் ஒவ்வொருவரும் பொறுப்பேற்காமல் தட்டிக் கழிப்பது சர்வசாதாரணமாயிற்று. எதைச் செய்யவேண்டுமானு லும் மேலிடத்து உத்தரவு வரட்டும் என்று காத்திருப்பதே வழக்க மாயிருந்தது. சிறு சமாசாரங்கள் முதல் பெரிய பிரச்னைகள் வரை பல்லாயிரக்கணக்கான விஷயங்கள் ஸ்டாலினுடைய தீர்ப் புக்கு உட்படவேண்டியிருந்ததால், மேலிடத்திலிருந்து உத்தரவு வருவது எப்போதும் தாமதப்பட்டது. அந்த உத்தரவு வர வில்லை என்று வாரக்கணக்கில் காத்திருப்பதும் அடிக்கடி அவசியமாய் இருக்கும். மந்திரிகள் ஸ்டாலின் காரியாலயத் தில் காத்திருப்பார்கள்; அரசாங்கக் கைத்தொழில் ஸ்தா பனத் தலைவர்கள் மந்திரி காரியாலயங்களில் காத்திருப்பார்கள். இப்படியே கடைசி நபர் வரை எல்லோரும் காத்திருப்பதே தொழிலாயிருப்பார்கள். ஸ்டாலினுடைய உத்தரவுக்காக நானே பல தடவை வெளிநாட்டு வர்த்தக மந்திரி காரியா லயத்தில் மணிக்கணக்கில் உட்கார்ந்திருக்கிறேன். அதே சமயம் என்னிடமிருந்து உத்தரவுக்காக என்னுடைய சிப்பந்தி

கள் காத்திருப்பார்கள். ஸ்டாலினுக்கு அலுத்துப்போய்விட்டால் அவர் கிராமாந்திரத்திலுள்ள தம்முடைய வாசஸ்தலங்களுக்குப் போய்விடுவார். தம்மை யாரும் தொந்தரவு செய்யக்கூடா தென்றும் உத்தரவிட்டுவிடுவார். அவ்வளவுதான், மேலிடம் தூங்க ஆரம்பித்துவிடும். அதன் உத்தரவுக்குக் காத்திருக்கும் கைத்தொழில் ஸ்தாபனங்களும் சும்மா காத்திருக்க வேண் டியதுதான்.

சோவியத் மக்களது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் தானே நேரில் கவனிக்க வேண்டுமென்று ஸ்டாலின் ஏற்படுத்துவானேன்? அவருக்கு இது பெரும் பார மாயிற்றே?—இவ்வாறு சிலர் கேட்கக்கூடும். இதற்கு ஒரே பதில்தான் உண்டு. அவரைப்போன்ற சந்தேகப் பிராணியான ஒரு நபர் இப்படிச் செய்வதன் மூலம்தான் ஸர்வாதிகாரி பீடத்தில் நீடித்திருக்க முடியும். எதையும் சந்தேகிப்பவராக இல்லாமல், சகஜமாய்ப் பழகும் சுபாவமும் திறமையும் உள்ள வேறொருவராயிருந்தால், இவ்வாறு அல்ப விஷயங்களையும் தாமே கவனிக்கவேண்டிய நிர்ப்பந்தமின்றிப் பதவியில் கவலை யில்லாமல் நீடிக்கலாம். அப்படிப்பட்ட தலைவர், தன்னம் பிக்கையும் திறமையும் கொண்ட பல உபதலைவர்களை ஏற் படுத்திக்கொண்டு அவர்களிடம் பொறுப்பை நம்பிக்கையோடு ஒப்படைத்துவிட்டு காரியத்தை நிறைவேற்ற முடியும். எதிலும் சந்தேகம் கொண்டவரான ஸ்டாலினால் அவ்வாறு செய்ய முடியாது.

* * *

மாஸ்கோ சூழ்நிலை வரவர எனக்குக் கசந்துபோயிற்று. புத்தகசாலை நிர்வாகி, நாடகக் கொட்டகை டிக்கட் விற்பவர்— இதுபோல சிந்தனைப் பொறுப்பில்லாத ஏதாவதொரு வேலை கிடைத்தால் போய்விடலாம் என்று தோன்றிற்று. ஆர அமர, இஷ்டப்படி யோசனை செய்து நாட்டின் போக்கைப் பற்றி என் மனதிலுள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள விரும்பினேன்.

1933-ம் வருஷம் முடிவில், "ஸ்டாங்கோ இம்போர்ட்" ஸ்தாபனத்திலிருந்து ராஜிநாமா செய்துவிட்டு, மறுபடி செஞ்சேனையில் வேலை தரும்படி கோரினேன். செஞ்சேனைத் தலைமைக் காரியாலயம் நான் விரும்பியபடி செய்வதற்கு பதிலாக, தளவாட எற்றுமதி அபிவிருத்திக்கானதோர் ஸ்தாபனத்தின் தலைவனாக என்னை நியமித்தது. இந்த ஸ்தாபனத்தில் உழைத்துவந்த சமயம்தான் நான் ராணுவப் பிரமுகர் டுகாசேவ்ஸ்கியுடன் நெருங்கிப் பழக சந்தர்ப்பம் கிடைத்தது.

டுகாசேவ்ஸ்கி ஸ்டாலினால் கொலைக்களத்துக்கு அனுப்பப்பட்ட ராணுவ தளபதிகளில் ஒருவர். 1937-ல் செஞ்சேனையின் பிரதம அதிகாரிகள் நாட்ஸிகளுடன் சேர்ந்துகொண்டு ஸோவியத் நிர்வாகத்தைக் கவிழ்க்க சதி செய்தார்களென நம்பமுடியாத கதைகள் வெளியாயின. ஸ்டாலினுடைய பிரசார யந்திரம் உலகம் நெடுக இந்தக் கதைகளைப் பரப்பியது. அந்நிய நாடுகளில் பாமர மக்கள் மட்டுமன்றி சில ராஜதந்திரிகள்கூட இது உண்மையென்று நம்பினார்கள். விஷயமறிந்த சிலர் மட்டும், எந்த ரகசியத்தை மறைக்க இந்த பிரசாரம் நடக்கிறது என்று கேட்டார்கள். இரண்டு வருஷங்களுக்குப் பின் 1939-ல் ஸ்டாலின்-ஹிட்லர் ஒப்பந்தம் எற்பட்டதும், கேள்விக்கு பதில் சொல்லவேண்டிய அவசியம் நீங்கிவிட்டது. அந்த ஒப்பந்தம் திடீரென எற்பட்டதல்ல. ஸ்டாலினுக்கும் நாட்ஸிகளுக்கும் நீடித்த ரகசிய பேரங்கள் நடந்தபின்னரே ஒப்பந்தம் உருவாயிற்று. இரண்டு வருஷங்களுக்குமுன் தமது தளபதிகள் செய்ததாக என்ன பொய்க்குற்றம் சாட்டி அவர்களை சுட்டுக்கொன்றாரோ, அதே குற்றத்தை உண்மையாகவே செய்தார் ஸ்டாலின்.

டுகாசேவ்ஸ்கியின் செஞ்சேனை கோஷ்டி ஜெர்மன் நாட்ஸிகளிடம் அனுதாபம் கொண்டிருந்தது என்பதும் அவர்களுடன் சேர்ந்து சதி செய்ய முயன்றது என்பதும் வெறும் சரடுகள். இவர்கள் ரஷ்ய சர்க்கார்மீது தங்கள் கொள்கைகளைச் சுமத்த

முயன்று கொண்டு நாஜித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று கூறுவது அபத்தம். செஞ்சேனையின் நிர்வாகம் ஸ்டாலின், வரோஷிலாவ் இருவர் பிடியிலும் எவ்வளவு அடங்கியிருந்தது என்பதை அறியாதவர்களே இந்தக் கட்டுக்கதைகளை நம்புவார்கள். பெரிய கொள்கைப் பிரச்னை முதல் வெறும் நிர்வாக சமாசாரம் வரை எதிலும் பாலிட் பீரோவின்—அதாவது ஸ்டாலினுடைய—சம்மதமின்றி டுகா செவ்ஸ்கி நிர்வகித்திருக்க முடியாது; வரோஷிலாவ்கூடத் நிர்வகித்திருக்க முடியாது. அந்நிய அரசுகளுடன் உறவு சம்பந்தப்பட்ட விஷயங்களில் இந்த உத்தரவு இன்னும் கடுமையாக அமுலிலிருந்தது. அந்நிய அரசுகளுடன் தொழில் நுணுக்கம் சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகளைக்கூட பாலிட் பீரோ வரி வரியாய்ப் படித்து அங்கீகரிக்கும். இவ்வளவு கடுமை கண்டிப்பு இருந்ததனால், ராணுவ அதிபர்கள் எவரும் ஸ்டாலினுக்கோ வரோஷிலாவுக்கோ தெரியாமல் வெளிநாட்டுப் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தையோ கடிதப் போக்குவரத்தோ நடத்துவது இயலாத காரியம் என்பதை உள்ளந்தரங்கம் தெரிந்த நான் அறிவேன்.

ரஷ்ய ராணுவத் தலைவர்களிலேயே சிறந்தவர்களான பல தளபதிகளுக்கு மரண தண்டனை அளித்தது செஞ்சேனைக்குப் பெரிதும் இழப்பாக இருந்தது. ரஷ்யாவுக்கும் பாசிஸ நாடுகளுக்கும் இடையே நிகழக்கூடுமென்று எதிர்பார்க்கப்பட்ட யுத்தத்தில் இவர்கள் திறமை விசேஷமாய்ப் பயன்படுமென்று கருதியிருந்தார்கள். இத்தலைவர்கள் இல்லாததால் செஞ்சேனை எவ்வளவு நஷ்டமடைந்ததென்பது, அடுத்தாற்போல் பின்லாந்துடன் நடந்த போராட்டத்தில் ரஷ்யப்படைகள் அடைந்த தோல்விகளிலும் இரண்டாவது உலக யுத்தத்தின் முதல் வருஷத்தில் ரஷ்யா அடைந்த தோல்விகளிலும் தெளிவாயிற்று.

சுட்டுக் கொல்லப்பட்ட இந்த தளபதிகள் தங்கள் தாய் நாட்டுக்கு மனப்பூர்வமாய் சேவை செய்து வந்தார்கள் என்பதை

நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நாட்சிஸத்தை யும் பாசிஸத்தையும் எதிர்த்து முடிவான போருக்காக பல வருஷ காலமாய் செஞ்சேனையைத் தயார் செய்து வந்த இவர்கள் நாட்டுக்கு விரோதமாய் நாட்சிகளுடன் சதி செய்தார்கள் என்பது நம்ப முடியாத அபத்தம். அவர்களால் அவ்வாறு செய்திருக்கவே முடியாது. அவர்கள் மனோபாவம் அப்படிப் பட்டது.

ஸ்டாலின்-ஹிட்லர் ஒப்பந்தமும், அதற்குப்பின் ஸ்டாலின் அனுஷ்டித்த வெளிநாட்டுக் கொள்கையும் மார்ஷல் டுகா சேவ்ஸ்கி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எவ்வளவு அபாண்டமானவை என்பதையே நிரூபித்தன. டுகாசேவ்ஸ்கியும் இதர செஞ்சேனைத் தலைவர்களும் ஜெர்மனியை அடியோடு வெறுத்தார்கள் என்பதும், ஹிட்லருக்கெதிராய் ஒரு ஜன நாயக முன்னணியில் ருஷ்யா சேரவேண்டும் என்று விரும்பி னார்கள் என்பதும் ஸ்டாலினுக்கு நன்றாகத் தெரியும். ஹிட்ல ருடன் தான் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு இந்தத்தலைவர்கள் இடைஞ்சலாக இல்லாதபடி அதற்கு முன்னதாகவே அவர்களை ஒழித்துவிட்டார். இதுதான் உண்மை.

* * *

என்னுடைய புதிய வேலையின் நிமித்தமாக நான் அடிக்கடி மாஸ்கோவிலுள்ள ஸ்டாலின் மோட்டார் தொழிற்சாலைக்கும் சில சமயம் நிஜ்னி நோவோகொராடில் உள்ள கார்க்கி மோட்டார் தொழிற்சாலைக்கும் போக நேரிடும். இவ்விரு தொழிற்சாலைகளும் இரவு பகலாய் ஓயாமல் வேலை செய்து வந்தன. அவைகளில் எங்கு பார்த்தாலும் கம்யூனிஸ்ட் கட்சி இன்ஸ்பெக்டர்கள் மேற்பார்வை பார்த்து வந்தார்கள். தொழிற்சாலை டைரக்டர்கள் உண்ணவோ, உறங்கவோ, முக க்ஷவரம் செய்துகொள்ளவோகூட நேரமின்றி உழைக்க வேண்டி யிருந்தது. ஓய்வே கிடைக்காத அவர்கள் எதைப்பற்றியும் தெளிவாக யோசனை செய்யும் நிலைமையில் இருக்கவில்லை.

தொழிற்சாலைகளில் அடிக்கடி புதுப்புது நெருக்கடிகள் தோன்றிக்கொண்டேயிருந்தன. சில சமயம் மூலப் பொருள்கள் இல்லாது போய்விடும். சில சமயங்களில் தொழிலாளிகள் மல்லுக்கு நிற்பார்கள். சில சமயங்களில் நிர்வாக சிப்பந்திகள் வம்பு செய்வார்கள். ஒவ்வொரு நாளும் ஏதாவது சங்கடம் நேர்ந்துகொண்டே இருந்தது. ஆனால் மேல் உத்தரவு என்னவென்றால், என்னவானாலும் சரி, மோட்டார் உற்பத்தி தங்குதடையின்றி நடந்தேற வேண்டும் என்பதாகும். இதனால் மோட்டார் உற்பத்தி தடைபட்டுவிடும் பட்சத்தில் தாங்கள் துரோகிகள் என்று கருதப்பட்டு தங்கள் உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்திருந்தார்கள்.

ஸ்டாலின் தொழிற்சாலையின் டைரக்டர் லிகாசேவ் முகம் சிவக்க இங்கும் அங்கும் ஓடிக்கொண்டு, எஞ்சினியர்களையும், போர்மன்களையும் அதட்டி மிரட்டி வேலை வாங்குவது எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. சில சமயம் இவருக்கு தொழிலாளியிடமிருந்து கடுகடு பதிலும் கிடைத்துவிடும். அதையும் அவர் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். இப்படித் தொழிற்சாலை நடுவே அவர் ஏதாவது சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில் ஆபீஸ் பையன் ஓடிவந்து மத்தியக் கமிட்டியினர் அவரை டெலிபோனில் கூப்பிடுகிறார்கள் என்று சொல்லுவான். புதிதாய் என்ன ஆபத்தோ என்று ஓடுவார் அவர். 25,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு நிர்வாகியாய் இருந்த ஒருவரது கதி இது.

சோவியத் கைத்தொழிலின் நிர்வாகம் இவ்வளவு அழகாய் இருக்க, 1932-ல் போர்டு தொழிற்சாலை ஒன்றில் நான் கண்டதையும் கூற விரும்புகிறேன். பெல்ஜியத்தில் ஆண்ட்வர்ப் நகரிலிருந்த போர்டு தொழிற்சாலை டைரக்டர் எனக்கு நண்பரானார். அவரது தொழிற்சாலை எப்படி நடக்கிறது என்று பார்ப்பதற்கு நான் போயிருந்தேன். ரஷ்யாவில் இருந்ததற்கு நேர்மாறாக, குழப்பமின்றி வெகு அமைதியாய் இந்தத்

தொழிற்சாலை நடப்பதைக் கண்டேன். தொழிற்சாலையின் நடு மையத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு கண்ணாடி அறையில் எனது நண்பர் என்னை வரவேற்றார். அவருடைய அறையின் வெளித்தோற்றமே என்னைக் கவர்ந்தது. அறையினுள்ளே காகிதங்கள், பழைய தஸ்தவேஜுகள், யந்திரப் படங்கள் முதலியவை தாறுமாறாய்க் கிடப்பதற்குப் பதிலாக எல்லாம் ஒழுங்காய் இருந்தன. அவரது மேஜை துப்புறவாயிருந்தது. அதன் மேல் ஒரு சிறிய நோட்டுப் புத்தகம் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. என் நண்பரும், அமைதியோடு என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது டெலிபோன் மணி அடிக்கடி அடித்தது. அவர் டெலிபோனை எடுத்து இரண்டொரு வார்த்தை சொல்வார், அவ்வளவு தான். இவ்வளவு அமைதியாய், இவ்வளவு நிதானமாய் ஒரு தொழிற்சாலையை நடத்த முடியும் என்பதே நம்ப முடியாததாய் இருந்தது. அமெரிக்க நிர்வாகமுறை மதிப்பிற்குரியது என்ற எண்ணத்துடன் அத்தொழிற்சாலையினின்று வெளியேறினேன்.

* * *

1933 முதல் 1935 வரை நான் மாஸ்கோவில் இருந்து வந்த காலம்தான் ஸ்டாலினுடைய கொள்கையில் அடிப்படையான மாறுதல் ஏற்பட்ட காலம். அவர் பதவிக்கு வந்தது முதலாக அவ்வளவு தீவிரமான மாறுதல் இதுவரை நேர்ந்ததில்லை. இவை ஸோவியத் அரசாங்கத்தின் எதிர்காலத்தை மட்டுமல்ல, ஐரோப்பாவின் எதிர்காலத்தையும் பாதிக்கும் மாறுதல்கள் என்பதை நாங்கள் பின்னர்தான் உணர்ந்தோம். மாஸ்கோவிலிருந்த வெளிதேசப் பத்திரிகை நிருபர்களோ மற்ற அந்நியர்களோ இந்த மாறுதல்களின் முக்கியத்துவத்தை அப்போது சரியாக உணரவில்லை. போல்ஷவிக் கட்சியின் உள் ரகசியமறிந்த கோஷ்டிகளுக்குத்தான் இம்மாறுதல்களின் முழு தாத்பரியமும் அப்போது தெரிந்திருக்கும். இதைப்பற்றி விரிவாக இந்நூலில் பின்னர் கவனிப்போம்.

1931-32-ம் வருஷங்களில் கூட்டுப் பண்ணைத் திட்டத்தைத் தீவிரமாய் அமுல் செய்ததனால் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தை ஸ்டாலின் மிகுந்த பிரயாசையின்பேரில்தான் சமாளிக்க முடிந்தது. இந்த அனுபவத்தினால் 1933-ல் அவர் உஷாராக இருக்க முயன்றார். அவ்வருஷம் மகசூல் நன்றாயிருக்க வேண்டுமென்பதற்காக ஆயிரக்கணக்கான கட்சிப் பிரமுகர்கள் கிராமங்களுக்குச் சென்று பிரசாரம் செய்தனர். அதே சமயம் குடியானவர்கள் மோசம் செய்துவிடாதிருக்க அவர்கள்மீது கண்டிப்பான போலீஸ் மேற்பார்வையும் ஏற்பட்டது. எதிர்த்தவர்களையும் உழைக்க விரும்பாதவர்களையும் அப்புறப்படுத்துவதில் ரகசியப் போலீஸ் முனைந்தது. உழைத்து உழைத்து கிராம மக்களுக்குப் போதுமென்றாகிவிட்டது. இருந்தாலும் அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறியது.

கோடை வந்ததும், அவ்வருஷ மகசூல் சிறந்ததாயிருக்குமெனச் செய்திகள் வரத்தொடங்கின. கட்சிப் பிரமுகர்கள் அப்பொழுதுதான் சற்று ஓய்வெடுத்துக்கொண்டனர். அரசாங்கத்தின் முயற்சியெல்லாம் வியர்த்தமாகிவிடும் என்று நினைத்தவர்கள், ஸ்டாலினுடைய அதிகார தோரணை இருந்துங்கூட நாடு தனது கஷ்டங்களை சமாளித்துவிடும் என்று ஒப்புக்கொண்டனர். ஸ்டாலினுடைய அதிகார தோரணையால்தான் கஷ்டங்களை சமாளிக்க முடிந்தது என்று நினைத்தவர்களும் உண்டு. நாட்டின் பொருளாதார நிலைமை விருத்தியடைவதைக் கண்ட நான், மிகவும் உற்சாகத்துடன் உழைக்கலானேன்.

இந்த வெற்றியின் பயனாக, கம்யூனிஸ்ட் கட்சியிலே பல வருஷமாய் இல்லாதபடி குதூகலம் நிலவிற்று. பொருளாதாரத் துறையில் சௌகரியமான நிலைமை ஏற்பட்டுவிட்டால் கட்சி நிர்வாகத்தின் கடுமை குறைந்து விடும்; சந்தேகாஸ்பதமானவர்களையெல்லாம் நீக்கி எதிர்ப்பை ஒடுக்குவதென்ற வழக்கமும் நின்றுவிடும் என்று நம்பினோம். நாட்டில் அடக்குமுறை இனி தேவையில்லை என்பதே எங்கள் அபிப்-

பிரயாசையாயிருந்தது. கட்சிக்குள்ளே ஒற்றுமையும் நாட்டில் அமைதியும் ஏற்பட வேண்டுமென ஆசைப்பட்டோம். சர்வ தேச நிலைமையும் இவைகளின் அவசியத்தை வற்புறுத்து வதாயிருந்தது. ஜெர்மனியில், எங்கள் தலைவர்கள் எதிர் பார்த்தபடி கம்யூனிஸ்ட் புரட்சி ஏற்படுவதற்கு பதிலாக நாட்ஸிகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். ரஷ்ய மக்கள் யுத்தத் துக்கும் தயாராயிருக்கவேண்டுமென்று தோன்றிற்று. இதுவும், கட்சிக்குள்ளே சமரஸமான கொள்கையை அனுஷ்டிப்பதும், வெளியே மக்களுடன் சுமுகமான உறவு கொள்வதும் அவ சியமாயின. அவ்வாறு செய்தால் அரசாங்கத்துக்கு ஆதரவு அதிகரித்து, பண்ட உற்பத்தியும் பெருகும். மேலும், சர்வ தேச அரங்கில் ரஷ்யாவின் புது கொள்கைப்படி ஜனநாயக நாடுகளுடன் நெருங்கிய நட்பு கொள்வதும் சுலபமாகும். ஜெனிவாவில் " கூட்டுப் பாதுகாப்பு முறை " யை எங்கள் பிரதி நிதி லிட்வினவ் வற்புறுத்த ஆரம்பித்திருந்த காலம் அது. நாங்கள் எதிர்பார்த்தபடியே உள்நாட்டில் புதுக் கொள்கை அமுலுக்கு வந்தது. மாறுபட்ட பல போல்ஷவிக்குகள் மீண் டும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்களில் ஆயிரக்கணக் கான பேர் சோவியத் கைத்தொழிலுக்கு உதவி புரிந்தார்கள்.

கட்சியில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்ட பழைய போல் ஷவிக்குகளில் காமனேவ், ஸினோவிவ் இருவரும் இருந்தனர். அவர்கள் இருவரும் 1934-ம் வருஷம் நடந்த கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் பேச ஸ்டாலின் அனுமதித்தார். எங்கும் உற்சாகம் ததும்பியது. ரகஸியப் போலீஸ்பற்றிய வழக்கமான கவலை குறைந்தது.

கிராவ் முதலிய தலைவர்களால் சிலாகிக்கப்பட்ட புதிய சம ரசக்கொள்கையைப் பின்பற்றுவது போல ஸ்டாலின் நடித்தார். உலகத்திலேயே உண்மையான ஜனநாயக அரசியல் திட்டம் என்று அவர் வர்ணித்த ஒரு புதிய அரசியல் திட்டத்துக்கும் ஏற்பாடு செய்தார். அது மட்டுமல்ல. புதிய அரசியல்

திட்டம் தயாரிக்கும் விசேஷ கமிஷனில் அங்கம் வகிக்கும்படி. தம்முடைய அந்தரங்க சிஷ்யர்கள் தவிர, ராடெக், புகாரின், ஸோகால்நிகாவ் முதலிய எதிர்ப்பு கோஷ்டிப் பிரமுகர்களையும் நியமித்தார்.

வருஷக்கணக்கான சண்டை சச்சரவுகளும் அடக்குமுறைக் கொடுமையும் கடைசியாக முடிந்துவிட்டன, புதுயுகம் தோன்றி விட்டது என்று நாங்கள் களித்தோம்.

நமது புதிய சமாசக் கொள்கை அபாயமானது என்ற எண்ணம் எப்போது ஸ்டாலினுக்கு உதித்ததென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியவில்லை. சமாசக் கொள்கையினுல் எதிர் கோஷ்டித் தலைவரான கிராவ் பிரசித்தமானுர். அவரது புகழ் பிரமாதமாய் அதிகரித்தது. தன்னைத்தவிர வேறொருவர் அளவுகடந்த பொதுஜன அன்புக்குப் பாத்திரமாவது ஸ்டாலினுக்குக் கவலையளித்தது. தம்மை ஓயாமல் முகஸ்துதி செய்யும் நபர்கள் தம்மை சமயத்தில் காலைவாரி விட்டுவிடக் கூடும் என்பது அவருக்குத் தெரியும். புதிய சமாசக் கொள்கைக்கேற்ப புதுத் தலைவர்கள் இருப்பதே உசிதமல்லவா என்ற கேள்வி எப்படியும் எழும் என்ற பயம் அவருக்கு ஏற்பட்டது. ஜனநாயகப் போக்கு அதிகரித்தால், ஸர்வாதிகாரத்தைப்பற்றிய பேச்சும் எழும்; அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டிய அவசியமும் நேரலாம். தம்முடைய சர்வாதிகாரத்துக்கு முக்கிய ஆபத்து கிராவ்தான் என்று ஸ்டாலின் கருதத் தொடங்கினுர்.

ஸ்டாலினுடைய அதிருப்தி சீக்கிரமே செயலில் வெளியாயிற்று. லெனின்கிராடுக்கு அனுப்பப்பட்டிருந்த கிராவ் பாலிட்பீரோ கூட்டங்களுக்கு அழைக்கப்படவில்லை. அவருக்குக் கொடுப்பதாயிருந்த புது உத்தியோகமும் கொடுக்கப்படவில்லை. லெனின்கிராடில் அவர் இருப்பது அவசியம் என்று சாக்குப் போக்கு சொல்லி, ஒன்பது மாதகாலம் அவர் மாஸ்கோவுக்கு

வளர்ப்படி ஸ்டாலின் நடத்தினார். ஆனால் இராவ் புகழ் அதிகரித்ததேயொழியக் குறையவில்லை.

1934-ம் வருஷம் நவம்பர் மாதம் நடந்த கட்சியின் மத்தியக் கமிட்டிக்கூட்டத்தில் இராவ் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். கட்சியின் பெரும்பான்மைக் கொள்கைகளை ஆதரிக்காத எதிர்ப்புத் தலைவர்கள் அனைவரையும் திருப்தி செய்வதற்காக மேலும் சில சமரச நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென வற்புறுத்தினார். கமிட்டியில் இதற்கு பலத்த ஆதரவு கிடைத்தது. அப்போதைய நிலைமையில் இராவ்தான் முக்கிய புருஷராக விளங்கினார். இராவ் லெனின்கிராடில் இருக்கக்கூடாது; அவரை மாஸ்கோவுக்கு மாற்றிவிடவேண்டும் என்று எல்லோரும் சொன்னார்கள். முடிவில், இராவ் லெனின்கிராடுக்குத் திரும்பி தம் வேலையை வேறொருவரிடம் ஒப்படைத்துவிட்டுப் பிறகு மாஸ்கோ திரும்ப வேண்டும் என்று ஏற்பாடாயிற்று.

இது நடந்த சில தினங்களுக்கெல்லாம், 1934 டிஸம்பர் முதல் தேதியன்று ஸெர்ஜி இராவ் தம்முடைய காரியாலயத்தை விட்டு வெளியே வந்துகொண்டிருந்த சமயம் நிகோலேவ் என்ற ஒரு கம்யூனிஸ்ட் இளைஞனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மாஸ்கோ ஜில்லாவின் கட்சிக் கூட்டம் உடனே நடந்தது. வழக்கமான அனுதாபக்கூட்டமாயிருக்கும் என்று நினைத்தேன். ஆனால் அக்கூட்டம் அப்படி இருக்கவில்லை. கட்சித் தலைவர்கள் கடுகடுப்பான முகத்துடன் இங்குமங்கும் போய்க்கொண்டிருந்தார்கள். துக்கம் காரணமாகத்தான் அப்படியிருக்கிறார்கள் என்று நினைத்தேன். கட்சிக் காரியதரிசி பேச ஆரம்பித்தபோது, அவரது குரல் தழதழத்தது. இறந்துபோன தலைவரைப் பற்றி சுருக்கமாக நாலு வார்த்தை பேசிவிட்டு வேறு என்னவோ சொல்லத் தொடங்கினார். நாங்கள் ஆச்சரியத்துடன் கவனித்தோம்.

"நமது கட்சியில் நாம் இன்னும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதுவரை எச்சரிக்கையாய் இருந்ததெல்லாம்

போதாது. நமது கட்சிக்குள்ளே ஆயிரக்கணக்கான விரோதிகள் மாறு வேஷத்தில் இருக்கிறார்கள் . . . ."
என்றார் காரியதரிசி.

இதெல்லாம் முடிந்துவிட்டது என்றல்லவோ நினைத்திருந்தோம். இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ ?

" தலைவர் கிராவைக் கொன்ற இளைஞனை தோழர் ஸ்டாலின் நேரில் விசாரித்தார். நெடுநேரம் குறுக்கு விசாரணை செய்த பின் உண்மை புலனாயிற்று. கட்சியின் எதிர்ப்புத்தலைவர்களே கொலையாளி நிகோலேவிடம் துப்பாக்கியைக் கொடுத்தார்கள்" என்றார் காரியதரிசி. நிகோலேவைத்தவிர பதினேழு இளம் கம்யூனிஸ்ட்களும் மரண தண்டனை விதிக்கப்பட்டு இறந்தார்கள் என்பதை அறிந்தோம். அத்துடன், முன்னாள் எதிர்ப்புத் தலைவர்களான ஸினோவிவ், காமனேவ் ஆகியோரும் ரகசியமாய் விசாரிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாய்த் தெரியவந்தது.

காரியதரிசி பேசி முடித்த பிறகு, மற்றும் பலர் எழுந்து கட்சியின் புதிய கொள்கையை ஆதரித்துப் பேசினார்கள். மத்தியக்கமிட்டி தயவு தாட்சணியமின்றி நடந்துகொள்ள வேண்டும், கட்சியில் துரோகிகள் இல்லாமல் துலக்கவேண்டும், ஒருவர் விடாமல் எல்லோரையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள்.

பேசியவர்கள் ஒவ்வொருவரும் கட்சியின் எதிர்ப்புத் தலைவர்களைக் கண்டிப்பதிலேயே முனைந்திருந்தார்கள். எவருடைய மரணத்துக்காக அந்த அனுதாபக்கூட்டம் கூடிற்றோ அந்தத் தலைவர் கிராவ் எதிர்ப்புத் தலைவர்களில் ஒருவர், மற்ற எதிர்ப்புத் தலைவர்களின் கோரிக்கைகளை அவரும் பரிபூரணமாய் ஆதரித்தார் என்பதை ஒருவரும் ஞாபகப்படுத்தவேயில்லை. ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு எதிர்ப்புத் தலைவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்

கொள்ளவேண்டும், அவர்களை ஒழித்துவிடுவதே சரி' என்றெல்லாம் காரசாரமாய்ப் பேசினார்கள். பேசியவர்கள் சுயமாய்ப் பேசவில்லை, ஏதோ ஏற்பாட்டின்படியே இவ்வாறு பேசுகிறார்கள் என்பது சந்தேகமறத் தெரிந்தது. கட்சியின் இந்தப் போக்கின் அர்த்தம் என்ன ? இது என்னென்ன விபரீதங்களைக் குறிக்கிறதோ என்று எங்களுக்குக் கவலையாயிருந்தது. எப்படியும் ஸ்டாலினுடைய மூர்க்கத்தனமும் ஆத்திரமும் சீக்கிரம் அடங்கிவிடும், பிறகு அமைதி ஏற்பட்டுவிடும், அதுவரை சண்டை சச்சரவுகள் இருக்கத்தான் இருக்கும் என்று நினைத்தோம். சண்டை சச்சரவு தீரும்வரை ஸ்டாலினுடன் நூற்றுக்கு நூறு ஒத்துப் போகாதவர்கள் பாடு திண்டாட்டம்தான் என்பது அனுபவத்தில் தெரிந்திருந்தது.

நாங்கள் எதிர்பார்த்தபடியே பல்லாயிரக்கணக்கான கட்சி அங்கத்தினர்கள் கண்டனத்துக்குள்ளானார்கள். நாட்டின் மூலை முடுக்கில் உள்ள கட்சி ஸ்தாபனங்கள் முதல் கட்சியின் தலைமைக் காரியாலயம்வரை எல்லா இடங்களிலும் வேண்டாத ஆட்களென்று ஏராளமான பேர் நீக்கப்பட்டார்கள். ஸ்டாலின் கோஷ்டிக்குப் பிடித்தமில்லாத பேர்களெல்லாருக்கும் வந்தது ஆபத்து. எதிர்க்கட்சி அனுதாபி அல்லது ஸ்டாலினை எதிர்ப்பவர்களை ஆதரித்தவர் என்ற சந்தேகம் இருந்தால் போதும், சந்தேகிக்கப்பட்டவரை தேசத்துரோகி என்று வர்ணித்துப் படாத பாடுபடுத்திவிடுவார்கள்.

இந்த பயங்கர ஆட்சிக்கு அநுசரணையாக காமனேவ், ஸினோவீவ் இருவரும் தாங்கள் செய்ததெல்லாம் குற்றம் என்று ஒப்புக்கொண்டுவிட்டதாய் அவர்களிடமிருந்து வாக்குமூலம் பெற்று விட்டார்கள். அத்தலைவர்கள் ஏன், எப்படி இந்த வாக்குமூலங்களில் கையெழுத்திட சம்மதித்தார்களோ தெரியாது. கட்சியின் நலன் என்ற காரணத்தைக்காட்டி தாங்கள் தான் குற்றவாளிகளென ஒப்புக்கொள்ளும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த நிர்ப்பந்த முறையில்

ரகசிய போலீஸார் கைதேர்ந்தவர்கள். காமனேவும் ஜினேவிவும் தாங்கள் செய்ததெல்லாம் குற்றம் என்று ஒப்புக் கொண்டதற்குத் தொடர்ச்சியாய் மற்றும் பலர் நம்பமுடியாத பல குற்றங்களைத் தாங்கள் செய்ததாக ஒப்புக்கொண்டனர். இது உலகத்தையே ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

இந்த பயங்கர ஆட்சியில் எத்தனை பேர் தண்டனைக்குள்ளானார்களோ சொல்ல முடியாது. நாட்டின் சில பாகங்களில் உள்ள மக்களில் பெரும்பாலோர் குற்றவாளிகளெனக் கருதப் பட்டு தண்டனை யடைந்தார்கள். லெனின்கிராடு நகரிலிருந்து மட்டும் ஒரு லட்சம் பேர் ஸைபீரியா, வால்கா, பால்டிக் முதலிய பிரதேசங்களிலுள்ள சிறைமுகாம்களுக்கு அனுப்பப் பட்டார்கள்! பல வாரங்கள்வரை, ரயில் வண்டிகளில் சிறைக் கூடங்களுக்குச் செல்லும் "மக்களின் துரோகி"கள் கூட்டமே நிறைந்திருந்தது.

நாட்டில் என்னதான் நடக்கிறதென்று வாய்விட்டு விசாரிக்கலாமென்றால், அதுவும் ஆபத்தான சமாசாரமாக இருந்தது. நெருங்கிய உறவினரும் நண்பர்களும் திடீர் திடீரென்று மறைந்து போவார்கள். அத்தகவல்களைக் கேட்டுக்கொண்டு சும்மா இருப்பது தவிர வேறொன்றும் செய்வதற்கில்லாமல் இருந்தது.

இந்தக் கொடுமை நடந்து வந்த சமயத்தில் அதன் முழு நோக்கம் எங்களுக்கு விளங்காமல் போனது ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. ஸோவியத் ஆட்சிக்கே அஸ்திவாரமாய் விளங்கிய பழைய கம்யூனிஸ்ட் கட்சியை பூண்டோடு அழித்து விட ஸ்டாலின் உறுதி கொண்டிருந்தார். ஜெர்மனியில் 1934-ம் வருஷம் தம்முடைய எதிரிகளை ஒழிக்க ஹிட்லர் கையாண்ட திட்டம் வெற்றிகரமாய் நடந்தேறியதைக் கண்டு தான் ஸ்டாலினும் இதே மாதிரி செய்ய முற்பட்டார் என்று நினைக்கிறேன். ஹிட்லர் தம்முடைய எதிரிகள்மீது குற்றம் சாட்டி நீதிஸ்தலத்தில் விசாரிக்கும் சிரமத்தை வைத்துக்

கொள்ளவில்லை. நமக்கு விரோதிகள் என்று தோன்றியவர்களை அவரவர் வீட்டிலேயே சுட்டுக்கொல்ல ஏற்பாடு செய்தார். நாஜுக்காக நடந்த இக்கொலைகளினால் அவருக்கு உள்நாட்டில் எதிர்ப்பு அடங்கியது ஒரு லாபம்; வெளிநாடுகளில் அவருக்குத் அபவாதம் ஏற்படாதது இரண்டாவது லாபம். இக்கொலைகள் நடந்ததற்குப் பல வருஷங்களுக்குப் பிறகும் பிரிட்டிஷ் பிரெஞ்சு ராஜதந்திரிகள் ஹிட்லர் அப்பழுக்கற்றவர்போல அவருடன் கை குலுக்கினார்கள்!

ஸ்டாலினும் ஹிட்லர் கொள்கையைப் பின்பற்றி லக்ஷக் கணக்கான ரஷ்யர்களை வழக்கு, விசாரணை என்ற சங்கடங்களின்றித் தம்மிஷ்டப்படி பலியிட்டார். தம் எதிரிகளைப் பெருவாரியாய் அழிப்பது ஜனநாயக நாடுகளின் விரோதத்தை சம்பாதிக்கும் என்று லிட்வினவ் ஸ்டாலினை எச்சரித்தாராம். ஸ்டாலின், “அதைப் பற்றிக் கவலையில்லை. அவர்கள் இதை மதிக்கமாட்டார்கள்!” என்று பதிலளித்தாராம்.

புரட்சிக்கு நேர்மாறான தனிப்பட்ட ஸர்வாதிகாரப் பாதையில் ஸ்டாலின் போகிறார் என்பது எங்களுக்கு ஏன் 1935-லேயே தெரியவில்லை? பத்திரிகைகள் முதலான சகல பிரசார சாதனங்களும் ஸ்டாலின் வசமே இருந்ததால், நாங்கள் உண்மையை உணர முடியாமல் செய்வது அவருக்கு சுலபமாயிருந்தது. பத்திரிகைகள் கிராவின் மரணத்தைப் பற்றியே பத்தி பத்தியாய் எழுதின. லெனின் காலமானபோது வெளியானதைவிட அதிகமான அளவில் அனுதாபச் செய்திகள் வெளிவந்தன. சுமார் பன்னிரண்டு தினங்களுக்கு, எல்லா ஸோவியத் பத்திரிகைகளும் ஆரம்பமுதல் கடைசிவரை “அருமைத்தலைவர் கிராவ்” மரணமடைந்ததைப் பற்றியே எழுதிக் கொண்டிருந்தன. நாட்டு மக்கள் மிகவும் துக்கம் அடைந்திருக்கிறார்கள், தலைவர்கள் சொல்லொணாத் துயர் அனுபவிக்கிறார்கள், ஸ்டாலினுடைய வருத்தம் ஈடு இணையற்றது என்ற செய்திகளை சுற்றிலும் கறுப்புப் பட்டையடித்த பக்கங்களில்

பத்திரிகைகள் வெளியிட்டன. கிராவ் இறந்ததால் சந்தோஷ மடைவதற்கு பதிலாக தாங்கமுடியாத வருத்தம் அடைந்தவர் போல் நடித்து, பல்ய மக்களும் அதை நம்பும்படி செய்தார் ஸ்டாலின்.

பிரசாரம், பயமுறுத்தல் இரண்டு சாதனங்களையும் ஸ்டாலின் லாகவமாய்க் கையாண்டதால் கம்யூனிஸ்ட் கட்சி உண்மையை அறியாதபடி குழப்பமடைந்தது. கிராவ் மரணத்தினால் ஸ்டாலின் ஒருவருக்கே லாபம் என்பதை நாங்கள் கவனிக்கத் தவறினோம். கம்யூனிஸ்ட் கட்சியில் ஸ்டாலினுக்குப் போட்டியாக வரக்கூடிய பெரிய தலைவர் கிராவ் ஒருவர்தான் மீத மிருந்தார். அவ்வளவு பெரிய தலைவர் ஒருவர் இப்படி சாதாரணமாய் சுட்டுக் கொல்லப்பட்டது அதிசயம்தான். அரசியல் தலைவர்களுக்கு போலீஸார் வழக்கமாக அளித்துவந்த பாதுகாப்பு கிராவுக்கு ஏனோ அளிக்கப்படவில்லை. அவரது கொலை சம்பந்தமாய்க் கைதான 104 பேர் மரண தண்டனைக் குள்ளானார்கள். ஆனால் கடமை தவறிய போலீஸ் அதிகாரிகளுக்கு வெகு லேசான தண்டனையே கிடைத்தது. அந்த அதிகாரிகளுக்கு மரண தண்டனையோ சிறைவாசமோ கிடைக்கவில்லை. வேறிடங்களுக்கு மாற்றப்பட்டனர், அவ்வளவுதான்! இவர்களுக்கு இப்படி ஏன் சலுகை காட்டவேண்டும் என்பது எங்களுக்குப் புரியவில்லை.

கிராவ் மரணத்தால் மக்களிடையே எழுந்த ஆத்திர உணர்ச்சியை கட்சியில் தம்மை எதிர்த்தவர்கள்மீது திருப்பிவிட்டது ஸ்டாலினுடைய சாமர்த்தியமான தந்திரமேதவிர வேறில்லை. கட்சியில் ஸ்டாலின் கொள்கைகளை எதிர்த்தவர்களில் கிராவ் ஒருவர். பாலிட்பீரோவில் கிராவ் இருந்ததால் சமரசக் கொள்கைக்கு ஆதரவாய்ப் பேச ஒருவராவது இருக்கிறார் என்று மற்ற எதிர்ப்புத் தலைவர்கள் நம்பினார்கள். இந்த நம்பிக்கையில்தான் அவர்கள் கட்சியிலிருந்து விலகாமல், ஸோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவலாம் என்று நினைத்தார்கள். ஆனால் கிராவ் மரணம் இந்த நம்பிக்கைக்கு

முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. இந்தக் கொலையோடு கம்யூனிஸ்ட் கட்சியின் அந்நிய காலம் ஆரம்பித்துவிட்டது. சரித்திரமே கண்டிராதவிதம் பிற்போக்கானதோர் எதிர்ப் புரட்சியை ஆரம்பித்து நடத்திவந்தார் ஸ்டாலின்.

ஸ்டாலின் போக்கின் உண்மை சொரூபம் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விளங்காமல் போனது ஏன்? காரணம் இதுதான். கட்சிக்கு உள்ளே பலவந்தமான அடக்குமுறையைக் கையாண்ட அவர், கட்சிக்கு வெளியே பொதுமக்களிடம் தாம் சமரசத்தையே விரும்புவது போலவும், கட்சியின் சமரசக் கொள்கை கைவிடப்படவில்லை போலவும் வேஷம் போட்டார். விஷயமறியாத பாமர மக்களைத் தூண்டிவிட்டு, அவர்கள் தம்மைப் பலமாய் ஆதரிக்கும்படி செய்து கொண்டார். இவ்வளவு கெடுபிடிகளுக்கும் நடுவே புதிய அரசியல் திட்டத்தை இச்சமயம் படாடோபமாய் அமுலுக்குக் கொண்டு வந்ததே அவருடைய தந்திரமான நடிப்புக்கு சிறந்த உதாரணமாகும். "உலகத்திலேயே உண்மையில் ஜனநாயகமான அரசியல் திட்டம்" என்று இத்திட்டம் பிரமாதமாய்ப் புகழப் பட்டது. ஆனால் அதைத் தயாரிக்க உதவிய அறிஞர்களோ காரணமின்றிக் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். (இன்னும் கொஞ்ச காலத்தில் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்). ஜனநாயக அரசியல் திட்டம் என்பது, தம்முடைய உண்மை நோக்கத்தை மறைக்க ஸ்டாலினுக்கு சிறந்த கண்துடைப்பு சாதனமாய்ப் பயன்பட்டது.

அவ்வருஷம் நல்ல விளைச்சல் இருந்து உணவு நிலைமை விருத்தியானது. ஸ்டாலினுக்கு மேலும் சௌகரியமாயிற்று. ரொட்டி ரேஷன் கார்டுகள் ரத்து செய்யப்பட்டன. இஷ்டப்படி ரொட்டி வாங்க முடிந்தது. மக்களுக்கு அதிருப்தி இல்லாமல் செய்து தமது நிலைமையை இன்னும் வலுப்படுத்திக் கொள்வதற்காக ஸ்டாலின் இன்னொரு சலுகை அளித்தார். கூட்டுப் பண்ணைகளிலுள்ள குடியானவர்கள் சொந்தமாக ஒரு துண்டு நிலமும்

சில ஆடுமாடுகளும் வைத்துக்கொள்ளலாம் என்றார். கூட்டுப் பண்ணைகள் தங்களுக்குத் தேவையானதுபோக மீதமுள்ள உணவு தானியங்களை மார்க்கெட்டில் விற்கவும் அனுமதியளித்தார்.

அதே சமயம் ஏராளமான கௌரவப்பட்டங்களையும் விருதுகளையும் மக்களுக்கு வாரி வீசினார். அதிவேகமாய் வேலை செய்து பெயரெடுத்த தொழிலாளிகள், விஞ்ஞானிகள் முதலியோருக்கு "குடியரசின் கீர்த்தி புருஷர்கள்" என்ற விசேஷ விருது வழங்கினார். செஞ்சேனை வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பட்டங்களும் கௌரவங்களும் மீண்டும் அமுலுக்கு வந்தன. 'ஜெனரல் பதவிக்கு மேலே' மார்ஷல் என்ற உயர்பதவி உண்டாயிற்று. "செந் தாரகை வீரர்கள்", "செங்கொடி வீரர்கள்", "செங்கொடித் தொழில் வீரர்கள்", "லெனின் விருது வீரர்கள்" என்ற புதுப்புது பட்டங்களை உண்டாக்கி ராணுவத்தினர், கடற்படையினர், தொழிலாளர், எஞ்சினியர்கள் முதலானோருக்கு தாராளமாய் வழங்கினார். "தேசியக் கலைஞர்", "மதிப்புக்குரிய கலைஞர்", "மதிப்புக்குரிய கல்விமான்" என்ற பட்டங்களை அறிவாளிகளுக்கு வழங்கினார். கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுக்கு வகை செய்துகொண்டே, தம்மை முற்றிலும் ஆதரிக்கக்கூடிய ஒரு புது கோஷ்டியை சேர்த்துவந்தார்.

தமது பிரசங்கம் ஒன்றில் சர்வாதிகாரி ஸ்டாலின், "தோழர்களே, வாழ்க்கை மேம்பட்டுவிட்டது. நாம் முன்னைவிட சந்தோஷமாக வாழ்கிறோம்" என்று சொன்னார். எல்லோரும் இதே பல்லவியைப் பிடித்துக்கொண்டு, ஸோவியத் ரஷ்யா தேவலோகமாகி வருவதாய் வர்ணித்தார்கள்.

அப்போது தயாராகி வந்த புதிய அரசியல் திட்டத்தைப் பத்திரிகைகள் வானளாவப் புகழ்ந்தன. "மனிதனது ஞானமே திரண்டு உருவான அற்புதமான சாதனை" என்றார்கள். பத்திரிகை சுதந்தரம், பேச்சு சுதந்தரம், பொதுக்கூட்ட

சுதந்தரம், வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை, தேர்தலில் ரகசிய வாக்குரிமை, வாரண்டின்றிக் கைது செய்யப்படாமல் தவிர்க்கும் உரிமை—ஏன், சகல ஜீவாதார உரிமைகளும் கிடைக்குமென புது அரசியல் உத்தரவாதமளித்தது. இவையெல்லாம் தவிர ஜீவன உரிமை என்ற புது உரிமையைக் கூட அளித்தது. புது அரசியல் "ஸ்டாலினுடைய மேதைக்கு நிரந்தர அத்தாட்சி" என்றும், அது சங்கீத மேதை பேதோவனுடைய "ஒன்பதாவது ஸிம்பனி" என்ற கலைப் பொக்கிஷத்துக்கு நிகரானது என்றும் போற்றினார்கள்.

இந்த அற்புதமான "ஜனநாயக" அரசியல் திட்டம் எப்படிப்பட்டது, ஸ்டாலின் அதைக் கொண்டுவந்ததன் உண்மையான நோக்கம் என்ன என்பது புது அரசியல் திட்டத்தின்கீழ் நடந்த முதல் பொதுத் தேர்தல்களில் விளங்கிவிட்டது. வோட்டுச்சாவடிகளில் தரப்பட்ட வோட்டுச் சீட்டுகளில் ஒரே ஒரு அபேட்சகருடைய பெயர்தான் இருந்தது. வாக்காளர்கள் வேறு யாருக்கும் வோட்டு போட சீட்டில் பெயரோ, இடமோ இல்லை. தேர்தலுக்கு நிற்கும் ஒரே அபேட்சகர் கம்யூனிஸ்ட் கட்சியாலும் பல்வேறு சமூக ஸ்தாபனங்களாலும் ஆதரிக்கப்பட்டவராயிருப்பார். இந்த ஒற்றை அபேட்சகர் வேண்டுமா வேண்டாமா என்று தெரிவிக்கத்தான் வாக்காளருக்கு உரிமை உண்டு!

இத்தேர்தல்களில் இன்னொரு அக்கிரமமும் நடந்தது. தேர்தல் ஆரம்பமான அதே சமயம் கட்சியிலிருந்து ஆட்களை வெளியேற்றும் படலமும் ஆரம்பமாயிற்று. அதனால், கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் என்று தேர்தலுக்குமுன் பிரமாதமாய் விளம்பரப்படுத்தப்பட்ட பல அபேட்சகர்கள் தேர்தலுக்கு முன் தினம் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களுக்கு பதிலாக புதிதாய் பலருடைய பெயர்கள் அபேட்சகர்கள் ஜாப்தாவில் சேர்க்கப்பட்டன. தேர்தலில் வாக்களிக்கச் சென்ற ஜனங்கள் முன்பின் கேட்டிராத பலரது பெயர்களை வாக்குச்சீட்டில் கண்டார்கள்.

தேர்தல் ஆரம்பிக்குமுன் இப்படியென்ருல், தேர்தல் முடிந்த பின்னரும் பல அபேட்சகர்கள் திடீரென மதிப்பு இழந்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள் சட்டசபையின் முதல் கூட்டத்திற்குப் போவதற்கு முன்பே சிறைக்கூடத்துக்குப் போய் விட்டார்கள். மக்களின் பிரதிநிதி என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டும் என்பதெல்லாம் ரஷ்யாவில் அர்த்தமற்ற விஷயமாயிற்று. நாங்கள் தேர்ந்தெடுக்க கிடைத்த அந்த ஒரே அபேட்சகர்கூட தங்களுக்குப் பிரதிநிதியாக சட்டசபையில் உட்கார முடியாது என்பதைப் பல தொகுதிகளில் மக்கள் கண்டனர்.

புதிய பார்லிமெண்டான ஸுப்ரீம் ஸோவியத்தின் முதல் கூட்டம் நடந்தபிறகும் கம்யூனிஸ்ட் கட்சியில் விரும்பாதவர்களை நீக்கிக்கொண்டே இருந்தார் ஸ்டாலின். பார்லிமெண்டின் இரண்டாவது கூட்டம் நடந்தபோது மொத்த அங்கத்தினர்களில் கால் பங்கு பேர் அதில் கலந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் ரகசிய போலீசாரால் கைது செய்யப்பட்டிருந்தார்கள். அவர்களால் காலியான ஸ்தானங்களை உப தேர்தல்கள் வைத்துப் பூர்த்தி செய்வது அவசியமில்லை என்று அதிகாரிகள் கூறினர். அவசியமோ இல்லையோ அதுவும் வீண் வியர்த்தமான வேலை என்பதில் சந்தேகமில்லை.

பார்லிமெண்டின் முதல் கூட்டத்தில், அதனுடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக 'ப்ரஸீடியம்' என்ற ஒரு கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. பார்லிமெண்டின் இரண்டாவது கூட்டம் நடப்பதற்குள் 'ப்ரஸீடியம்' அங்கத்தினர்களில் சிலர் திடீரெனக் காணுமற்போய்விட்டார்கள். அவர்கள் எங்கே போனூர்கள், ஏன் வரவில்லை என்று யாரும் தெரிவிக்கவில்லை. கமிட்டியில் காலி ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்படும் என்று மட்டும் சபா நாயகர் தெரிவித்தார். அப்போதிருந்த பயங்கர சூழ்நிலையில் பிரதிநிதிகள் இம்மாதிரி திடீரென மறைந்து போவதைப்பற்றிப் பேசாமல் இருப்பதே நல்லதென்பதை எல்லோரும் புரிந்துகொண்டிருந்தார்கள்.

நம்முடைய ஸர்வாதிகார ஆதிக்கத்தை ஸ்டாலின் மேன் மேலும் பலப்படுத்திக்கொண்டிருந்தபோது மக்கள் அபிப்பிராயம் இவ்வளவு அழகாய் மதிக்கப்பட்டது. ஸோவியத் சேனைகள் "விடுதலை" அளித்த நாடுகளில் "ஜனநாயகத் தேர்தல்கள்" நடந்ததாய் செய்திகள் படிக்கும்போது நாம் இதை நன்ருக ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

உள்நாட்டில் எப்படியிருந்தாலும் வெளிநாடுகளில் புதிய ரஷ்ய அரசியல் திட்டத்துக்குப் பிரமாதமான புகழ் கிடைத்தது. முக்கியமாக "முற்போக்கு வாதிகள்" எனப்பட்டோரும் கம் யூனிஸ்ட் அனுதாபிகளும் இத்திட்டத்தை வெகுவாய்ப் புகழ்ந் தனர். ஆங்காங்கே ஐக்கிய முன்னணிகள் அமைப்பதற்கு இது சௌகர்யமாக இருந்தது. ஹிட்லருக்கெதிராய் ஜன நாயக நாடுகளுடன் ஸ்டாலின் ஒத்துழைக்கலாம் என்று நினைக் கும்படியும் தூண்டிற்று.

கட்சியின் உள்விவகாரம் தெரிந்திருந்த எங்களுக்கோ புது அரசியல் திட்டம் வெறும் பசப்புவார்த்தை என்பது தெரிந் திருந்தது. ஆயினும் புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தால் நாட்டில் பயங்கர ஆட்சி நீங்கும் என்று நம்பியிருந் தோம். ஜனநாயக முறைகளைப் பின்பற்றுவது போலவும் சமரச மனேபாவம் கொண்டவர் போலவும் ஸ்டாலின் நடிப்பது அர சாங்கத்தில் தமக்குப் போட்டியாய் வரக்கூடிய நபர்களை ஒழிப்ப தற்காகவே என்பது மட்டும் எங்களுக்குத் தெளிவாகவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியில் தமது ஸர்வாதிகாரம் வலுப்பதற்காகவே ஸ்டாலின் இந்த வேஷம் போட்டார். ஜனநாயக அரசியல் என்றதெல்லாம் உலகிலேயே மிக மோசமான சர்வாதிகாரக் கொடுங்கோன்மை நிலைத்திருப்பதற்கான ஒரு சூழ்ச்சியாகவே முடிந்தது.

* * *

ரஷ்யாவில் இவ்வருஷங்களில் நடந்தவைகளைக் குறித்து எழுதுகையில், என் சரிதத்துக்கு வேண்டிய அளவுக்கே ஸ்டா லினைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஸ்டாலினை நேரில் பார்த்தால், உலகமெங்கும் பிரபலமாக வழங்கும் அவரது படங்களில் இருப்பதுபோல் இருக்கமாட்டார். அந்தப் படங்கள் திருத்தப்பட்டவை; சரியானவை அல்ல. நேரில் பார்ப்பதற்கு முரட்டு சுபாவமுள்ள சாதாரண பேர்வழி போலிருப்பார் அவர். படத்தில் தோன்றுவது போல அவ்வளவு உயரமானவரும் அல்ல. சோகைபிடித்த அவர் முகம் அம்மை வடுக்கள் நிறைந்திருக்கும். ஒரு காலத்தில் கறுத்திருந்த அவர் தலைமயிரில் இப்போது நரைவிழுந்துவிட்டது. அடர்த்தியான மீசையிலும் புருவத்திலும்கூட வெள்ளைமயிர் தோன்ற ஆரம்பித்துவிட்டது. அவரது கருவிழிகளைப் பார்த்தால் உள்ளூர என்ன நினைக்கிறார் என்று சொல்லவே முடியாது. அவர் வெகு நிதானமாய் யோசனை செய்பவர்; சுலபத்தில் நட்புக்குக் கட்டுப்படுபவரல்ல. ஐரோப்பியருமல்ல, ஆசியாவாசியுமல்ல, இரண்டும் கலந்தவரே என்று அவரை விவரிக்கத் தோன்றும்.

ஸ்டாலின் ஒரு "மர்ம மனிதர்" என்ற அபிப்பிராயம் சாதாரணமாய் நிலவுகிறது. இதற்கு மர்மமற்ற பல சாதாரண காரணங்கள் உண்டு. நம்முடைய நவநாகரிக சர்வாதிகாரம் நிலைத்திருக்க அவர் கையாளும் தந்திரங்களில் இந்த மர்மப் பிரசாரமும் ஒன்று. பழைய ஜார் அரசர்கள் எப்படி ஆடம்பரப் படாடோபங்களினால் பாமர மக்களை மயக்கினார்களோ, அதே போல இந்த மர்மப் பிரசாரத்தினால் உலகமக்களை மயக்குகிறார் ஸ்டாலின்.

ஒரு விஷயத்தில்மட்டும் ஸ்டாலின் மர்ம மனிதர்தான். அவர் மனதில் என்னென்ன நினைக்கிறாரோ, கடவுளுக்குத்தான் தெரியும். ஒருவர்பின் ஒருவராய்த், தம்முடைய நெருங்கிய நண்பர்கள் அனைவரையும் கொலைக்களத்துக்கு அனுப்பக்கூடிய ஒரு மனிதர் தமது மனதிலுள்ள எண்ணங்களை மர்மமாய் வைத்திராமல் வேறென்ன செய்வார்!

வெளி உலகுக்கு எப்படித் தோன்றினாலும், அவருக்குக் கீழே உழைத்துவந்த எங்களுக்கு அவர் மர்ம மனிதராய்த்

தோன்றவில்லை. தமக்குள்ள குறைபாடுகளை உணர்ந்து தம் வாய்விட மேற்பட்டவர்களை வெறுப்பார். தம் குறைகளைப்பற்றி எவராவது பேசினால் அவருக்குப் பிடிக்காது; அது அவருக்கு சுருக்கென்று தைக்கும். உடனே வஞ்சம் தீர்த்துக்கொண்டு விடுவார். சுத்த சந்தேகப் பிராணி. தம் காரியம் ஆகவேண்டு மென்றால் எந்த எதிர்ப்பையும் ஒரே பிடிவாதமாய் ஒழித்து விடுவார்; தயை தாட்சணியமே பார்க்கமாட்டார். தமது சொந்த அதிகாரத்தைப் பற்றிய பிரச்னைகளிலேயே அவர் சதாகாலம் கவனம் செலுத்துவார். இந்த சுயநலத்தினாலும், இயற்கையாகவே கூரிய சிந்தனை இல்லாததாலும் பெருந் தலைவர்களுக்குரிய பரந்த நோக்கம் அவருக்குக் கிடையாது. எதையும் சந்தேகக்கண்களுடன் பார்த்துக்கொண்டு பலத்த முன் எச்சரிக்கையுடன் பிரச்னைகளை கவனிப்பார். அவைகளை விரைவில் அலசித் தீர்க்கும் திறமை இல்லை; மெதுவாய் கஷ்டப்பட்டுப் புரிந்து கொள்வார். எதையும் சந்தேகிப்பது அவரது கொள்கை; அது அவரது இயற்கை. "ஒத்துழைப் புக்கு மிகச் சிறந்த அஸ்திவாரம் நியாயமான சந்தேகங்களே!" என்று அவரே சொல்லியிருக்கிறார். இந்த சந்தேகத் தத்து வம் அவரது வாழ்க்கையில் மட்டுமன்றி ஸோவியத் ரஷ்யா முழுவதிலும்கூட வேரூன்றிவிட்டது. இதனால் பதினெட்டு கோடி மக்களின் நோக்கமே மாறிவிட்டது.

ட்ராட்ஸ்கி இருந்த காலத்தில், அவர், ஸ்டாலினை ஒரு "மூன்றாம்தரப் பேர்வழி" என்று விவரிப்பார். ஞானம், சாதுரியம், பண்பாடு, திறமை ஆகிய விஷயங்களில் ட்ராட்ஸ்கி கூறியது முற்றிலும் உண்மைதான். ஆனால் இந்த "மூன் றாம்தரப் பேர்வழி"தான் ட்ராட்ஸ்கியை அவரது உந்நத ஸ்தானத்திலிருந்து கீழே தள்ளி, ரஷ்யாவிலிருந்து நாடு கடத்தி, மரண தண்டனை விதித்து, எங்கோ தொலைதூரத்தில் உள்ள ஒரு நாட்டில் (மெக்ஸிகோவில்) அந்த தண்டனையை அநியாயமாய் நிறைவேற்றியும்விட்டார்! சில அம்சங்களில் ஸ்டாலினை "மூன்றாம்தரப் பேர்வழி" என்று சொல்லவே-

முடியாது. மனோபலம், பொறுமை, கள்ளம், மனிதருக்கு சுபாவமான குற்றங்குறைகளைக் கணக்காகப் புரிந்துகொண்டு அவைகளை அனுசரியமாய்த் தமக்கு சாதகமாக்கிக்கொள்ளுதல், எவ்வித தயைதாட்சண்யமுமின்றி தாம் கொண்ட காரியம் நிறைவேறும்வரை விடாப்பிடியாய் முன்னேறுவது போன்ற அம்சங்களில் அவரை முதல்தரப் பேர்வழி என்றே சொல்லவேண்டும். சிந்தனையில் நிதானமான அவர், ஒரு காரியத்தைத் தீர்மானித்துவிட்டால், செயலில் மின்வேகத்துடன் இறங்குவார்.

முற்றிலும் அரசியல் பிரச்னைகளைப்பற்றி விவரிக்கும் "எனது உயில்" என்ற நூலின் நடுவே, லெனின், ஞாபகமாய் ஸ்டாலினைப்பற்றி எச்சரிக்கை செய்திருக்கிறார். எவ்வளவோ சமாசாரங்கள் இருக்க, ஸ்டாலினுடைய முரட்டுத்தனம் என்ற சின்ன சமாசாரத்தைப்பற்றி உஷாராயிருக்கும்படி வற்புறுத்தி யிருக்கிறார் லெனின். இது வெளிநாட்டுப் பிரமுகர்களில் பலருக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. தமது முரட்டுத்தனத்தை ஸ்டாலின் எவ்வளவு தூரம் கையாளக்கூடும் என்பதை அறியாதவர்களே இதைக்கண்டு ஆச்சரியப்படுவார்கள். லெனினுடைய "எனது உயில்" நூலை ஸ்டாலின் முதன்முதல் தடவை படித்தபோது, அவர் சொன்ன வார்த்தைகள் அவருடைய முரட்டுத்தனத்துக்கு சிறந்த உதாரணமாகும். ஆனால் அம்மொழிகள் அச்சிடுவதற்கேற்றவை அல்ல!

சாதாரணமான அரசியல்வாதிகளைவிட ஸ்டாலின் பண்பாடு குறைந்தவர் அல்லவென்றாலும், லெனினுடைய இதர சகாக்களுடன் ஒப்பிட்டால் ஸ்டாலின் வெறும் "மண்டுகம்" எனலாம். போல்ஷவிக் புரட்சியின் முக்கிய தலைவர்கள் எல்லோரும் நல்ல அறிவாளிகள்; நடுத்தர வகுப்புகளிலிருந்தோ மேல் வகுப்புகளிலிருந்தோ வந்தவர்கள். தங்கள் நாட்டின் கலாசாரம் மட்டுமன்றி ஐரோப்பாவின் கலாசாரத்தையும் நன்குணர்ந்தவர்கள். அவர்களுக்கு வெளிநாட்டு பாஷைகள் ஒன்றல்ல, இரண்டு மூன்றுகூடத் தெரியும். அவர்களில் பெரும்பாலோர் தங்கள் தாய்மொழிகளில் நிபுணர்கள். ஸ்டாலின்

ஒருவர்தான் இதற்கு விதிவிலக்கு. அந்தத் தலைவர்களில் கீர்த்தி யற்றவர் அவரே. அவர் பிரசங்கியுமல்ல, எழுத்தாளருமல்ல, கம்யூனிஸத் தத்துவத்தில் ஊறித் திளைத்த அரசியல் நிபுணரு மல்ல. மற்றத் தலைவர்களைப்போல அவர் வெளிநாடுகளில் அதிகநாள் தங்கியிருந்ததில்லை. குறுகிய மனப்பான்மைக்குப் பேர்போன ரஷ்யர்களிலேகூட அவர் குறுகிய மனப்பான்மை கொண்டவர்!

அவர் ஒன்பது வயதில் ரஷ்ய மொழி பயின்றார்.* அதையும் முற்றிலும் சாதித்தார் என்பதற்கில்லை. முரட்டுத்தனமான தோர் ஆயுதத்தை உபயோகிப்பதுபோல்தான் ரஷ்ய மொழியை அவர் உபயோகிக்கிறார். அம்மொழியில் அவரது நடை அந்நி யரது நடை என்று நன்றாய்த் தெரியும், அவரது உச்சரிப்பு அந்நியரது உச்சரிப்பென்பதும் தெளிவாய் விளங்கும். "புரட்சி வாதிகளின் கல்லூரி" என்று வர்ணிக்கப்பட்டுள்ள சிறை வாசமும் அஞ்ஞாதவாசமும் ஸ்டாலின் பல வருஷங்கள் அனு பவித்திருக்கிறார். இருந்தபோதிலும் மற்ற போல்ஷவிக் தலை வர்களைப்போல அவர் இலக்கியத்தையும் சமூக சாஸ்திரத்தையும் கற்கவேயில்லை. விடாப் பிடிவாதத்துக்குப் பேர்போன அவர், ஜெர்மன் பாஷையைக் கற்க சிரமப்பட்டார். ஆனால் அவரால் அது முடியவில்லை; கைவிட்டுவிட்டார். எதிர்கால சர்வதேச பாஷையாக விளங்கப் போகிறது என்ற நம்பிக்கையில் "எஸ்ப் பிராண்டோ" என்ற சர்வதேச பாஷையைக் கற்க முயன்றதிலும் அவர் தோல்வியுற்றார். "போல்ஷவிக் ஒருவனால் கைப்பற்ற முடியாத கோட்டையே கிடையாது" என்று உபதேசம் செய்த அதே தலைவர், அந்நிய பாஷை என்ற ஒரு சிறிய கொத்த ளத்தைக்கூடத் தகர்க்க முடியவில்லை! இந்தத் தோல்வி அவர் மனதைவிட்டு அகலுவதேயில்லை. அந்நிய பாஷைகள் தெரி யாதாகையால் அந்நிய நாடுகளின் உண்மைநிலையை அவர் தாமே அறிவது சாத்தியமில்லாமல் போய்விட்டது.

---

*ஸ்டாலின் காகஸஸ் பிரதேசத்திலுள்ள ஜார்ஜியாவில் பிறந்தவர். ரஷ்ய மொழி அவரது தாய்மொழி அல்ல. — மொழிபெயர்ப்பாளர்.

பொதுக் கூட்டங்களில் பேசும்போது ஸ்டாலின் ஒரே குரலில் மெதுவாகப் பேசுவார். அவர் குரல் சிறிது நேரத்துக்கெல்லாம் கேட்போருக்கு அலுப்பளித்துவிடும். லெனின் உயிருடன் இருந்தபோது பாலிட்பிரோ கூட்டங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்கமிட்டிக் கூட்டங்களிலும் ஸ்டாலின் எப்போதும் மௌனமாய், தனியாக உட்கார்ந்திருப்பார். இதர தலைவர்களுடைய பேச்சின் சிந்தனைச் சுடர்களை அனுபவிக்கமுடியாமல், எல்லாம் வெட்டிப் பேச்சு என்று நினைப்பது போல 'உம்' மென்றிருப்பார்.

இத்தகைய ஒரு மனிதர் உலகப்பரப்பில் ஆறில் ஒரு பங்கு மீது சர்வாதிகாரம் செலுத்துகிறார். பதினெட்டு கோடி மக்களின் தலைவிதி அவர் கையில் இருக்கிறது. பிறருடைய ஞானத்தையெல்லாம் அவர் எதற்காக உபயோகித்தாலும் கேட்பார் இல்லை. ஜனநாயக அரசாங்கங்களில் மக்கள் உரிமைகளுக்கு சட்டபூர்வமான பாதுகாப்புகள் இருப்பதை அலட்சியமாய் நினைப்பவர்களுக்கு ருஷ்யா தகுந்த எச்சரிக்கையாகும்.

ஸ்டாலின் மூன்று தடவை கல்யாணம் செய்துகொண்டிருக்கிறார். அவருக்கு மூன்று குழந்தைகள் உண்டு. ஒரு பெண்ணும் இரண்டு பிள்ளைகளும். அவரது முதல் மனைவி அவரைப்போலவே ஜார்ஜியா ராஜ்யத்திலிருந்து வந்தவள். அவள் 1907-ம் வருஷம் காலமானாள். அவளுக்குப் பிறந்த பிள்ளை யாஷா (ஜேகப்) தன்னுடைய தந்தையை மனதார வெறுத்தார். தந்தை ஸ்டாலினும் அவனை வெறுத்தார். தம்முடைய காரியதரிசிகளிடம் ஸ்டாலின் பேசும்போது, ஸ்டாலின் தமது மகனை "அந்த முட்டாள்" என்று வர்ணிப்பதை நானே கேட்டிருக்கிறேன். ஸ்டாலின் இரண்டாவது கல்யாணம் செய்துகொண்டபோது, தன் மகன் யாஷாவை க்ரெம்லினில் வசிக்கும்படி செய்தார். ஆனால் யாஷாவுக்கு அவ்வாழ்க்கை பிடிக்கவில்லை. ஸ்டாலின் சின்னவராக இருந்தபோது அவருடைய குடிகாரத்தந்தை அவரை ஓயாமல் அடிப்பாராம். அதே போல தம் மகனை அடித்துத் துன்புறுத்தினார் ஸ்டாலின்.

(தமது தந்தையிடம் அடிபட்ட இந்த அனுபவந்தான் ஸ்டாலினை புரட்சிவாதி ஆக்கியது என்று பிரபல நாவலாசிரியர் எமில் லுட்விக் கூறுகிறார்). யாஷாவுக்கு விசேஷத்திறமை எதுவும் இல்லை. கெட்டிக்காரர் என்றும் சொல்ல முடியாது. அவர் முதலில் ஒரு எஞ்சினியரிங் பள்ளிக்கூடத்தில் படித்தார். அவர் முதலில் மாஸ்கோவுக்கு வரக்கூடாது என்று தகப்பனுர் ஸ்டாலின் உத்தரவிட்டுவிட்டவே, யாஷா தலைநகருக்கு வெளியே பல இடங்களில் அல்லாடினுர். பல வருஷங்கள் அவரைப்பற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. ரஷ்யாமீது ஜெர்மனியர் படையெடுத்து வந்தபோது ஸ்டாலினுடைய மகன் ஒருவர் நாட்ஸிகளிடம் கைதியாகப் பிடிப்பட்டிருப்பதாய்ப் பத்திரிகைகள் கூறின. அப்போது யாஷா செஞ்சேனையில் பீரங்கிப் படையில் ஒரு சாதாரண உத்தியோகத்தில் இருந்தார்.

ஸ்டாலின் தாம் மணந்துகொண்ட இரண்டாவது பெண்ணை 1917-ம் வருஷம் சந்தித்தார். நாடியா அலிலுயேவா என்ற அந்தப் பதினெட்டு வயதுப் பெண் நல்ல அழகி. அவளும் ஜார்ஜியா ராஜ்ஜியத்திலிருந்து வந்தவள். அவளுடைய தந்தை போல்ஷவிக் கட்சியின் பழைய ஊழியர்களில் ஒருவர். லெனின் தலைமறைவாய் இருந்தகாலத்தில் அவருக்கு இடம் கொடுத்து உதவியவர். நாடியா 1918-ல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தாள். சிறிது காலத்தில் அவள் லெனினுடைய காரியதரிசி ஆனுள். இன்னும் ஒரு வருஷத்தில் அவள் ஸாரித்ஸினின் போர்க்களத்திற்கு அரசாங்க அலுவலின்பேரில் சென்றிருந்தாள். அப்போது ஸ்டாலின் அங்கே அரசியல் காமிஸாராக இருந்தார். நாற்பது வயதான போர்வீரர் பதினெட்டு வயதுப் பெண்ணைக்கண்டு காதல் கொண்டார். கல்யாணமும் நடந்தது. நாடியா மூலம் வாஸிலி என்ற மகனும், ஸ்டாலினுக்கு மிகப் பிரியமான பெண்ணுகிய ஸ்வெட்லேனுவும் பிறந்தார்கள்.

வாஸிலி 1945-ல் ஸோவியத் விமானப்படையில் கர்னல் பதவி வகித்தார். "ஸோவியத் யூனியனின் வீரபுருஷர்" என்ற பட்டம் அவருக்குப் பலமுறை கிடைத்துள்ளது.

அவருக்குக் கல்யாணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. ஸ்டாலினுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கும் விஷயம் எனக்குத் தெரிந்தவரை அச்சில் வெளிவந்ததேயில்லை. இச்செய்தியை வெளிநாடுகளுக்கு அனுப்ப ரஷ்ய அதிகாரிகள் அனுமதிப்பதில்லை. தாம் ஒரு பாட்டனார் என்று பிறர் அறிவதை ஸ்டாலின் விரும்பவில்லை போலும்.

பொல்க்ஷாவில் மனமொத்த காதலுடன் ஆரம்பித்த மண வாழ்க்கை நாடியாவுக்கு சீக்கிரமே புளித்துப்போய்விட்டது. ஸ்டாலின் சர்வாதிகாரி ஆனபின் நாடியா வாழ்க்கையிலும் அலுத்துப்போனாள். நாடியாவின் சகோதரரை எனக்கு நன்றாய்த் தெரியும். அவர் நட்புக்குரிய இளைஞர். தொழில் விவகாரத்தில் திறமைசாலி. ஸோவியத் வெளிநாட்டிலாகாவில் நான் வேலை செய்துவந்த சமயம் அவரும் அங்கே வேலை பார்த்துவந்தார். அவரது சகோதரியைப்பற்றி யாராவது பேச்சுவாக்கில் குறிப்பிட்டுவிட்டால் அவரது முகம் திடீரென்று களங்கமடைந்துவிடும். அவளுடைய வாழ்க்கையைப்பற்றிப் பேசுவதே அவருக்குப் பிடிக்காது. துன்பமயமானதோர் வாழ்க்கையை அவள் அனுபவித்து வருகிருள் என்ற விஷயத்தை அவரிடமிருந்து நான் அறிந்துகொண்டேன். தன்னைச் சுற்றி இருந்த கயவர்கள் கூட்டத்தைக் கண்டாலே அவளுக்கு ஆத்திரமாய்வரும். தனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகு நாடியா ஒரு கைத்தொழில் எஞ்சினியரிங் பள்ளிக்கூடத்தில் படித்துவந்தாள். கைத்தொழில் நிர்வாகியாகி, சுதந்தர வாழ்க்கை நடத்தலாம் என்று நினைத்தாள்.

ஸ்டாலின் தம்முடைய பழைய தோழர்களையெல்லாம் ஒழித்துக்கொண்டுவந்தது நாடியாவுக்குப் பிடிக்கவில்லை. ஸ்டாலின் அவள் வார்த்தையைப் புறக்கணித்துவந்தார். தமது மனைவியுடன் காலத்தைக் கழிப்பதைவிட, செஞ்சேனைத்தலைவர் வாரோஷிலாவ், ரகசியப் போலீஸ் தலைவர் யாகோடா போன்றவர்களது சகவாசமே அவருக்குப் பிடித்திருந்தது. அடிக்கடி அத்தோழர்களைக் கூட்டிக்கொண்டு கிராமாந்திரத்திலுள்ள தமது

வாசஸ்தலம் ஒன்றில் பல தினங்கள் தங்குவார். தமது மனைவியைப் பற்றிக் கவலைப்படவேமாட்டார். சில சமயங்களில் தம் கணவனைத் தேடிக்கொண்டு நாடியா போவாள். அங்கே அவர்களுக்குள் சச்சரவு வந்துவிடும். தமது கொள்கைகளை அவள் கண்டிக்கிறாளென்று, ஸ்டாலின் அவளை முரட்டுத்தனமாய் நடத்துவார்.

ரஷ்யப் புரட்சியின் 15-வது ஆண்டுவிழா 1932 நவம்பர் மாதம் நடந்தபோது நாடியாவையும் அவளுடைய சகோதரரையும் நான் பார்த்தேன். அவள் கைத்தொழில் எஞ்சினீயர் என்ற பட்டம் பெற மூன்று வாரம் இருந்தது. படிப்பு முடிந்து வேலைக்குப் போகலாம் என்று நினைத்தாளானாலும் அவளுக்கு உற்சாகமே இருக்கவில்லை. வாழ்க்கையில் அலுத்துச் சலித்திருந்தாள். அவளுடைய சகோதரன் இதனால் மிக்க கவலை கொண்டான்.

இரண்டு தினங்களுக்குப்பின், 1932 நவம்பர் 9-ந் தேதி, நாடியா திடீரென மரணமடைந்துவிட்டதாய் செய்தி வெளியாயிற்று. மரணத்தின் காரணம் என்னவென்று அதிகார பூர்வமாய் வெளியிடப்படவில்லை. அவள் கொலை செய்யப்பட்டதாய் ஒரு வதந்தி இருந்தது. ஏற்கெனவே ராணுவ தளபதி புடேனி தம்முடைய மனைவியை சுட்டுக்கொன்றுவிட்டு ஒரு இளம் நடிகையைக் கல்யாணம் செய்து கொண்டிருந்ததால், நாடியா விஷயத்திலும் அதேபோல் நடந்திருக்கும் என்று பலர் நினைத்தனர். புடேனிக்கு ராணுவத்தில் இருந்த கீர்த்தியினால் அவர் எவ்வித தண்டனையும் பெறாமல் தப்பினார். புடேனியின் கியாதி பிரமாதமென்றால் ஸ்டாலினுடைய கியாதி அதைவிடப் பன்மடங்கு அதிகமானதல்லவா என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

நாடியாவின் மரணத்தைப் பற்றி உண்மையை நான் அவளுடைய சகோதரன் வாயிலிருந்து கேட்டறிந்தேன். ஸ்டாலின் மாளிகைக்கு அடுத்தது வாரோஷிலாவின் மாளிகை. அங்கே

ஸ்டாலினும் சகாக்களும் இருந்த சமயம், நாடியா ரஷ்ய அரசாங்கத்தின் விவசாயக் கொள்கையை வன்மையாய்க் கண்டித்தாள். உடனே ஸ்டாலின் அத்தனை பேர் முன்னிலையிலும் அவளை அவமானமாய்த் திட்டினார். நாடியா அவமானம் பொறுக்காமல் வீட்டுக்குப் போய்த் தற்கொலை செய்துகொண்டு இறந்தாள். அரசாங்க அறிக்கையென்னவோ நாசுக்காக "திடீரென அகால மரணமடைந்தார்" என்றது.

நாடியா காலமான சில தினங்களில் ஸ்டாலின் மூன்றாவது தடவையாகக் கல்யாணம் செய்துகொண்டார். ஆனால் இந்தக் கல்யாணத்தைப்பற்றிய செய்தி ஏதும் இதுவரை ரஷ்யப் பத்திரிகைகளில் வெளிவரவில்லை; வெளிவர அனுமதிக்கப்படவில்லை.

ஒருவரைத் தமக்குப் பிடிக்கவில்லையென்றால் எப்படியாவது அவர்மீது வஞ்சம் தீர்க்க சூழ்ச்சி செய்வதில் ஸ்டாலின் மன்னன் என்பது பிரசித்தம். எதிரிகள்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள ரகசிய ஏற்பாடுகள் செய்து, அவர்கள் எதிர்பாராத சமயம் அதை நிறைவேற்றி வைத்துவிட்டு, பின்னர் நிம்மதியாய்த் தூங்கப்போவதில் உள்ள இன்பம் வேறெதிலுமில்லை என்று ஸ்டாலின் காமனேவிடம் சொல்லியிருக்கிறார்! ரஷ்யாவில் தமக்குப் பிடிக்காதவர்களை ஒருவர்பின் ஒருவராய் ஒழித்துக் கட்டுவதில் அவர் காட்டியுள்ள விடாப்பிடிவாதம் இதை ஊர்ஜிதம் செய்கிறது. பேச்சுவாக்கில் தப்பான வார்த்தை சொல்லிவிட்டவர்களைக்கூட அவர் மன்னிக்கவில்லை. அவரது பழைய சகாக்கள் அத்தனை பேரும் அவருடைய வஞ்சத்துக்கு பலியாகிவிட்டனர். எதிரிகள் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்வது மட்டுமல்ல, தமது நண்பர்களையும் கொலைக்களத்துக்கு அனுப்பி வேடிக்கை பார்ப்பதில் அவருக்குக் குரூர திருப்தி என்றே நான் நினைக்கிறேன்.

உலக சரித்திரத்தில் மிக அதிகமான பேர்களைக் கொலைக் களத்துக்கு அனுப்பியுள்ள பெருமை ஸ்டாலினையே சாரும்

என்று 1941-ல் ஆர்ச்பிஷப் மைக்கேல் கர்லி கூறினர். கொலைக்களத்துக்கு ஆட்களை அனுப்புவது மட்டுமல்ல, அவ்வாறு செய்துவிட்டு ஒரு பாவமும் அறியாத பச்சிளங் குழந்தைபோல் வேஷம்போடுவதிலும் ஸ்டாலினுக்கு நிகர் எவருமில்லை. 1935 முதல் 1938 வரை நடந்த படுகொலைகளின் நடுவே அவர் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் "ஒரு அரசாங்கத்தின் சகல செல்வங்களிலும் மேலானது அதனுடைய பிரஜைகளின் உயிர் களே!" என்றாராம். பிற உயிர்களிடம் அவருக்கு எவ்வளவு மதிப்பு, எவ்வளவு கருணை என்பதை சரித்திரம் சொல்லும்.

ஸ்டாலின் மிகவும் எளிய வாழ்க்கை நடத்துகிறார், இரவு பகலாய் ரஷ்ய மக்களின் நலனுக்காக உழைக்கிறார் என்று பலர் நினைக்கிறார்கள். இது உலகை ஏமாற்றுவதற்கான பிரசாரம்.

கேள்வி கேட்பாரற்ற முடியரசு ஆட்சிகளில்கூட மன்னரின் செலவு எவ்வளவு என்று புள்ளி விவரங்கள் வெளிவரு கின்றன. தங்கள் மன்னரால் தங்களுக்கு எவ்வளவு செலவு ஆகிறது என்பதைப் பொது மக்கள் அறிந்துகொள்ளமுடி கிறது. ஸோவியத் மக்களின் செல்வத்தில் ஸ்டாலின் எவ் வளவு செலவழிக்கிறார் என்ற விவரம் ரஷ்யப் பத்திரிகைகளில் வெளியாவதேயில்லை. எவ்வளவு செலவாகிறது, எவ்வளவு செலவழிக்கலாம் என்று சொல்லும் உரிமை ரஷ்ய மக்க ளுக்குக் கிடையாது. ஸ்டாலினுடைய உபயோகத்துக்கான பல்வேறு மாளிகைகளை "ஓய்வு ஸ்தலங்கள்" என்று அழைக் கிறார்கள். அவையெல்லாம் அரசாங்க ஓய்வு ஸ்தல இலாகா வின் செலவில் பராமரிக்கப்படுகின்றன. அவரது சொந்த சௌகர்யத்துக்காகப் போடப்பட்ட ரஸ்தாக்களெல்லாம் "போக்கு வரத்து அபிவிருத்தியை" முன்னிட்டுப் போடப்பட்டவை என்று விவரிக்கப்படுகின்றன. அவர் உபயோகிக்கும் மோட்டார்கள் எல்லாம் அரசாங்க மோட்டார்கள். ஆனால், அவர் எதைச் செய்தாலும் எதை உபயோகித்தாலும் அதற்கான செலவு அரசாங்க பட்ஜெட்டில் "நாட்டு நலனை முன்னிட்ட செலவு" என்ற இனத்தில் அடங்கிவிடுகிறது. சில வருஷங்களுக்கு

முழு கம்யூனிஸ ஆட்சியை உலகமெங்கும் உடனே நிலை நாட்டுவது முக்கியமா, ஒரே நாட்டில் (அதாவது ருஷ்யாவில்) ஸ்தாபிக்கப்படுவது முக்கியமா என்று பலமாய் விவாதிக்கப் பட்டுவந்த சமயம், ஸ்டாலின், "கம்யூனிஸத்தை ஒரு தேசத்தில் ஸ்திரமாய் ஸ்தாபித்துவிட்டேன்" என்று பெருமைப் பட்டார். ஆனால், "ஒரு தேசத்தில் மட்டுமல்ல, ஒரு மனிதருக்காகத்தான்!" என்று மாஸ்கோவில் மக்கள் பேசிக்கொண்டார்கள்.

ஸ்டாலினுடைய உபயோகத்துக்கென டஜன் கணக்கில் மோட்டார்கள் இருக்கின்றன. ரோல்ஸ்ராய்ஸ், பாக்கார்டு, காடிலாக், லிங்கன் முதலிய உயர்தர அன்னிய மோட்டார்கள் அவரது மாளிகையில் நிலையாய் இருக்கின்றன. இவைகளின் ட்ரைவர்கள் இரவு பகலாய் எப்போதும் தயாராய் இருப்பார்கள். ரயில் பிரயாணம் செய்ய நேர்ந்தால், ஸ்டாலின் விசேஷ ரயிலில்தான் போவார். இந்த ரயிலுக்கு முன்னும் பின்னும் காவல் ரயில்கள் போகும். வழி நெடுக செஞ்சேனை வீரர்கள் காவல்காத்து நிற்பார்கள்.

ஸ்டாலின் ஓய்வு எடுத்துக்கொள்வதற்கென கருங்கடல் தீரத்தில் நான்கு மாடமாளிகைகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அவர் எப்போது வந்தாலும் தயாராய் இருக்கவேண்டுமென்று வருஷம் முழுவதும் ஊழியர்கள் இங்கே இருந்து வருகிறார்கள். ஸோச்சி என்ற இடத்திலுள்ள சுகவாசஸ்தலம்தான் ஸ்டாலினுடைய வாசஸ்தலங்களில் படாடோபம் குறைவானது. நான் அதை நேரில் பார்த்திருக்கிறேன். ஒரு குன்றின் உச்சியில் இம்மாளிகை இருக்கிறது. அருகில் உள்ள கந்தக நீரோடையிலிருந்து வரும் ஜலம் இந்த மாளிகையின் ஸ்நான அறையில் பாய்கிறது. ஸ்டாலினுடைய வாசஸ்தலம் இருப்பதால் குன்று முழுவதும் வெளியார் வராதபடி ரகசியப் போலீசார் காவல் செய்கிறார்கள். ஸ்டாலின் வீட்டை அடைய குன்றின் மேல் ஏறிச் சென்றால், முதலில் மோட்டார்கள் நிற்குமிடம் வரும். அங்கே சுமார் முப்பது மோட்டார்கள் நிற்க இடமுண்டு. இதைச்

சுற்றி ரகசியப் போலீஸார் வீடுகளும் வேலையாட்களின் வீடுகளும் இருக்கின்றன. இன்னும் சிறிது மேலே போனால் ஸ்டாலினுடைய விருந்தாளிகள் தங்குவதற்கான மூன்று வீடுகள் இருக்கின்றன. இவ்வீடுகள் ஒவ்வொன்றிலும் டென்னிஸ் கோர்ட்டுகள், பில்லியர்டு ஆட்டம் ஆடுவதற்கான அறைகள் முதலிய வசதிகள் இருக்கின்றன.

இந்த வீடுகளில் 1935-ம் வருஷம் நவம்பர் மாதம் நான் சில தினங்களைக் கழித்தேன். விவசாய மந்திரி ஐவனோவ், வெள்ளை ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி இக்காலோ, அப்காஸியா அரசாங்கத்தலைவர் நெஸ்டர் லகோபா முதலியோரும் அப்போது அங்கே இருந்தனர். இவர்களில் ஐவனோவ் 1938-ல் மூன்றாவது மாஸ்கோ சதிவழக்கு விசாரணையில் தண்டிக்கப்பட்டு இறந்தார். இக்காலோ "மக்களின் விரோதி" என வெளியேற்றப்பட்டார். லகோபா சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஸ்டாலினுடைய மாளிகைகளில் இன்னொன்று அப்காஸியாவில் காக்ரி என்ற இடத்துக்குப் போகும் வழியில் இருக்கின்றது. ஜெர்மனியில் பெர்க்டெஸ்காடன் என்ற விடத்தில் மலை உச்சியின்மீது ஹிட்லர் தமது "பருந்துக்கூடு" வாசஸ்தலம் அமைத்துக்கொண்டது போலவே, ஸ்டாலினும் இந்த மாளிகையை ஒரு மலை உச்சியில் கட்டிக்கொண்டார். ஆனால் ஸ்டாலினுக்கு இந்த இடம் பிடிக்கவில்லை. கருங்கடல் கரையில் ஸெல்யோனி மிஸ் என்ற இடத்தில் இன்னொரு பெரிய மாளிகையைக் கட்டிக்கொண்டிருக்கிறார்.

இந்த மாளிகையைப் பற்றியும் அதைச் சுற்றியுள்ள பரந்த தோட்டங்களைப்பற்றியும் ரஷ்ய மக்களுக்கு எவ்வித விவரமும் தெரிவிக்கப்படுவதில்லை. இதைக்கட்டி முடிக்க எவ்வளவு செலவாயிற்றோ சரிவரச் சொல்ல முடியாது. ஏராளமாக செலவாகியிருக்கும் என்று மட்டும் ஊர்ஜிதமாய்க் கூறலாம்.

இவைதவிர ஸ்டாலினுடைய உபயோகத்துக்கென க்ரைமியாவில் ஒரு கடற்கரை மாளிகையும் இருக்கிறது.

லோக்கி மாளிகையில் இருப்பது போலவே மற்ற மாளிகைகள் ஒவ்வொன்றிலும் பிலியர்டு ஆட்டம் முதல் சினிமாக்காட்சிகள்வரை, தானாக இயங்கும் சங்கீதக் கருவிகள் முதல் உயர்தர சவாரிக் குதிரைகள் வரை சகலவித பொழுதுபோக்கு ஏற்பாடுகளும் இருக்கின்றன. தானாக இயங்கும் சங்கீதக் கருவிகளில் ஸ்டாலினுக்கு மோகம் அதிகம். கிராமபோன்கள், ரேடியோக்கள், தானாக வாசிக்கும் பியானோ முதலியனவைகளில் ஏராளமானவை ஸ்டாலினிடம் இருக்கின்றன. இவைகளைத் தமது விருந்தாளிகளிடம் காட்டிப் பெருமையடித்துக்கொள்வது அவருக்கு ரொம்பப் பிடிக்கும். நூதனமான சங்கீதக் கருவிகளெல்லாம் அவைகளை உடனே வாங்கிவிடும்படி வெளிநாடுகளிலுள்ள ஸோவியத் பிரதிநிதிகளுக்கு நிரந்தரமான உத்தரவு இருக்கிறது. 1931-ல் இத்தாலியிலிருந்த ஸோவியத் வர்த்தக தூதுகோஷ்டியில் உழைத்துவந்த சமயம் பல்வேறு இத்தாலிய சங்கீத விற்பன்னர்களின் கிராமபோன் இசைத்தட்டுகளை வாங்கி அனுப்ப நான் பட்டபாடு எனக்குத் தெரியும்.

வெளியூர்களில் உள்ள மாளிகைகள்தவிர மாஸ்கோவுக்கு அருகேயும் ஸ்டாலினுக்கென பல வாசஸ்தலங்கள் இருக்கின்றன. ஆனால் அவை வெளியூர் வாசஸ்தலங்களைப்போல அவ்வளவு ஆடம்பரமானவை அல்ல.

பல ஆண்டுகளுக்குமுன், கார்க்கி என்ற இடத்தில் லெனின் வாழ்ந்துவந்த ஒரு சிறு வீட்டில் ஸ்டாலின் வசித்துவந்தார். தாம் இருப்பதற்காக அவ்வீட்டிலிருந்து லெனினுடைய மனைவியை வெளியேற்றிவிட்டு அங்கே குடியேறினார் அவர். ஆனால் இப்போது அவர் கார்க்கியில் வசிப்பதில்லை. அந்த சிறு வீடு சரித்திரச் சின்னமாக மாறிவிட்டது. ஸ்டாலின் தமக்கென புதிதாய் இரண்டு மாளிகைகள் கட்டிக்கொண்டிருக்கிறார். இவைகளில் அவருக்குப் பிடித்தது போர்விக்கி என்ற இடத்திலுள்ள மாளிகையே. இந்த மாளிகையைச் சுற்றித்தான் ஸ்டாலினுடைய சகாக்களின் வீடுகள் இருக்கின்றன.

மாஸ்கோ நகரைப் பார்க்கும் அந்நியர்கள் நகரம் பிரமாதமாய் விருத்தியடைந்துள்ளதாய் சில சமயம் சொல்லக் கேட்டிருக்கிறேன். நகர அபிவிருத்தி என்ற பெயரில் சரித்திரப் பிரசித்தமான ஸ்தலங்கள் அழிக்கப்பட்டது அவர்களுக்கென்ன தெரியும்? மாஸ்கோ நகரில் இப்போதும் இருந்துவரும் மோசமான சேரிகளை அழித்து அழகான தொழிலாளர் விடுதிகள் கட்டலாம். ஆனால் அந்நியர்கள் கண்ணில் இவை படுவதில்லை.

மாஸ்கோவில் நகர அபிவிருத்தி என்ற பெயரில் பல மோட்டார் ரோடுகள் விரிவாக்கப்பட்டன. நகரின் மத்தியிலுள்ள க்ரெம்லினிலிருந்து போர்விக்கியிலுள்ள ஸ்டாலின் மாளிகைக்குப் போகும் ரஸ்தாக்களே இவ்வாறு செம்மைப்படுத்தப்பட்டன. நகரின் மையத்திலிருந்து இருபத்தைந்து மைல் தூரத்துக்கு பன்னிரண்டு ரஸ்தாக்கள் பன்னிரண்டு திசைகளில் போகின்றன. ரஷ்யா முழுவதிலுமுள்ள சிறந்த ரஸ்தாக்கள் இவையே. இவை நகரைச்சுற்றியுள்ள அதிகாரிகளின் இல்லங்களுக்குப் போகின்றனவே தவிர, பொதுமக்களுக்கு இவைகளால் விசேஷ நன்மையில்லை. ஏனெனில், அந்த அதிகாரிகளின் இல்லங்களைத் தாண்டினால் இந்த ரஸ்தாக்கள் குழிவிழுந்து படுமோசமாகவே இருக்கின்றன. ஜார் ஆட்சியில் எப்படி இருந்தனவோ அப்படியே இருந்துவரும் இந்த ரஸ்தாக்களைப்பற்றி ஸோவியத் மக்கள் பெருமைப்படவதுமில்லை.

ஸ்டாலின் மாளிகை உள்ள போர்விக்கியில் மரங்கள் நிறைந்த ஒரு சோலையும் ஆற்றங்கரையும் பொதுமக்கள் உபயோகிக்கமுடியாதபடி ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இங்கே வீடுகள் கட்டுவதும் நதியில் ஸ்நானம் செய்வதும் கூடாது. நதி இங்கிருந்து மாஸ்கோ நகருக்குச் செல்வதால், இங்கே ஸ்நானம் செய்வது நகர மக்களுக்குப் போகும் தண்ணீரைக் கெடுத்துவிடுமாம். இந்த சாக்குப்போக்கைச் சொல்லி, இங்கே வசித்துவந்த நூற்றுக்கணக்கான கிராம மக்கள் இங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள். நதி போர்விக்கியை அடைவதற்கு முன்

னும், பொர்ஸிக்கியைத் தாண்டிச் சென்றபின்னும் (அதாவது மாஸ்கோவை அடைவதற்குமுன்) அதில் ஸ்நானம் செய்யவும் ஆற்றங்கரையில் மக்கள் நடமாடவும் தடை இல்லை. அவர்கள் ஸ்நானம் செய்தால் நதியின் தண்ணீர் கெட்டுவிடாதோ? நான் இதைப் பற்றிச் சிர விசாரித்தபோதுதான் உண்மை புலப்பட்டது. ஸர்வாதிகாரி ஸ்டாலினுடைய மாளிகையும், அதைச் சுற்றி கம்யூனிஸ்ட் மத்தியக்கமிட்டி அங்கத்தினர்கள், பெரிய போலீஸ் அதிகாரிகள் முதலியோரது வீடுகளும் இருந்ததனாலேயே இங்கே மக்கள் வர அனுமதிக்கப்படவில்லை.

இங்கே வசிக்குமந்த ஒரு நண்பன் வீட்டுக்கு ஒரு சமயம் போக நேர்ந்தது. இந்தப் பிரதேசத்தில் நுழைந்ததுமே வேறொரு தனி எல்லேக்குள் பிரவேசிக்கிறேம் என்பது நன்ருய்த் தெரிந்தது. அழகான சோலைகள் நடுவே பங்களாக்கள் இருந்தன. எல்லாம் சுத்தமாக வைத்திருந்தார்கள். ஆனல் சிறப்பாக வைத்திருந்ததைவிட, அதைக் கண்ணும் கருத்து மாய்க் காவல் புரிந்ததே விசேஷம். இந்தப் பிரதேசத்திற் குள்ளே ஒவ்வொரு முச்சந்தியிலும் போலீஸ்காரர்கள் எங்கள் மோட்டாரை நிறுத்தி உள்ளே செல்வதற்கு எங்களிடம் அனுமதி இருக்கிறதா என்று பார்த்தார்கள். இங்கேயே வசிப்பவரான என் நண்பர்கூட, இந்தப் பிரதேசத்தின் சில அந்தரங்கப் பகுதிகளில் நுழைய அனுமதி இல்லை!

இங்கே ரோடுகள் தும்பு தூசியின்றி வெகு சுத்தமாய்த்தான் இருந்தன. மனிதப் போக்குவரத்து அநேகமாய் இல்லை. அடிக்கடி எதாவதொரு பிரம்மாண்டமான மோட்டார் கார் வேகமாய் எங்களைத் தாண்டிச் செல்லும். இங்குள்ள மரம் செடி கொடிகள் மேனுடுகளில் பணக்காரர் இல்லங்களில் உள்ளதுபோல அழகாய் வெட்டிப் போஷிக்கப்பட்டிருந்தன. என் நண்பரது வீடும் மேனுடுகளில் பணக்காரர் வீடுபோல் டாம்பீகமாயிருந்தது. மாடியில் திறந்த வராந்தாக்களென்ன, டென்னிஸ் கோர்ட்டென்ன, புல்வெளியென்ன, பிரத்யேகப் பூங்காவனமென்ன—சொகுசுக்குக் குறைவில்லே. இந்த வீடு

என் நண்பருக்குச் சொந்தமானதல்ல, உண்மைதான். அது மத்தியக் கமிட்டியைச் சேர்ந்த "மாளிகை நம்பர் 10" என்பதும் உண்மைதான். ஆனால், அதிகாரத்துக்கு வந்துவிட்டால் போதும், பதவியிலிருந்து நீக்கப்படும்வரை அவர் சொந்த வீட்டில் வாழ்வதுபோல் அதில் சுகவாசியாய் வாழலாம் என்பதென்னவோ மறுக்கமுடியாதது. பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டால்தான் சுகவாசத்துக்கு மட்டுமல்ல, ஆயுளுக்கே முடிவு வந்துவிடுமே!

* * *

1935 அக்டோபரில், வெளிநாட்டு வர்த்தக இலாகாவிலிருந்து விலகி, வெளிநாட்டிலாகாவில் சேவை புரிய எனக்கு அனுமதி கொடுத்தார்கள். அதன்பேரில், ஏதன்ஸிலுள்ள ரஷ்ய ஸ்தானிகர் காரியாலயத்தில் பிரதம காரியதரிசி வேலைக்கு என்னை நியமித்தனர்.

ஏதன்ஸில், புது இடத்திற்குப் போய்ச் சேர்ந்ததும் எதிர் காலத்தைப் பற்றி என் மனதில் கவலை குடிகொண்டது. நீண்டதூரம் உலவியும், மற்ற வேளைகளில் நல்ல நூல்களைப் படித்தும் என் மனக்கவலையை மறக்க முயன்றேன். பிறருடன் சல்லாபிப்பதிலும் கிரேக்க நண்பர்களுடன் பொழுதைப் போக்குவதிலும் சந்தோஷமாயிருக்க முயன்றேன். அந்த நண்பர்களுடன் ஏதன்ஸ் நகருக்கு வெளியேயுள்ள சிற்றூர்களுக்கும் சென்று பார்த்தேன்.

* * *

ரஷ்யாவிலிருந்து வந்த பத்திரிகைகள் தாயகத்தில் என்ன நடக்கின்றன என்பதைப்பற்றி வெகு சில செய்திகளே வெளியிட்டன. ரஷ்யாவில் நிலைமை திருந்திவிட்டது, அமைதி ஏற்பட்டுவருகிறது என்று நினைத்தேன். பழைய துயரங்களை மக்கள் முற்றிலும் மறக்க நாளாகும், ஆனால் இப்போது ஐந்து வருஷத்திட்டத்தால் பட்ட துயர்களை மறந்து வருகிறார்கள்

என்று நினைத்தேன். கொடுமை நிறைந்த 1936-ம் வருஷத்தின் முற்பகுதி இவ்வாறு நம்பமுடியாத அமைதியுடன் கழிந்தது.

அந்த வருஷம் ஆகஸ்ட் மாதம் ஒரு நாள் தெளிந்த வானில் புயல் வீசத் தொடங்கியது போல எங்களை பிரமிக்க வைக்கும்படியான செய்திகள் வந்தன. "சோவியத் எதிர்ப்பு பயங்கர ஸ்தாபனம்" என்ற தேசத்துரோகக் கும்பலைச் சேர்ந்தவர்களென்று ஸினோவிவ், காமனேவ் முதலிய பதினாறு பேர்மீது சதி வழக்கு இன்னும் ஐந்து தினங்களில் ஆரம்பமாகும் என்று மாஸ்கோ ரேடியோ கூறிற்று. மாஸ்கோ பத்திரிகைகள் இதை வாழ்த்தவும் செய்தன. ஸினோவிவ், காமனேவ் இருவரும் கிரோவ் கொலைக்கு மறைமுகமாய்க் காரணமாயிருந்தவர்கள் என்ற சாக்கில் ஏற்கெனவே பத்து வருஷ சிறைவாச தண்டனை அனுபவித்து வந்தார்கள். 'அவர்களுடைய அரசியல் நண்பர்களும் ஆயிரக்கணக்கான பேர் தண்டிக்கப்பட்டிருந்தார்கள். இவ்வளவு கெடுபிடி நடந்தும் கிரோவ் மரணம் என்ற சாக்குப்போக்கு ஓயவில்லை. அதைச் சாக்கிட்டு புதிது புதிதாய் தமது எதிரிகளை ஒழிக்க முயன்றார் ஸ்டாலின்.

மாஸ்கோ பத்திரிகைகளின் செய்திகளை எங்களால் நம்ப முடியவில்லை. ஆனால் அவைகள் வெளியிட்ட விவரங்களிலிருந்து ஸினோவிவ், காமனேவ் விசாரணை எப்படி முடியுமென்று ஊகிக்க முடிந்தது. அவர்களுக்கு மரண தண்டனை தான் கிடைக்கும் என்பதைப்பற்றி எங்களில் யாருக்கும் சந்தேகம் இருக்கவில்லை.

ஒரு சமயம் ஸினோவிவின் காரியதரிசியாயிருந்து அவருடைய அன்புக்குப் பாத்திரமானவரான எங்கள் ஸ்தானிகர் கோபெட்ஸ்கி இச்செய்திகளைக் கேட்டுக் கவலையில் மூழ்கினார். ஸினோவிவ் குற்றவாளி என்றால் அவருக்கு வேண்டியவர்கள் எல்லோருக்கும் பிராணாபத்து என்பது தெரிந்த விஷயம்தானே! வழக்கமாய் எல்லோரிடமும் தமாஷாய்ப் பழகும் கோபெட்ஸ்கி

இச்செய்தி கேட்டு முதல் பிடித்தாட்டப்பிடித்தவர்போல் தன்னைத் தானியாய்த் தம் அறையில் கிடப்பட்டை உதறிக்கொண்டு யோகியோகைத் திருகிய வண்ணம் பொழுதைப் போக்கினர். சதி விசாரணை ஆரம்பமானதும் எங்கள் காரியாலயத்தின் சூழ்நிலை இன்னும் கேவலமாயிற்று. ஒருவருக்கொருவர் பேசுவதற்குக் கூட பயந்தோம். கெட்ட சொப்பனம் கண்டு திக்பிரமை அடைந்தவர்கள்போல என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தோம்.

இன்னும் சில தினங்களில் மற்றும்பல ஆச்சரியமான செய்திகள் வந்தன. நடந்திருக்கவே முடியாத பல படுமோசங்களைத் தாங்கள் செய்துள்ளதாயும் தவறெல்லாம் தங்களுடையதுதா னென்றும் ஸினோவீவ், காமனேவ், ஸ்மிர்னவ் முதலியோரும் மற்ற பதின்மூன்று பேரும் ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்று தெரிந்தது. அவர்கள் வெளியிட்டதாய்க் கூறப்பட்ட வாக்கு மூலங்கள் முன்னுக்குப் பின் முரணான அபத்தக் களஞ்சியங் களாயிருந்தன. அவைகளில் அவர்கள் ஏற்கெனவே செய் திருந்த காரியங்களைவிட, இனிமேல் தாங்கள் என்ன செய்ய உத்தேசித்திருந்தார்கள் என்பதைப்பற்றிப் பொதுவான விவரங் களே நிறைந்திருந்தன. இதை நிரூபிக்கத் தக்க அத்தாட்சி கள் ஏதும் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்படவில்லை. கிராவ் கொலை பற்றிய விசாரணைகள் நடந்த விவரத்தை அறிந்த யாரும் இந்த வழக்கின் நீதி நியாயங்களைப்பற்றி சந்தேகப்படமாட்டார்கள். லெனின்கிராடில் ஒரு தலைமைக் காரியாலயத்திலிருந்து ஸினோவீவ், காமனேவ் முதலிய தலைவர்கள் ஸ்டாலினைக் கொலை செய்ய சூழ்ச்சி செய்தார்கள் என்றும், வெளிநாட்டு உதவி பெற்று ஸோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி நடத்தினார்கள் என்றும் அத்தலைவர்களே ஒப்புக் கொண்டதாய் வெளியான விவரங்களை 'குரூரமான கேலிக்கூத்து' என்று நினைக்காமல் வேறென்னவென்று சொல்லமுடியும்?

பொய் புனைசுருட்டான ஜோடனையின் நடுவே ஒரு சமயம் உண்மையும் வெளியாயிற்று. அரசாங்க பிராஸிகூட்டர்

விஷின்ஸ்கி பிரதிவாதிகளை அக்கக்காய்க் குறுக்கு விசாரணை செய்து பிராஸிகியூஷன் வழக்கை ஸ்தாபிக்க முயன்றார். குற்றத்தை ஒப்புக்கொண்டதாய்ச் சொல்லப்பட்ட ஸ்மிர்னோவிடம், விஷின்ஸ்கி, "லெனின்கிராடு புரட்சிக் காரியாலயத்திலிருந்து நீங்கள் எப்பொழுது கிளம்பினீர்கள்?" என்று கேட்டபோது ஸ்மிர்னோவ் யாரும் எதிர்பாராதபடி பதிலளித்தார். "கிளம்பினேனா? எதைவிட்டுக் கிளம்புவது? புரட்சிக்காரியாலயம் என்று ஏதாவது இருந்தால்தானே அதை விட்டுக் கிளம்ப?" என்று திருப்பிக் கேட்டுவிட்டார்.

ஸ்மிர்னோவ் தாம் சொல்ல வேண்டிய பாடத்தைச் சொல்லாமல் வேறொன்றைச் சொல்லிவிடவே விஷின்ஸ்கி ஆச்சரியமடைந்தார். விடாப்பிடியாய் "அப்படி ஒரு காரியாலயம் இருக்கவில்லையா?" என்றார்.

ஸ்மிர்னோவ், அலுப்புடன், "நீங்கள் என்ன சொல்கிறீர்கள் புரியவில்லையே?" என்று பதிலளித்தார்.

பிராஸிகியூஷனின் உண்மை சொரூபத்தையும் எதிரிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டதாய்க் கூறப்பட்ட வாக்குமூலங்களின் உண்மையையும் இத்தகைய சிறு சம்பவங்கள் விளக்கிக் காட்டின. கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கை முறைகளை அறிந்த எங்களுக்கு இது புதிதல்ல. எதிரிகள் சொன்னதாய் வெளியான வாக்குமூலங்களை நாங்கள் யாரும் நம்பவில்லை. அத்தலைவர்களை எங்களுக்கு நன்றாய்த் தெரியும். அவர்களுடன் நாங்கள் நெருங்கிப் பழகியிருக்கிறோம். அவர்கள் ஒப்புக்கொண்டதாய்க் கூறப்பட்ட குற்றங்களை அவர்கள் செய்திருக்கவே மாட்டார்கள்.

அப்படியே அக்குற்றங்களை அவர்கள் செய்ய விரும்பியிருந்தால்கூட, ரஷ்யா இருந்த நிலையில் அது முடியாத காரியம்.

அப்படியானால் இந்தக் கட்டுக்கதைகளை யாருக்காக இப்படி ஜோடித்தார்கள்?

இவை எங்களைப் போன்ற அனுபவசாலிகளுக்காக அன்று. புதிய தலைமுறை மக்களுக்காகவே இந்த கட்டுக்கதைகள் வெளியிடப்பட்டன. இவையெல்லாம் உண்மையென்று நம்புவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை. எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டதாய் வெளியிடப்பட்ட வாக்குமூலங்களும், அக்குற்றவாளிகளின் துரோகத்தைப் பற்றிய கண்டனங்களுமே பத்திரிகைகளில் வெளிவந்தன. வழக்கைப் பற்றியோ விசாரணையைப் பற்றியோ பத்திரிகைகள் சீர்தூக்கிப் பார்த்து அபிப்பிராயம் தெரிவிப்பது வழக்கமில்லை; தெரிவிக்கவுமில்லை. இதைப்பற்றி பொது விவாதங்களோ பேச்சுகளோ நடக்கவில்லை. அவரவர் வீடுகளில் பரம ரகசியமாய்ப் பேசிக்கொண்டால் தானுண்டு. இந்நிலைமையில் கட்சியின் பழைய சரித்திரத்தைப் பற்றிய உண்மைகளை அறியாத ரஷ்ய இளைஞர்கள் இவ்வழக்கு விவரங்களை நம்பியதில் ஆச்சரியமில்லை.

ஆனால் வெளி உலகத்தாரில் சிலரும் இந்த அநியாயத்தை நிஜமென்று நம்பியதுதான் விந்தையிலும் விந்தை. எது உண்மை, எது போலீஸின் ஜோடனை என்றுகூடத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு வெளி உலகில் அரசியல் அனுபவம் உள்ளவர்கள் இல்லாமலா போய்விட்டார்கள் !

வெளி உலகம் இவ் வழக்கு விவரங்களைப் பாகுபாட்டுடன் கவனிக்குமென நம்பி நாங்கள் ஏமாந்துதான் போனோம். எந்தக் கதையையும் நம்பி ஏமாந்துபோகத் தயாராயிருந்த "முற்போக்கு"ப் பத்திரிகைகள் மூலமாகவும் "அனுதாபிகள்" மூலமாகவும், ஸ்டாலின் உலகமே தமது பிரசாரத்தை நம்பும்படி செய்துவிட்டார். சுயாதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்ளுவதற்கென்று தாம் செய்த சூழ்ச்சியை ஒரு நாசகாரக் கும்பலிலிருந்து நாட்டைக் காப்பாற்றிய தியாகச் செயலென்று உலகம் மதிக்கும்படி செய்தார் ஸ்டாலின். அதிகார மோகம் கொண்ட ட்ராட்ஸ்கி தம் நோக்கம் எப்படியாவது கைகூட வேண்டுமென்று, நாசகார நாட்ஸிகள், பாஸிஸ்ட் துரோகிகள், ஆக்ரமிப்புக்கு அஞ்சாத ஜப்பானியர்கள் முதலியோருடன்

ஒன்றுகூடி சதி செய்தார்; ஸோவியத் ஆட்சிக்கே உலைவைக்க விருந்த இந்த பயங்கர சதியை "ஜனநாயகங்களின் தோழர்" ஸ்டாலின் சமயத்தில் கண்டுபிடித்துவிட்டார்; ட்ராட்ஸ்கியின் சூழ்ச்சியிலிருந்து உலகைக் காப்பாற்றியதற்காக எல்லோரும் ஸ்டாலினுக்கு நன்றி செலுத்தவேண்டும்.—இந்த முறையில் கம்யூனிஸ்ட்களும் அனுதாபிகளும் பிரசாரம் செய்தார்கள்.

* * *

எதுவ்ஸிவில் இருந்த நான் இந்த சதி வழக்கு சம்பந்தமான பத்திரிகைச் செய்திகள் ரேடியோ செய்திகள் யாவற்றையும் ஒன்றுவிடாமல் கவனித்து வந்தேன். எதிரிகள் கூறியதாய் வெளியிடப்பட்ட வாக்குமூலங்களை நம்புவதா இல்லையா என்ற பிரச்னை எழவேயில்லை. அவை ஸ்டாலினும் ரகசியப் போலீஸும் கூடித் தயாரித்தவை என்று எங்களுக்குத் தெரியும். ஸ்டாலின் எதற்காக மறுபடி இந்த பயங்கர ஆட்சியில் இறங்கியிருக்கிறார், எதற்காக இப்படி பயத்தையும் வெறுப்பையும் ஊட்டிவிட்டுக்கொண்டு செல்கிறார் என்பதுதான் அப்போது எங்களுக்குத் தெரியவில்லை.

இவ்வழக்கில் குற்றங்களை ஒப்புக்கொண்டவர்களைக் கொல்லாமல் விட்டுவிடுவார்கள் என்று எங்களுக்குத் தோன்றிற்று. லெனினுடைய தோழர்களாய் விளங்கியவர்கள், ஸ்டாலினுடன் கூட வெகுகாலம் ஒத்துழைத்தவர்கள் இவர்களைக் கொலைக் களத்துக்கு அனுப்ப மனம் வராது என்றுதான் நாங்கள் நினைத்திருந்தோம்.

கோர்ட்டின் தீர்ப்பும், மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்ட செய்தியும் ரேடியோவில் வந்தபோது நாங்கள் ஸ்தம்பித்துப்போனோம். அவரவர் மனதில் எழுந்த கேள்விகளைப் பிறரிடம் ரகசியமாய் வெளியிடக்கூட எங்களுக்குத் துணிச்சல் இருக்கவில்லை. போல்ஷவிக் இயக்கத்தின் ஒரு முக்கியமான கட்டம் முடிந்துவிட்டது என்று எனக்குத் தோன்றிற்று.

செய்தியைக் கேட்டதும் கோபெட்ஸ்கியின் முகம் வெளிறி விட்டது. அவர் ஸினோவிவின் நெருங்கிய நண்பராயிருந்தார் என்பது பிரசித்தமான விஷயம்.

இன்னும் சில தினங்களில், ஸினோவிவ்-காமனேவ் சதியில் வெளிநாடுகளிலுள்ள பல ருஷ்ய ராஜதந்திரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாயும், அவர்கள் உடனே தாயகத்துக்குத் திருப்பியழைக்கப்படுவர் என்றும் கிரேக்கப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாயிற்று. அப்படிப்பட்டவர்களில் கோபெட்ஸ்கியின் பெயரும் இருப்பதாய் அச்செய்தி கூறிற்று.

இச் செய்தியைப் பிரசுரித்திருந்த ஒரு கிரேக்கப் பத்திரிகையை கோபெட்ஸ்கியிடம் காட்டினேன். அவர் ஒன்றுமே சொல்லவில்லை. அவர் முகத்தில் மட்டும் அவரை அரித்துத்தின்ற கவலை நன்கு வெளிப்பட்டது. இந்தத் தவறான செய்தியை உடனே அதிகார பூர்வமாய் மறுக்கவேண்டும் அல்லது தன்னை வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று லிட்விநோவுக்கு அவர் தந்தி அடித்தார். லிட்விநோவ், "ஏதன்ஸிலேயே இருங்கள். உத்தரவு வரும்" என்று பதில் அனுப்பினார்.

தினந்தோறும் வழக்கமான காரியாலய வேலைகளை கவனிப்பதுபோலவே நாங்கள் வேலை செய்து வந்தோமென்றாலும் எங்களில் யாருக்குமே உற்சாகம் இல்லை. மக்கள் படிக்கத் தகாத புத்தகங்கள் என்று தடுக்கப்பட்ட புத்தகங்களின் ஜாப்தாக்கள் மாஸ்கோவிலிருந்து ஒவ்வொரு தபாலிலும் வந்து கொண்டிருந்தன. ஜாப்தாவிலுள்ள புஸ்தகம் ஏதாவது கையிலிருந்தால் அதை உடனே கொளுத்திவிட வேண்டும் என்றும் உத்தரவு வந்தது. இவ்வாறு தடுக்கப்பட்ட நூல்கள் சதி விசாரணையில் தண்டிக்கப்பட்டவர்களும் சம்பந்தப்பட்டவர்களும் எழுதிய நூல்களேதான். இவற்றில் பல மார்க்ஸியத்தைப் பற்றியவை. சென்ற பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் ஈடுபட்டிருந்த சகல தலைவர்களும் இப்போது வேண்டாத மனிதர்கள் ஆகிவிட்டதால் அவர்கள்

எழுதிய புத்தகங்கள் எல்லாம் எரிக்க வேண்டியவை ஆகி விட்டன. புகாரின், ராடெக், ப்ரியோப்ராஜென்ஸ்கி முதலிய பிரசித்தமான கம்யூனிஸ்ட்கள் எழுதிய முகவுரைகள் இருந்த தென அவைகளைக் கொளுத்திவிட உத்தரவிட்டார்கள். இதே வேகத்தில் போனால் புஸ்தகசாலைகளின் அலமாரிகள் காலி யாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை என்று நினைத்தேன்.

ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தபோதும் இதே போல்தான் தமது கொள்கைக்கு மாறுபட்ட நூல்களையெல்லாம் நிக்ஷேபமாக்கினார். அவைகளில் பல நூல்கள் கம்யூனிஸ்ட் ஆசிரியர்கள் எழுதியவை. ஆனால் ஸ்டாலின் இப்போது கொளுத்திய கம்யூனிஸ்ட் நூல்களின் எண்ணிக்கை ஹிட்லர் கொளுத்திய கம்யூனிஸ்ட் நூல்களின் எண்ணிக்கையையும் மிஞ்சிவிடும் போலிருந்தது.

உண்மையில், கம்யூனிஸத்தின் தந்தை கார்ல் மார்க்ஸ் எழுதிய பல நூல்களுக்குக்கூட ஆபத்து வந்துவிட்டது. கம்யூ னிஸத்தைக் கரைத்துக்குடித்தவரும், மார்க்ஸ்-லெனின் இன்ஸ் டிட்யூட்டின் ஸ்தாபகருமான ரியாஸனாவ் பதிப்பித்திருந்த மார்க்ஸ் நூல்கள்கூட நிக்ஷேபமாயின. ரியாஸனாவ் இப்போது விரும்பத்தகாத மனிதராகி ஸைபீரியாவுக்குக் கடத்தப் பட்டிருந்தார்.

லெனினுடைய நூல்களும் இந்த அக்கிரமத்திலிருந்து தப்பவில்லை. லெனின் நூல்களில் முதல் பதிப்பை காமனேவ் வெளியிட்டார். அதில் இப்போது துரோகிகளெனப்படும் சிலரை சிலாகித்து எழுதியிருந்தது என்பதற்காக அந்த முதற் பதிப்பும் விரும்பத்தகாத நூலாகிவிட்டது.

நான் எழுதியிருந்த ஒரே ஒரு நூலைப்பற்றியும் ஸ்டாலின் நடவடிக்கை எடுத்துக்கொண்டார். வெறும் பிரசங்கங்களும் தனிப்பட்ட கட்டுரைகளும் கொண்ட ஸ்டாலின் " நூலுக்கு "ப் புதிய பதிப்பு வெளியாயிற்று. " துரோகி "களுக்கு சாதக மாயிருக்கக்கூடிய பழைய பதிப்புகள் பொது உபயோகத்தி-

விடுபட்டு வாபஸ் பெறப்பட்டன. இது அருவருப்பாய்த்தான். அரசாங்கம் போனபோக்கில் அதன் தற்போதைய கொள்கைக்கு எதிராக எந்த அசடரும் ஸ்டாலின் நூலிலிருந்துகூட மேற்கோள் காட்டத் துணிந்திருக்கமாட்டார்.

* * *

ஆகஸ்ட் மாத சதி விசாரணைகளுக்குப்பின் எங்கள் ராஜதந்திர அலுவல்கள் மிகவும் குறைந்து போய்விட்டன; நின்றேபோய் விட்டதாயும் கூறலாம். பொதுவான உலக அரசியல் நிலைமையைப்பற்றி மாஸ்கோ மேலதிகாரிகளிடமிருந்து எங்களுக்கு வரும் கொள்கைக் குறிப்புகள் நின்றுபோயின. ரஷ்ய அரசாங்க நடவடிக்கைகளைப் பற்றியும் அன்றாட அரசியல் பிரச்னைகளைப்பற்றியும் எங்களுக்கு வழி காட்டும் குறிப்புகளும் வரவில்லை. இந்த சமயம் நடந்துவந்த இதாலி-எதியோப்பியா போரில், ரஷ்யா கொள்கையளவில் எதியோப்பியா கட்சியில் இருந்தது. ஆனால் செயலில் இதாலிக்கு பெட்ரோல் சப்ளை செய்துகொண்டே வந்தது! இந்த நடவடிக்கையின் காரணங்களை விளக்கவும் எவ்வித குறிப்புகளும் மாஸ்கோவிலிருந்து வரவில்லை. இதற்குத் தொடர்ச்சியாய் ஸ்பெயினில் யுத்தம் ஆரம்பமானபோது எங்கள் அரசாங்கம் நடுநிலைமை வகிக்கக் காரணம் என்னவென்றும் புரியவில்லை. எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது.

* * *

இரண்டாவது மாஸ்கோ சதி விசாரணைக்கு மூன்று வாரம் முன்னால், விடுமுறை எடுத்துக்கொண்டு மாஸ்கோ போய்ச் சேர்ந்தேன். ரகசியமாய்ப் பேசும்போதுகூட அரசியலைப்பற்றிப் பேச யாரும் துணியவில்லை. பிரபலமானவர்களான என் நண்பர்களில் பலர் திடீரென போன இடம் தெரியாமல் மறைந்துபோயிருந்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. நாலு பேருடன் பேசிக் கொண்டிருக்கும்போது அவர்கள் பெயரை அகஸ்மாத்தாய்ச்

சொல்லிவிட்டால்கூட எல்லாருக்கும் சங்கடமாயிருக்கும். அந்தப் பெயரைக் கேட்காதவர்களைப்போல் எல்லாரும் பாவனை செய்வார்கள்! உயிரையே உறிஞ்சிவரும் வியாதியால் தவிக்கும் ஒருவன் எப்படியோ தன் வியாதி குணமாகி முன்போல் நடமாட முடியும் என்று கடைசிவரை நினைப்பதுபோல, கம்யூனிஸ்ட் கட்சியில் செல்வாக்குள்ள அங்கத்தினர்கள் எப்படியோ எல்லாம் சரியாகிவிடும் என்று நம்பிக்கொண்டு தங்கள் அன்றாட வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்.

கிரோவின் வழக்கு காரணமாகவும், அவருக்கு நேர்ந்த கதி எங்களுக்கும் நேராதிருக்கவும், ஸோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்க அந்நிய அரசாங்கங்கள் பிரம்மப் பிரயத்தனம் செய்து வருவதாய் நம்புவதுபோல் நாங்களெல்லாரும் காட்டிக்கொள்ள வேண்டியிருந்தது. தோற்றுப்போய்விட்ட எதிர்ப்புத் தலைவர்களுக்கு லஞ்சம் கொடுத்து அவர்கள்மூலம் ஸோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்க அந்த அந்நிய அரசாங்கங்கள் முயற்சி செய்வதாயும், நாடு முழுவதும் அந்நியரின் உளவாளிகள் நிறைந்திருப்பதாயும், யார் யாரோ சேர்ந்துகொண்டு அரசாங்கத்தைக் கவிழ்த்து மீண்டும் முதலாளித்துவத்தை நிலைநாட்டச் சதி செய்கிறார்களென்றும் பொதுமக்களிடையே பிரசாரம் நடந்தது. மேலிடத்து உத்தரவுப்படி, பத்திரிகைகள், புத்தகங்கள், நாடகக் கொட்டகைகள், ரேடியோ எல்லா பிரசார ஸ்தாபனங்களும் இத்தகைய பிரசாரத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டன. ப்ராவ்டா பத்திரிகையின் ஒவ்வொரு இதழிலும் "தலை மறைவாய்ப் பதுங்கி வேலை செய்யும்" எதிரியைப்பற்றி ஒரு கட்டுரை இருக்கும். உஷாராயிருங்கள் என்ற எச்சரிக்கையுடன் முடியும் அக்கட்டுரை. வேவுகாரர்கள் பீதி பிரமாதமாயிருந்ததால், அந்நியர்கள் யாவருமே சந்தேகத்துக்குரியவர்கள் என்று ரஷ்ய மக்கள் நினைக்கத் தொடங்கிவிட்டனர். புரட்சிக்காரர்களென்று தங்கள் தாயகங்களிலிருந்து விரட்டப்பட்டு ரஷ்யாவில் தஞ்சம் புகுந்தவர்கள்கூட இதே கதிக்குள்ளானார்கள். வெளிநாட்டிலிருந்து கடிதம் பெறுவதுகூட அபாயமானதா

யிற்று. அச்சமயம் ரஷ்யாவை சுற்றிப்பார்த்துவந்த அந்நியர்கள் ரஷ்யர்களது இந்த மனப்போக்கை உணரத்தான் செய்தார்கள். ஆனால், இந்தப் பிரசாரமெல்லாம் எதற்காக நடந்ததென்று அவர்களுக்குந் தெரியாது. பழைய போல்ஷுவிக் கட்சியை அடியோடு ஒழிப்பதற்காக ஸ்டாலின் ஆரம்பிக்கவிருந்த சதி விசாரணைகளுக்கும் படுகொலைகளுக்கும் ரஷ்ய மக்களைத் தயார் செய்வதற்காகவே இந்தப் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டதென்பதை யாரும் உணரவில்லை.

ஸர்வாதிகாரம் நீடிக்க நீடிக்க, அதன் சாயல் கலைகளையும் பாதிக்கத் தொடங்கியது. கலைகள் எப்படி இருக்கவேண்டும் என்று தினம் தவருமல் வெளியான அதிகாரக் குறிப்புகளால் கலையுலகம் சுயமான கற்பனை செய்ய வழியின்றித் தவித்தது. கலைஞர்கள் தங்கள் கற்பனையில் கொண்டிருந்த பெருமையையும் தன்னம்பிக்கையையும் இழந்தனர்; சொன்னபடி ஆடும் கூத்தாடிகள் கலைத் தலைவர்களாய்ப் பரிமளிக்கத் தொடங்கினர். க்ரெம்லினின் அங்கீகாரம் இல்லாத கலைஞருக்குக் கலையுலகில் ஸ்தானமில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவந்தது.

ஒரு காலத்தில் பிரசித்தமாயிருந்த பல நூலாசிரியர்கள் ஸ்டாலினுடைய அதிருப்திக்குள்ளாகி மதிப்பாரற்றுப்போனுர்கள். ஒரு காலத்தில் "ஸோவியத் இலக்கியத்தின் தந்தை" என்று கொண்டாடப்பட்ட பில்ன்யாக்கின் நூல்களை இப்போது பிரசுரிப்பாரில்லை. ஸோவியத் இலக்கியப் பரிசிலனை ஒன்றில் அவரது பெயரைக் குறிப்பிட்டதற்காக ஒரு விமர்சகர் தண்டிக்கப்பட்டார்! பில்ன்யாக் இலக்கிய கர்த்தாவா இல்லையா என்பது கிடக்க, அவர் ஒரு எழுத்தாளர்கூட அல்ல என்பதே அதிகார பூர்வமான சித்தாந்தமாக இருந்தது. ஒரு காலத்தில் லக்ஷம், கோடிக் கணக்கில் விற்பனையான வேறு பல நூல்களின் ஆசிரியர்களுக்கும் இதே கதி ஏற்பட்டது.

இதே சமயம், கவனிப்பாரற்றுக்கிடந்த சில நபர்கள் திடீரென பிரசித்திபெற்ற நூலாசிரியர்களாய்த் திகழத் தொடங்கி

னார்கள். புகழ்பெற்ற கவிஞர் மாயாகாவ்ஸ்கி அடைந்த அனுபவம் விசித்திரமானது. அதிகாரிகளும் அவர்களுடைய கையாட்களான விமர்சகர்களும் படுத்திய பாட்டில் அவர் மனம் கசந்து தற்கொலை செய்துகொண்டார். அவர் காலமாகி சில வருஷங்களுக்கெல்லாம், ஸோவியத் ரஷ்யாவின் தலை சிறந்த கவிஞர் அவரே என்று ஸ்டாலின் அவரை கௌரவித்தார். அவ்வளவுதான், செத்து சுடுகாடு சென்ற மாயாகாவ்ஸ்கி பெரிய ரஷ்ய பிரமுகராகிவிட்டார். மாஸ்கோ நகரின் பொதுச் சதுக்கமொன்றிற்கு அவரது பெயர் சூட்டப்பட்டது; ஒரு நாடகக் கொட்டகையும் ஒரு கூட்டுப் பண்ணையும்கூட அவரது பெயரைப் பெருமையுடன் தாங்கின!

அடிப்படையாக சிறிதளவாவது கலைத்திறன் இருந்தால்தான் ஸோவியத் ரஷ்யாவில் புகழடைய முடியும் என்றுகூட சொல்வதற்கில்லை. கலைத்திறனுக்கும் புகழுக்கும் சம்பந்தமேயில்லை. கலைத்திறனில் போட்டி இருந்தால்தானே! போட்டியெல்லாம், ஸர்வாதிகாரி ஸ்டாலினை யார் சிறப்பாய் முகஸ்துதி செய்யமுடியும் என்பதில்தான். முகஸ்துதி செய்யும் திறமை இருந்துவிட்டால் கலையைப்பற்றிக் கவலையே இல்லை. உதாரணமாக பிரபலமான கவிஞர் கோல்சேவ்வை எடுத்துக்கொள்ளலாம். கோல்சேவ் ஒரு கவிஞரா, அவரால் நாலுவரி கவிதை எழுத முடியுமா என்பதே சந்தேகம். அப்படிப்பட்டவர்தான், திடீரென ஒருநாள் ஸோவியத் ரஷ்யாவிலேயே மிகச் சிறந்த கவிஞர் என்று சகல விமர்சகர்களாலும் போற்றப்பட்டார். அவருக்கு அத்தகைய உந்நத புகழை வாங்கிக்கொடுத்த அந்த அற்புதக் கவிதையை ஸோவியத் யூனியனின் 167 பாஷைகளிலும் மொழி பெயர்த்துப் பாடினார்கள். தெரு கூட்டுகிறவன் முதல் துருவக்கடல் விஞ்ஞானிகள்வரை பாலர் முதல் விருத்தர்வரை எல்லாரும் இந்த அற்புதக் கவிதையை நெட்டுரு செய்தார்கள். லக்ஷோபலக்ஷம் பிரதிகள் அச்சிடப்பட்டு, இக்கவிதை மூலை முடுக்கெல்லாம் விநியோகிக்கப்பட்டது. இந்த உத்தமக் கவிதா சிருஷ்டியின் சரியான மொழி பெயர்ப்பு கீழே இருக்கிறது:

புடியன்னி முறுவல் பூத்தால்
புரண்டோடும் டான் பனியும்.
புடியன்னி முறுவல் பூத்தால்
புது மெப்பிள் மொட்டுக் கட்டும்.

வாரஷிலாவ் முறுவல் பூத்தால்
வான்மணியும் ஒளிவிடுமே.
வாரஷிலாவ் முறுவல் பூத்தால்
வந்திடுமே நல்லிள வேனில்.

ஸ்டாலினர் முறுவல் பூத்தால்—
சாற்றுமொரு கவியும் உண்டோ ?
ஸ்டாலினர் முறுவல் பூத்தால்
ஜகம் இதிலே இணையேதப்பா !

ஸெர்ஜி மகால்காவ் என்பவரால் ஸ்டாலினுக்குச் சூட்டப்பட்ட மற்றொரு புகழ்மாலை கீழே இருக்கிறது. ஸர்வாதிகாரியின் அறுபதாண்டுக் கொண்டாட்டத்தின்போது, அரசாங்கப் பத்திரிகை இஸ்வெஸ்ட்டியா உட்பட சகல பத்திரிகைகளிலும் வெளியான அந்தப் பாடலாவது :

மந்தைப் பனிமீதே மங்கும் தாரகைகள்
விந்தை மாஸ்கோவில் விம்மும் இரவுதனில்,
சிந்தை நிறைவுடனே செயலின் முறைகாணத்
தந்தை ஸ்டாலின்தான் தனியே விழித்திருந்து

நாடுநகரமெல்லாம் நன்கு நிறைந்துள்ள
பாடுபடும்வீரர் பண்புப் பெரியோர்கள்
தேடும் வாழ்வெல்லாம் சிக்கல் ஏதுமின்றி
கூடும் வேளைமுன் கூட்ட முயன்றிடுவான்.

எங்கோ மலைதாண்டி எல்லைச் சாரலிலே
பொங்கும் களியுடனே பொழுதும் ஆடுகளைத்
தங்கி மேய்த்திடுமோர் தனிச் சிறுவனைக்கூட
எங்களுயர் ஸ்டாலின் என்றும் காத்திடுவான்.

முலைக் கனக்கும் பிஞ்சு முலைகளும் இடையாளது
சாலிய பேச்சினையும் மட்டெடைக கேட்டுநெயாள்.
ஓ பொன்னிறமே ஒரு சிறுவன் எழுதியதும்
வெல்வெட்டாம் விட்டு விடைதானே தருகிறவன்.

ஆராக் கனிமையிலே கொள்ளைக் குடிசையிலே
சிறு வயதிலில்லாத் தீமை தன்னுடனே
கோரக் கிடக்கையிலே கூவிக் கதறிடுறும்
பெருமை. தனமுள ஸ்டாலினிடம் உரைக்குகிறவன்.

அவ்வாக்குறும் மாஸ்கோவில் உள்ளிருந்த ஒரு ஞாயிற்றுக்கு இங்கே குறிப்பிடலாம். லெர்மன்டாவ் என்ற பெயரால் கவிஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கவிஞர் சிலை ஒன்றைத் திறந்துவைக்க ஏற்பாடாயிற்றும். விழாவில் ஜெயலியல் பிரமுகர்கள் எல்லாரும் கூடினார்களாம்; பிரமாதமான பிரசங்கங்கள் நடந்தன; சங்கீதம் வாசனையாயிற்று; சிலையும் திறந்துவைக்கப்பட்டது. கூடியிருந்த மக்கள் இருத்து நெறித்துக்கொண்டு சிலையைப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம், கவிஞரின் சிலைக்கு பதிலாக பிரம்மாண்டமான ஸ்டாலின் சிலையொன்றுதான் இருந்தது.

கூட்டத்திலிருந்த ஒருவர், ஒன்றும் புரியாமல், "அது சரி. இதற்கும் லெர்மன்டாவுக்கும் என்ன சம்பந்தம்?" என்று பக்கத்திலிருந்தவரிடம் காதோடு காதாய்க் கேட்டார்.

பக்கத்திலிருந்தவர் சொன்னாராம்: "சுத்த அசடாயிருக்கிறாயே! ஸ்டாலின் கையில் உள்ள புஸ்தகத்தைப் பாரேன். அது லெர்மன்டாவ் கவிதைத் தொகுதியில்லையா?"

இலக்கியம் எப்படியோ, அப்படித்தான் சங்கீதமும். ஸ்டாலின் இளைஞராயிருந்த சமயம் அவர் அனுபவித்ததெல்லாம் கிராமியப் பாடல்கள்தான். அவர் ஸர்வாதிகாரியான பின் ஆபெரா என்ற சங்கீத நாடகத்திலும், பாலே என்ற நாட்டியங்களிலும் அவருக்கு மோகமேற்பட்டது. ரஷ்யாவில்

மற்றெல்லா விஷயங்களைப்போலவே இக்கலைகளுக்கும் அவர்தான் பிரதம போஷகர். முதலாளித்துவ நாடுகளிலென்றல் கலைஞர்களுக்கு போஷகர்கள் ஆயிரக்கணக்கில் பண உதவி செய்யக்கூடும்; மிஞ்சினால் சில லட்சம் டாலர் உதவி கிடைக்கலாம். ஆனால் ருஷ்ய அரசாங்க பொக்கிஷமே தன் கைவசமுள்ள ஸ்டாலின் என்னதான் செய்யக்கூடாது? சொந்தப் பணமா, கவலைப்படுவதற்கு? ருஷ்ய பொக்கிஷத்தையே திறந்து, கோடிக்கணக்கான ரூபிள்களை இக் கலைகளுக்கெனக் கொடுத்திருக்கிறார். கலைஞர்கள் தங்கள் சுக வாழ்வுக்கு ஸ்டாலினே காரணம் என்று அவரை அத்தியந்த விசுவாசத்துடன் போற்றுகிறார்கள். கைத்தொழிலில் சிறந்தவர்கள், துருவக் கடலை ஆராயும் விஞ்ஞானிகள் முதலான பிரபலஸ்தர்களுக்கு கிரெம்லினில் விருந்துபசாரம் நடக்கும்போது, ஏராளமான கலைஞர்கள் சேர்ந்து நாடகங்களும் நாட்டியங்களும் ஆடி யாவரையும் மகிழ்விப்பது சகஜம். இம்மாதிரி ஆடும் கலைஞர்களிலேகூட, பலதரப்பட்ட தாரதம்யங்கள் உண்டு. "கவனத்திற்குரிய கலைஞர்" என்பதுமுதல் "குடியரசின் மக்கள் கலைஞர்" என்ற உந்நத ஸ்தானம்வரை படிப்படியாகப் பல்வேறு அந்தஸ்துகளும் பட்டங்களும் உண்டு. இவ்வாறு கௌரவப் பட்டங்கள் அளிப்பது தவிர, கோடிக்கணக்கான ரூபிள் பணத்தை நாடகக் கட்டடங்களுக்கும் கொட்டகைகளுக்கும் தனிப்பட்ட நடிகர்களுக்கும் கொடுக்கலாமென ஸ்டாலின் "சிபார்சு செய்வார்". அவருக்குப் பிடித்தமான பேர்களுக்கு ராஜபோகம் கிடைக்கும், சர்க்கார் செலவில். இத்தகைய வெகுமதிகளைப்பற்றிய விவரங்களை வெளியிடும்போது பத்திரிகைகள் ஞாபகத்தோடு இவை "தோழர் ஸ்டாலினுடைய முயற்சியின்பேரில்" அளிக்கப்பட்டன என்பதை வற்புறுத்திச் சொல்லும்.

புது ஆபெரா அல்லது பாலே நடந்தால், அதைக் கண்டு களிக்க அநேகமாய் முதல் நாளன்றே ஸ்டாலின் வந்துவிடுவார். எந்தக் கொட்டகையானாலும், முற்காலத்தில் ஸார் மன்னர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த விசேஷ ஆசனங்கள் ஸ்டாலினுக்

கென ஒதுக்கப்பட்டிருக்கும். ஆசன வரிசைகளில் முன் வரிசையில் அவர் உட்காரமாட்டார். முன்வரிசை நிறைய தமது பரிவாரம் உட்கார்ந்திருக்க, தாம் பின்னால் தள்ளி இரண்டாவது வரிசையில் அமர்ந்திருப்பார். சுற்றிலும் ரகசியப் போலீஸ் ஆட்கள் உட்கார்ந்துகொள்வார்கள்.

இடைவேளையின்போது ஸ்டாலின் சாப்பிடுவதற்கென அருகிலுள்ள ஓர் அறையில் ஏராளமான சிற்றுண்டிகள் வைத்திருப்பார்கள். மற்றவர்களைப் போல வெளியே சென்று சிற்றுண்டி சாப்பிடும் அளவுக்கு அவர் துணிந்து செல்வதில்லை. பல சமயங்களில் ஸ்டாலின் வந்துபோனதை கொட்டகையிலுள்ள மக்கள் அறியவேமாட்டார்கள். மறுநாள் பத்திரிகைகளில் பார்க்கும்போதுதான் அவர் வந்திருந்தாரென்பதை அறிவார்கள். தப்பித்தவறி ஸ்டாலினைப் பார்த்துவிட்டால்போதும், கொள்ளிவைத்தாற்போல் மக்களும் சரி கலைஞர்களும் சரி கரகோஷம் செய்வார்கள்.

ஸ்டாலினைத் திருப்தி செய்வதற்காக அவர் பிறந்த ராஜ்யமான ஜார்ஜியாவைச் சேர்ந்த ஒரு ஆபெரா கோஷ்டியை ஒரு தடவை மாஸ்கோவுக்கு அழைத்து வந்தார்கள். ஆபெரா சர்வ சாதாரணமாயிருந்தது. ஆனால் விமர்சகர்களோ அதை வாயாரப் புகழ்ந்தார்கள். கலைஞர்கள் ஸ்டாலினுடைய ஊர்க்காரர்கள் என்பது போதாதா ?

சினிமா உலகில், ஸ்டாலின் வைத்ததே சட்டம்; அவர் சொன்னது விலை. சினிமாப் படங்கள் சிறந்த பிரசார சாதனங்களானாலும், அந்நியப் படங்கள் முதலாளித்துவ நாடுகளின் விருப்பத்துக்கேற்க அம்சங்களை ரஷ்ய மக்களுக்குக் காட்டிவிடக்கூடுமாதலாலும் அந்நியப் படம் எதும் பாலிட்பீரோ பார்க்காமல் வெளியே காட்டப்படமாட்டாது. பாலிட்பீரோ தீர்ப்பு என்பது உண்மையில் ஸ்டாலின் தீர்ப்பு தவிர வேறில்லை. ஸோவியத் மக்கள் பார்க்கக்கூடியவை என்று சிபார்சு செய்யப்படும் புதிய வெளிநாட்டுப் படங்கள் எல்லாவற்றையும்

தூக்குக் காட்டும்படி ஸ்டாலின் உத்தரவிட்டிருப்பதாக எனது பழைய நண்பரும் ஸோவியத் சினிமாக் கைத்தொழில் நிர்வாகத்திலிருந்தவருமான போரிஸ் ஷுமியாட்ஸ்கி என்னிடம் கூறியிருக்கிறார். சிபார்சு செய்யப்பட்ட படங்களில் பலவற்றை “அபாயகரமான கொள்கைகளைப் பரப்புபவை” என்று ஸ்டாலின் தடுத்திருக்கிறாராம். வால்ட் டிஸ்னியின் குழந்தைக் கதைப்படங்கள், குடியானவர் புரட்சிக்கு உதாரணமென்று கருதப்பட்ட வைவா வியா (Viva Villa) படம், முதலாளித்துவ நாட்டின் மோசமான நிலைமையை விளக்கும் நமது அன்றாட உணவு (Our Daily Bread) முதலிய படங்களே முடிவாக அங்கீகரிக்கப்பட்டன. இதிலிருந்து, தடுக்கப்பட்ட மற்ற படங்கள் ஸ்டாலினுக்குப் பிடிக்கவில்லை என்று நினைத்துவிடவேண்டாம். அவருக்கு ஹாலிவுட் நடிகர்களிடம் தனிப் பிரியம் உண்டு. அவருக்கு மிகவும் பிடித்தமானவர்கள் கிளார்க் கேபிள், வாலஸ் பீரி, பால் முனி ஆகிய மூவர். கொள்ளைக்காரர்களைப்பற்றிய படங்கள் தமக்குப் பிடிக்கின்றன என்று ஸ்டாலினே தம்மிடம் சொல்லியிருப்பதாய் ஷுமியாட்ஸ்கி கூறியிருக்கிறார். ஆனால் அப்படங்களை ஸோவியத் மக்களுக்குக் காட்டக்கூடாதென்று பொதுவான தடை உத்தரவு போட்டிருக்கிறார்.

ஸோவியத் மக்கள் சாப்ளின் படங்களை விரும்பிப் பார்த்தார்கள். ஸோவியத் சினிமா அதிபர்களும் சாப்ளினிடம் மிகுந்த மரியாதை செலுத்தினார்கள். ஆனால், ஸ்டாலினுக்கு ஹாஸ்யச்சுவையில் விசேஷ பரிவு கிடையாது என்ற ஒரே காரணத்துக்காக சாப்ளின் படங்கள்மட்டும் வெகுநாள்வரை ரஷ்யாவில் காட்ட அனுமதிக்கப்படவில்லை. பிறகு தடை நீக்கப்பட்டது. சாப்ளின் படங்கள் இப்போது (1945-ல்) ரஷ்யாவில் காட்டப்படுகின்றன. ஸ்டாலினுக்கு ஹாஸ்யம் பிடிக்காதென்ற இதே காரணத்தினால், ரஷ்ய டைரக்டர் அலெக்ஸாண்டிராவின் குதூகலப் பேர்வழிகள் என்ற படத்தை விமர்சகர்களெல்லோரும் “முதலாளித்துவ நாட்டுப் படங்களின் போக்கில் இருக்கிற”

தென்று பிரமாதமாய்க் கண்டித்தார்கள். ஆனால், இதன் பின் ஷுமியாட்ஸ்கி படத்தை ஸ்டாலினிடம் காட்டினார். படம் ஸ்டாலினுக்கு ஓரளவு பிடித்திருந்தது. ஸ்டாலினுக்குப் படம் பிடித்திருந்தது, அதில் நடித்த இளம் நடிகை லியூபாவ் ஆர்லோவை அதற்குமேல் பிடித்திருந்தது என்ற சமாசாரம் எட்டியதுதான் தாமதம், அதே விமர்சகர்கள் தங்கள் கண்டனங்களை மழுப்பிவிட்டு படத்தை அமோகமாய்ப் புகழ்ந்தார்கள்! அலெக்ஸாண்ட்ராவ் ரஷ்யாவின் தலைசிறந்த டைரக்டர்களில் ஒருவரானார்! "ஸ்டாலினுடைய வேண்டுகோளின்படி" அவருக்கு "செந் தாரகை" விருது வழங்கப்பட்டது; நடிகை ஆர்லோவ் "குடியரசுக்கு அரிய சேவை செய்துள்ள கலைஞர்" என்ற பட்டம் பெற்றாள். 1939-ல், அலெக்ஸாண்ட்ராவ் தயாரித்ததும் ஆர்லோவ் நடித்ததுமான மூன்றாவது படம் வெளியானவுடன், ஸ்டாலினுடைய அபிமானத்துக்குப் பாத்திரமான அவ்விருவரும் மேலும் கௌரவிக்கப்பட்டார்கள். மிக உயர்ந்த கௌரவமாய் மதிக்கப்படும் "ஆர்டர் ஆவ் லெனின்" என்ற விருது அவ்விருவருக்கும் கிடைத்தது.

ரெவல்யூஷன் அண்டு கல்ச்சர் (புரட்சியும் கலாசாரமும்) என்ற ரஷ்யப் பத்திரிகையில் ஒருவர் குறிப்பிட்டதுபோல, ஸ்டாலின் தத்துவ ஆராய்ச்சியிலும் உன்னத ஸ்தானம் வகிக்கிறார் என்பது ரஷ்யாவில் நிலவும் கருத்து. "தற்காலத்தில் நிலவும் பலவகைத் தத்துவங்களை சரிவர அறிந்து விளக்கக் கூடிய மிகச்சிறந்த அறிஞர்" அவர்தானாம். கல்ச்சரல் ப்ரண்ட் (கலாசார முன்னணி) என்ற ஸோவியத் பத்திரிகை அவரை எப்படிப் புகழ்கிறது தெரியுமா? "கிரேக்கத் தத்துவ ஞானி அரிஸ்டாட்டில் கூறிய சில உண்மை வாக்குகளை சரிவரப் புரிந்துகொண்டு உலகுக்கு விளக்குவதற்கு அவதாரமெடுத்தவர் ஸ்டாலின் ஒருவரே" என்று கூறுவதுடன் அப்பத்திரிகை திருப்தியடையவில்லை. "ஞானத்துக்கே சிகரமாய் விளங்குபவர்கள் ஸாக்ரடீஸும் ஸ்டாலினும்தான்" என்றும் சொல்லித் திருப்தியடைகிறது. (ஸாக்ரடீஸ் அரிஸ்டாட்டிலின் குரு

வுக்கு (குரு.) கம்யூனிஸ்ட் அகடமி ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு புரொபஸர் கூறுகிறார்: "தற்கால விஞ்ஞான வளர்ச்சியால் ஜெர்மன் தத்துவஞானி காண்ட் விவரித்த கொள்கைக்கு எந்த ஸ்தானம் அளிப்பதென்ற சிக்கலான பிரச்னை தோழர் ஸ்டாலின் கடைசியாக எழுதியுள்ள கடிதத்தின் மூலம் தான் தெளிவாகிறது." வேறொரு ரஷ்ய அறிஞர் வாயிலாக நாம் அறியும் பெருண்மை என்னவென்றால், "ஸ்டாலினுடைய பிரசங்கங்களின் ஒவ்வொரு பாராவும் கலைப் பொக்கிஷமாகும். அதை அஸ்திவாரமாய்க் கொண்டு கலைக்கோயில்களை நிர்மாணித்துவிடலாம்" என்பதாகும்.

லிடரரி கெஜட் என்ற ரஷ்ய இலக்கியப் பத்திரிகை ஸ்டாலினுடைய எழுத்து நடையில் அற்புதத்தைக் காண்கிறது. "பாஷைக்கலையைப் பயில விரும்பும் ஒவ்வொருவரும் ஸ்டாலினுடைய நடையை ஆராய்ந்து பின்பற்றவேண்டும்" என்று துதி செய்கிறது அப்பத்திரிகை. ஸோவியத் குடியரசுத் தலைவராயிருந்த காலினின் தமது பிரசங்கம் ஒன்றில், "ரஷ்ய பாஷையை மிக நன்றாய் அறிந்தவர் யாரென்று என்னைக் கேட்டால் ஸ்டாலினையே சுட்டிக்காட்டுவேன்" என்றார். பிரபல கவிஞர் டெமியன் பியட்னி, "ஸ்டாலின் எழுதுவதுபோல் எழுதக் கற்றுக்கொள்ளுங்கள்!" என்று ஒரு பொதுக்கூட்டத்தில் உபதேசித்தார். இஸ்வெஸ்ட்டியா பத்திரிகை ஆசிரியர் மற்றொரு கூட்டத்தில் சொன்னார்: "இன்றைய புதிய சகாப்தத்தின் முன்வாயிலில் இரண்டு மகா புருஷர்கள் நிற்கின்றனர்—லெனினும் ஸ்டாலினும்." அதுமட்டுமல்ல. அவரே, மேலும் சொன்னார்: "ஸ்டாலின் எழுத்துக்களைத் தூண்டித் துருவிப் படித்திராமல் இன்று யாராவது எந்த விஷயத்தைப் பற்றியாவது எழுதுவது முடியுமா? முடியவே முடியாது. ஸ்டாலின் எழுத்துகளை அறியாதவர்களுக்கு ஒன்றுமே புரியாது, ஸ்வாரஸ்யமாய் எழுதவும் வராது!" என்றார். இன்னொரு பெண்மணி ஸ்டாலின்தான் ஜெர்மன் மகாகவி கெதேயின் நேர்வாரிசு' என்று பறை சாற்றினார்!

ரஷ்ய அறிஞர்குழாம் இவ்வளவு மோசமான கதிக்கு வந்து விட்டது. இந்த முகஸ்துதிகளால் ஸ்டாலின் ஏமாந்துபோகிறார் என்றோ இவற்றை உண்மையென்று நம்புகிறார் என்றோ நினைப்பது தவறு. இந்த முகஸ்துதிகள் தமது சர்வாதிகாரத்தை நிலைநாட்ட உபயோகமாயிருக்கின்றன என்றே அவர் இவற்றை ஆதரிக்கிறார். படிப்பு வாசனையற்ற அவர், படிப்பு மிகுந்த இந்த அறிஞர்கள் தங்கள் தலையில் தாங்களே மண்ணை வாரி இறைத்துக் கொள்வதைக் கண்டு குதூகலமே அடைகிறார். மாஸ்கோ சதிகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாங்கள் குற்றவாளிகள்தான் என்று ஒப்புக்கொண்டபோது அவர் கோரக் களிப்பெய்தியதுபோலவே இந்த முகஸ்துதிகளைக் கண்டும் கோரக் களிப்படைகிறார். தம்மைவிட உயர்ந்தவர்களெனக் கூடிய அறிஞர்கள் புழுப்போல் புழுதியில் துடிக்கும்படி வஞ்சம் தீர்த்துக்கொள்வதில் அவருக்கு அலாதி திருப்தி. மாஸ்கோவுக்கு வால்பிடிக்கும் பிறநாட்டு அறிஞர்கள், ரஷ்ய அறிஞர்களுக்கு நேர்ந்துள்ள இக்கதியை உன்னிப்பார்ப்பது நலம்.

ஸோஷலிஸ்ட்கள்மீது வஞ்சம் தீர்க்க ஸ்டாலின் விரும்பியதைப்பற்றி ஒரு சமயம் லெனின் " அரசியலில் தனிப்பட்டவர் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்வது மகா மோசமான நடத்தையாகும் " என்று கண்டித்திருக்கிறார். சென்ற இருபதாண்டுகளுக்கு மேலாக ரஷ்ய அரசியலைப் பாழ்ப்படுத்தியுள்ள கொடுமையான நடவடிக்கைகளில் தம்மைவிட உயர்ந்தோர் அனைவர் மீது ஸ்டாலின் தீர்த்துக்கொண்டுள்ள வஞ்சமே மிகக் கொடுமையானது. இதனால் ரஷ்யாவுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் அளவிட முடியாது. எதிர்காலத்தில் என்ன நஷ்டம் ஏற்படுமோ சொல்ல இயலாது.

* * *

முகஸ்துதியும் சந்தேகமும் தலைவிரித்தாடிய எங்கள் துர்ப்பாக்கிய நாட்டில் நான் கழித்த கடைசி நாட்கள் எனக்கு மிகுந்த மனவருத்தத்தை உண்டாக்கின. நண்பர்களையோ

தெரிந்தவர்களையோ பார்த்துப் பேசக்கூட எனக்கு விருப்ப மில்லை. காரியாலய வேலை உண்டு நானுண்டு என்று காலத்தைப் போக்கினேன்.

வெளி விவகார உதவி மந்திரி க்ரெஸ்ட்டின்ஸ்கியையும், ருஷ்ய டாஸ் செய்திஸ்தாபனத்தின் தலைவர் டோலெட்ஸ்கியையும் இரண்டு தடவை சந்தித்தேன். முதல் தடவை அவர்களைப் பார்த்தபோது அவர்கள் சாதாரணமாய்ப் பேசிக்கொண்டும் தமாஷ் செய்துகொண்டும் எதிர் காலத்துக்கான வேலைகளைப் பற்றித் திட்டமிட்டுக்கொண்டுமிருந்தனர். மூன்று வாரம் கழித்து இரண்டாந்தடவை சந்தித்தபோது அவர்கள் அடியோடு மாறிப்போய்விட்டார்கள். அவர்கள் முகத்தில் சிரிப்பேயில்லை. கவலை அவர்களை உள்ளூர அரித்துத் தின்றது. தாராளமாய்ப் பேசக்கூட பயந்தார்கள். நான் சொல்பவைகளைக் கவனிக்கவு மில்லை. என்ன சொல்வதென்று திகைத்துப்போனவர்கள் போல் மென்று விழுங்கினார்கள். தங்கள் தலைவிதி நிர்ணய மாகிவிட்டதென்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டதுபோலும். பியாடகாவ் முதலியோர் சம்பந்தப்பட்ட இரண்டாவது மாஸ்கோ விசாரணை இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகும் என்று அவர்களுக்கு முன்தகவல் தெரிந்திருந்தது. உயர் பதவியி லிருந்த நூற்றுக்கணக்கான பேர் தினந்தோறும் கைது செய் யப்பட்டுவந்தார்கள். நான் பார்த்த கொஞ்ச நேரத்துக் கெல்லாம் டோலெட்ஸ்கி கைது செய்யப்பட்டார். அவருடைய சகாக்கள் பலர் சதி வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தார்களாம். பின்னர் அவர் சிறைச்சாலையில் தற்கொலை செய்துகொண்டார் என்பது வதந்தி. டோலெட்ஸ்கி நெடுநாளாக கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர். அரசியல் சச்சரவுகளில் பட்டுக்கொள் ளாமல் மனப்பூர்வமாய் உழைத்த அதிகாரிகளில் அவர் ஒருவர்.

மாஸ்கோவை விட்டுக் கிளம்பியதினம், க்ரெஸ்ட்டின்ஸ்கி யிடம் விடைபெற்றுக்கொள்வதற்காகப் போயிருந்தேன். இரண் டாவது சதி விசாரணை ஆரம்பிப்பதற்கு இரண்டு நாட்கள் இருந்தன. க்ரெஸ்ட்டின்ஸ்கிக்கு இருந்த கவலையில் அவர்

என்னதான் பேசுகிறார் என்று தெரியாமல் பேசினார். பிரிவில் நான் என்னென்ன அலுவல்களை கவனிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிட வரும்போது, திடீரென ஏதோ ஞாபகம் வந்தவராய் பேச்சை பாதி வாக்கியத்தில் நிறுத்திவிடுவார். முடிவில், தம்முடைய ஞாபகமறதிக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு எனக்கு விடையளித்தார். இது நடந்த சில தினங்களுக்கெல்லாம் கட்சியின் மத்தியக் கமிட்டி அவரை வெளி விவகார உதவிமந்திரி வேலையிலிருந்து நீக்கியது.

•

வெளிநாட்டு லாகாவிலுள்ள கம்யூனிஸ்ட்கள் கூட்டம் ஒன்றில் அவர் பேசியதுதான் கிரெஸ்ட்டின்ஸ்கியின் கடைசிப் பிரசங்கம். உணர்ச்சி மிகுந்தவராய், தட்டுத்தடுமாறிப் பேசினார் அவர். வருஷக்கணக்காய் கம்யூனிஸ்ட் கட்சிக்காக மனப்பூர்வமாக உழைத்திருந்தபோதிலும், எதிர்ப்பு கோஷ்டிகளில் நான் ஒரு காலத்தில் சேர்ந்திருந்ததால் இப்போது நாம் வேலையைவிட்டு விலகிக்கொள்வதே சரியானது என்றார். நாட்டின் தலைவர்களிடம் மக்கள் பரிபூர்ண நம்பிக்கை செலுத்தவேண்டுமென்றும். துளியும் மாசு மறுவற்ற கம்யூனிஸ்ட்களாய் விளங்கியவர்களே வெளிநாட்டுலாகாவில் உயர் பதவி வகிக்கவேண்டுமென்றும் கூறினார். ஒன்பது வருஷத்துக்குமுன், லெனின் கொள்கையை ஸ்டாலின் சரிவர அனுஷ்டிக்கவில்லை என்று கருதி கட்சியின் எதிர்ப்பு கோஷ்டிகளுடன் சேர்ந்து ஓட்டளித்த பெரும் பாவத்தை அவர் மறக்கவில்லை. இதே காரணத்தை முன்னிட்டு, கட்சியின் மத்தியக் கமிட்டி அவரை வெளிநாட்டு லாகாவிலிருந்து நீக்கி நீதி இலாகாவில் ஒரு வேலை தருவதெனத் தீர்மானித்ததை அவர் முற்றிலும் ஏற்றுக்கொண்டார். கட்சியின் உண்மை ஊழியர்கள், கட்சியின் நிர்வாகம் தங்களை எங்கு அனுப்பினாலும் அங்கு சேவை புரியவேண்டும் என்று தெரிவித்தார்.

நம்முடைய சகாக்களுக்கு வந்தனம் தெரிவித்துக்கொண்டு, அவர்களைத் தாம் மறக்கமுடியாது; அவர்கள் கட்சிக்காக

இடையறாமல் உழைக்கவேண்டும் என்று சொல்லிமுடித்தது பரிதாபமாயிருந்தது.

பதவி மாற்றம் என்பது சிறைவாசத்துக்கு முந்திய படி என்பதும், சிறைவாசத்துக்குத் தொடர்ச்சியாய் மரண தண்டனை கிட்டும் என்றும் அவர் உணர்ந்திருந்தார் போலிருந்தது. நாம் எவரையாவது தண்டிக்க விரும்பினால் முதலில் அவரை அவர் இருக்குமிடத்திலிருந்து புதிதாய் ஓரிடத்துக்கு மாற்றி, அவரை ஆதரிப்பாரற்றுச் செய்து, அதன்பின் அவருக்கு முடிவு கட்டுவதே ஸ்டாலினுடைய வழக்கமான கொள்கை.*

* * *

மாஸ்கோவைவிட்டுப் புறப்பட்டபோது எனக்கு ஒரு புறம் வருத்தமாயிருந்தது; ஒருபுறம் நிம்மதியாயிருந்தது.

ஏதன்ஸ் நகருக்குப் போகும்போது, ரயிலில் வேறு இரண்டு ரஷ்ய தூதர்களை சந்தித்தேன். அவர்கள் இருவரும் கொஞ்ச காலத்தில் தண்டனைக்குள்ளானார்கள். ஒருவர், லிதுவேனியாவுக்கு புதிய ரஷ்ய தூதராகச் சென்றுகொண்டிருந்த போடால்ஸ்கி என்ற பிரமுகர். அவர் புது இடத்துக்குப் போன சில மாதங்களுக்கெல்லாம் தலைமறைவானார். அவரை ரஷ்யாவில் ரகசியமாய் சுட்டுக்கொன்றுவிட்டார்கள் என்று வதந்தி உலவியது. மற்றவர், புடாபெஸ்ட் நகரிலிருந்த ரஷ்ய தூதரும் என் பழைய நண்பருமான பெக்ஸடியான். அவருடன் அந்

* நீதி இலாகாவில் புதுப் பதவி ஏற்ற சின்னாட்களில் கிரெஸ்டின்ஸ்கி கைது செய்யப்பட்டார். இதேபோல, ஸ்பெயினில் பார்ஸிலோனா நகரில் ரஷ்ய கான்ஸல்-ஜெனரலாக இருந்த ஆன்டனாவ் ஒவ்ஸீன்கோவை நீதி மந்திரியாக நியமித்து, மாஸ்கோவுக்கு வரும்படி உத்தரவு அனுப்பினார்கள். அவர் இதை நம்பி ரஷ்யக்கப்பலில் தாயகம் திரும்பினார். ஆனால் வரும் வழியில் கப்பலிலேயே அவரைக் கைது செய்தார்கள். அதன்பின் அவருக்கு என்ன நேர்ந்ததென்பது வெளியாகாத ரகசியம். மேல் பதவி அளித்திருப்பதாகச் சொல்லி மாஸ்கோ வருமாறு அழைத்தது, ஆசை காட்டி மோசம் செய்யத்தான். மற்றும் பலரைப்போல அவரும் தாயகத்துக்குத் திரும்ப மறுத்துவிட்டால் என்ன செய்வது?

நகரில் சில தினங்கள் தங்கியிருந்தேன். நான் அவரை விட்டுப்பிரிந்து சென்ற சில நாட்களில் அவர் தாயகத்துக்குத் திரும்பி அழைக்கப்பட்டார். அதன்பின் அவரைப்பற்றித் தகவல் இல்லை.

லண்டன் நகரில் தூதர் கோபட்ஸ்கி கவலையோடிருந்தார். வியேனாவில் தண்டிக்கப்பட்டு இறந்தது அவரைக் கலக்கிவிட்டது. நான் வந்ததும் என்னிடம் வேலையை ஒப்படைத்துவிட்டு மாஸ்கோவுக்குப் போய் தம் நிலைமையை சரிவர உணர விரும்பினார். அதன்படியே அவர் என்னிடம் தம் வேலைகளை ஒப்படைத்துவிட்டு, விடுமுறையில் மாஸ்கோவுக்குச் சென்றார்.

லண்டனில் நான் காதலித்த கிரேக்கப் பெண் மேரி இருந்தாள். அவளை நான் சந்தித்தபோது, என்னைக் கல்யாணம் செய்துகொள்வதிலுள்ள அபாயங்களை அவளுக்கு எப்படி விளக்குவதென்று தெரியாமல் தவித்தேன். அந்நியர்கள் என்றாலே அவர்கள்மீது சந்தேகப்படும் ரஷ்யாவுக்கு அவளைக் கூட்டிக்கொண்டுபோவது எவ்வளவு ஆபத்தானது என்பதை அவளுக்கு விளக்க விரும்பினேன். ரஷ்ய ரகசியப் போலீஸ் கொடுங்கோலர்கள் அவள்மீது சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டால், நானோ எனது நண்பர்களோ அவளைக் காக்கமுடியாது. என்றால் அவளுக்கு நன்மை ஏற்படுவதற்குபதில் சங்கடமே ஏற்படும். இத்தகைய நிலைமையில் அவளைத் தொடர்ந்து காதலிப்பது கூடத் தவறு என்று தோன்றிற்று. மனதில் இந்தக் குழப்பம் இருந்ததென்றாலும், வாய்திறந்து அவளிடம் இதைத் தெரிவிக்கமுடியவில்லை.

கோபெட்ஸ்கிக்கு பதிலாக லண்டனில் தாற்காலிக ரஷ்ய தூதராக நான் பதவி ஏற்றதுதான் தாமதம், மாஸ்கோவில் இரண்டாவது சதி வழக்கு ஆரம்பித்துவிட்டதாய் செய்திவந்தது. இதற்கு முந்தின வருஷம் ஆகஸ்ட்டில் ஸினோவீவ் சதி வழக்கின்போது பட்ட அவஸ்தைகளை மறுபடி அனுபவித்தோம். ' முன்பு ஏராளமான மேதாவிகளை ஸ்டாலின் ஒழித்தார் ;

இப்பொழுது பாக்கியிருப்பவர்களுக்கும் அதே கதி நேரும்போலவே இருக்கிறது. இந்தத் தடவையாவது ஸ்டாலின் ரத்தம் சிந்தாமல் விடுவாரா?' என்ற கேள்வியே எங்கள் மனதில் எழுந்தது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பியாட்டகாவ், முதல் ஐந்து வருஷத் திட்டம் முதலாக ஸ்டாலினுடன் மனப்பூர்வமாய் ஒத்துழைத்தவர். லெனின் தம்முடைய கடைசி விருப்பம் என்ற நூலில் சிபார்சு செய்துள்ள இருவரில் பியாட்டகாவ் ஒருவர். நிதிப் பிரச்னைகளில் மேதையான பியாட்டகாவ் இல்லாதிருந்தால் நாட்டின் நிதி நிலைமையும் கைத்தொழில் அபிவிருத்தியும் என்ன பாடுபட்டிருக்கும் என்பது ரஷ்யர்களுக்கு நன்கு தெரியும்.

அவர்மட்டும்தானா? முரலாவ், ஸெரிப்ரியாகாவ், பொகுஸ்லாவ்ஸ்கி, ட்ராப்னிஸ் முதலியவர்கள்மீதும்கூட குற்றம் சாட்டியிருந்தார்கள். பாலிட்ப்ரோ அங்கத்தினரும் பெருந் தொழில்களின் மந்திரியுமான ஆர்ட்ஜானிகிட்ஸி தம் ஆப்த நண்பர் முரலாவ் சுட்டுக்கொல்லப்படுவதை சகிப்பாரா? ஸெரிப்ரியாகாவ், பொகுஸ்லாவ்ஸ்கி இருவருடைய புகழ் வானளாவியதாயிற்றே, அவர்களுக்குமா தண்டனை? ட்ராப்னிஸ் உள்நாட்டு யுத்தத்தில் வீராதிவீரரெனப் பெயரெடுத்தவராயிற்றே. அவருக்குக்கூட மரண தண்டனைதான் கிட்டுமா?—எங்கள் மனதில் எழுந்த கேள்விகள் அனந்தம்.

இந்த சதி விசாரணைகளின்போது, குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான கார்ல் ராடக் தமது வாக்குமூலத்தில் மார்ஷல் டுகாசேவ்ஸ்கி என்ற பெயரை உச்சரித்தார். டுகாசேவ்ஸ்கிமீது அவர் பிரமாதமாய்க் குற்றம் சாட்டிவிடவில்லை. ஆனாலும் வழக்கின்போது ஒரு நபரின் பெயரைச் சொன்னாலேபோதும், அந்த நபர்கூட தண்டனைக்காளாவாரோ என்ற பீதி இருந்தது. டுகாசேவ்ஸ்கியின் சகாவும் லண்டனில் ரஷ்யதூதர் காரியாலய ராணுவ உதவியாளருமான ஜெனரல் பட்னா ட்ராட்ஸ்கியுடன் சேர்ந்து சதி செய்தார் என்று தண்டிக்கப்பட்டார். பட்னா தண்டிக்கப்பட்டது டுகாசேவ்ஸ்கிக்கு நேரவிருந்த அபாயத்தைத்

தெளிவாய்க் கூட்டிக் காட்டுகிறது. லண்டனில் ஆறாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டுவிழாவுக்கு ரஷ்யப் பிரதிநிதியாய்ப் போவதாக இருந்த டுகசேவ்ஸ்கி அவ்விழாவுக்குப் போகமாட்டாரென்றும், அவருக்கு பதிலாக அட்மிரல் ஆர்லாவ் என்பவர் போவாரென்றும் செய்திவந்ததும் எங்கள் சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று.

சதி வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவர்விடாமல் நம்பமுடியாத விநோத குற்றங்களைச் செய்ததாய் ஒப்புக் கொண்டார்கள். இவர்களெல்லோரும் குற்றத்தைச் செய்திராவிட்டால் ஏன் அப்படி குற்றம் செய்ததாய் ஒப்புக்கொண்டு தங்கள் பெயரைப் பாழாக்கிக் கொண்டார்கள் என்று வெளியுலகத்தார் பன்முறை கேட்டிருக்கிறார்கள். இதற்கு பதில் சொல்வது கஷ்டமல்ல. இந்தத் தலைவர்களெல்லாம் ஆதி முதலே போல்ஷெவிக் (கம்யூனிஸ்ட்) கட்சியில் இருந்துவந்தவர்கள். அதன் லட்சியங்களும் நடவடிக்கைகளும் அவர்கள் ரத்தத்தில் ஊறிப்போயிருந்தன. போல்ஷெவிஸம் (கம்யூனிஸம்) ஒன்றுதான் சமூக முன்னேற்றத்துக்கு வழி செய்யும் என்று அவர்கள் நம்பினார்கள். ஜனநாயகத்திலோ சீர்திருத்தமுறை மூலம் சமூக முன்னேற்றம் அடைவதிலோ அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. ரஷ்யாவில் போல்ஷெவிக் புரட்சி வெற்றியடைய பல சந்தர்ப்பங்கள் உதவியாயிருந்தன. அதேபோல எல்லா இடங்களிலும் நேரும் என்பதற்கில்லை. பலத்த பிரயாசையின்பேரில், தங்கள் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணம் செய்து சாதித்த அந்தப் புரட்சி கண்ணெதிரே வியர்த்தமாகிவருவதை அவர்கள் கண்டார்கள். தாங்கள் நம்பியிருந்ததற்கு மாறாக ஒரு பிற்போக்கான சர்வாதிகார ஆட்சி—கட்சியிலும் சரி, நாட்டிலும் சரி—ஏற்பட்டுவிட்டதைக் கண்டு அவர்கள் பொருமினார்கள். ஆனால் அந்த சர்வாதிகாரத்தை அசைக்கவோ முடியவில்லை. இனி உயிர் வாழ்ந்து பயனென்ன என்ற அலுப்பு அவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

ரஷ்ய ரகசியப் போலீஸார் இந்த துரதிர்ஷ்டசாலிகளைப் பல மாதம் சிறையில் போட்டு சித்திரவதை செய்தார்கள். அவர்களைக் கொடுமைப்படுத்திப்படுத்தி, அவர்களுக்கு மனோதிடமே இல்லாது செய்தார்கள்; அவர்களுடைய சகாக்களும் உற்றார் உறவினரும் பலியாகிவிட்டதை அறியும்படி செய்தார்கள். இதன் பலனாக அவர்களுடைய மனதில் குழப்பமும் வெறுப்புமே குடிபுகுந்தது. உயிருடன் வாழ்ந்து பயனில்லை என்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் நன்மையை முன்னிட்டு அவர்கள் கட்சியின் தவறுகளை தங்கள் தவறுகளாய் ஒப்புக்கொண்டார்கள் என்று சிலர் கூறுவதுண்டு. அது சரியல்ல. அவர்கள் அபிப்பிராயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை வெகுநாட்களுக்கு முன்பே ஸ்டாலின் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்.

அப்படியானால் அவர்கள் தாங்கள் செய்ததெல்லாம் குற்றமென ஒப்புக்கொள்வானேன்?

இதற்குக் காரணம் வேறெதுவுமல்ல. தாங்கள் அனுபவித்துவந்த கொடூரமான சித்திரவதைக்கு முடிவு ஏற்பட்டால் போதும் என்று நினைக்கும் அளவுக்கு ரஷ்ய ரகசியப் போலீஸார் அவர்களை வாட்டிவதைத்துவிட்டார்கள். இந்த சித்திரவதையைத் தாங்கமுடியாத அவர்கள் எதை வேண்டுமானாலும் சொல்லத் தயாராயிருந்தனர். இதுதான் உண்மை.

கட்சித் தலைவர்களில் சிலர்தான் இவ்வாறு எதையும் ஒப்புக்கொள்ளத் தயாராயிருந்தார்கள். ஆனால் எண்ணற்ற வேறு பல தலைவர்கள் இவ்வாறு செய்ய சம்மதிக்காமல் விர மரணம் எய்தியிருக்கிறார்கள் என்பதை நாம் மறக்கலாகாது. சிறைக் கோட்டங்களின் மதில்களுக்குள்ளே கேட்பாரற்று, புழு வாய்த்துடித்து மடிந்தவர்கள் இந்த தியாகிகள் அனந்தம். அவர்கள் மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் ரகசியப் போலீஸின் சித்திரவதையை அனுபவித்திருக்கிறார்கள். இந்த மகா புருஷர்கள் அணு அணுவாய்ச் சித்திரவதை செய்யப்பட்டும்

எந்த விடுதலைக்காக, எந்த புதிய கலைக்காகக் கலைஞர் பலரு கொடுங்கோன்மைக்குப் பணிய மறுத்தார்களோ !

நாட்டுக்கு வெளியே இருந்த எங்களுக்கு ஒன்று நிச்சயமாய்த் தெரிந்தது. பழைய போல்ஷ்விக் கட்சி ஒழிந்து வேறு ஒரு அரசாங்கம் இருந்தது என்பதைப் பற்றி சந்தேகம் இல்லை. கம்யூனிஸக் கனவு கசந்து நாறிவிட்டது. ஆனால் ரஷ்யர்களான நாங்கள், எங்கள் தாய்நாட்டுக்காக உழைப்பதே கடமை, ஆகையால் முடிந்த அளவுக்கு எங்கள் நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்று கருதினோம்.

என்னைப் பொறுத்தமட்டில், தூதர் கோபெட்ஸ்கி திரும்பி வந்ததும், மறுபடி தாய்நாட்டுக்குத் திரும்பி அங்கே முடிந்த வரை சேவைபுரியவேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் இந்த ஆசை நிறைவேறவில்லை. கிரெம்ளின் ஆஸ்பத்திரியில் ஒரு ஆபரேஷன் நடந்த பின் கோபெட்ஸ்கி இறந்துவிட்டார் என்று திடீரென ஒரு நாள் தந்திவந்தது.

நான் அடைந்த துயரத்துக்கு அளவில்லை. என் திட்டங்கள் பாழாகிவிட்டதென சலிப்பும் ஏற்பட்டது. புது தூதர் எப்போது நியமிக்கப்படுவாரோ, எப்போது வந்து சேருவாரோ! ஒன்றும் தெரியவில்லை.

* * *

நான் மணந்துகொள்வதாயிருந்த பெண் மேரி கட்டடக் கலைபற்றிப் படித்துவந்தாள். ஒரு அனாதை விடுதிக்கான கட்டடத்தின் நிர்மாண வேலைக்காக நடந்ததோர் போட்டியில் அவள் வெற்றிபெற்றாள். கட்டடத்துக்கு நன்கொடையளித்தவரான ஜெனரல் மேலாஸ் என்ற கிரேக்கப் பிரமுகருக்கு நவநாகரிகப் பெண்களிடம் நம்பிக்கையில்லை. ஒரு பெண் கட்டட நிர்மாண வேலையை மேற்பார்வைசெய்வதென்பது அவருக்குப் பிடிக்கவில்லை. மேரி இந்தப் போட்டியில் வெற்றி பெற்றுவிட்டதைக் கண்டு முணு முணுத்தார். அவரது எதிர்ப்பை

சமாளித்து அவருடைய நன்மதிப்பையும் பெறவேண்டுமென்று அவள் விரும்பினாள்; அதற்காக இரவு பகலாய்த் தன் வேலையில் மூழ்கியிருந்தாள். அவளுடைய விடுதிக் கட்டடமும் அழகாய் உருவாகமாகி வந்தது.

கட்டடம் முடியும் தருவாயில், பாரிஸில் நடந்த சர்வதேச கட்டட நிர்மாண நிபுணர்கள் மகாநாட்டில் கிரேக்கப் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும்படி அவளுக்கு அழைப்பு வந்தது. அதை ஏற்றுக்கொண்டு, 1937 ஜூன் மாதம் அவள் பாரிஸுக்குக் கிளம்பினாள். கட்டடவேலையைத் தன் உதவியாளரிடம் ஒப்படைத்துச் சென்ற அவள், சீக்கிரமே திரும்பிவந்து கட்டடத்தை முடித்துப் புகழ் வாங்கலாமென நினைத்திருந்தாள்.

மேரி பாரிஸுக்குக் கிளம்பிச் சென்றபோது, நான் துறை முகத்தில் அவளை வழியனுப்பினேன். "பாரிஸ் நகரின் ஜோகுசான வாழ்க்கையில் என்னை மறந்துவிடாதே. உனக்காக நான் காத்திருப்பேன். சீக்கிரமே வந்துவிடு. நான் மட்டுமல்ல, ஜெனரல் மேலாஸும் நீ வரவேண்டுமென்று காத்திருப்பார்" என்றேன்.

கிழட்டு ஜெனரல் மேலாஸ் அவளுக்காகக் காத்திருந்தது வீணாயிற்று. அதன்பின் அவர்கள் சந்திக்கவேயில்லை.

"நான் சொல்லவில்லை, பெண்களே இப்படித்தான் காதல் என்றால் மற்றெல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள்!" என்றார் அவர்.

அவர் சொன்னதில் நிஜம் இல்லாமலில்லை. பாரிஸுக்குப் போய் ஒரு மாதத்துக்கெல்லாம் மேரி திரும்பிவர ஏற்பாடு செய்துகொண்டிருந்தாள். ஆனால் அதற்குள் நான்தான் அவள் வரவேண்டாமென்று தடுத்து, ரஷ்ய அரசாங்கத்துடன் என் சம்பந்தத்தை முடித்துக்கொண்டு தாய்நாடற்ற அகதியாய் நானே பாரிஸுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

முடிவுரை

1936 முதல் 1938 வரை மாஸ்கோவில் நடந்த சதி விசாரணைகளுக்குப் பின் இந்தப் பல வருஷங்களிலும் நான் ருஷ்யப் புரட்சியின் வெவ்வேறு அம்சங்களைப்பற்றித் தீவிரமாய் சிந்தனை செய்து பார்த்திருக்கிறேன். ருஷ்ய மக்கள் இவ்வளவு காலமாய்ப் புரிந்துள்ள தியாகங்களும் பட்டுள்ள கஷ்ட நஷ்டங்களும் என்ன பலனை அளித்துள்ளன என்று கூடியவரை தெளிவாய்க் காண முயன்றிருக்கிறேன்.

லெனினுடைய பொதுவுடைமைத் தத்துவத்துக்கு இரண்டு கோட்பாடுகள் அஸ்திவாரமானவை. பொதுவுடைமை ஏற்பட்டால் முதலாளித்துவத்தில் சாத்தியமானதைவிட பன்மடங்கு அதிகமாக உற்பத்தி பெருகும் என்பது முதல் கோட்பாடு. உற்பத்திப்பெருக்கால் அதிகமாய்க் கிடைக்கும் பொருள்கள் தொழிலாளரின் உபயோகத்துக்கே கிடைக்கும் என்பது இரண்டாவது கோட்பாடு.

ருஷ்யாவின் ஸோவியத் பொருளாதார அமைப்பும் ஸ்டாலினுடைய சர்வாதிகார ஆட்சியும் இவ்விரு கோட்பாடுகளுமே பொய்யென்று நிரூபித்துவிட்டன.

ருஷ்யாவின் முதல் ஐந்து வருஷத் திட்டம், இரண்டாவது ஐந்து வருஷத்திட்டம் இரண்டிலும் கைத்தொழில், வர்த்தகத் துறைகளில் தீவிரமாய் உழைத்துள்ள நான் பொதுவுடைமையால் என்ன கிடைத்திருக்கக்கூடுமானாலும் அது யதேச்சாதிகார அதிகார வர்க்க ஆட்சியால் பாழாகிவிட்டது என்று ஊர்ஜிதமாய்க் கூறுவேன். அதுமட்டுமல்ல. பொதுவுடைமைக்கு பதிலாக பொருள் உற்பத்தியைத் தனிப்பட்டவர்களிடம் விட்டிருந்தால் உற்பத்தி அதிகரித்திருக்குமே ஒழியக் குறைந்திராது. அவ்வாறு

செய்திருந்தால், தொழிலாளர்களையும் குமாஸ்தாக்களையும் ஆடுமாடுபோல் விரட்டி மேய்த்து வேலைவாங்கவேண்டிய நிர்ப்பந்தமும் இருந்திராது; மனப்பூர்வமாய் உழைத்துவந்த தொழிற்சாலை நிர்வாகிகளையும் எஞ்சினியர்களையும் அவர்களறியாத பிசகுக்காக சுட்டுக்கொல்லவும் அவசியமேற்பட்டிராது. "திட்டம்" என்ற பெயரில் அரை குறைப் பரீட்சைகளில் கோடிக்கணக்கான ரூபிள் மதிப்புக்குப் பொருள் நஷ்டமும் கால விரயமும் அப்போது ஏற்பட்டிரா. மொத்தத்தில், பொதுவுடைமையால் உற்பத்தி பெருகும் என்ற கோட்பாடு பொய்யாகிவிட்டது.

உற்பத்தி சாதனங்கள் பொதுவுடைமையாகிவிட்டால் தொழிலாளர் சுரண்டப்படுவது ஒழிந்துபோய், உற்பத்தியாகும் பொருள்களின் பயனை அவர்கள் அனுபவிக்க முடியும் என்ற இரண்டாவது கோட்பாடும் ரஷ்யாவில் கண்கூடாகப் பொய்த்துப்போயிற்று. ரஷ்யத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களில் எவ்வளவு பங்கு அவர்களுடைய உபயோகத்துக்குப் போகிறது என்று பார்த்தால், முதலாளித்துவ நாடுகளைவிட ரஷ்யாவில் தான் தொழிலாளர் அனுபவிக்கும் பொருள் பங்கு குறைவு என்பது தெரியும். ஜார் மன்னர்கள் ஆட்சியில்கூட ரஷ்யத் தொழிலாளர்கள் இவ்வளவு குறைவான அளவில் தங்கள் உழைப்பின் பலனை அனுபவித்ததில்லை.

வழக்கமாய் முதலாளிகளுக்குப் போகும் லாபம் மிஞ்சிவிடும், அது தொழிலாளியின் மேம்பாட்டுக்குப் பயன்படும் என்பதே கம்யூனிஸ்ட்களின் வாதம். ஆனால் ரஷ்யாவில் நாம் காண்பதென்ன? முதலாளிக்குப் போகும் லாபத்தை முதலாளிக்கு பதிலாக அவன் ஸ்தானத்தில் இருக்கும் ரஷ்ய அதிகாரவர்க்கம் விழுங்கிவிடுகிறது. இது போதாதென, அதிகார வர்க்கம் தனது திறமையின்மையால் ஏராளமான நஷ்டத்தையும் உண்டாக்குகிறது. இதன் பலன் என்ன? முதலாளித்துவ ஏற்பாட்டில் கிடைக்கும் அளவு சௌகரியங்கள்கூட பொதுவுடைமை ஏற்பாட்டில் கிடைப்பதில்லை. இதுதான் ரஷ்யத் தொழிலாளர் கண்ட பலன்.

ரஷ்யத் தொழிலாளர்கள் எவ்வளவு மோசமான அடிமை வாழ்வு வாழ்கிறார்கள் என்பது வெளி உலகத்துக்குத் தெரியவே தெரியாது. உண்மை தெரிந்துவிடாதபடி. சோவியத் நிர்வாகம் ரம்மியமான புள்ளி விவரங்களை ஜோடித்து வெளியிடுகிறது. அவைகளை ஊடுருவிப் பார்த்தவர்கள்கூட உண்மையை எளிதில் அறிந்துகொள்ளமுடியாது. ரஷ்யாவில் சமீபகாலத்தில் தொடர்ந்து வாழ்ந்திருந்தவர்களுக்கே உண்மை தெரியும். ட்ராட்ஸ்கிகூட வியர்த்தமாகிவிட்ட புரட்சி என்ற நூலை எழுதிய சமயம் ரஷ்யாவின் உண்மைநிலைமையை உணரவில்லை. நிலத்தையும் கைத்தொழில் சாதனங்களையும் பொதுவுடைமை ஆக்கிவிட்டால், ரஷ்யாவின் விவசாயிகளும் தொழிலாளர்களும் விடுதலை பெற்றுவிடுவார்கள் என்றே அவர் நினைத்திருந்தார். ஸ்டாலினுடைய ஆட்சியை வன்மையாய்க் கண்டித்த அவர் தம் சாகும் காலம்வரை ரஷ்யா ஒரு "தொழில் அரசு" என்றே நம்பியிருந்தார்.

ஆனால் ரஷ்யாவிலேயே தொடர்ந்து வாழ்ந்திருந்தாரானால் ட்ராட்ஸ்கியின் அபிப்பிராயம் மாறிப்போயிருக்கும். கைத்தொழில் தொழிலாளரின் சொத்து என்று பகட்டாய்ச் சொல்வதில் துளி லாபமில்லை என்பதை அவர் உணர்ந்திருப்பார். கைத்தொழிலெல்லாம் தொழிலாளர் உடைமை என்று பெருமைப்படுவதைவிட, சம்பளத்தின் மூலமும் அரசாங்கம் அளிக்கும் சமூக வசதிகள் மூலமும் தொழிலாளர் வாழ்க்கை எவ்வளவு தூரம் மேம்பாடடைகிறது என்று பார்ப்பதே முக்கியம். அம்முறையில் பார்த்தால், ரஷ்யப் பொதுவுடைமைப் பரீட்சை ஆரம்பித்து இருபத்தைந்தாண்டுகளுக்குமேல் ஆகியும் ரஷ்யத் தொழிலாளரின் அந்தஸ்து பிரமாதமாய் உயர்ந்துவிடவில்லை என்பது தெரியும். அவர்களது இன்றைய நிலையை இந்தியாவின் தாழ்த்தப்பட்டோரது நிலைமையுடனும் எகிப்தின் கூலியாட்களின் நிலைமையுடனும்தான் ஒப்பிடவேண்டும். அந் நாடுகளிலாவது அவ்வேலைகளுக்குக் குறைந்த சம்பளம் கிடைப்பதுடன் குறைந்த விலையிலும் பொருள்கள் கிடைக்கின்றன.

சம்பளவிஷயமோ அப்படியில்லை. ஸ்டாலினுடைய ஆட்சியில் தொழிலாளர் சம்பளங்கள் மிகக் குறைவாகவே நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன; விலைவாசிகள்மட்டும் மிக அதிகமாகவே இருந்துவருகின்றன. நாட்டுக்கே எஜமானர்கள் எனப்படும் தொழிலாளர் இவ்வாறு இருதரப்பிலும் கொள்ளையடிக்கப்படு கிறார்கள்.

எனக்குத் தெரிந்த பலரைப்போல இந்த உண்மையை மறந்துவிட என்னால் முடியவில்லை. என்ன நடந்ததென்று நான் நேரில் பார்த்தாயிற்று. தொழிலைப் பொதுவுடைமை யாக்கி அரசாங்க நிர்வாகத்தில் வைப்பது எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. தொழிலாளர்கள் சுதந்திரமடைவதற்கு பதி லாக மேன்மேலும் அவதிப்பட்டு வருவதுதான் கண்கண்ட பலன்.

அரசாங்க நிர்வாகத்திலுள்ள கைத்தொழில் தோல்வி அடைய அடைய, தொழிலாளர் கஷ்டங்கள் அதிகரிக்கின்றன. தொழிலாளர் கஷ்டங்கள் அதிகரிக்க அதிகரிக்க அரசாங்கக் கைத்தொழிலில் நஷ்டம் அதிகரிக்கிறது. சுருங்கச் சொன்னால், முதலில் அரசாங்க நிர்வாக ஊழலும், அதற்கடுத்தபடியாய் தொழிலாளர்களின் உடல் அலுப்புந்தான் கைத்தொழில் உற்பத்திக்குறைவின் மூலகாரணங்களாய் விளங்குகின்றன. இதை யாரும் நேரில் காணலாம். தொழிலாளர்களுக்கு சரியான உணவில்லை, குடியிருப்பு வசதி இல்லை, ஓய்வில்லை. அவர்கள் அரைப்பட்டினியால் அலுத்துச் சலித்திருக்கிறார்கள்.

உழைப்பாளிகள் இப்படிப் பரிதவித்தாலும், ருஷ்யாவில் பிரத்தியேக உரிமைகள் படைத்த ஒரு வகுப்பு இருக்கிறது. இதுதான் சர்க்கார் அதிகாரவர்க்கம். இதைச் சேர்ந்த மேலதி காரிகளுக்கு இலவசமாய்க் கிடைக்கும் சுகபோகத்துக்கு அள வில்லை. ஏராளமான கட்டில் மேஜை நாற்காலிகளுடன் ஒரு எட்டு அறை வீடு அவருக்கு ஒதுக்கப்படுகிறது. அவருக்கென இரண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். விடுமுறை நாட்

களில் ஓய்வெடுத்துக்கொள்ள அவர் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு ஓய்வுஸ்தலத்தில் போய் குதூகலமாய்க் காலத்தைக் கழிக்கலாம். மூன்று நான்கு வேலையாட்கள், பலதரப்பட்ட விளையாட்டு வசதிகள், விருந்தாளிகள் தங்குவதற்கான தனி அறைகள், பிரத்தியேக சினிமாக்காட்சி வசதிகள்—இவ்வளவு சௌகரியங்களும் சர்க்கார் செலவில் அவருக்குக் கிடைக்கின்றன. ஒரு நடைமுறையைப் பூர்த்தி செய்து நீட்டவேண்டியதுதான். அவருக்கும் அவருடைய வேலையாட்களுக்கும் விருந்தாளிகளுக்கும்கூட சர்க்கார் செலவில் சம்பிரமமான நல்விருந்து பரிமாறப்படுகிறது. வெளியே போகவர அவருக்கு மோட்டார் கார்கள்—டிரைவர் உட்பட—அளிக்கப்படுகின்றன. இவ்வளவும் போதாதென, எந்த சாமான் தேவையானாலும் அவர் டெலிபோன்மூலம் உத்தரவிட்டால்போதும், சர்க்கார் கணக்கில் வந்துவிடுகிறது. செலவைப்பற்றிக் கவலையே இல்லை. அவருடைய குழந்தைகள் ராஜபோகம் அனுபவிக்கின்றன. அவைகளை கவனித்துக்கொள்ள வேலைக்காரர்கள், அவைகள் விளையாட வெளிநாட்டிலிருந்து வந்த அற்புதமான பொம்மைகள், அவைகள் நோய்வாய்ப்பட்டால் கவனிக்க பிரசித்திபெற்ற டாக்டர்கள்—கோடீசுவரர்களின் குழந்தைகளுக்குள்ள வசதிகளெல்லாம் அவைகளுக்கு உண்டு. தனக்கு ஏதாவது வேண்டும் என்று சொன்னபோதும், அப்பா டெலிபோனை எடுத்து உத்தரவு போடுவார், அது தானே வந்து சேர்ந்துவிடும் என்பது அக் குழந்தைகளுக்குத் தெரியும்.

இந்த உயர்தர அதிகாரி தம்முடைய விடுமுறையை காகஸஸிலோ க்ரீமியாவிலோ கழிக்க விரும்பினால், அதற்கும் வசதியான ஏற்பாடு செய்யப்படுகிறது. அவருடைய குடும்பத்தார் உட்பட யாவரும் விசேஷ ரயில் பெட்டிகளிலோ விசேஷ ரயில் வண்டிகளிலோ அலுங்காமல் போவார்கள். போன இடத்திலும் அவர்களுடைய சொகுசுக்குக் குறைவிராது. எல்லாம் சர்க்கார் செலவில் நடைபெறுகின்றன.

நான்கு வருஷ காலம் யுத்தம் நடந்தபின் இந்த நிலைமையில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறீர்களா? ஆம், ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதிகார வர்க்கத்தின் ஆடம்பர வாழ்க்கையில் அல்ல, தொழிலாளரின் வாழ்க்கையில்தான். உழைத்துச் சாகும் தொழிலாளர்களது இன்னல்கள் அதிகரித்துள்ளனவே தவிர, அதிகாரிகளது போக வாழ்க்கை குறையவில்லை. பாமர மக்களுக்கும் விசேஷ அந்தஸ்துள்ள அதிகாரவர்க்கத்துக்குமிடையே உள்ள பிளவு யுத்தத்தினால் அதிகரித்துள்ளதேயொழியக் குறையவில்லை.

வகுப்பு பேதமேயற்ற சமூகம் எனப்படும் ரஷ்ய சமூகத்தில் புதுவிதமானதோர் வகுப்பு ஆட்சி ஏற்பட்டுள்ளது. ஜனநாயக நாடுகளில் உள்ள ஆட்சியைவிட இது சிறந்ததென்று நினைப்பவர்கள் உண்மையை உணராமல் ஏமாந்துபோகிறார்கள் என்றே சொல்லவேண்டும். ஜனநாயக நாடுகளில் உள்ள ஆட்சியைவிட ரஷ்யாவின் புதிய வகுப்பு ஆட்சி மகா கொடூரமானது, பலாத்காரம் நிறைந்தது. இந்த கோர ஆட்சியை "தொழிலாளர் ஆளுகிறார்கள்" என்ற பசப்பு வார்த்தைகளால் மழுப்பும்போது, நமக்கு ஆத்திரம் வருமே தவிர மனச்சாந்தி ஏற்படாது.

"தொழிலாளர் ஆட்சி" நடைபெறும் இந்நாட்டில் தொழிலாளருக்குப் போதுமான உணவும் உடையும் கிடைப்பதில்லை. தங்கள் நிலைமையை விருத்தி செய்துகொள்ளவும் அவர்களுக்கு வழி இல்லை. தொழிலாளர்கள் தனிப்பட்ட முறையில் எதையும் கண்டிக்கமுடியாது. ஐக்கியமாக தொழிற் சங்கத்தின்மூலம் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யவும் உரிமையில்லை. தொழிற்சாலைகள் அரசாங்க உடைமையானதால், அரசாங்கமே முதலாளி; அரசாங்கமே வேலை நிறுத்தம் நடக்காமல் தவிர்க்கும் போலீஸ்; அரசாங்கமே நீதி வழங்கும் நீதிபதி! மேலும், தொழிற் சங்கங்கள்மீது அரசாங்கம் நேரடியான ஆதிக்கம் செலுத்துகிறது. ஆகையால் தொழிற் சங்கங்கள் அவர்கள் இஷ்டப்படி ஆடுகின்றன. அரசாங்கம்

நிர்வாகஸ்தர்களுக்குத் தொழிலாளரின் வேலை நேரத்தை அதிகரிக்கவோ, பண்டங்களின் விலைகளை ஏற்றிவிடவோ முடிகிறது ; ஏற்றியுமிருக்கிறார்கள். அதிக நேரத்துக்கு அதிக கூலி என்று தொழிலாளர் வாதாட முடியாது. அவர்களுடைய தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் கைப்பாவைகளாய் இருக்கின்றன ; தங்கள் குறைகளை வெளியிட பத்திரிகைகளோ பிரசுரங்களோ ஒன்றுகூட அவர்கள் கையில் இருப்பதில்லை. எஜமானர்கள் அளித்துள்ள வாக்குறுதிகளின்படி நடக்காவிட்டாலும் வற்புறுத்தும் உரிமைகூட ரஷ்யத் தொழிலாளருக்கில்லை. பகட்டான பொதுவுடைமை சோதனை முற்றிலும் தோல்வியடைந்துவிட்டதென்பதில் சந்தேகமில்லை.

ரஷ்யாவில் முதலாளித்துவம் இல்லை என்று பெயரே தவிர, பாட்டாளி மக்களைச் சுரண்டிவாழும் முதலாளி வர்க்கத்துக்கு இணையாகிவிட்டது ரஷ்ய அதிகார வர்க்கம். சொத்துரிமை கிடையாது, உற்பத்தி சாதனங்கள் அதனுடைய சொத்தல்ல என்று சொல்லப்படுகிறதே தவிர, ஸோவியத் அதிகாரவர்க்கம் தானே உண்மையான முதலாளி என்று காட்டிக்கொண்டு வாழ்கிறது. அவர்கள் கைப்பிடியிலுள்ள அரசாங்கம் பெயரளவில்தான் பொதுவுடைமை அரசாங்கம். "தொழிலாளர் ஆட்சி" என்பதும் அர்த்தமற்ற கற்பனை. ஏனெனில், அதிகார வர்க்கமென்ற உரிமைபடைத்த வகுப்புக்காக தொழிலாளி மக்களைச் சக்கைப் பிழிவதில்தான் அரசாங்கத்தின் திறமை அதிகரித்துவருகிறது.

பொருள் உற்பத்தி சாதனங்களில் தனிப்பட்டவர்களது உரிமையை ஒழித்து அவைகளை நாட்டின் பொதுவுடைமை ஆக்குவதால் மனிதனை மனிதன் சுரண்டுவது ஒழிந்துபோவதில்லை.— குறைந்தது இதையாவது ஸ்டாலின் கற்றுக்கொடுத்துவிட்டார்.

அவர், ஆரம்பத்தில் சிறிதுகாலம் பழைய போல்ஷவிக்குகள் விரும்பிய ஜனநாயக முறைகளை ஆதரித்தார். ஜனநாயக அரசியல் திட்டம் என்ற கண்துடைப்புக் கற்பனையைக் கொண்டு

கொஞ்சகாலம் ரஷ்ய மக்களை மயக்கமுயன்றார். ஆனால் ஜனநாயக முறைகளைக் கையாண்டால் தலைவர் கிராவ்நான் ரஷ்யமக்களின் அமோகமான ஆதரவைப் பெறுவார் என்று தெரிந்ததோ இல்லையோ, தன்னுடைய எதேச்சாதிகாரத்துக்கு இந்த ஜனநாயகம் ஆபத்தானது என்பதை உணர்ந்தார். ஜெர்மனியில் ஹிட்லர் தம் விரோதிகளை வெற்றிகரமாய் ஒழிக்கக் கையாண்ட முறைகள் அவரைக் கவர்ந்தன. இந்த முறை களைக் கையாள்வதில் தமக்கு இணை வேறெவரும் இருக்க முடியாது என்ற நம்பிக்கையும் அவருக்கிருந்தது. அந்த நம்பிக்கையில் ஜனநாயக வேஷத்தை அடியோடு களைந்தெறிந்து தம் சொந்த சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதில் ஈடுபட்டார் ஸ்டாலின். பாட்டாளி மக்களின் கஷ்ட நஷ்டங்களை நீக்குவ தென்ற யோசனையை அடியோடு மூட்டைகட்டி வைத்துவிட்டு, தமது சர்வாதிகார ஆட்சிக்கு உறுதுணையாக ஒரு சிறுபான்மைக் கும்பலை அதிகாரவர்க்கமாக்கிப் போஷித்து வளர்த்தார். எவ்வித உரிமையுமற்ற ஒரு மனித சமூகத்தை தங்கள் நலனுக்கும் தங்கள் எஜமானன் நலனுக்கும் பயன்படுத்திக் கொள்வதே கருத்தாக உழைத்தது இந்த சிறுபான்மைக் கும்பல்.

இதிலிருந்து, பிறநாடுகளில் எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்துவரும் கம்யூனிஸ்ட்களுக்கு ஆதரவு அளிப்பதை ஸ்டாலின் நிறுத்திவிட்டாரென யாரும் நினைத்துவிட வேண்டாம். அவர் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொன்னால்போதும், வெளி நாடுகளில் "கம்யூ னிஸ்ட்கள்" எனப்படுவோருக்கு ரஷ்ய ஆதரவு நின்றுவிடும். ஆனால், அதற்கு மாறாக, அவர் அவர்களைத் தம் காரியத்துக்கு நன்கு பயன்படுத்திக்கொள்கிறார். அவர்களை ஆதரிப்பதன் மூலம் பிறநாடுகளை பலவீனப்படுத்தி ரஷ்யாவின் பலத்தையும் ரஷ்யாவில் தம்முடைய பலத்தையும் ஸ்திரம் செய்துகொள்ளு வதே ஸ்டாலின் நோக்கம். தமது எதேச்சாதிகாரத்தைப் போன்ற ஆட்சி பிறநாடுகளிலும் ஏற்படும்படி செய்யவே அவர்

உதவி புரிவார். ஜனநாயகத்தை வளர்க்கவோ, கம்யூனிஸ மத்தை முதலாளித்துவ ஆட்சியை வளர்க்கவோ அவர் உதவி புரிவார் என்று நினைப்பது மடமை. எனினும், அவர் அவ்வாறு செய்வது ரஷ்யாவில் அவருடைய சர்வாதிகாரத்தைப் பலப்படுத்திக்கொள்வதற்காகும். ஸ்டாலினுடைய இயற்கை யான குணம் பதவிமோகம்தான். ரஷ்யாவில் எப்படி நாட் டின் பிரச்னைகளைத் தீர்க்க ஜனநாயகமே வழி என்று நினைத்த வர்களையெல்லாம் ஒழித்துப் பதவியைக் கைப்பற்றினாரோ, அதே போன்றுதான் பிற நாடுகளிலும் ஜனநாயகத்தைப் பலவீனப் படுத்துபவர்களை ஆதரித்து ரஷ்யாவின் செல்வாக்கை அதி கரித்துக்கொள்வார்.

1936 முதல் 1938 வரை ரஷ்யாவில் நடந்த படுகொலை களின் உண்மையான பொருளே இதுதான். நம்பமுடியாத குற்றங்களை சுமத்தினார் என்றோ நமது எதிரிகளை ஒழித்தார் என்றோ எதிர்ப்பை ஒடுக்கினார் என்றோ இப்படுகொலைகளை வர்ணிப்பது சரியல்ல. பொதுவுடைமைத் தத்துவத்துக்காக மனப்பூர்வமாய் உழைத்தவர்களை திட்டமிட்டுக் கொலை செய்தார் என்பதே சரியான வர்ணனையாகும். கொல்லப்பட்ட தலைவர் களை உயிருடன் விட்டுவைத்தால் ரஷ்யாவில் தமது சர்வாதி காரத்துக்கு எதிர்ப்பு இருக்கும் என்பதே ஸ்டாலினுடைய பயம்.

ஸ்டாலினுடைய மனப்பான்மை தயைதாட்சண்யமற்ற முரட் டுத்தனத்தை அடிப்படையாய்க் கொண்டது. தமது காரியங்களை சாதித்துக்கொள்ள அவருக்கு இந்த முரட்டு வழி ஒன்றுதான் தெரியும். அந்த முரட்டுத் தனத்தை பிரமாதமான திட்ட மாகவும் அவர் ஆக்கிவிட்டார். ரஷ்யாவில் தனது அரசியல் எதிரிகளை மடக்கி, அப்பாவிகளான ரஷ்ய மக்களை அடிமைப் படுத்த இந்த தயாதாட்சண்யமற்ற திட்டம் அவருக்கு மிகவும் பயன்பட்டது. கட்சிக்காரியதரிசி, நாட்டின் பிரதம மந்திரி, நாட்டின் சர்வாதிகாரி என்று படிப்படியாக அதிகாரம் யாவை யும் கைப்பற்ற அவருக்குப் பேருதவியாயிருந்தது இந்தப் படு

கொலைத்திட்டமே. இதே திட்டத்தைக் கையாண்டு அவர் ஐரோப்பாவின் எஜமானரும் ஆகக்கூடும். அப்படி நேர்ந்து விட்டால் ஐரோப்பிய நாகரிகம் என்ன கதியடையுமோ, சொல்ல முடியாது.

நிரமிக்க ரஷ்ய மக்களிடம் எனக்குள்ள அனுதாபத்தினாலே தான் ஸ்டாலினுடைய ஆட்சியைக் கண்டிக்கிறேன். ரஷ்ய மக்களின் பெருமைக்கு ஸ்டாலின் ஆட்சியே பொறுப்பு என்று ஜனநாயக மக்கள் நினைப்பது ரஷ்ய மக்களுக்குப் பெரிய அவதூறு செய்வதாகும். ரஷ்ய வீரர்கள் போர்க்களத்தில் புரிந்த வீரதீர சாகஸங்களின் பெருமையை ஸ்டாலின் ஆட்சிக்கு அளிப்பதும் அபத்தம். அவ்வாறு செய்வது சர்வாதிகார ஆட்சிக்குப் புகழ்மாலை பாடுவதற்கு சமமானது. ரஷ்ய மக்கள் சர்வாதிகாரமற்ற ஜனநாயக ஆட்சியில் இருந்திருந்தால் இன்னும் சிறப்பாய், இன்னும் குறைவான நஷ்டத்துடன் இதே வெற்றியை சாதித்திருப்பார்கள். இந்த உண்மையை ஜனநாயக மக்கள் மறக்கலாகாது.

இரண்டாவது மகாயுத்தத்தின்போது அமெரிக்க உதவிமட்டும் கிடைத்திராவிட்டால் ஸோவியத் ரஷ்யா ஜெர்மனியிடம் நிச்சயம் தோற்றுப்போயிருக்கும் என்றே நேசதேச ராணுவ நிபுணர்கள் ஒருமனதாய்க் கூறுகிறார்கள். ரஷ்யா வெற்றிக்களியில் மூழ்கியுள்ள இந்த சமயத்தில் நாம் இவ்வுண்மையை மறந்து விடலாகாது.

யுத்தம் நடந்துவந்த மூன்று வருஷகாலம் ரஷ்யாவைப் பற்றிய உண்மையை வெளியிடமுடியாமல் கம்யூனிஸ்ட் அனுதாபிகளும் ஸ்டாலினைத் திருப்தி செய்வதே சரியென நினைத்தவர்களும் தடுத்து வந்தார்கள். ரஷ்யாவில் எண்ணற்ற சிறைச்சாலைகளிலும் காவல் முகாம்களிலும் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் லக்ஷ லக்ஷமான ரஷ்யர்களை விடுதலை செய்து அவர்களும் ஜெர்மனிக் கெதிராய்ப் போரிட உதவவேண்டும் என்று உண்மையான ஜனநாயகவாதிகள் ஸ்டாலினைக் கோரி

றார்கள். ஆனால் ஸ்டாலின் பக்தர்களோ இந்தக் கோரிக்கை "நமது அருமை நேசநாட்டை ஆபத்துக் காலத்தில் தாக்குவதாகும்" என்று இதைக் கண்டிக்கிறார்கள்!

நேசநாடுகளிடையே ஐக்கியத்துக்காக பலத்த கூச்சலிட்ட அவர்களும் சரி ரஷ்யப் பத்திரிகைகள், ரேடியோ முதலியவையும் சரி, பிரிட்டன், போலந்து, கிரீஸ், பெல்ஜியம் முதலிய நேசநாடுகள் பேராபத்திலிருந்த சமயம் அவைகளைத் தாக்கப் பின் வாங்கவில்லை.

பொது நன்மையை முன்னிட்டு ரஷ்யாவைப்பற்றிய கசப்பான உண்மைகளை மறந்துவிடலாம் என்பது எவ்வித நன்மையும் அளிக்கவில்லை.

எப்படியும் ரஷ்யா பேராபத்திலிருந்தது உண்மை. அதை உத்தேசித்துத்தான் நான் சென்ற மூன்று வருஷகாலமாய் ஸ்டாலின் சர்வாதிகார ஆட்சியைப்பற்றி வாயைத் திறவாமல் சும்மாயிருந்தேன். பிரசுரத்துக்குத் தயாராயிருந்த இந்நூல் பிரசுரிக்கப்படுவதும் மூன்று வருஷகாலமாய் ஒத்திப்போடப் பட்டுவந்தது. ரஷ்யாவுக்கு கடன்-குத்தகைத் திட்டப்படி உதவி அளிப்பதற்கு சாதகமாய் ஒரு அறிக்கையும், மாஸ்கோ, லெனின் கிராடு நகர்களை ஹிட்லர் பிடிக்க முடியாதென்று 1941-ல் போர் உச்ச நிலையிலிருந்த சமயம் வெளியிட்ட ஒன்றிரண்டு கட்டுரைகளும்தவிர நான் வேறெதுவும் இந்த மூன்றாண்டுகளில் வெளியிடவில்லை. ஆனால் இன்று (1945-ல்), ஸ்டாலினுடைய சாம்ராஜ்யம் ஆபத்தினின்று மீண்டுவிட்டது. அத்துடன் நில்லாமல், போலந்து போன்ற நேசநாடுகளை ரஷ்யாதான் பயங்கர ஆட்சிக்குட்படுத்தி வருகிறது. கிரீஸில் நடக்கும் சம்பவங்கள் கவலைதருவதாயிருக்கின்றன. கம்யூனிஸ்ட்களின் கொள்கை உலகெங்கும் ஜனநாயகத்துக்கு ஆபத்தாய் விளங்குகிறது. இப்படிப்பட்ட சமயத்தில், உண்மை அறிந்த ஒவ்வொருவரும் வாயைத்திறந்து உண்மையை உலகுக்கறிவிக்க வேண்டியது கடமையாகிறது.

ரஷ்யாவில் ஸ்டாலின் ஆட்சியை எனக்கு நன்கு தெரியும். அந்த ஆட்சியில் நான் நெடுங்காலம் வாழ்ந்துவந்திருக்கிறேன். அது கலப்பற்ற, பரிபூர்ணமான கொடுங்கோன்மை தவிர வேறில்லை என்பது எனக்கு நன்ருய்த் தெரியும். "உண்மையை மழுப்பாமல் ஒப்புக்கொள்ளத் துணிந்த யாரும் ஸோவியத் யூனியன் வெறும் சர்வாதிகார ஆட்சியே என்பதை ஒப்புக்கொள்வார்கள். உலகின் மற்ற சர்வாதிகார ஆட்சிகளைப் போலவே ஸோவியத் ஆட்சியும் தயாதாட்சணியமற்ற கொடுங்கோன்மை என்பதில் ஐயமில்லை" என்று ஜனதிபதி ரூஸ்வெல்ட் 1940-ம் வருஷம் பெப்ரவரி 11-ந் தேதி கூறினர். இதில் சிறிதும் தவறில்லை. வாழ்க்கை முறையில் புதுப் பாதை வகுக்கும் சோதனை என்ற வகையில் ஸோவியத் திட்டம் படுதோல்வியடைந்துவிட்டது.

இந்த காருண்யமற்ற சர்வாதிகாரத்தைப் போற்றுகிறவர்கள் இன்னும் இருக்கிருர்கள்! இவர்கள் போக்கு, "நீங்கள் அடிமைகளாய் இருந்ததனுல்தான் இவ்வளவு ஆக்ரோஷத்துடன் போரிட்டீர்கள். அதற்குப் பரிசாக உங்கள் அடிமைத் தனத்தைப் புனிதமாக்குகிறோம். அதை ஜனநாயகம் என்றுகூட அழைக்க சம்மதிக்கிறோம்" என்று ரஷ்ய மக்களிடம் சொல்வதுபோல் இருக்கிறது. ரஷ்ய மக்களுடைய வெற்றியின் புகழை ஸ்டாலின் ஆட்சிக்கு அளிப்பது ரஷ்ய மக்களுக்குத் துரோகமிழைப்பதாகும், உலகெங்கும் ஜனநாயகத்துக்கு ஆபத்து விளைவிப்பதாகும்.

ரஷ்யாவுக்கும் யுனைட்டெட் ஸ்டேட்ஸ்-க்கும் இயற்கையான பகை எதுமில்லை. இவ்விரு நாடுகளின் மக்களும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். அவர்களிடையே அமைதியான நட்பு நிலவுவதுதான் இயற்கை. அவ்வாறு அமைதி நிலவாமல் ரஷ்யாவைக் கவ்விநிற்கும் யதேச்சாதிகாரக் கற்கோட்டைதான் தடுக்கிறது.

ரஷ்ய மக்கள் தங்கள் தாயகத்திலும் ஜனநாயகக் கொள்கைகளைப் பின்பற்றமுடியுமானல், ரஷ்யா அமெரிக்கா இரு

நாடுகளுக்குமிடையே நட்பு நீடித்ததாயிருக்கும். இந்த லட்சியம் கைகூடவேண்டுமென நினைக்கும் ஒவ்வொருவரும், முதலில், ரஷ்யர்கள் தங்கள் அடிமைத் தளைகளைப் போற்றுகிறார்கள் என்ற தப்பபிப்பிராயத்தை விட்டொழிக்கவேண்டும். உலகின் மற்ற மக்களைப்போலவே ரஷ்யர்களும் நியாயத்தை அடிப்படையாய்க் கொண்ட சர்வ சுதந்திரமான வாழ்க்கையையே விரும்புகிறார்கள். அதை அடைவதற்கு அவர்களுக்கு சகல உரிமையும் உண்டு. இதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டும் என்பதே என்னுடைய முடிவான கோரிக்கை.